# தமிழரசு

ஏப்ரல் 1 1973
40 காசு





# சிறு தொழிலுக்கோர் உறுதுணை......எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்



அரிசிமில், மாவுமில், ஆயில் மில், மர அறுவைத் தொழில் போன்ற சிறு தொழில் நிறுவனங்களில் இயங்கும் மோட்டார்களைச் சீராகச் செலுத்த, சிறந்த ஒரு சாதனம் எல் & டி ஸ்டார்ட்டர். எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

உங்கள் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று, வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்துகொடுக்கின்றனர்.
- சிறிய ஊர்களில் கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH **L&T Switchgear**

**ஸ்விட்ச்கியர் டிவிஷன்,**
**லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்**
P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1,
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.

LT. 3856

# ஊர் வளர்ச்சிச் சிறப்பிதழ்




# தமிழரசு

மலர் 3 இதழ் 19

1-4-1973


**இந்த நாட்டின் உயிர்நாடி, கிராமங்களிலே உள்ளது!**

—அண்ணல் காந்தியடிகள்

**சிற்றூர்கள் பெற்றிடும் வளர்ச்சியே சமுதாய மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாகும். நாட்டின் நல்வாழ்வு எழுச்சிக்கும் அஃதே அடையாளமாகும்!**

—பேரறிஞர் அண்ணா

தமிழ்நாட்டில் ஊராட்சி நிருவாக அமைப்பு சென்னை மாநகரமில்லாது ஏனைய 13 மாவட்டங்களில் இயங்கி வருகிறது.

இந்த 13 மாவட்டங்களும் 23 வளர்ச்சி மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 23 வளர்ச்சி மாவட்டங்களும் 48 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 48 கோட்டங்களில் மொத்தம் 374 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன, இதில் மொத்தம் 12,628 ஊராட்சிகளும் 598 பேரூராட்சிகளும் 12 நகரியங்களும் உள்ளன.

நமது அரசின் திட்டங்களை அந்த உள்ளாட்சி மன்றங்கள் நிறைவேற்றி வருவதால் ஊர்கள் வளர்ச்சி அடைகின்றன. நாள்தோறும் வளர்ச்சி அடைந்து வரும் அந்தச் செய்திகளை தொகுத்து வெளியிடும் முயற்சியின் விளைவே இந்த இதழ் தமிழரசு ஊர் வளர்ச்சிச் சிறப்பிதழாக வெளி வருவதாகும்.

எல்லாச் செய்திகளையும் ஒரே இதழில் வெளியிடுவது எளிதான செயலல்ல எனவே, ஊராட்சி வளர்ச்சிப்பணிகளை ஒரு சோறு பதம் என்பது போல இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். தொடர்ந்து வளர்ச்சிப் பணிகளைப் பற்றிய செய்திகள் வெளியிடப்படும்.

1966—67 ஆம் ஆண்டில் ஊராட்சி வளர்ச்சித் திட்ட நிதிநிருவாகச் செலவு ஏறத்தாழ ரூபாய் 47 கோடியே 47 இலட்சம் ஆகும். இத்தொகை ஆண்டு தோறும் படிப்படியாக வளர்ந்து 1973—74-ஆம் ஆண்டில் ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 94 கோடியே 69 இலட்சத்துக்கு அதிகமாகும்.

ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்காகச் செலவிடப்படும் ரூ. 94 கோடியே 69 இலட்சம் மட்டும் உள்ளாட்சி மன்றங்களுக்காகவும் ஊர்வளர்ச்சித் திட்டங்களுக்காகவும் செலவிடப்படும் தொகை அல்ல. நமது அரசின் பல்வேறு துறைகளும் ஊரக வளர்ச்சியில் ஈடுபட்டுள்ளன. அந்தந்தத் துறைகளின் சார்பில் செய்யப்படும் செலவுகளும் ஊர்வளர்ச்சிக்குப் பயன்படுகின்றன.


செய்திச் சித்திரம்
பத்தாண்டுகளுக்கு மேல் பணியாற்றும் நெடுஞ்சாலைத் துறைப் பராமரிப்பு ஊழியர்கள் 6500 பேரை நிரந்தரமாக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது'.
காந்தி
நிரந்தரம்
கல்லூரி→
கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் 800 பேர் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளாக ஆக்கப்படுகிறார்கள்.
நகராட்சி மன்றங்கள் வசூல் செய்யும் சைக்கிள் வரி, ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து நீக்கப்படும்.



# கல்வி- பணி தருவது போதாது பகுத்தறிவும் தரவேண்டும்!

கல்வித்துறையில் ஒரு நாடு பெற்றிருக்கின்ற முன்னேற்றத்தைப் பொறுத்தே அதன் பொருளாதார வளம் இருக்கிறது. இதில் நாம் பெற்றிருக்கிற வளர்ச்சி, எத்தனை பேர் படித்தார்கள் என்பதில் இல்லை. எத்தனை கல்லூரிகள் திறக்கப்பட்டது என்பதில் இல்லை. எத்தனை கட்டடங்களில் அதற்கான வசதிகளைச் செய்து தந்தோம் என்பதில் இல்லை. எத்தனை ஆசிரியர்கள், ஆசிரியைகள் இருக்கிறார்கள் என்பதில் இல்லை. இவைகளுடன் தரமான கல்வியை, தகுதியான கல்வியை, விஞ்ஞான பூர்வமான கல்வியை—பகுத்தறிவூட்டும் கல்வியை எந்த அளவுக்குப் பெறுகிறோம் என்பதில்தான் இருக்கிறது.

கல்வியை நாம் தேர்வுக்காகவோ — உத்தியோகத்திற்காகவோ குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகவோ — பெறுவதில் அர்த்தமில்லை. நாட்டின் எதிர்கால முன்னேற்றத்தையும் எண்ணிப் படிக்க வேண்டும். அந்த எண்ணம் மாணவர்கள் உள்ளத்தில் ஏற்பட்டாக வேண்டும்.

பொதுவாக மாணவர்களிடத்தில் அமைதியின்மை அண்மைக் காலமாக ஏற்பட்டுவருவதை அறிவீர்கள். இதற்கு என்ன காரணம் என்பதைப் பிரதமர் இந்திரா காந்திஅவர்கள் கூறுகையில், ''சமுதாய சுயநலமிகள் இளம் உள்ளங்களில் இயற்கையாகக் கொதித்தெழுகின்ற உணர்ச்சியைத் தூண்டிவிட்டு அமைதியின்மையை ஏற்படுத்துகிறார்கள்'' என்றார்கள்.

இந்த நிலைமையை நாடு முழுவதும் காண்கிறோம். மற்ற பிற நாடுகளை, வேறு இடங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் அதிகமில்லை என்றே கூறவேண்டும்.

இங்கொன்றும், அங்கொன்றுமாகச் சில நேரங்களில் இத்தகைய நிலை ஏற்பட்டாலும் இவை மற்ற இடங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் அதிகமாக இல்லையென்றே கூற வேண்டும்.

இந்தத் தொல்லையும் இல்லாமல் இருந்தால் அதனால் ஏற்படுகின்ற நிம்மதியான சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டின் முன்னேற்றத்தில் நாட்டத்தைச் செலுத்தி—கல்வி வளர்ச்சிக்காகவும், மற்றவைகளுக்காகவும் நல்ல பல திட்டங்களை வகுத்துச் செயல்படுத்த முடியும்.

இதற்கு மாணவிகள் உதவி செய்ய முடியும். அவர்கள் தங்கள் இல்லத்தில் அவர்களுடன் இருக்கும் சகோதரர்களிடத்தில் இதுபற்றி எடுத்துச் சொல்ல வேண்டும். அக்கம் பக்கத்தில் உள்ள தாய்மார்களுடன் தொடர்பு கொண்டு அந்தந்தக் குடும்பத்தில் உள்ள மாணவர்களுக்கு எடுத்துச் சொல்வதை ஒரு பிரச்சாரமாகவே மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, மாணவர்களிடையே கோபம் ஏற்பட்டால் அதற்கு முதல் இலக்காவது பொதுமக்கள் சொத்தான பஸ், அரசு அலுவலகங்களாகத்தான் இருக்கின்றன. இதனால் அரசுக்கு மட்டும் நட்டமல்ல, எதிர்காலச் சமுதாய வளர்ச்சிக்குப் பயன்பட வேண்டிய பொருளாதார முன்னேற்றமே தடைப்படுகின்றது. இதைத் தாய்மார்களாகிய நீங்கள்தான் உணர்த்தவேண்டும்.

ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க—தாய்மார்கள் அந்த வகையில் உதவிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

—சென்னை இராணிமேரிக் கல்லூரியில் 19—3—73 அன்று ஆற்றிய உரை.)

## முதல்வர் கலைஞர்




### முத்திரைத் தொடர்கதை

தமிழரசில் வெளிவரும் ''உலகில் இரண்டு கிளிகள்'' தொடர்கதை ஆரம்ப முதல் விறுவிறுப்புடன் செல்கிறது. ஆழமான உவமைகள்— அழகிய கருத்துக்கள்— எழில்மிகு வருணனைகள் கொண்டு சிறகடித்துப் பறக்கின்றது. ஒவ்வோர் அத்தியாயத்திலும் ஆசிரியரின் முத்திரை பிரதிபலிக்கிறது.

—எச். சேக்அப்துல்லா,
திருப்பாச்சேத்தி.

### அட்டையின் பெருமை

தமிழரசு இதழின் அட்டைப் படங்களைப் பார்க்கப் பார்க்கப் பார்த்துக் கொண்டே இருக்கும் வண்ணம் ஆங்கிலப் பத்திரிகை போல அருமையாக உள்ளது.

—எஸ். எஸ். மணி,
திருவனந்தபுரம்.

### பாராட்டுக்குரிய இதழ்

கோவை மாவட்டச் செய்தித் தொகுப்பு இதழ் எங்கள் உள்ளங்களை எல்லாம் கொள்ளை கொண்டு விட்டது. அரசு ஆற்றியுள்ள சாதனைகள் ஏராளம் என்பதை எங்களுக்கு எடுத்துரைத்த கோவை மாவட்டச் செய்தித் தொகுப்பு இதழுக்கு எங்கள் பாராட்டு.

—எஸ். ஆர். சந்திரன்,
கோவை.

### தேன் விருந்து

தொழில் வளம், விளையாட்டு அரங்கம் வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய செய்தித் தொகுப்புகளுடன் வெளியாகியுள்ள கோவை மாவட்டச் சிறப்பிதழ் கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தளித்தது. மொத்தத்தில் மார்ச் 16 இதழ் திகட்டாத தேன் விருந்து.

—என். எஸ். மணி,
குமராட்சி.

### கற்கண்டுக் கோவை

கவிஞர் ஈரோடு தமிழன்பன் தீட்டிய 'கோக்காத கோவை'யைப் படித்து இன்புற்றேன். வளமான சொல்லாட்சி நிறைந்த கற்கண்டுக் கவிதை.

—எல். கணபதி,
பல்லடம்.



# ஊர் வளர்ச்சிப் பணிகளில் உயர்ந்து நிற்பது தமிழகமே!

சமூகநலன் கருதியும், வட்டார வளர்ச்சி நலன் கருதியும் இந்த மானியக் கோரிக்கைகள் இங்கே வைக்கப்பட்டு, அதற்காக ரூ. 30,65,87,200 இரண்டு வகைகளிலும் கோரப்பட்டிருக்கின்றன. சமூக வளர்ச்சி கருதியும், வட்டார வளர்ச்சி கருதியும் பலரும் பல கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கின்றார்கள். ஆக, இதில் இரண்டு பெரும் பணிகள் அடங்கியிருக்கின்ற காரணத்தால், பொது மக்களுடைய நேரடித் தொடர்பு, பொது மக்களுடைய ஊக்கமும், ஆர்வமும், அக்கறையும் இந்தத் துறையிலே வேறு எந்தத் துறையையும் விட மிகப் படிந்து இருக்கிறது, என்பது இந்த மன்றத்தில் உறுப்பினர்கள் பலரும் எடுத்துக் கூறிய கூற்றுக்களிலிருந்து மிகத் தெளிவாகிறது.

இங்கே ரூ. 30,65,87,220-க்கு மானியக் கோரிக்கைகள் வைக்கப்பட்டாலும், இந்தத் துறையின் மூலமாக இந்த ஆண்டு மட்டும் நிறைவேற்றப்படுகின்ற பணிகள் ரூ. 9,469 லட்சமாக அமைகிறது. பல்வேறு துறைகள் தனித்தனியாக இருந்தாலும் கூட, அவற்றின் நன்மைகளை மக்களிடத்தில் கொண்டு போய்ச் சேர்க்கின்ற இந்த ஊராட்சித் துறையும், ஊராட்சி ஒன்றியத் துறையும், வேறு துணைத் துறைகளாக இருந்து பாடுபடும் துறைகளும் நாளுக்கு நாள் வளர்ந்தோங்கி வந்திருக்கின்ற பாங்கினையும் நன்றாகக் காண்கிறோம். 1961–62-ல் 1,575 இலட்ச ரூபாய் அளவுக்கு இந்தத் துறைகளின் மூலமாகப் பணிகள் ஆற்றப்பட்டு, 1966–67-ல் ரூ. 4,748 இலட்சமாக வளர்ந்து, இப்போது 9,469 லட்சமாக வளர்ந்தோங்கி நிற்கிறது. 1961-67-ஆண்டுகளுக்கு இடையேயிருக்கிற 6 ஆண்டுக் காலத்தில் மாத்திரம் ரூ. 198 கோடி 83 இலட்சம் அளவுக்குப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்று கணக்கிட்டால், 1967-லிருந்து 1972–73 வரையில் 6 ஆண்டுக் காலத்தில் ரூ. 378 கோடி 95 இலட்சம் அளவுக்குச் சமுதாய, வட்டார வளர்ச்சிப் பணிகள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன என்பதை நாம் காணலாம். 1973–74-ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகையையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் 473 கோடியே 64 இலட்சம் ரூபாயாகும். 6 ஆண்டுக் காலத்திற்கு முன்பு இருந்ததை விட இப்போது எவ்வளவு செலவழிக்கிறோம் என்று பார்த்தால் 99 சதவிகிதம் அதிகமாக — கிட்டத் தட்ட 'சென்ட் பர்ஸன்ட்' என்று சொல்லக்கூடிய அளவுக்கு அதிகமாகச் செலவழிக்கிற ஒரு துறையாக இந்தத் துறையைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆக இந்தத் துறை மிகப் பலன் அளிக்கக் கூடியதாக இருக்கிறது என்று சொல்வதில் நான் பெருமைப் படுகிறேன்.

வேறு பல மாநிலங்களிலே இருக்கின்ற அமைப்புகளோடு நமது தமிழகத்தை ஒப்பிட்டுப் பார்த்தோமானால் நிலைமை இன்னும் தெளிவாகப் புரியும். வேறு பல மாநிலங்களிலே 'ஜில்லா பரிஷத்' என்ற அமைப்புக்களை ஏற்படுத்தி, சமுதாய வளர்ச்சிப் பணி, வட்டார வளர்ச்சிப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவைகளிலே சிறப்பாகச் சொல்லப்பட்டது மகாராஷ்டிர மாநிலம். ஊராட்சி ஒன்றிய அமைப்புகளை வைத்துச் செயல்படுகின்ற சில மாநிலங்களை விட மகாராஷ்டிர மாநிலத்தில் 'ஜில்லா பரிஷத்' அமைப்புகளின் மூலம் வளர்ச்சிப் பணிகளைச் சிறப்பாக நடத்துவதாகச் சொல்லப்பட்டது. அதனால், அவர்கள் எப்படிச் செயல்படுத்துகிறார்கள், எந்தெந்த முறைகளில் பணிகளை நிறைவேற்றுகிறார்கள் என்பதை ஆராய்ந்து அறிந்து வருவதற்காக நமது மாநில அதிகாரிகள் குழு ஒன்றை அங்கே அனுப்பி வைத்தோம். நமது மாநிலத்தைவிட எந்த வகையிலே சிறந்திருக்கிறது என்பதை அறிந்து, நமக்கு ஏற்றதாக இருந்தால் அதைச் செயல்படுத்தலாம் என்பதற்காக அதிகாரிகள் குழுவை அனுப்பி வைத்தோம். அவர்கள் அங்கே போய்ப் பார்த்துவிட்டு, அங்கே திட்டங்களைச் செயல் படுத்துவதிலே உள்ள கஷ்டங்களையும் சங்கடங்களையும் மற்றக் காரியங்களையும் ஆராய்ந்து பார்த்து அறிக்கை கொடுத்தார்கள். அவர்கள் அறிக்கையிலே '374 ஊராட்சி ஒன்றிய அமைப்புகளை வைத்து வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் நமது முறைதான் மகாராஷ்டிரத்தை விடச் சிறந்ததாக இருக்கிறது' என்று தெரிவித்திருக்கிறார்கள்.



கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர்
நாவலர். நெடுஞ்செழியன்

ஆக, கடந்த 12, 13 ஆண்டுக் காலமாக வேறு பல மாநிலங்களை விட நமது மாநிலத்தில் இந்த ஊராட்சி ஒன்றிய அமைப்புகளின் மூலம் வளர்ச்சிப் பணிகள் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன என்பதை நாம் தெள்ளத் தெளியப் புரிந்து கொள்கிறோம்.

மொத்தத்தில் இந்த 12, 13 ஆண்டுக் காலத்தில் ஊராட்சித் துறை ஒப்புக்கொண்டிருக்கின்ற பணிகள் நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே வந்திருப்பதை நாம் தெரிந்துகொள்ளலாம். இப்படிப் பொறுப்புக்கள் அதிகரித்திருப்பதனால் ஒன்றியங்கள் சிறப்பாகப் பணியாற்றுவதற்காக ஊராட்சித் துறையை வருவாய்த் துறையிலிருந்து தனியாகப் பிரிக்க வேண்டுமென்று பலர் சொன்னார்கள். மாவட்ட அளவிலே இப்படி நிருவாகத்தை இரண்டாகப் பிரித்தாலும் இரண்டு துறைகளுக்கும் மாவட்ட

ஆட்சித் தலைவர்தான் தலைவராக இருக்க முடியும். அந்த அடிப்படையில்தான் இந்தத் துறையை முழுக்கவனம் செலுத்திப் பார்ப்பதற்காகத் தனி அதிகாரிகள் இருந்தாலும் — ஆர். டி. ஓ. அதிகாரம் பெற்றவர்கள் இந்த வட்டார வளர்ச்சி அதிகாரிகளாக அல்லது கோட்டாட்சித் தலைவர்களாக இருந்தாலும்— மேலதிகாரம் படைத்தவர் மாவட்ட ஆட்சித் தலைவராக இருப்பதால் கோட்டாட்சித் தலைவர்களுக்கு அதிக வாய்ப்பும், வசதியும் ஏற்படாமல் போகக்கூடிய ஒரு நிலைமை ஏற்படலாம். இருப்பினும் சிறந்த நிருவாகத்தை முன்னிட்டு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கருத்தைக் கொள்கை அடிப்படையில் ஏற்கெனவே நாங்கள் ஒப்புக் கொண்டிருக்கிறோம். எந்தெந்த வகையிலே அதைச் செய்யலாம் என்பதற்கு நிருவாகச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் கருத்துரை கேட்டிருக்கிறோம். அவர்கள் அறிக்கை வந்த பின்னால் அதிலே நல்ல முடிவுகள் ஏற்படும் என்று கருதுகிறேன்.

பொதுவாக நமது நாட்டில் ஊராட்சி வளர்ச்சித் துறைகள் எப்படிச் செயல்படுகின்றன என்பதை ஆராய்வதற்காக "நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் கம்யூனிட்டி டெவலப்மென்ட்" என்ற அமைப்பிலிருந்து யுனைட்டெட் கிங்டம், பிரிட்டனைச் சேர்ந்த வல்லுநர் குழு ஒன்று வந்தது. அவர்கள் தமிழ்நாடு, ஆந்திரம், மத்தியப் பிரதேசம், குஜராத் ஆகிய நான்கு மாநிலங்களையும் பார்வையிட்டு அறிக்கையைச் சமர்ப்பித்தனர். அந்த அறிக்கையிலே தமிழகத்தில் ஊராட்சி வளர்ச்சித் துறை செயல்படும் முறை சிறப்பானது என்று பாராட்டியிருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றிய அமைப்பு வேளாண்மைத் துறை வளர்ச்சியில், தமிழ்நாடு 68 சதவிகித வளர்ச்சியைக் கண்டிருக்கிறது என்றும், மத்தியப் பிரதேசம் 5 சதவிகிதம் வளர்ச்சியைக் கண்டிருக்கிறது என்றும், குஜராத் 34 சதவிகிதம் வளர்ச்சியைக் கண்டிருக்கிறது என்றும் அவர்கள் மேலும் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களை அணுகி, உழவர் பெருங்குடி மக்கள் பெறுகின்ற நிதிவசதிகளைப் பற்றியும் கணித்திருக்கிறார்கள். தமிழகத்தில் 71 சதவிகிதம் வேளாண்மைப் பெருங்குடி மக்கள் நிதி வசதியைப் பெறுவதற்காக ஊராட்சி ஒன்றியங்களை அணுகியிருக்கிறார்கள் என்றும், ஆந்திரப் பிரதேசத்தில் 39 சதவிகிதம் என்றும், குஜராத்தில் 19 சதவிகிதம் என்றும், மத்தியப் பிரதேசத்தில் ஒரே ஒரு சதவிகிதம் என்றும் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அளவுக்கு மற்ற மாநிலங்களைவிட நமது தமிழகம் இந்தத் துறையிலே முன்னேறியிருக்கிறது என்பது நன்கு தெளிவாகிறது.

பொதுவாக, தமிழகம் நீண்ட நெடுங்காலமாக இந்தத் துறையில் வளர்ச்சி பெற்று வருகிறது என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். நமது தமிழகத்தில் மேலும் இந்தத் துறை வளர்ச்சிபெற நல்ல வாய்ப்புகள் இருக்கின்




றன. 1971-ஆம் ஆண்டு சென்சஸ் கணக்குப்படிப் பார்த்தால் நகரங்களைப் பிரிப்பதற்காக வகுக்கப்பட்ட இலக்கணப்படி இந்தியா முழுவதிலும் உள்ள எல்லா மாநிலங்களிலும் கணக்கிட்டு ஒவ்வொரு மாநிலத்தையும் எத்தனை நகரங்களாகப் பிரிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்ப்போமானால் உத்தரப் பிரதேசத்தில் 294 நகரங்கள் என்றும், மகாராஷ்டிரத்தில் 289 நகரங்கள் என்றும், குஜராத்தில் 217 நகரங்கள் என்றும், அந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் 443 நகரங்கள் என்றும் சென்சஸ் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். 8 கோடி மக்கள் வாழ்கின்ற உத்தரப்பிரதேசத்தில் நகரங்களைப் பிரிக்கின்ற இலக்கணப்படி 294 நகரங்கள் தான் வருகின்றன என்று அந்த ரிப்போர்ட்டிலே தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், நமது தமிழகத்தில் 443 நகரங்கள் வருகின்றன என்றால் அது எவ்வளவு பெருமைக்குரியது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இப்படித் தமிழகத்தில் பல கிராமங்கள் சிற்றூர்கள் பேரூர்களாகவும், பேரூர்கள் நகரங்களாகவும், நகரங்கள் பெரு நகரங்களாகவும் மாற்றமடைந்து வரும் அளவிற்குப் பல்வேறு கிராமங்கள் வளர்ச்சி பெற்று இருக்கின்றன என்பதை அறியலாம். மற்ற மாநிலங்களிலுள்ள நிலைமைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நமது தமிழகத்தில் வளர்ச்சி பரவலாக அமைந்திருப்பதையும் அறியலாம். வங்காளத்தை எடுத்துக் கொண்டால் கல்கத்தா போன்ற இரண்டொரு நகரங்களைத்தவிர மற்றப் பகுதிகளெல்லாம் மிகச் சாதாரணமாகத்தான் இருக்கின்றன. மராட்டியத்தினை எடுத்துக்கொண்டால் பம்பாய் வளர்ந்த நகர்; பூனா வளர்ந்த நகர்; அது போன்று மைசூரை எடுத்துக் கொண்டால் மைசூர் வளர்ந்த நகர், பெங்களூர் வளர்ந்த நகர். ஆனால், மற்றப் பகுதிகளெல்லாம் மிக மிகச் சாதாரணமாகவே இருக்கின்றன. ஆனால், தமிழகத்தை எடுத்துக் கொண்டால் வளர்ச்சியுற்ற நகரைப் பார்க்க வேண்டுமானால் 300 அல்லது 400 மைல்களைக் கடந்து வந்தால் தான் பார்க்க முடியும் என்ற நிலையில்லாமல் சென்னையும், சென்னைக்கு அடுத்தபடியாக மதுரையும், கோவையும், திருச்சியும், திருநெல்வேலியும், சேலமும், வேலூரும்இப்படி மாவட்டத்திற்கு மாவட்டம் பெரும் நகரங்கள் வளர்ச்சியுற்று இருப்பதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட வளர்ச்சி இன்று நேற்று ஏற்பட்டது என்று சொல்லவில்லை. வெள்ளைக்காரர்கள் காலத்தில் சென்னை வளர்ச்சி அடைந்தது என்று சொன்னாலும், சேர சோழ பாண்டியன் காலத்திலிருந்தே இப்படிப்பட்ட வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறேனே தவிர இதற்குக் காரணம் வெள்ளைக்காரன் மட்டுமில்லை.

நான் குறிப்பிட்டதைப்போலச் சென்னைக்கு மட்டும்தான் வெள்ளைக்காரன் காரணமாக இருக்கலாம். காஞ்சி, மதுரை, உறையூர் மற்றவையெல்லாம் நீண்ட நெடுங்காலமாக வளர்ந்துவரும் நகரங்களாகும். அத்துடன் நமது அரசு எடுத்துவரும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் காரணமாகக் கிராமங்களும், நகரங்களும் மேலும் விரிவடைந்து

வருகின்றன என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். குறைந்தது 300 மக்கள் தொகையுள்ள பகுதிகளுக்கு ஒரு துவக்கப் பள்ளியும், 2½ மைல் வட்டாரத்திற்கு ஓர் உயர் துவக்கப்பள்ளியும், ஐந்து மைல்வட்டாரத்திற்கு ஓர் உயர்நிலைப் பள்ளியும் நிறுவவேண்டும் என்பது நமது திட்டம். நிதிநிலையினையொட்டி மேலும் மேலும் வளர்ந்துவரும் இந்தப் பகுதிகளின் தேவைகளையும் முடிந்த அளவிற்கு நிறைவேற்றி வருகின்றோம். கல்வியினைப் பொறுத்த மட்டில் அது மேலும் மேலும் பரவலாக்கப்பட்டு வருகின்றதைப் பார்க்கலாம். 1966–67-ல் ஆரம்பக் கட்டத்தில் கற்பவர்களுக்கு ரூ. 17·90 கோடி செலவழித்தோம் என்றால், 1973–74-ல் இது ரூ. 34·32 கோடிக்கு வளர்ந்துள்ள நிலைக்குக் கல்வி பரவலாக்கப்பட்டிருக்கின்றது என்பதை எடுத்துக் காட்டுவதற்காக இதை நான் குறிப்பிடுகின்றேன். இன்னும் இத்துறையில் ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளமாக இருக்கின்றன. கல்வியினைப் பொறுத்த மட்டில் ஊராட்சி ஒன்றியங்கள்தான் இப் பணியினைப் பெரும்பாலும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. ஆறு வயதிலிருந்து பதினொரு வயது வரையிலுள்ள சிறுவர்கள், சிறுமிகள் நூற்றுக்குத் தொண்ணூற்று நான்கு பேரைப் பள்ளிக்குக் கொண்டு வந்தோம் என்றாலும் இன்னும் ஆறு பேர் பெற்றோர்கள் கைக்கும் அகப்படாமல், ஆசிரியர்களுடைய கண்களுக்கும் அகப்படாமல் அங்கங்கே சுற்றிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். அவர்களையும் பள்ளிகளில் கொண்டு வந்து சேர்க்க வேண்டிய பெரும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களுக்கு இருக்கின்றன. அவற்றை அவை திறம்பட மேற்கொண்டும் இருக்கின்றன.

சிற்றூர் வளர்ச்சி வாரியம் என்று அழைக்கப்படும் 'ரூரல் டெவலப்மென்டு போர்டு' ஒன்றினை ஏற்படுத்தி அதன் மூலம் கடன் வசதிகளைப் பெற்றுப் பள்ளிக்கூடக் கட்டடங்களைக் கட்டுதல், இணைப்புச்சாலைகளை அமைத்தல், மார்க்கெட்டுக்கான கட்டடங்களைக் கட்டுதல் போன்றவற்றுக்கான நிதி உதவியைக் கடனாகக் கொடுக்க ஏற்பாட்டினைச் செய்யக் கருதிக்கொண்டிருக்கிறோம். அரசாங்கத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலமாகவாவது அல்லது தேசிய பாங்குகளிலிருந்தாவது கடன் உதவி பெற்று 'ரூரல் டெவலப்மென்டு போர்டு' என்ற ஒன்றினை அமைத்து உதவ வேண்டும் என்று முதலில் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தினை அணுகினோம். அன்றிருந்த தலைவர் ஒப்புதல் தந்தார். ஆனால், அதை முறையாகப் பெறுவதற்கு முன்னம் அவர் மாறிவிட்டார். இப்போது அவருக்குப் பதிலாக வேறு ஒருவர் தலைவராக வந்திருக்கின்றார். வந்துள்ள இவரிடம் நமது கோரிக்கை போயிருக்கின்றது. இவர் ஒப்புதல் அளித்தபிறகு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து நிதியினைப் பெற்று, நாம் இப்போது யோசித்துக் கொண்டிருக்கும் சிற்றூர் வளர்ச்சி வாரியத்தினை அமைப்பதன் மூலம், கிட்டத்தட்ட எண்ணாயிரம் பள்ளிக்கூடங்களுக்கு வேண்டிய கட்டடங்களைக் கட்டிக்கொடுக்க முடியும். இரண்டு ஆண்டுக் காலத்தில் எல்லாக் கட்டடங்களையும் கட்டி முடித்துவிட்டுப் பின்னர் இந்த ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் அதற்கான செலவுகளைத் திரும்பப் பெறலாம். ஒருக்கால் ஆயுள் காப்பீட்டுக் கழகம் இந்த உதவியினைச் செய்ய முன் வராவிட்டாலும் தேசிய பாங்குகளோடு தொடர்பு கொண்டு இந்த வாரியத்தினை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கின்றது.

**முகப்பில்**

முகப்பில் காணப்படும் மலையும் மலையைச் சார்ந்த இடமும் மதுரை மாவட்டத்திலுள்ளவை. ஆத்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த அய்யம்பாளையத்துக்கு அருகிலுள்ளது. எங்குப் பார்த்தாலும் பசுமையான தென்னந் தோப்புகள் நிறைந்துள்ள இப் பகுதியில் மருதா நதி நீர்த் தேக்கம் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இப்பொழுது அங்கு அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

அடுத்து, சாலைவசதிகள் பற்றி இங்கே உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். கிராமச்சாலைகள் அபிவிருத்தித் திட்டம் என்ற அடிப்படையில் 'ரூரல் ரோட்ஸ் ப்ரோக்ராம்' என்ற வகையில் நாம் ரூ. 230 இலட்சம் சென்ற ஆண்டு நிதி ஒதுக்கிச் செலவழித்திருக்கிறோம். தவிர வேலைவாய்ப்பினை அளித்திடும் திட்டத்தின் கீழும் 6,032 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சாலைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு அதற்காக ரூபாய் 240 இலட்சம் செலவு செய்யப்பட்டு இருக்கிறது. இதுபோன்று, காவேரி ஆற்றுப் பகுதியில் 'காவேரி கமேண்டு ஏரியா'வில் 'லிங்க் ரோட்ஸ்' போடுவதில் 38·72 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அதே போலப் போக்குவரத்து மற்றும் மார்க்கெட்டிங் காம்ப்ளெக்ஸ் என்ற அளவில் 13·82 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. மேலும், வறட்சிப் பகுதிகளில் பணிகளுக்கு என ட்ரௌட் ப்ரோன் ஏரியா என்ற அளவில் ரூபாய் 16·49 இலட்சம் செலவழிக்கப்பட்டுச் சாலை வசதிகளை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தைப்பற்றி நான் அடிக்கடி சட்ட மன்றத்தில் சொல்லி வந்திருக்கிறேன். மாவட்டத்தில் வேலைவாய்ப்பு இல்லாதவர்களில், குறைந்தது ஆயிரம் பேர்களுக்காவது தொடர்ச்சியாகப் பத்துத் திங்களுக்கு வேலையளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்திய அரசு உருவாக்கியுள்ள திட்டம் இது. இத்திட்டம் 1971-72-ல் 230 ஒன்றியங்களில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதற்காக ரூ. 2·93 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. 84·04 இலட்சம் மனித நாட்கள் பயன்பட்டிருக்கின்றன. அதேபோல் 1972–73-ல் ரூ. 2·40 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. நம்முடைய இலக்கு 53·20 இலட்சம் மனித நாட்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது ஆகும். அதற்காகவே நாம் 1973–74-ல் ரூ. 3·02 கோடி செலவிடத் திட்டமிட்டிருக்கிறோம்.

முனிசிபாலிட்டிகளைப் பொறுத்தவரையில், மிச்சப்படும் தொகையில் ஒரு பங்கைக் கல்விக்காகச் செலவிட வேண்டுமென்ற தன்மையிலே, இப்பொழுது பொதுவாக ஆராய்ந்து அங்கே துண்டு விழுகிற நிலைமையிலே, 75 சதவிகிதத்திற்காகவாவது அவர்கள் கட்டாயம் வரியை வசூலிக்க வேண்டும். வசூலித்து, அதை மிச்சப்படுத்துகிற தொகையிலே ஓரளவுக்குக் கல்விக்கு ஒதுக்க வேண்டுமென்று சொல்லி, அதற்கும் பிறகு துண்டு விழுமானால் அரசாங்கம் ஏற்றுக் கொள்வது என்று முடிவெடுத்து அந்த உத்தரவு, இப்பொழுது பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 75 சதவிகிதத்திற்குக் குறைந்த வரியை வசூலித்து, அந்தத் துண்டு விழுந்து, அதை அரசாங்கத்தினர் செலுத்த வார்களானால், 75

சதவிகிதத்திற்குத்தான் துண்டு விழுகின்ற தொகையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமே தவிர, மற்றத் தொகையைக் கடனாகத்தான் தரும், அதை அவர்கள் எப்படியாவது தர வேண்டுமென்று இப்பொழுது தெரிவித்திருக்கிறோம். கல்வித் துறையிலே, நகராட்சி மன்றங்களிலே எந்த இடுக்கண்ணும் ஏற்படக்கூடாது என்பதற்காகத் தான் இது செய்யப்படுகிறது. இதன் காரணமாக, அரசாங்கத்திற்கு ரூ. 78 இலட்சம் செலவாகிறது என்றாலும்கூட, நகராட்சி மன்றங்களுக்கு ஏற்பட்டிருக்கிற சங்கடங்களை நீக்க இந்த முயற்சியினை அரசு மேற்கொண்டிருக்கிறது.

1—4—1973 முதல் எல்லா நகராட்சி மன்றங்களிலும் சைக்கிள் வரி நீக்கப்படுவதை அரசாங்கம் கொள்கை அளவிலே ஏற்றுக் கொண்டிருக்கிறது. இப்பொழுது ஒருசில நகராட்சிகளிலே சைக்கிள் வரி விதிக்கப்படுகிறது. ஒரு சில நகராட்சிகளிலே சைக்கிள் வரி விதிக்கப்படவில்லை. எல்லா நகராட்சிகளும் 1—4—1973-லிருந்து சைக்கிள் வரி போட வேண்டாமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. அதை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. எல்லா நகராட்சி மன்றங்களுமே அந்தப் பணியிலே ஈடுபடும்.

'நகராட்சி நிதி ஆய்வுக்குழு' ஒன்றை நியமிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. நகராட்சியினுடைய நிதிநிலைமைகளைக் கண்டு ஆராய்ந்து, அவர்கள் தங்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்வது எப்படி என்பதையும், தங்களுடைய செலவினத்தை எப்படிச் சீரமைக்கலாம் என்று அறியவும் ஓர் ஆய்வுக் குழு அமைத்து, அவர்கள் அளிக்கின்ற அறிக்கையை ஆராய்ந்து, எந்த எந்த இனங்களில் வரி விதிக்கலாம், எந்த எந்த இடங்களுக்கு நான்-டாக்ஸ் ரெவின்யூ பெறலாம் என்ற யோசனையை அவர்களிடத்திலே பெற்று, அதன் மூலம் நகராட்சி மன்றங்களுடைய வருவாயைப் பெருக்குவதற்கு வழிவகை பெறலாம் என்ற அளவிலே ஒரு நகராட்சி நிதி ஆய்வுக்குழு, 'முனிசிபல் பினான்ஸ் என்குயரி கமிட்டி' அமைக்கலாம் என்றும், அதன் மூலம் அறிக்கை பெறவும் அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது என்று கூற விரும்புகிறேன்.

நகராட்சிகள் 40 ஆக இருந்தது, இப்பொழுது 90-க்கு



மேல் உயர்ந்து விட்ட காரணத்தால், பணிகள் அதிகம் ஆகியுள்ளன. ஆகவே, இரண்டு வட்டார இயக்குநர்கள் (தனிநிலை-செலக்ஷன் கிரேட் என்ற அளவுக்கு, ஆணையர் ஒப்பான நிலையில்) நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது. ஆகவே, இரண்டு ரீஜினல் டைரக்டர்களை நியமிப்பதன் மூலமாக இந்த நகராட்சிப் பணிகள் இனிச் செம்மையாக இருக்கும். 4 பேர் வேண்டுமென்று கேட்டாலும் இப்பொழுது இருக்கிற சூழ்நிலையில் 2 ரீஜினல் டைரக்டர்கள் செலக்ஷன் கிரேட் ஆணையர்க்கு ஈடான வகையில் நியமிக்கப்பட்டு, அந்தப் பணிகளைச் செம்மைப்படுத்துவதற்கான முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சமூக வளர்ச்சி, வட்டார வளர்ச்சியைப் பொறுத்தவரையிலே, செய்யவேண்டிய பல பணிகள் இருக்கின்றன என்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம். எல்லா ஊர்களும் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென்று துடித்துக் கொண்டிருக்கிறார்கள். 5, 6 ஆண்டுகளுக்கு முன்பிருந்ததை விட அதிகமாக 2 மடங்கு அளவுக்கு மேம்பாடு செய்தாலும்கூட, செய்யவேண்டிய பணிகள் இன்னும் ஏறித்தான் இருக்கின்றன. அவைகள் எல்லோருடைய ஒத்துழைப்பினுடையஅடிப்படையிலே நிறைவேற்றுகின்ற அளவுக்கு இருக்கின்றன. பொதுமக்களும் இதிலே ஒத்துழைக்கவேண்டும். இதிலே பாரபட்சம் காட்டுகிறோம் என்று எடுத்துச் சொன்னார்கள். 1 இலட்சத்து 25 ஆயிரம் ஊராட்சிகள் இருக்கும் போது, ஓரிடத்தில் மட்டும் பாரபட்சம் காட்டுவேன என்பதை மாண்பு



மிகு உறுப்பினர்கள் உணர வேண்டும். யார் எங்கே தவறு செய்தாலும், சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கிற முறையிலே, காரியங்களைச் செய்கிறோம். நகராட்சி மன்றத்திற்குப் புறம்பான ஒரு தீர்மானம் போடுகிற பொழுது, அந்தத் தீர்மானத்தை ஏன் ரத்துச் செய்யக்கூடாது என்று கேட்கிற அந்தப் பழக்கம் தொடர்ந்து இருந்து வருகிறது. நகராட்சி மன்றங்கள் அவைகளுக்கு உரிய அளவிலேதான் இருக்கவேண்டும். தீர்மானங்கள் போடவேண்டும். ஓரிடத்தில் அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்தான் என்று குறிப்பிட்டார்கள். ஆக, அவர் கொண்டு வந்தாலும் சட்டம் சட்டம்தான் என்பதை நிரூபிப்பதற்காக அதை நிராகரித்தோம். அதுவே சிறந்த எடுத்துக்காட்டு. விதிமுறைகளுக்குப் புறம்பான தீர்மானங்கள் கொண்டு வந்தால் ரத்துச் செய்வோம். காங்கிரஸ் உறுப்பினர் கொண்டு வந்தால் தான் ரத்துச் செய்வோம், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் கொண்டு வந்தால் ரத்துச் செய்யமாட்டோம் என்று சொல்கிறவர்களுக்குத் தான் இது பயன்படும் என்ற பாளையங்கோட்டை நகராட்சி மன்றம் போட்ட தீர்மானத்தை ரத்துச் செய்தோம். மேலும் மேலும் பணி ஆற்றுவதற்கு எல்லாருடைய ஒத்துழைப்பும் வேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு பொதுமக்களுக்குடைய ஆதரவு இதற்கு நிரம்ப இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு இந்தக் காரியங்கள் நல்ல முறையிலே நடைபெறும். மற்ற மாநிலங்களை விட எல்லாத் துறையிலேயும் முன்னே நிற்கிறோம் என்றாலும், இந்தத்துறை எல்லாருடைய ஒத்துழைப்புடன் மேலும் முன்னேறமுடியும். அதற்கு உறுதுணையாக இருந்து யோசனைகளைக் கூறிய மன்ற உறுப்பினர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, இந்தத் துறையிலே பணியாற்றிய, பணியாற்றுகின்ற அதிகாரிகள், அலுவலாளர்கள், இயக்குநர்கள், அத்தனை பேருக்கும் அவர்களுடைய பணிகளுக்காக நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கை விவாதங்களுக்குக் கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் நாவலர் அவர்கள் தந்த பதிலுரை).



# கிராமங்களில் கல்வி வளர்ச்சி

தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், ஒன்றியங்கள் அதனதன் நிதி வசதிக்கேற்றவாறு ஒரு நியாயமான நிதியை ஒதுக்கி, தொடக்கப் பள்ளிகளைத் திறந்து, பேணி, தொடக்கக் கல்வியின் வளர்ச்சியில் நாட்டம் செலுத்துவதும், தனியார் தொடக்கப் பள்ளிகளுக்கு மானியங்கள் வழங்குவதும் 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலுள்ள 65 (ஈ) பிரிவின்படி ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் கடமையாகும்.

ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தொடக்கக் கல்வியை முழுமையாக நிர்வகிக்கும் பொறுப்பு சட்ட அடிப்படையில் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 27,830 பள்ளிகள் (தொடக்க, உயர் தொடக்கப் பள்ளிகள்) உள்ளன. இவற்றில் சுமார் 22,140 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படுகின்றன. எஞ்சியவை உதவி பெறும் பள்ளிகளாக உள்ளன. ஊராட்சி ஒன்றியத் தொடக்க, உயர் தொடக்கப் பள்ளிகளில் 1,24,100 ஆசிரியர்கள் பணியாற்றி 42,00,000 மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கின்றனர்.

அரசின் செலவும், ஊராட்சி ஒன்றியச் செலவின் பங்கு விவரமும் வருமாறு :—

| ஆண்டு | | அரசின் செலவு | ஊராட்சி ஒன்றியச் செலவின் பங்கு |
|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1966–67 | .. | 1,190·00 | 314·00 |
| 1967–68 | .. | 1,621·00 | 347·00 |
| 1968–69 | .. | 1,916·00 | 358·00 |
| 1969–70 | .. | 2,147·00 | 373·00 |
| 1970–71 | .. | 2,350·00 | 392·00 |
| 1971–72 | .. | 2,839·00 | 414·00 |
| 1972–73 | .. | 3,200·00 | 570·00 |
| 1973–74 | .. | 3,432·41 | 372·00 |

முன்னுள்ள மூன்றும் பிரிவில் கூறியுள்ளவாறு, ஊராட்சிக் கல்வி நிதிநிலை ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொண்டு, தொடக்கக் கல்விக்கென ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்படும் மானியங்களை மாற்றியமைத்துள்ளது. இதன் விளைவாக, முன்னர்க் கிடைத்த ஒதுக்கீட்டிற்கும் மேலாக, 1972–73-ஆம் ஆண்டு தொடக்கம் ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கூடுதலாக ரூ. 7 கோடி கிடைக்கும்.

### பள்ளிக் கட்டடங்கள்

ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்படும் பள்ளிகளுக்கு அளிக்கப்படும் மானியங்களை அரசு உயர்த்தியுள்ளது. தொடக்கப் பள்ளிக் கட்டடங்களுக்கு ரூ. 4,000-லிருந்து ரூ. 8,000-க்கும், உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு ரூ. 7,000 முதல் ரூ. 13,000 வரையிலும் உயர்த்தப்பட்டுள்ளது. தொடக்கப் பள்ளிக் கட்டடங்களுக்கு ரூ. 4,000-ம் உயர் தொடக்கப் பள்ளிக் கட்டடங்களுக்கு ரூ. 6,000-ம் குறைந்த அளவில் நன்கொடையாகத் திரட்டப்படவேண்டும்.

அரசு முயற்சி செய்த போதிலும், தொடக்க, உயர் தொடக்கப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்ய இயலவில்லை. 22,140 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் 16,213 பள்ளிகள் சொந்தக் கட்டடங்களிலேயே செயற்படுகின்றன. 1,160 பள்ளிக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன, இம்மாநிலத்திலுள்ள தொடக்கப் பள்ளிகள், உயர் தொடக்கப் பள்ளிகளுக்குப் பள்ளிக் கட்டடங்களைப் படிப்படியாகக் கட்டி முடிப்பதற்கென, ஒரு விரிவான திட்டத்தை அரசு உருவாக்கியுள்ளது. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் அனைத்திற்கும் நிதி உதவி பெற, இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தை அணுகுவதே இந்தத் திட்டமாகும். மூன்றாண்டுக் காலத்தில் ரூ. 13·83 கோடி செலவில், 7,377 தொடக்கப் பள்ளிக்கட்டடங்கள் 1,112 உயர் தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து கடனுதவியைப் பெற, சட்ட அடிப்படையில் ஊரக வளர்ச்சி வாரியம் ஒன்றினை அமைக்க அரசு ஆலோசனை செய்து வருகிறது. அவ்வாறு அமைப்பதன் மூலம், இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து கடன்களைப் பெற்று, உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கொடுத்து, பின்னர் அவற்றிடமிருந்து திரட்டி, ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திற்குத் திருப்பியளித்து விடலாம். இது தவிர, தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்திலிருந்து கிடைக்கப் பெற்ற, தமிழ்நாடு சிறப்பு நல நிதியிலிருந்தும் பள்ளிக் கட்டடங்கள் அமைக்க அரசு உதவி செய்கிறது. '' மாநிலப் பரிசுச் சீட்டுத் திட்டத்திலிருந்து கிடைத்த உதவியினால், சிறப்பு நல நிதியைக் கொண்டு, இப்பள்ளிக் கட்டடம் கட்டப்பட்டது '' என்ற சொற்கள் கொண்ட ஒரு கல், அக்கட்டடத்தில் பொருத்தப்பட வேண்டும்.

பள்ளிக் கட்டடங்களுக்கென, இதுவரை ரூ. 52·60 இலட்சம் தான் ஒதுக்கப்பட்டது. ஆனல், பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டிய திட்டத்தின் முதன்மையைக்கருதி 1973—74-ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 92·27 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியைக் குடியிருப்புகள்:—ஊர்ப்பகுதியில் பணியாற்றும் ஆசிரியைகளுக்குத் தகுந்த போதுமான இருப்பிட வசதி அளிக்கவேண்டுமென்பதை அரசு உணர்ந்துள்ளது. எனவே இதற்கென 1973—74-ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது வரை 1,485 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

புதிய உணவுத் திட்டம்:—ஊராட்சிகளையும், ஊராட்சி ஒன்றியங்களையும் நிறுவியதனல் அவற்றின் துணைகொண்டு, நாட்டை உருவாக்கும் இம்மதிய உணவுத் திட்டத்தைச் சீராகச் செயற்படுத்த முடிகிறது. இம்மாநிலத்திலுள்ள எல்லாத் தொடக்கப் பள்ளிகளிலும் இத்திட்டம் செயற்பட்டு வருகிறது.



தொழிலமைச்சர் திரு மாதவன் அவர்களால் அண்மையில் செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சிந்துப்பட்டியில் திறந்துவைக்கப்பட்ட பள்ளி

அரிசன நலப்பள்ளிகளில் கற்கும் மாணவர்கள் உட்பட, இம்மாநிலத்தில் 19 இலட்சம் குழந்தைகளுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு மதிய உணவுக் குழு உள்ளது. அதற்கு ஊராட்சித் தலைவர் தலைவராகவும், பள்ளித் தலைமையாசிரியர் செயலாளராகவும் பணியாற்றுகிருர். 1973—74-ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 218·34 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### நலவாழ்வுப் பணிகள்

ஆரம்பச் சுகாதார நிலையங்கள்:—ஆரம்பச் சுகாதார நிலையம் மேல் நிலையாக நிறுவப்பட்ட பல நோக்கப் பிரிவாகும். சமுதாயத்திற்குத் தடுப்புச் சிகிச்சையளிப்பதிலும் அக்கறை கொண்டு, மக்களின் உடல்நலனை நாளடைவில் ஊட்டம் பெறச் செய்வதே இந்நிலையங்களின் பணியாகும். இரண்டு வட்டாரங்கள் தவிர, ஏனைய எல்லா வட்டாரங்களிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஆத்தூர், துரிஞ்சாபுரம், கீழ்ப்பெண்ணாத்தூர், முடக்குறிச்சி, கொடுமுடி, வெள்ளக்கோயில், தூக்கநாயக்கன் பாளையம் ஆகிய இடங்களில் இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் உள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திலும் இரண்டாவதாக இன்னெரு ஆரம்பச் சுகாதார நிலையத்தை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது நிலையத்திற்காக 5 ஏக்கர் நிலத்தையும் 10,000-ரூபாயையும் மக்கள் நன்கொடையாகத் தரவேண்டும்.

தாய்—சேய் நலநிலையங்கள்:—தாய்—சேய் நலப் பணிகளைத் தங்கள் பகுதிகளில் வளர்ப்பது, ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். இத்திட்டத்திற்காகும் செலவை ஊராட்சி ஒன்றியம் சமாளிக்கும் வகையில், மொத்தச் செலவில் மூன்றில் இரண்டு பங்கை, அரசு உதவி மானியமாகத் தருகிறது. இலட்சம் பேர்களுக்கு மேற்பட்ட மக்கள் தொகையுடைய ஊராட்சி ஒன்றியங்களில் 10-க்கும் மேற்பட்ட தாய், சேய் நல நிலையங்களைப்படிப் படியாகத் தொடங்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயற்படும் தாய், சேய் நல நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 2,880 ஆகும்.

ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள்:—மருந்தகங்களை நிறுவுவதும், நிர்வகிப்பதும் ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் பொறுப்பாகும். மருந்தகங்களை நிர்வகிப்பதற்குத் தேவையான நிதிகளை ஊராட்சி ஒன்றியங்கள் ஒதுக்குகின்றன. இம்மாநிலத்தில் 195 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் உள்ளன. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களைத் தவிர, ஊரக மருந்தகங்களும் ஊராட்சிகளில் உள்ளன. மாநிலத்தில் 260 ஊரக மருந்தகங்கள் உள்ளன. மருந்தகங்களை நிர்வகிப்பதற்கும் மொத்தச் செலவில் 50 சதவீதம், அது ஆண்டொன்றிற்கு ரூ. 5,400-க்கும் மேற்படாமல் நிதியுதவியைப் பெற, ஊராட்சி ஒன்றியம் தகுதி பெற்றதாகிறது.

குடும்ப நலத்திட்டம்:—குடும்ப நலத் திட்ட வேலைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் பொறுப்பாக்கப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட குடும்ப நல வேலைத் திட்டத்தின் கீழ், இம்மாநிலத்திலுள்ள 374 வட்டாரங்களும் கொணரப்பட்டுள்ளன. 1974-ஆம் ஆண்டில், பிறப்புத் தொகை ஆயிரம் பேர்களுக்கு 40 என்பதை 25 எனக் குறைப்பதே அரசின் குறிக்கோளாக இருக்கிறது. வெவ்வேறு மாநிலங்களில் உள்ள மக்கள் தொகை, பிறப்பு விகிதம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே, பல்வேறு நலத்திட்ட முறைகளிலும் திட்ட இலக்குகள் நிர்ணயிக்கப்படுகின்றன. குடும்ப நலத்திட்டத்தின் கீழ் ஊராட்சிகளால் ஊக்குவிக்கப்பட்டு, அதன் காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ள ஒவ்வோர் அறுவைச் சிகிச்சைக்கும் 10-ரூபாயை ஈட்டு மானியமாகப் பெற ஊராட்கள் தகுதியுடையன. அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளச் செல்பவரின் போக்குவரத்துச் செலவுக்கும், ஒன்றியப் பகுதிகளில், குடும்ப நலத் திட்டத்தை விளம்பரப்படுத்துவதில் ஏற்படும் செலவிற்கும் இத் தொகை அளிக்கப்படுகிறது.

ஒவ்வோராண்டும் மறு பயிற்சி முகாம் ஒன்றினை ஊராட்சி ஒன்றியங்கள் நடத்துகின்றன. இவற்றில் ஊர்த்தலைவர்கள் பங்கு பெறுகின்றனர். என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊர் வளர்ச்சித் திட்டங்கள் சில தகவல்கள்

ஊர்ப்பணிகளில் மானியங்களில் கிடைக்கும் நிதிகளைக் குடிநீர் வழங்கல், இணைப்புச் சாலைகளை அமைத்தல், பள்ளிக் கட்டடங்களை அமைத்தல் ஆகியவற்றில் ஊராட்சி ஒன்றியங்கள் செலவிடுகின்றன. 31—12—1972 ஆம் நாளைய நிலவரப்படி, செய்து தரப்பட்ட அடிப்படை வசதிகளின் விவரங்கள் வருமாறு :—

1. மேல்நிலை நீர்த் தொட்டிகள்—5,699.
2. கிணறுகள்—72,567.
3. அமைக்கப்பட்ட இணைப்புச் சாலைகள் (கி.மீ.)—36,644.
4. பள்ளிக் கட்டடங்கள் (கட்டப்பட்டவை)—16,123

1973–74-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை மதிப்பீட்டில் ஊர்ப் பணிகள் திட்டத்திற்கென 7384·2 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு முதன்மையான இடம் அளித்துள்ள போதிலும் கூட, பிரச்சினையில் ஒரு சிறிய பகுதியினைத்தான் இதுவரை அணுக முடிந்துள்ளது. விரிவான அடிப்படையில், பெருந்திட்டமிட்டு, இப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு காணப் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஊர்ப்புறங்களில், குடிநீர் வழங்கும் பணியினை மேற்கொண்டு செயற்படுவதற்கெனத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை அரசு 1969-ஆம் ஆண்டில் உருவாக்கியது.

சேகரிக்கப்பட்ட தகவல்களிலிருந்து, 5,551 ஊர்கள், சிற்றூர்களில் நிலையான குடிநீர் ஆதாரங்களே இல்லையென்றும், 12,858 ஊர்கள், சிற்றூர்களில் தற்போதுள்ள குடிநீர் ஆதாரங்கள் வலுப்படுத்தப்பட வேண்டுமென்றும் நோய் பரவக் கூடிய 2,059 ஊர்கள், சிற்றூர்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்படவேண்டுமென்றும் அறியப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட மூன்றினங்களுக்கும் ரூ. 40 கோடி தேவைப்படுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

பற்றுக்குறை, ''காலரா'' தொற்றும் ஊர்கள் தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை, ஊரகப்பணிகள்) கண்டறிந்துள்ளார். அவ்வூர்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தையும் அவர் உருவாக்கியுள்ளார். அத்திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இம் மாநிலத்தில் பாறைகள், படிந்துள்ள எல்லா இடங்களிலுமுள்ள பற்றுக்குறை, 'காலரா' தொற்றும் ஊர்களில் ''யூனிசெப்'' பின் உதவியைக் கொண்டு ஐந்தாண்டுகளுக்குள்ளாக 8,850 குழாய்க் கிணறுகளை நிறுவ, இத்திட்டம் வகை செய்கிறது. துளைக்கருவிகளையும், இதர அவசியமான சாதனங்களையும் ''யூனிசெப்'' உதவியாக அளிக்கும். 8,850 குழாய்க் கிணறுகளை நிறுவ, அவற்றினைப் பராமரிக்கும் செலவு ரூ. 271 கோடியாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றப்படுகிறது.

100 சதவீத மைய உதவியுடன் கூடிய ரூ. 20 கோடி திட்டமொன்றினை 1972–73-ஆம் ஆண்டிற்கு, நாடு முழுவதற்குமாக, இந்திய அரசு உருவாக்கியுள்ளது. 1973–74-ஆம் ஆண்டிற்கு ரூ. 40 கோடி கொண்ட ஒரு திட்டமும் மைய அரசிடம் உள்ளது. நிலையான, பாதுகாப்பான குடிநீர் அவசரமாகத் தேவைப்படும் மண்டலங்கள் அல்லது பகுதிகளுக்கு, குடிநீர் வழங்க ஆவன செய்வதே இந்த மைய அரசுத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். ஊர்ப்புறங்களின் குடிநீர் வழங்கும் இவ் விரைவுத் திட்டத்தினைச் செயற்படுத்தும் பொறுப்பு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் விடப்பட்டது. அந்த வாரியமும், ரூ. 252·13 இலட்சத்திற்குத் திட்டத்தை உருவாக்கி, இந்திய அரசிற்கு அனுப்பியுள்ளது. இதனால் 41 திட்டங்கள் தருமபுரி மாவட்டத்திலும், 295 இராமநாதபுரம் மாவட்டத்திலும் நிறைவேற்றப்பட வகை செய்கிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அனுப்பிய திட்டத்திற்கு ஒப்புதல் தந்த மைய அரசு, இம்மாநிலத்திற்கென, 1972–73-ல் ஒதுக்கப்பட்ட ரூ. 1 கோடி மதிப்புள்ள திட்டம் மட்டுமே நிறைவேற்றப்பட வேண்டுமென்று கூறியுள்ளது. ஆனால், இந்த ரூ. 1 கோடிக்குள்ளே நிறைவேற்றப்படக்கூடிய திட்டங்களைத் தேர்ந்தெடுக்கும் தீர்ப்புரிமை மாநில அரசிடம் விடப்பட்டுள்ளது. 1973–74-ஆம் நிதியாண்டில், இம் மாநிலத்திற்குக் கிடைக்கக் கூடிய ஒதுக்கீடு ரூ. 2 கோடியாக இருக்கலாம்.

### எல்லைகளைப் பராமரித்தல்

தங்களுடைய பொறுப்பிலுள்ள சாலைகளைப் பராமரிப்பதற்கென ஊராட்சி ஒன்றியங்களுக்கு 'உள்ளூர்ச் சாலைகள் மானியம்' என்ற மானியம் அளிக்கப்படுகிறது. ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலுமுள்ள மக்கள் தொகையில் தலைக்கு 18 காசுகள் வீதம் என்ற வீதத்திலும், ஊராட்சி ஒன்றியங்கள் பராமரிக்கும் சாலைகள் சாதாரணமானவையா, அல்லது கடற்கரைப் பகுதியா மற்றும் கழிமுகப் பகுதியா அல்லது மலைப்பாங்கான பகுதியா என்ற அடிப்படையில் மைல் ஒன்றிற்கு முறையே, ரூ. 600, 800, 1,500 என்ற வீதத்திலும் வழங்கப்படுகிறது. 1973–74-ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 119·31 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

எல்லா ஊர்களையும் முக்கியமான சாலைகளுடன் இணைக்கும் வகையில் தரமான சாலைகளை அமைப்பதே, அரசின் தற்போதைய கொள்கையாகும். சாலைகளை அமைக்கும் பணிகளால், ஊர்ப்புறங்களிலுள்ள மக்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்புக் கிடைக்கிறது. இதனைக் கருத்திற்கொண்டு, 1,500-க்கும் மேற்பட்ட மக்களைக் கொண்ட குடியிருப்புகள் எல்லாவற்றையும் முக்கியச் சாலைகளுடன் இணைக்கும் ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றினை அரசு தீட்டியுள்ளது.

இத் திட்டத்தினை நிறைவேற்ற, ஊர்திகளின் பேரில் 10 சதவீத மேல் வரி விதித்து, அதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு, ஊர்ப்புறச்சாலைகள் வளர்ச்சி நிதியை உருவாக்க முடிவு செய்யப்பட்டது. இந்த ஊர்ப்புறச் சாலைகள் வளர்ச்சி நிதியினை, இந்திய அரசின் நன்கொடைத் தொகையுடன் இணைத்து, சிறப்பு வேலை வாய்ப்புத் திட்டச் செலவில் இந்திய அரசும், மாநில அரசும் 50:50 சதவீதம் பகிர்ந்து கொள்ளும்.

281 கிலோமீட்டர் நீளத்திற்கு, எல்லாப் பருவங்களுக்கும் ஏற்ற இணைப்புச் சாலைகளை அமைக்கவும், தற்போதுள்ள 4,280 கிலோமீட்டர் ''கச்சா''ச் சாலைகளை மேம்படுத்தி, எல்லாப் பருவங்களுக்கு மேற்ற சாலைகளாக அமைக்கவும் ரூ. 19 கோடி மதிப்புள்ள ஒரு கோரிக்கையை ஊரக வளர்ச்சி இயக்குநருடன் கலந்தாலோசித்து, தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை, ஊரகப் பணிகள்) அனுப்பினர். அக்கோரிக்கை அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தலைமைப் பொறியாளரின் (நெடுஞ்சாலை, ஊரகப் பணிகள்) முதல்நிலைத் திட்டம் ரூ. 6 கோடி மதிப்புள்ளதாகும். அதில் அடங்கியுள்ளவை வருமாறு :—

(அ) குறுக்கே செல்லும் வடிகால் பணிகளையும் உள்ளடக்கி, 200 ஊர்களை இணைத்து 281 கிலோமீட்டர் நீளமுள்ள எல்லாப் பருவத்திற்குமேற்ற இணைப்புச் சாலைகள்—இதற்கு ரூ. 1·50 கோடி செலவாகும்.

(ஆ) ஊர்ப்புறச் சாலைகளுக்குக் குறுக்கே வடிகால்களை அமைப்பதில் தற்போது எல்லாப் பருவத்திற்கு மேற்ற வாறில்லாத ''கச்சா'' சாலைகளில் 1,427 கிலோமீட்டர் சாலைகளின் தரத்தை உயர்த்தி, எல்லாப் பருவத்திற்கும் ஏற்ற சாலைகளாக அமைத்தல்—இதற்கு ரூ. 4·50 கோடி.

குறைந்த நிதி வசதியின் காரணமாக, இத்திட்டம் ஐந்தாண்டுக் காலத்திற்குள் நிறைவேற்றப்படும். இத்திட்டத்தினால் பெருவாரியான மக்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்புள்ளது. மறைமுகமாகக் கிடைக்கும் வேலைகளைத் தவிர, நேரடியாகவே 15,000 சாதாரண மானவர்களுக்கும், 500 விற்பன்னர்களுக்கும் வேலை கிடைக்கும்.

1972—73-ஆம் ஆண்டுக்குரிய திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 300 இலட்சமும், 1973—74-ஆம் ஆண்டிற்கு ரூ. 300 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சிப் பகுதிகளில் புழுதிபடியாச் சாலைகளை அமைப்பதில் பேரூராட்சிகளுக்கு அரசு பாதி மானியத் திட்டம் ஒன்றினை நிறைவேற்றி வருகிறது. 1973—74-ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் இதற்கென ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



செங்குளம் கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகத்தின் கிணறு வெட்டப்படுகிறது

### சிறிய நீர்ப்பாசனம்

தமிழ்நாட்டில் சுமார் 36,000 சிறிய நீர்ப்பாசன வாயில்கள் உள்ளன. அவற்றுள் ஊராட்சி ஒன்றியங்களிடம் பேணுதற்காக சுமார் 24,000 ஒப்படைக்கப்பட்டுள்ளன. நீர்ப்பாசன வாயில் ஒவ்வொன்றும் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறையாவது கவனம் பெற வேண்டுமென்ற அடிப்படையில், பேணுதல் திட்டம் ஒன்றை வகுத்துக் கொள்ளுமாறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு யோசனை கூறப்பட்டுள்ளது.

சிறிய நீர்ப்பாசனத்திற்கான ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஒவ்வோராண்டும் அவ்வாண்டுத் தேவையினையொட்டி, ஒரு தொகை ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. 1973—74-ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 90·44 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள், தொழில் திட்ட வேலைகள்

தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் வாரியத்தின் தொழில் நுட்ப உதவி, ஆலோசனைகளை ஏற்று, கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள், தொழில்திட்ட வேலைகள், ஊராட்சி ஒன்றியங்களால் நிறைவேற்றப்படுகின்றன.

இதுவரை ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்பட்ட கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள், தொழில் திட்ட வேலைப் பிரிவினைகள் அனைத்தையும் தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு மாற்றும் பிரச்சினை அரசின் ஆய்வில் உள்ளது. ஊராட்சி ஒன்றியங்களுக்கு இவை தொடர்பாகவுள்ள சொத்துக்கள், கடன்கள், மற்றும் இப்பிரிவுகளைச் செயற்படுத்துதற்குரிய விதி வரம்புகள் ஆகியவை உருவாக்கப்பட்டு வருகின்றன.

கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள், தொழில்கள் திட்டத்திற்கு 1973—74-ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

# மாலைக்கு ஏங்கினள் ஒரு மங்கை

கு. மனாமலையான்

"மாலையாவது வாங்கிக்கலாமா ?''

—அமுதாவின் குரலில் ஏக்கம் இழையோடிற்று; விரக்தியின் விளிம்பும் அதில் நிழலாடிற்று.

அவளோடு நெருங்கி அமர்ந்து அவளது தோள்பட்டை மீது கையை வைத்திருந்த கதிரவன், அவளது நிலா முகத்தைத் தன் விழிகளுக்கு நேராகத் திருப்பினான்.

"என்ன அமுதா இது ? உன் கேள்வி ஒரு மாதிரியாக இருக்கிறதே !''—வறட்டுச் சிரிப்பினூடே வருத்தத்தையும் குழைத்துக் கேட்டான் அவன்.

"அதற்கில்லை ; நம்முடைய திருமணத்திற்கு எந்த மங்கலப் பொருளையும் வாங்கவில்லையே ! அதைப் போல மாலையும் தேவையில்லைதானோ என்று நினைத்தேன்.''

"பகுத்தறிவுத் திருமணத்திலே மாலை மாற்றிக்கொள்வது தானே முக்கியமான நிகழ்ச்சி !''

"ஆனால், நாம் செய்துகொள்ளப்போவது பதிவுத் திருமணம் தானே! அதற்குக் கையெழுத்து மட்டும் போதாதா ?''—வழக்கமான கேலிச் சிரிப்பு அமுதாவின் பவள வாயிலிருந்து வழிந்தது ; 'குத்தலும்' அதில் கொடி கட்டிப் பறந்தது.

கதிரவன் அவளுடைய குத்தல் சிரிப்பைக் கண்டு கோபங் கொள்ளவில்லை ; அந்த மணிச் சிரிப்புத்தானே அவனை மயக்கி ஈர்த்த மதுக் கிண்ணம் !

அவன் விளக்கம் அளித்தான்.

"நாம் செய்துகொள்ளப் போவது பதிவுத் திருமணந்தான் என்றாலும், எல்லா வகையிலும் பகுத்தறிவோடு இசைந்த திருமணந்தான். இதிலே மாலை மாற்றிக்கொள்வதை மட்டும் முக்கியமானதாக வைத்திருப்பது ஏன் தெரியுமா ?''

"ஏனாம் ?''

"நாம் செய்துகொள்ளப் போகிற வாழ்க்கை ஒப்பந்தத்தைக் குறிக்கும் அருமையான சொல் 'மணம்' என்பது அல்லவா ? அந்த மணத்தையே பிரதிபலிக்கின்ற ஒரு காட்சிப் பொருள்—ஒரு பருவப் பொருளும்—இந்த வாழ்க்கைத் திருப்பத்தில் இடம் பெற்றுக் கண்ணுக்கு அழகையும், நெஞ்சுக்குள் மணத்தையும், நினைவெல்லாம் இனிப்பையும் தவழவிட வேண்டும் என்பதற்காகத் தான் மாலையை முக்கியமாக மாற்றிக் கொள்கிறோம்.''

"உங்கள் விளக்கம் பிரமாதம். எங்கே நீங்கள் மாலையையும் வேண்டாம் என்று சொல்லிவிடுவீர்களோ என்று நான் எவ்வளவு பயந்தேன் தெரியுமா ?''

—மகிழ்ச்சிப் பெருக்கோடு அமுதா எதிரே தெரியும் சிறு கண்ணாடி மூலம் தங்களைக் காரோட்டி கவனிப்பாரே என்கிற கூச்சங்கூட இல்லாமல் அவனுடைய கழுத்திலே தன் முகத்தையும் பதித்தாள்.

"டிரைவர் ! அந்தப் பூக்கடைப் பக்கம் வந்ததும் மறக்காமல் நிறுத்துங்கள்''—என்றான் கதிரவன்.

* * * *

அந்த வாடகைக் கார் விரைந்து பறந்தது ; அதை விட வேகமாகப் பறந்தன அமுதாவின் நினைவுகள்.

பலத்த எதிர்ப்புகளுக்கிடையே தான் கதிரவனின் கரத்தினைப் பற்றத் துணிந்தாள் அமுதா.

உயர்நிலைப் பள்ளியில் பயின்று கொண்டிருந்த அந்தச் சின்ன வயதிலிருந்தே அவளது உள்ளத்தினுள்ளே பெரிய ஆசையொன்று நெட்டிலிங்க மரம்போல நெடிதாக வளர்ந்து கொண்டிருந்தது.

காந்தியடிகளை — லெனினை— சர்ச்சிலை — ரூஸ்வெல்ட்டை — மணந்துகொண்ட அந்தந்த மனைவியர்கள் தத்தம் கணவர்களுக்கு வந்து சேரும் புகழ்மாலைகளைக் கண்டுகண்டு எத்தகைய பூரிப்பு வெள்ளத்திலே மிதந்து மிதந்து திளைத்திருப்பார்கள் ! அத்தகைய பெருமித நிலையைப் பெறுகின்ற வகையில்—பொதுவாழ்வில் ஈடுபட்டுப் புகழொளியை வீசுகின்றவரே தனக்கும் கணவராக வாய்த்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்பதே அமுதாவின் ஆசை.

ஆனால், அது அவ்வளவு எளிதில் நிறைவேறக்கூடியதாக இல்லை.

ஏழ்மையின் தீ நாக்குகள் இடையறாது அவளது குடும்பத்தைச் சுட்டுப் பொசுக்கிய வண்ணமே இருந்தன. எட்டுப்பேர்களுக்கு நிம்மதியான முறையில் இரைபோட முடியாமல், அவளுடைய அப்பா பட்ட பாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல ; கடன் சுமைகள் அவரது கழுத்தை நெரித்த வண்ணமே இருந்தன. அந்த வறுமைச் சிறையிலிருந்து ஓரளவாவது விடுதலை பெறுவதற்காகவேனும், குடும்பத்தில் மூத்த பெண்ணாகப் பிறந்து தொலைத்துவிட்ட அமுதா ஏதாவது அலுவல் பார்த்துத்தான் ஆகவேண்டும் என்கிற கட்டாய நிலைக்கு ஆளானாள்.

அலுவலகத்திலோ எத்தனை எத்தனையோ கழுகுக் கண்கள் அவளை விழுங்கிவிடுவதற்குச் சுற்றிச் சுற்றிப் பறந்து வந்தன. எனினும், காற்றடித்த பக்கமெல்லாம் தலை சாயும் நாணலைப் போல நாணிக் கோணாமல், நெருப்புப் பிழம்பாகவே நிமிர்ந்த நடை போட்டுக் கொண்டிருந்தாள் அவள். தம்பி—தங்கைகளைக் கரையேற்ற வேண்டுமே என்கிற கவலையே, அவளது பருவக் கிளர்ச்சிகளை, கரை தொட்ட அலைகளாகக் கரைய வைத்துவிட்டது.

அலுவலகத்தை அடைக்கலம் அடைந்த பின்னர் பத்தாண்டுகள் இப்படியே பாலைவனமாக மரத்துக்கொண்டிருந்தது அவளது இளமை.

ஒருமுறை அமுதா பணிபுரிகின்ற அலுவலக மனமகிழ் மன்றத்தின் சார்பில் இலக்கியக் கூட்டம் ஒன்று நிகழ்ந்தது. அதிலே சொற்பொழிவு ஆற்றுவதற்கு வந்திருந்தான் கதிரவன்.

அதுதான் அவர்களுடைய முதல் சந்திப்பு.

அதற்குப் பிறகு கதிரவன் கலந்துகொள்ளும் இலக்கியக் கூட்டம் எங்கே நடைபெற்றாலும் அவனுடைய சொற்பொழிவுக் கற்கண்டைச் சுவைத்துத் திளைப்பதற்குத் தவறாமல் சென்று விடுவாள் அமுதா.

ஒருநாள் கூட்டம் முடிவதற்கு நெடுநேரம் ஆயிற்று. இரவு பதினொரு மணிக்கு மேல் இருக்கும். தன் வீட்டிற்குச் செல்லப் பேருந்து கிடைக்காதே, ஆட்டோ — ரிக்ஷாக்காரர்களும், டாக்சிக்காரர்களும் தன்னால் தாங்க முடியாத அதிகக் கட்டணம் கேட்பார்களே என்று அமுதா குழம்பிக் கொண்டிருந்த போது—

தான் ஏறிய வாடகைக்காரை அவள் அருகே கொண்டுபோய் நிறுத்துமாறு கூறினான் கதிரவன். அவளை ஏறிக்கொள்ளுமாறு வற்புறுத்தினான். அவள் முதலில் மறுத்துவிட்டாள். ஆனால், அவன் பின்னிருக்கையிலிருந்து வெளியே வந்து முன்னிருக்கையில் தான் அமர்ந்துகொள்ளும் எண்ணத்துடன், அவளுக்குப் பின்னிருக்கைக் கதவைத் திறந்து விட்ட 'கண்ணியம்' அமுதாவின் இதயத்தைக் கவர்ந்தது. அவளுடைய கால்கள் தாமாகக் காரை நோக்கி நடந்தன.

வழியில் சிறிது நேரம் சென்று கதிரவன் இப்படிக் கேட்டான்.

'' நீங்கள் பத்து மணிக்கே வீட்டிற்குக் கிளம்பியிருக்கலாமே! ஏன், இவ்வளவு நேரம் காத்திருந்தீர்கள் ?''

'' உங்கள் பேச்சு பத்து மணிக்குள் முடியவில்லையே !''

'' அப்போ 'வளவள' வென்று நீண்டநேரம் பேசி உங்களுடைய பொறுமையை எல்லாம் அறுஅறு என்று அறுத்துவிட்டேன் என்று சொல்லுங்கள் ?''

—கதிரவன் சிரித்தவாறே கூறினான்.

'' அய்யய்யோ ? இன்றைக்கு உங்கள் சொற்பொழிவு மிகவும் அற்புதமாக இருந்தது ; எனக்கு ரொம்ப ரொம்பப் பிடித்திருந்தது ''

—உற்சாகத்துடன் மொழிந்தாள் அமுதா.

'' உங்களைப் போன்ற ஒரு பெண் என்னுடைய பேச்சைக் கேட்பதற்காக இவ்வளவு நேரம்வரை காத்திருந்ததை நினைத்துப் பார்க்கும்பொழுது என் நெஞ்சுக்கு எவ்வளவு பெருமிதமாக இருக்கிறது தெரியுமா ? ''

கதிரவனின் இந்தச் சொற்களுக்கு ஏதோ மறுமொழி கூற வேண்டும் என்றுதான் அமுதா நினைத்தாள்.

வார்த்தைகளே வரவில்லை.

வீடு வந்துவிட்டது.

காரைவிட்டு அமுதா கீழே இறங்கினாள். '' மிகுந்த நன்றி ''—என்று கரங்குவித்தாள்.

கதிரவன், கூட்டத்தில் தன் கழுத்துக்குப் போடப்பட்ட மாலையைக் காரில் இருந்தவாறே அவளை நோக்கி நீட்டினான்.

'' வேண்டாங்க ; உங்கள் வீட்டிலே உள்ளவர்கள் நாளைக்குத் தலையிலே வைத்துக் கொள்ளலாமே . ''

—என்றாள் அமுதா.

'' என் வீட்டிலே யார் இருக்காங்க ? உங்களுக்காவது இந்த ரோஜாப்பூக்கள் பயன்படட்டும். பிடியுங்கள் ''

—சொல்லிக்கொண்டே மாலையைத் தூக்கி மெள்ள வீசினான்.

அவள் தாவிப்பிடிப்பதற்குள் அந்த மாலையோ மண்ணில் விழுந்துவிட்டது.

'' அய்யய்யோ ''

— என்றான் கதிரவன்.

'' பரவாயில்லை ''



—என்றவாறே கீழே குனிந்து மாலையை எடுத்துக் கொண்டாள் அமுதா.

• • •

பூக்கடை வந்துவிட்டது.

கதிரவன் இறங்கிப் போய் இரண்டு ரோஜாப்பூ மாலைகளை வாங்கி வந்தான் ; அவற்றை முன்னிருக்கையில் போட்டான்.

வாடகைக்கார் மீண்டும் பறக்கத் தொடங்கியது.

பழைய நினைவுகளிலிருந்து மீண்டு கொண்டிருந்த அமுதா தனக்குத் தானே சிரித்த வண்ணம் இருந்தாள்.

'' என்ன அமுதா, நீயாகச் சிரித்துக் கொள்கிறாய் ? அதை எனக்கும் கொஞ்சம் சொல்லக் கூடாதா ?

—என்று கேட்டான் கதிரவன்.

'' ஒன்றுமில்லை ; அன்றைக்கு ஒருநாள் நீங்கள் மாலையைத் தூக்கிப் போட்டபோது அதைச் சரியாக நான் தாவிப் பிடிக்காததாலே அது கீழே விழுந்து விட்டது இல்லையா ? ''

'' ஆமாம் ''

'' இன்றைக்கும் நீங்கள் மாலையைத் தூக்கிப் போட்டால் என்ன செய்கிறது ? அது கீழே விழுந்துவிடாதபடி ஒட்டகம் மாதிரி கழுத்தை நீட்ட வேண்டுமே என்று நினைத்தேன் ; என்னை அறியாமல் சிரிப்பு வந்துவிட்டது.''

'' ஓ ! இதற்குத்தானா ? ஆனால், அன்றைக்குத் தூரத்தில் இருந்தேன் ; தூக்கிப் போட்டேன். இன்றைக்குப் பக்கத்தில் நெருங்கிவந்து பக்குவமாகப் போட மாட்டேனா ? ''

'' ரொம்பப் பக்கத்தில் வந்து விடாதீர்கள் ; பார்க்கிறவர்கள் சிரிக்கப் போகிறார்கள் ! ''

— கேலியாகச் சிரிப்பலைகளை எழுப்பினாள் அமுதா ; தானும் சிரித்தான் கதிரவன்.

ஒரு தேநீர்க் கடைப்பக்கம் வந்ததும்—

வாடகைக் கார் ' சரக் '—என்று ஒரு குலுங்குக் குலுங்கி நின்றது.

'' சார், கொஞ்சம் மன்னிச்சுக்குங்க ; ஒரு டீ குடிச்சுட்டு வந்துடறேன்.''

—என்று காரோட்டி கீழே இறங்கிப் போனார்.

அமுதா, என்னென்னவோ இன்ப நினைவுகளில் மிதந்தவளாகக் கதிரவனையே கண்கொட்டாமல் பார்த்தாள்; ஆசை பொங்கப் பார்த்தாள்.

"ஆமாம், இன்றைக்கு நம் திருமணத்திற்கு உன்னுடைய தோழி உமாவும் வருவாள் இல்லையா?"

— கதிரவன் கேட்டான்.

"ஊகூம்; வரமாட்டாள்; நான் அவளுக்குச் சொல்லவில்லை"

"ஏன்?"

"அவள் உங்களைப் பற்றி ஒரு மாதிரியாகப் பேசினாள்; அதனால்தான்."

"என்ன பேசினாள்?"

"வேண்டாங்க"

"சும்மா சொல்; நான் ஒன்றும் தொட்டாற் சுருங்கி இல்லே; வார்த்தையாலே எவ்வளவு சுட்டாலும் தாங்கிக் கொள்வேன்"

"நீங்கள் இவ்வளவு வற்புறுத்துகிறதாலே சொல்கிறேன்; அதாவது......... மேடைப் பேச்சாளிகளையெல்லாம் நம்பவே கூடாதாம்; நாணயம் இல்லாதவர்களாம்; நடத்தையும் கெட்டவர்களாம்..... இன்னும் அப்படி இப்படியென்று என்னென்னவோ அவிழ்த்துவிட்டாள். ஆனால் நான், அவளுக்கு எப்படிச் சாட்டையடி கொடுத்தேன் தெரியுமா?"

"..............."

"குறை இல்லாத மனிதப் பிறவியே கிடையாது. அந்தக் குறை என்பது குறைவாக உள்ளவர்களைத்தான் நாம் நல்லவர்களாக எடுத்துக் கொள்ள வேண்டும். அசிங்கத்தையே பார்த்துப் பழகியவர்களுக்கு அழகான பூக்களை ரசிக்க முடியாதுதான். கண்ணுக்கு அருவருப்பான தரையிலிருந்துதான் கவர்ச்சி மிகுந்த மலர்கள் சிரிக்கின்றன. வாதத்திற்காக நீ சொல்வது உண்மையென்றே நான் எடுத்துக் கொண்டாலும் —நான் பலாப்பழத்தின் முள்ளைப் பார்த்துப் பயந்து விட்டால் அதன் உள்ளே இருக்கும் சுளை இனிக்குமா? மனிதர்களிடம் நீ முள்ளை மட்டுமே பார்க்கிறாய்; நான் சுளையைப் பார்க்கிறேன். பலாப்பழத்திலே முள்ளைமட்டும் பார்த்தால் சுளை இனிக்காது; சுளையை மட்டும் பார்த்தால் முள் உறுத்தாது!" என்றேன். அவ்வளவுதான்; அந்த உமாவுக்கு முகமே செத்துப் போய் விட்டது."

"நல்ல வேளையாக நான் பிழைத்துக்கொண்டு விட்டேன். நீ மட்டும் ஒரு சில பெண்களைப்போல ஆழ்ந்து சிந்திக்காத அரை வேக்காட்டுக்காரியாக இருந்திருந்தால் என் நிலைமை என்ன ஆகியிருக்கும்? ஆமா, உமாவுக்கு என்மேலே ஏன் அவ்வளவு கோபம்?"

"எல்லாம் பொருமைதான்; அழுக்குத்தான். உங்களைப் போலப் புகழுள்ள ஒருத்தர் தனக்குக் கிடைக்கவில்லையே என்கிற வயிற்றெரிச்சல்தான்"

—அமுதா இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே காரோட்டி தேநீர்க் கடையிலிருந்து திரும்பி வந்து விட்டார்.

முன்னிருக்கையில் அமரப் போனவர்—

"என்னங்க இது! ஒரு மாலையைக் காணோம்"

—என்று திகைப்புடன் கேட்டார்.

"என்ன! ஒரு மாலையைக் காணோமா?"

—பதறிப் போனாள் அமுதா.

கதிரவனுக்கு வியப்பாக இருந்தது.

"எப்படிக் காணாமல் போகும்? கீழே விழுந்து கிடக்கிறதா பாருங்கள்"

"இல்லீங்க; நல்லாப் பார்த்திட்டேன்"

—என்றவாறே காரோட்டி கீழே இறங்கினார்.



ஏதோ ஒரு சந்தேகத்துடன் சுற்று முற்றும் தன் பார்வையைப் பறக்கவிட்டார்.

வெகு தொலைவிற்கு அப்பால் ஒரு பையன் மாலையைத் தூக்கிக் கொண்டு ஓடுவது தெரிந்தது.

காரோட்டி அவனை நோக்கி ஓட்டம் பிடித்தார்.

கதிரவன்—அமுதா இருவருக்கும் இருப்புக் கொள்ளவில்லை. அவர்களும் அந்தத் திசையை நோக்கி ஓடத் தொடங்கினர்கள்.

பையனே ஒரு குடிசைப் பக்கம் திரும்பி மறைந்துவிட்டான்.

காரோட்டியோ தளரவில்லை. அவரும் குடிசைப் பக்கம் நுழைந்தார். எப்படியோ பையனைப் பிடித்துத் தெருப்பக்கம் இழுத்துக் கொண்டு வந்துவிட்டார்.

அவன் கையிலோ மாலை இல்லை.

"மாலையை ஏன்டா திருடிக்கிட்டு ஓடி வந்தே? இப்போ உன்னை நான் சும்மா விடப் போறதில்லை!"

—ஆங்காரமாகக் கூறிக் கொண்டே பையனின் கன்னத்தில் 'பளார் பளார்' என்று அறைந்தார் காரோட்டி.

"அய்யா! என்னை விட்டு விடுங்கய்யா! என்னை விட்டு விடுங்கய்யா!"

—கதறித் துடித்தான் பையன்.

இதற்குள் மணமக்கள் இருவரும் அங்கே வந்துவிட்டார்கள், கும்பலும் கூடிவிட்டது.

பையனை நையப் புடைத்த காரோட்டியின் கையைப் பிடித்துக்கொண்டான் கதிரவன்.

"சரி, ஏம்பா தம்பி மாலையைத் திருடிக்கொண்டு ஓடி வந்தே?"

—என்று நயமாகக் கேட்டான்.

சிறுவன் அடக்கமுடியாத அழுகையுடன் கண்ணீர் மழையைப் பொழியவிட்டுத் தேம்பித் தேம்பிக் கொண்டே இப்படிச் சொன்னன்.

"என் அம்மாவுக்குப் பூ மேலே உசிரு. அதுக்கு எப்பவுமே தாங்கமுடியாத வவுத்து வலி. அதனுலே 'சீக்கிரம் செத்திடுவேன் — செத்திடுவேன்'னு சொல்லிக்கிட்டே இருந்துச்சு. ஒருநாள் என்னைப் பக்கத்திலே அழைச்சு அணைச்சுக்கிட்டு 'நான் செத்திட்டா என் கழுத்துக்கு எப்படியாச்சும் ஒரு மாலையைக் கொண்டாந்து போடுவியாடா கண்ணு'ன்னு கேட்டுச்சு. 'கண்டிப்பா போடுவேம்மா'ன்னு சத்தியம் பண்ணிக் கொடுத்தேன். இன்னைக்கு எங்க அம்மா செத்துப் போயிடுச்சு. எப்படியாச்சும் பிச்சை எடுத்தாச்சும் மாலை வாங்கணும்னு நெனச்சுக்கிட்டு சாலைப் பக்கம் போனேன். உங்க கார் நின்னுக்கிட்டு இருந்துச்சு. சும்மா எட்டிப் பார்த்தேன். நீங்களும் அம்மாவும் வெளியே பாக்காமே பேசிக்கிட்டு இருந்தீங்க. முன்னலே பளபளன்னு மாலை தெரிஞ்சுது. அம்மாவோட ஆசையை நிறைவேத்தணுமேன்னு தூக்கிக்கிட்டு ஓடி வந்துட்டேன்"

—பையன் சொன்னதைக் கேட்டதுமே எல்லோருடைய கண்களிலிருந்தும் நீர் வழியலாயிற்று.

அமுதாவோ குமுறிக் குமுறியே அழத் தொடங்கிவிட்டாள்.

கதிரவன் அந்தப் பையனைக் கட்டிப் பிடித்துக்கொண்டான்: அவனுலும் கண்ணீரை ஒளிக்க முடியவில்லை.

சில விநாடிகளில் அனைவரும் குடிசைக்குச் சென்ருர்கள். அங்கே......மரணச் சிரிப்பை மலரவிட்டு மாலையும் கழுத்துமாகக் கிடந்தாள் அந்த ஏழைத் தாய்.

மணமாலை பிணமாலையாக மாறிக்கிடந்தது. ஓர் ஏழைத் தாயின் கடைசி ஆசையை நிறைவேற்றி முடித்த பெருமிதத்தோடு அது கிடந்தது.

அமுதா கீழே குனிந்து சவமாகிவிட்டவளின் கால்களைத் தொட்டுக் கும்பிட்டாள். அவள் விழியிலிருந்து கண்ணீர் வெள்ளம் பெருகி அந்தத் திருவடிகளை நனைத்தன.

அவள் முகமோ......?

'பதிவுத் திருமணத்திற்குப் பயன்படாவிட்டாலும் பரவாயில்லை. புதை குழிக்குப் போகிற ஏழை அன்னைக்குப் பயன்பட்டதே இந்த மாலை!' என்கிற தெளிவை ஒளியாக வீசியது.

## இலங்கை அகதிகளுக்குத் தமிழக அரசின் உதவி

தமிழ்நாடு அரசு இலங்கையிலிருந்து வெளியேறி, இந்தியா வந்த, இந்தியக் குடும்பங்களின் மறுவாழ்விற்காக இதுவரை 2 கோடியே 15 இலட்சம் ரூபாயைக் கடனுகவும் 52 இலட்சம் ரூபாயை மானியமாகவும் அளித்துள்ளது.

இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் வரை, இலங்கை யிலிருந்து மொத்தம் 85 ஆயிரத்து 627 பேர் வெளியேறி இந்தியாவில் குடி புகுந்தனர். இவர்கள், மொத்தம் 20 ஆயிரத்து 609 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இவற்றில், 5,113 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாடு, மைசூர், கேரளா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும், அந்தமான் தீவுகளிலும் குடிபுகுவதற்காக அவர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இலங்கையிலிருந்து எடுத்து வந்த சொத்துக்களைக் கொண்டோ அல்லது இந்தியாவில் அவர்கள் முன்பு விட்டுச் சென்ற சொத்துக்களை வைத்துக் கொண்டோ தாங்களாகவே தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டுள்ளனர். இவர்களில் சிலர் மறுவாழ்விப்புக்கான நிதி உதவியைப்பெற விண்ணப்பித்துக் கொள்ளவில்லை.

(9-3-73-ல் மக்கள் அவையில், மத்திய தொழிலாளர் நல மறுவாழ்விப்பு அமைச்சர் திரு கே. வி. இரகுநாத ரெட்டி)

# ஆத்தூர் ஒன்றியத்தில் வளர்ச்சிப் பணிகள்

ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம் 22 ஊராட்சி மன்றங்களையும், 3 பேரூராட்சி மன்றங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. ஏறத்தாழ 87·89 சதுர மைல் பரப்புடையது. 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின் படி 65,930 ஆண்களும், 53,812 பெண்களும் வாழும் இந்த ஒன்றியம் விரிந்து பரந்து கிடக்கின்றது. இதன் அரணாக அமைந்துள்ள மலைகளும் அதிலிருந்து உற்பத்தியாகும் குடவனாறு, மருதாநதி, ஆகிய இரண்டு ஆறுகளும் மேலும் அழகு படுத்துகின்றன. குடிநீர் வசதிக்குக் குடவனாற்றின் குறுக்கே எழுப்பப்பட்டுள்ள நீர்த்தேக்கம் இந்த ஒன்றியத்தின் பெரும்பான்மை மக்களுக்கும் அருகிலுள்ள திண்டுக்கல் நகர மக்களுக்கும் தாகத்தைத் தணிக்கும் அருங்கொடையாக அமைந்துள்ளது.

### பாசனம்

இப்பகுதியில் மக்களின் அயராத உழைப்பினாலும் ஊக்க சக்தியினாலும், அரசு உதவியினாலும், ஆயிரக் கணக்கான கிணறுகள் தோண்டப்பட்டு இறைவைச் சாதனங்கள் பொருத்தப்பட்ட கிணறுகளும் மற்றும் 234 மின், எண்ணெய் இயந்திர சாதனைகள் உள்ள கிணறுகளும் தோண்டப்பட்டுள்ளன. 6 பொதுப் பணித் துறைக் கண்மாய்களும் மற்றும் 23 பாசன வசதிகள் பெற்ற கண்மாய்களும் உள்ளன. அவ்வப்பொழுது அரசுச் செலவில் அந்தக் கண்மாய்கள் மராமத்து செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவைகளின் மூலம் 5,095 ஏக்கர் பாசன வசதி பெற்றுள்ளது.

### விவசாயம்

இவ்வொன்றியத்தின் 80 சதவிகிதத்தினர் வேளாண்மைத் தொழிலையே மேற்கொண்டுள்ளனர். விவசாயத்திலோ மறுமலர்ச்சி காணவும், உணவு உற்பத்தியைப் பன் மடங்கு பெருக்கவும், இந்த ஒன்றிய விவசாயிகளுக்குப் பலவகைகளிலும் உதவி செய்யப்பட்டு வருகின்றது. விவசாயிகளுக்குத் தேவையான விதைகள், மருந்துகள், மற்றும் இதரக் கருவிகள் வழங்குவதற்காக அவர்களின் வசதிக்கேற்ப ஆத்தூரிலும், அய்யம்பாளையத்திலும் விவசாயப் பண்டகசாலைகள் திறக்கப்பட்டுள்ளன. நல்ல விவசாயக் கருவிகள் உயர் ரக வித்துக்கள் அவ்வப்பொழுது வழங்கப்படுகின்றன. இயந்திரக் கலப்பை கொண்டு வேளாண்மை செய்ய விவசாய மக்களிடையே ஆர்வம் எழுப்பப்பட்டு அது வளர்ச்சி பெற்று வருகிறது.

வறுமையையும் வாட்டத்தையும் போக்க வந்த மிகு விளைச்சல், ரகமான ஐ.ஆர். 8, ஜெயா, பத்மா, கருணா போன்ற நெல் வித்துக்களையும் வீரிய ஒட்டுக் கம்பு, சோளம், சிறுதானிய வகைகளையும் இந்த ஒன்றிய விவசாயிகள் பயிர் செய்வதற்கு வேண்டிய உதவிகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன. மேலும் இவ்வட்டாரத்தில் உள்ள மலைகளில் காப்பி, மிளகு, வாழை, பலா, ஆரஞ்சு, போன்றவைகள் அதிக அளவில் விளைவதற்குப் போதிய உதவிகளும் அறிவுரைகளும் கொடுக்கப்பட்டு வீரியக் கன்றுகள் பாதி விலையில் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் நெல், கரும்பு, வாழை, போன்ற நன்செய்ப் பயிர்களும், பருத்தி, கடலை சிறு தானியங்கள் போன்ற புன்செய்ப் பயிர்களும் பெரும் அளவில் சாகுபடி செய்வதற்கு வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன. நன்செய் நிலங்கள் 7,157 ஏக்கரும் புன்செய் நிலங்கள் 41,851 ஏக்கரும் தீவிரச் சாகுபடிக்கு ஏற்றவையாக அமைக்கப்பட்டுள்ளன.

ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அய்யம்பாளையத்தில் உள்ள குழந்தைகள் காப்பகத்தில் குழந்தைகள் விளையாடுதல்.



### கால்நடை

ஆத்தூர் ஒன்றியப் பகுதிகளில் கால்நடைகள் நிறைய உள்ளன. உயர் இனப் பசுமாடுகள், எருமை மாடுகள், ஆடுகள், கோழிகள் வளர்ப்பதற்கு வழி வகைகள் செய்யப் பட்டுள்ளன. காந்தி கிராமத்தில் பெரிய கோழிப் பண்ணையும், ஆத்தூரில் 1,000 கோழிகள் கொண்ட ஒரு பெரிய பண்ணையும் மற்றும் கிராமப் புறங்களில் 40 தனியார் கோழிப் பண்ணைகளும் உள்ளன. கால்நடைகளையும் பேணிப் பாதுகாக்க ஆத்தூர்,

அம்பாத்துரை ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவ நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன. மற்றும் 6 கேந்திர கிராமக் கால்நடை விளை நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன. இங்குச் செயற்கை முறையில் கருத்தரிக்கும் முறை கையாளப்பட்டு மாடுகளின் இன விருத்திக்கு வழிவகுக்கப்பட்டு வருகிறது. கோழிப் பண்ணைகளிலிருந்து கிடைக்கக் கூடிய முட்டைகள் பாலவாடிப் பிள்ளைகளுக்கு இலவசமாக விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

### குடிநீர்த் திட்டம்

கடந்த ஐந்தாண்டுகளில் 25 பாதுகாக்கப்பட்ட மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிகளும் 5 தரை மட்டத் தொட்டிகளும் கட்டப்பட்டுள்ளன. மேலும் அனைத்துக் கிராமங்களிலும் குடிநீர்க் கிணறுகள் போதிய அளவில் வெட்டப்பட்டும், அபிவிருத்தி செய்யப்பட்டும் உள்ளன. இதற்காக மொத்தம் சுமார் 2,40,000 ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளன.

### கிராம இணைப்புச் சாலைகள்

மிக அதிகப்பரப்பளவுள்ள இவ்வட்டாரத்தில் போக்குவரத்துக்காகப் போதிய சாலை வசதிகள் இல்லாமல் இருந்தது. கடந்த 5 ஆண்டுக் காலத்தில் சுமார் 1,80,000 ரூபாய் செலவில் 10 பாலங்களும் 17 சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. சீரிய போக்கு வரத்துக்கான வகைகளும் செய்யப்பட்டுள்ளன.

### கல்வி

ஆத்தூர் ஒன்றியத்தில் 6 உயர்நிலைப் பள்ளிகளும், 15 உயர் தொடக்கப்பள்ளிகளும், 69 தொடக்கப் பள்ளிகளும் திறக்கப்பட்டுள்ளன. காந்தி கிராமத்தில் கிராமியக் கல்லூரியும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியும் மக்கள் நல்வாழ்வுக் கல்வி மற்றும் குழந்தைகள் நலத்திட்டப் பயிற்சி நிலையமும் உள்ளன.

குழந்தைகளுக்கான 16 பாலர் பள்ளிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 22 பாலவாடிகள் திறக்கப்பட்டுள்ளன. இந்தப் பாலவாடிகளில் 2 முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும் இலவச உணவுடன் கல்வியும் தரப்படுகின்றன.

கடந்த 5 ஆண்டுக் காலத்தில் ஆத்தூர் ஒன்றியம் பெருமளவில் கல்வியில் முன்னேற்றம் கண்டுள்ளது பெருமைக்குரிய சாதனையாகும். 22 பள்ளிக் கட்டடங்கள் புதியதாகக் கட்டப்பட்டும், 37 பழைய பள்ளிக் கட்டடங்கள் சீர் செய்யப்பட்டும் மற்றும் 13 குழந்தைகள் காப்பகக் கட்டடங்கள் புதிதாகக் கட்டப்பட்டும் உள்ளன. மேலும் பெண் ஆசிரியக் குடியிருப்பு மனை ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. மதிய உணவுத் திட்டத்தில் 76 நிலையங்கள் திறக்கப்பட்டு இலவசமாக ஏழைக் குழந்தைகளுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது.

### மருத்துவ வசதி

இவ்வட்டாரத்தில் இரண்டு, முதல் நிலை நல்வாழ்வு நிலையங்களும் இரண்டு கிராமிய சுகாதார நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் தாய்சேய் நலன்களைப் பாதுகாக்க 21 தாய் சேய்நல விடுதிகள் திறக்கப்பட்டுள்ளன. இந்த நிலையங்களில் பெற்றோர்கள் வளமான வாழ்க்கை நடத்துவதற்கு ஏற்ப அறிவுரைகள் வழங்கப்பட்டும் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

### சமூகக் கல்வி

அயராது உழைத்துப் பாடுபடும் இவ்வட்டார மக்கள் சற்று ஆறுதல் பெறவும் அவர்களின் அறிவை வளர்ப்பதற்கும் அன்றாட அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகளைத் தெரிந்து கொள்வதற்கும் அமைக்கப்பட்ட சமூகக் கல்வி மன்றங்கள் 22 உள்ளன. பொழுது போக்கிற்காகவும் புதிய செய்திகளைத் தெரிந்து கொள்வதற்காகவும் 8 வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இரண்டு சீரணி அறிவகங்கள், இரண்டு செய்தி நிலையங்கள், இரண்டு இளைஞர் மன்றங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### மகளிர் நலம்

ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு மகளிர் மன்றம் அமைக்கப்பட்டுக் குழந்தைகள் நலம், மக்கள் நல்வாழ்வு, சிறு சேமிப்பு, பொதுப்பணி ஆற்று



← ஆத்தூர் ஒன்றியத்தில் சின்னாளப்பட்டி அருகிலுள்ள மேல்நிலை நீர்த்தொட்டி.

ஆத்தூர் ஒன்றியப் பகுதியில் கட்டப்பட்டுள்ள புதிய குடியிருப்புகள். ↓



தல், தையல் கலை போன்றவை கற்றுத்தரப்படுகின்றன. இவை தவிர 3 தையல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு மகளிருக்குத் தையல் மற்றும் ஆதாயம் தரக்கூடிய பூவேலைகள் கற்றுத் தரப்படுகின்றன.

### கூட்டுறவு

இந்த ஒன்றியத்தில் 19 விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள், 1 அர்பன் வங்கி, 11 பால் விநியோகச் சங்கங்கள், 2 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், 2 பண்டகசாலைகள், 2 கிராம தானங்கள் மற்றும் 19 இதர கூட்டுறவுச் சங்கங்களும் திறக்கப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு வேண்டிய கடன் வசதிகள், உர விநியோகம் போன்றவற்றைப் போதிய அளவில் பெற வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் அய்யம்பாளையத்தில் ஸ்டேட் பாங்க் கிளை ஒன்று திறக்கப்பட்டுப் பொது மக்களுக்குத் தொழில் செய்வதற்கு வேண்டிய உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

### வறட்சி நிலை துயர்துடைப்புப் பணிகள்

இந்த ஒன்றியத்தில் வறட்சிப் பணியின் கீழ் 3 குளங்கள் தூர் எடுக்கப்பட்டன. 65 குடிநீர்க் கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. 15 குடிநீர்க் கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. இதற்கான செலவு ரூ. 1,25,000.

### சிரணித் திட்டம்

சிரணித் திட்டத்தின் கீழ் ரூ. 14,200 செலவில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. ரூபாய் 10,000 செலவில் 1 பள்ளிக் கட்டடமும் கட்டப்பட்டுள்ளது.

### கிராமப்புற வீட்டு வசதித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 76 வீடுகள் கொண்ட நெசவாளர் காலனி ரூ. 2,28,000 செலவில் சின்னுளப்பட்டியில் அமைக்கப்பட்டுள்ளது.

### குழந்தைகள் நலத் திட்டம்

14—11—1969-ல் ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் குடும்பக் குழந்தைகள் நலத் திட்டம் மாண்புமிகு மின்துறை அமைச்சர் ஓ. பி. இராமன், அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இது 5 ஆண்டுத் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் 7 பாலர் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இதில் தலைமை நிலையம் ( Main Centre ) ஒன்றும், உப நிலையங்கள் ( Sub-Centres ) 5-ம், துணை நிலையம் (Aided Centre) ஒன்றும் உள்ளன.

மேட்டுப்பட்டி—தலைமை நிலையம்.

பித்தளைப்பட்டி உப நிலையங்கள்.

ஆலமரத்துப்பட்டி. ,,

பாளையங்கோட்டை ,,

சித்தரேவு ,,

அய்யம்பாளையம் ,,

கே. சிங்காரக்கோட்டை—துணை நிலையம்.

மேலும் சமூகப் பொருளாதாரத் திட்டத்தின்கிழ் சித்தரேவில் தொழிற்கூடம் ஒன்று 24—8—1972-ல் திறந்து வைக்கப்பட்டது.

### பாலர் பள்ளிகள்

இவ்வொன்றியத்தில் 16 பாலர் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 14 பாலர் பள்ளிகள் ' கேர் ' நிறுவன ஆதரவுடன் நடைபெற்று வருகின்றன. இப்பள்ளிகளில் 1 வயது முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகளுக்குச் சத்துணவு மற்றும் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.

பிள்ளையார்நத்தம்.

செட்டியபட்டி.

அம்பாத்துரை.

பெருமாள்கோவில்பட்டி

தெற்குமேட்டுப்பட்டி.

வக்கம்பட்டி.

ஜே. புதுக்கோட்டை.

சித்தையன்கோட்டை.

அக்கரைப்பட்டி.

நரசிங்கபுரம்.

சித்தையன்கோட்டை.

தேவரப்பன்பட்டி.

மஞ்சள் பரப்பு.

இந்திராபுரம்.

**கேர் ஆதரவு இல்லாமல் நடைபெற்றுவரும் பள்ளிகள்**

ஆத்தூர்.

கீழக்கோட்டை.

**குழந்தைகள் காப்பகங்களில் மதிய உணவு அளிக்கப்படுகிறது.**



மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் வேலைவாய்ப் பற்றுள்ளோரில் குறைந்தது 1,000 பேர்களுக்குத் தொடர்ச்சியாக 10 திங்களுக்கு வேலையளிக்க வேண்டுமென்ற நோக்கத்தில், கிராம வேலை வாய்ப்பு விரைவுத் திட்டம் ஒன்று அமைக்கப்பட்டு செயல்படுத்தப் படுகிறது. உழைப்பையும், உற்பத்தியையும், மையமாகக் கொண்டு, பல்வேறு ஊர்ப்புறத் திட்டங்களை இணைத்துக் கூடுதலான வேலைவாய்ப்புகளை உண்டாக்கும் விதத்தில் இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் பணிகளாவன :—

(அ) பெருந்திட்ட அடிப்படையில் சாலைகள் அமைக்கும் பணிகள் உள்ளிட்ட உள்ளமைப்பு வேலைகள்.

(ஆ) தரிசுகளை விளை நிலங்களாக்குதல், ஊராட்சி நிலங்களைச் சீராக்குதல் போன்றவை.

(இ) கழிவுநீர்வசதி, கரைகள் அமைத்தல் போன்றவை.

(ஈ) நீரைப் பாதுகாத்து, நில அடி நீரைப் பயன்படுத்துதல் போன்றவை.

(உ) பாசனத் தேக்கங்களை அமைத்தல், சீராக்குதல் போன்ற சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள்.

(ஊ) மண்வளப் பாதுகாப்பு, அல்லது மனித உழைப்புத் தேவைப்படும் காடு வளர்ப்புத் திட்டங்கள்.

(எ) தொடக்கப் பள்ளிகளுக்கு வகுப்பறைகள் கட்டுதல்.

இது நூற்றுக்கு நூறு மைய அரசுத் திட்டமாகும். நான்காம் திட்டத்தில் எஞ்சிநிற்கும் ஆண்டுகளிலும் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கன்னியாகுமரி, நீலகிரி, தருமபுரி, திருநெல்வேலி மாவட்டங்களைத் தவிர, ஏனைய மாவட்டங்களில், மாவட்டத்திற்கு 20 வட்டாரங்கள் வீதம் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. நீலகிரி, கன்னியாகுமரி, தருமபுரி மாவட்டங்களில் முறையே 4, 9, 16 வட்டாரங்களே உள்ளமையால், இத்திட்டம் இம் மாவட்டங்களிலுள்ள வட்டாரங்கள் அனைத்திலுமே செயற்படுத்தப்படுகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் இத்திட்டம் 21 வட்டாரங்களில் நிறைவேற்றப் படுகிறது. இவ்வாறாக இம்



செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியக் கட்டடம்.

மாநிலத்திலுள்ள 374 மொத்த வட்டாரங்களில், 230 வட்டாரங்களில் இத்திட்டம் தற்போது செயற்படுகிறது.

கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்களைத் தவிர்த்து, ஏனைய மாவட்டங்கள் அனைத்திற்கும் வட்டாரங்கள் ஒன்றிற்கு ரூ. 1·25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு மாவட்டங்களிலும் வட்டாரங்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொள்ளாது, ஒரு மாவட்டத்திற்கு ரூ. 12·50 இலட்சம் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்தந்தப் பகுதிகளிலுள்ள நிலவரப்படி ஊதியம் அளிக்கப்படுகிறது.

1971–72-ஆம் ஆண்டில் இத்திட்டத்தினால் அடைந்த சாதனைகள் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | இணைப்புச் சாலைகள் (கி.மீ.). | 6,031·85 |
| 2. | கட்டப்பட்ட பாசன வேலைகள் (எண்ணிக்கை) | 288 |
| 3. | பாசனம் செய்யப்பட்ட மொத்தப் பரப்பு(ஹெக்டேர்) | 6,475·29 |
| 4. | கட்டப்பட்ட மதகுகள் (எண்ணிக்கை) | 310 |
| 5. | கழிவுநீர், நீர் தேங்காமைக்கு வழிவகுத்தல் (ஹெக்டேர்) | 4,973 |
| 6. | தூரெடுக்கப்பட்ட, ஆழப்படுத்திய குடிநீர்க் குளங்கள் (எண்ணிக்கை). | 51 |




1971–72-ஆம் ஆண்டில், 293·05 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு, 84·04 இலட்ச வேலை வாய்ப்பு நாட்கள் இத்திட்டத்தினால் உண்டாக்கப்பட்டுள்ளன. 1972–73-ஆம் ஆண்டுக்குரிய திருத்தப்பட்ட மதிப்பீட்டில் ரூ. 302 இலட்சமும், 1973–74-ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் அதே தொகையும் ஒதுக்கப்பட்டுள்ளன.

## 7. ஒவ்வொரு ரோஜாவுக்கும் ஒரு முள் நண்பனாக இருக்கும்

அன்பால் நிறைந்த நெஞ்சம் அலைகடல்போல் விசாலமானது. ஆழ்கடல்போல் அமைதியானது. பாறையைப்போல் உறுதியானது. பனிமலரைப் போல் குளுமையானது.

ராதையின் நெஞ்சம் இத்தனை இலக்கணங்களும் நிறைந்த நெஞ்சம். அதனால்தான், வாசலில் வந்து நிற்கும் நர்மதாவைக் கண்டவுடன் ''வாருங்கள் நர்மதா!'' என்று அகமும் முகமும் அழகாய் மலர வரவேற்க முடிந்தது.

நர்மதா திகைத்துப்போகிறாள்.

தான் யார் என்ற விவரத்தை எப்படிக் கூறுவது, தான் வந்திருக்கும் நோக்கத்தை எப்படி உணர்த்துவது .என்றெல்லாம் தவித்துப் போய் வந்தவள், தன்னை அறிமுகப் படுத்திக் கொள்வதற்கு முன்னால் அறிந்து கொண்டதற்கான அடையாளமும் இத்தனை அன்பான வரவேற்பும், கிடைக்கும் என்பதை எதிர்பார்க்கவில்லை.

''வாருங்கள் நர்மதா!'' என்று இரண்டாம் முறையாக ராதை அழைத்த பிறகுதான் நர்மதா சுய உணர்வு பெறுகிறாள்.

''அத்தான் வீட்டு வாசலை மிதித்ததுமே உங்களுக்கு இந்த உலகம் மறந்து, இன்ப உலகத்தில் பறக்கத் தொடங்கிவிட்டீர்களா?'' என்று உரிமையோடு கேலி செய்தபடியே நர்மதாவின் கைகளைப் பிடித்து உள்ளே அழைத்து வருகிறாள் ராதை.

''நீங்கள்தானே ராதை....'' என்று நர்மதா ஒரு நிமிடத் தயக்கத்திற்குப் பின்னர் கேட்கிறாள்.

'' பின்னே ? என்னைத் தவிர வேறு எவருக்கு இந்த உரிமை இருக்க முடியும் ? ''

வாசலைத் தாண்டி வரவேற்பறைக்குள் நின்றதும் ரோமியோவைக் கண்டு ஒரு கணம் திகைக்கிறாள் நர்மதா. உதகைப் பயணத்தில் நர்மதா-மணிவாசகன் இருவரையும் இணையாகப் பார்க்கும்போதெல்லாம் எரிமலையின் தீக்கனல்களை இருவிழிகளிலும் தேக்கியபடி சீறிச்சீறி வந்தாரே அந்த உற்ற நண்பர் ராதையிடம் என்னென்ன போதனைகளைச் செய்திருப்பாரோ...? அவரிடம் பேசிக்கொண்டிருந்த பிறகும், இந்த ராதையால் எப்படித் தன்னை முகம் கோணாமல் வர வேற்க முடிகின்றது?—நர்மதாவின் வியப்புத் தீரவில்லை....

''ராதை....நான் வந்த-''

''காரணம் எதுவாக இருந்தாலும் சரி, நீங்கள் காணத் துடிக்கிற அத்தானை இன்னும் பத்து நிமிடங்கள் கழித்துத்தான் பார்க்க முடியும். அதுவரையில் நான் கூறும் விவரங்களைச் சகித்துக்கொண்டுதான் தீரவேண்டும்..ம்....உட்காருங்கள்..காபி கொண்டு வருகிறேன்..''என்று கூறியபடி உள்ளே செல்லத் திரும்பியவள், ''மிஸ்டர் ரோமியோ..இவர்களை நான் அறிமுகம் செய்யத் தேவையில்லை என நினைக்கிறேன்'' என்று தயங்குகிறாள்.

''ஓ....இவர்களை நன்றாகத் தெரியுமே!'' என்று சிரித்துச் சமாளிக்கிறான் ரோமியோ.

''பின்னே அந்நியரைப் போல் உம்மென்று உட்கார்ந்திருப்பானேன்..? பேசிக் கொண்டிருங்கள்..இதோ வருகிறேன்..''

ராதை அந்தப் பக்கமாக நகர்ந்ததும் ரோமியோ நர்மதாவை நிமிர்ந்து நோக்குகிறான்.

ஆவலைச் சுமந்த இதயத்தோடு அவளும், அனலைச் சுமந்த விழிகளோடு அவனுமாக எதிரெதிராக உட்கார்ந்திருக்கிறார்கள். ஏறிட்டு நோக்கிய அவன் பார்வையில் எச்சரிக்கைகள் ஓராயிரம். ''ராதையின் முல்லைப்பூ இதயத்தை முள்ளைக்கொண்டு கீறி நாசப்படுத்திவிடாதே!'' என்ற கோரிக்கை..கருணைமனு எல்லாம் ரோமியோவின் ஒரு நிமிடப் பார்வையில் அலை மோதுகின்றன.

நர்மதாவின் விழிகளில் இருந்த தயக்கம் எப்போதோ விடைபெற்றுப் போய் விட்டிருந்தது. ராதையின் இதயம் எப்படிப்பட்டதென்று மணிவாசகன் கூறியது நூறு பங்கென்றால், நேருக்குநேர் ராதையைச் சந்தித்தபோது அது ஆயிரம் மடங்காக உயர்ந்தது! இருந்தாலும் அவளுக்கென்று ஓர் இதயம் இருக்குமே......!

—அத்தான் என்ற உறவுக் காரனைத் திருமணம் செய்து கொள்ளத் துடிக்கும் உரிமை மனம்-தன்னை எப்படி வரவேற்குமோ என்ற தயக்கத்தில் வந்தவளுக்கு, ராதையின் வரவேற்பு, திகைப்பையும் வியப்



பையும் மதிப்பையும் தந்திருக்கின்றது. ஆனுல் ரோமியோவின் பார்வை அச்சத்தையும் அதிர்ச்சியையுமே அதிகப்படுத்துவதாக அமைந்திருக்கிறதே....!

'என் வாழ்வை நீ கெடுத்து நாசம் பண்ணிவிடாதே!' என்று நர்மதாவும் பார்வையாலேயே எதிர் மனு கொடுத்துக் கொண்டிருக்கிருள்!

காபியும் பிஸ்கெட்டும் எடுத்துக் கொண்டு — வழக்கமான கலகலப்புச் சற்றும் குறையாமல் வந்து நிற்கிருள் ராதை.

''சாப்பிடுங்கள்.........''
—அமைதியைக் கலைக்கின்றவள் ராதைதான்!

நர்மதா மௌனமாகப் பார்க்கிருள்..........

''ஏதாவது பேசுங்களேன் நர்மதா......!'' என்று ராதை மீண்டும் கூறுகிருள்.

நர்மதா, அப்போதும் அமைதியாகவே இருக்கிருள். உணர்ச்சிப்பெருக்கில் அவள் உள்ளம் நனைந்து உதடுகள் துடிதுடிக்கின்றன. பேச்சுவரவில்லை.

''பேசுங்களேன்...... என்னிடம் பேசப் பிடிக்கவில்லையா என்ன?''

''பேச முடியவில்லை ராதா.. என் நெஞ்சு விம்மி உடைந்துவிடும் போல் கனமாக இருக்கிறது............''

''சுமையோடு இந்த வீட்டுக்குள் நீங்கள் வந்திருக்கக் கூடாது நர்மதா........அல்லது வந்த பின்னராவது சுமைகளைத் தூக்கி எறிந்துவிடும் மனபலம் வந்திருக்க வேண்டும்.......''

''நான் சுமப்பது உங்கள் அன்பைத்தான்!''

''அன்பு காற்றைப் போல் இலேசானது, தாயைப் போல் உண்மையானது. அன்பைச் சுமப்பதானுல் உங்கள் இதயம் உடைந்து விடும் என்ருல், என் அன்பிலே உண்மையில்லை என்றுதான் அர்த்தம்!''

''ராதா......!'' என்று மேலே பேசச் சக்தியற்று அவள் இருகரங்களையும் பற்றித் தன்னேடு அணைத்துக் கொள்கிருள் நர்மதா........ எதிரே ஒரு ஆடவன் இருப்பதையும் மறந்து சிறு குழந்தைபோல் கண்ணீர் சிந்துகிருள்.

''நர்மதா....இந்த வீட்டுக்குள் வந்த பிறகு யாரும் எதற்காகவும் அழக்கூடாது....ஒரு சொட்டுக் கண்ணீர்கூட நீங்கள் சிந்தக்கூடாது. சிந்தவிடமாட்டேன்!''

ரோமியோ இடைமறித்து,

'அவர்கள் பங்கையும் சேர்த்து அழுது தீர்க்கத்தான் நீங்கள் உங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கிறீர்களே, இல்லையா ராதா?'' என்று கேட்கிருன்.

''மிஸ்டர் ரோமியோ.... இது பெண்கள் விஷயம் அதுவும் குடும்ப விஷயம். நீங்கள் குறுக்கிடுவது எனக்குப் பிடிக்கவில்லை!''

''நான் உங்கள் குடும்ப நண்பனில்லையா ராதா?''

''அந்த கௌரவத்தை நீங்கள் தொடர்ந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் பரிவுடன் கூறுகிறேன்.''

நர்மதாவின் விழிகளில் பெருகிய கண்ணீரில் இருசொட்டுக்கள் ராதையின் கரங்களைச் சூடாக்குகின்றன.

''நர்மதா!''

''ராதா....உங்கள் பெருந்தன்மைக்கு என்னுல் தலைவணங்காமல் இருக்க முடியவில்லை..உங்கள் தியாகத்தின் முன்னுல் நான் ஒரு துரும்புக்குச் சமம்.''

''தியாகம் பெருந்தன்மையெல்லாம் கிடக்கட்டும். நீங்கள் இனிமேல் அழக்கூடாது..ம்.. கண்ணீர் கோழைகளின் ஆயுதம்!''

''ராதா! நல்லவர்களுக்கும் கண்ணீரே நன்றியின் அடையாளம்!''

''நீயா நல்லவள்?'' என்ற ஆவேசக் கேள்வி ரோமியோவின் இதயத்தில் பிறந்தது; 'நீ நல்லவள்தான்' என்ற நம்பிக்கை ராதையின் இதயத்தில் வளர்ந்தது.

''ராதா....என்னைப் பற்றி ஏதாவது—''

''எதுவுமே புதிதாக நீங்கள் சொல்லிவிடமுடியாது......எல்லாவற்றையும்——''

''மிஸ்டர் ரோமியோ சொன்ருரோ?'''

''மிஸ்டர் ரோமியோ சொல்லவில்லை; உங்கள் ரோமியோ மணிவாசகன்தான் ஒன்றுவிடாமல் சொன்னுர்; தேனைக் கண்ட வண்டாக, வானம், வையம், பூச்செடி பொன்மலர் யாவற்றையும் மறந்த கதையைக் கலகலப்பாகச் சொன்னுர்.''



''என்னை மன்னித்து விடுங்கள் ராதா!''

''எதற்காக மன்னிக்க வேண்டும்?''

''உங்களுக்குச் சொந்தமாக வேண்டிய இதயத்தைக் கவர்ந்தது எனது தவறுதானே?''

''தெரியாமல் எடுப்பதற்குப் பெயர்தான் திருட்டு........ தெரிந்தே கொடுப்பதற்குப் பெயர் பரிசு........''

''சகோதரி.... நீ எவ்வளவு உயர்ந்தவள்......'' என்று பெருமிதத்தால் விம்மியபடி ராதையை அணைத்துக் கொள்கிறுள் நர்மதா.

அந்தக் காட்சி ரோமியோவுக்குத் தன்னை யாரோ சவுக்கால் அடிப்பது போல் இருக்கிறது· பெண் மனத்து ஆவல், ஆதங்கம், ஏக்கம், இதயக் குமுறல் எதையுமே உணராமல் இதென்ன போலியான பூச்சு வேலைகள்..

''ராதா....நான் குறுக்கிடுவது உனக்குப் பிடிக்காதுதான்! இருந்தாலும் என்னுல் பொறுமையாக இருக்க முடியவில்லை. ..உன்னை மணக்கவேண்டிய மணிவாசகன் இவர்களை மணக்கப் போகிறுன்....இது உன் அன்புக்குச் செய்த துரோகம்! உன் உதவிகளுக்குச் செய்த துரோகம். உன் அப்பா தரும் பணத்தில் படித்தவன்—அவன் படிப்புக்காகச் செலவழித்த பணத்துக்காவது அவன் துரோகம் பண்ணுமல் இருப்பானு ?''

''மிஸ்டர் ரோமியோ...... வாழ்க்கையை வட்டிக்கடையாக்கி விடாதீர்கள்....காதலும் கருணையும், காசு பணத்திற்கும் கணக்கு வழக்கிற்கும் அப்பாற்பட்ட புனிதங்கள்! என் அப்பா சம்பாதித்த பணத்தை என் அத்தானின் படிப்புக்காகத்தான் பூட்டிவைத்திருந்தார்!''

''பூட்டி வைத்த பணத்தை யாருக்கும் வழங்கலாம் மிஸ் ராதா''

ரோமியோ குறுக்கிட்டான். ராதா தொடர்ந்து சொன்னுள்.

''பூட்டி வைத்த பணத்தை யாருக்கும் வழங்க என் அப்பாவுக்கு உரிமையுண்டு. இதே போன்று பூட்டி வைத்த என் பாசத்தையும் என் அன்பையும் டாக்டர் நர்மதாவுக்குக் கொடுக்க நான் பூட்டி வைத்திருந்தேன், மிஸ்டர் ரோமியோ''

''இந்தச் சமாதானம் போலியானது·''



''போலியல்ல, பொருத்தமானது! நான் பித்தளை, என் அத்தான் வெள்ளி. வெள்ளிக்காகப் பித்தளையை இழந்தேன். தங்கத்துக்காக வெள்ளியைத் தானம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். டாக்டர் நர்மதா தங்கம். மாற்றுக்குறையாத சொக்கத் தங்கம்'' என்று ராதை சொல்லச் சொல்ல நர்மதாவின் உள்ளம் உருகிக் கரைகிறது!

''ராதா....என்னைப் பற்றி உன் மனத்தில் எவ்வளவு உயர்வாக மதிப்பு வைத்திருக்கிறாய்!''

''அத்தனையும் என் அத்தான் என்னுள்ளே ஏற்படுத்திய மதிப்பு....அவர் மனம் எதை விரும்புகிறதோ அது உயர்வானதாகத்தான் இருக்கும்.... அதைத்தான் என் மனமும் விரும்பும்; என்மதியும் மதிக்கும்!''

''ராதா....என்னால் உனக்கு எத்தனையெத்தனை—''

''இனிமைகள் வருகின்றன தெரியுமா? இன்பங்கள் பிறக்கின்றன தெரியுமா? ஒப்பற்ற உங்கள் அழகால் அவர் இதயத்தைக் கவர்ந்ததைப் போல் உயர்வான உங்கள் குணத்தால், உங்கள் அன்பால் அவர் வாழ்வை என்றென்றும் வளமாக்குங்கள்........ இதுதான் உங்களிடம் நான் கேட்கும் வரம்.''

''பக்தையிடம் வரம் கேட்கும் தெய்வத்தை இப்போதுதான் நான் பார்க்கிறேன்.'' என்கிறாள் நர்மதா.

ஒன்றிக் கலந்த உள்ளங்களுக்கு மத்தியில் ரோமியோ ஒரு துரும்பாகத் தவிக்கிறான். ஐயோ, இந்த அப்பாவிப் பெண் ராதை தெரிந்தே தன்னைப் பலிகொடுக்கிறாளே என்ற நியாயமான அனுதாபத்தில் அவன் நெஞ்சு துடிக்கிறது.

குளியலறைக் கதவைத் திறந்து வெளியே வருகிறான் மணிவாசகன். நர்மதாவைக் கண்டதும் அவன் இதயம் மலர்கின்றது. இதயத்தின் மலர்ச்சி இரு விழிகளிலும் பிரதிபலிக்கிறது. ''ஹலோ....!'' என்றபடி பரபரப்பாக அறையினுள் வருபவனைத் தடுக்கிறாள் ராதை.

''உடை மாற்றிக் கொண்டு வருவதற்குள், உங்கள் நர்மதாவை நாங்கள் விழுங்கிவிட மாட்டோம் ....ம்.... போங்கள்'' என்று திருப்பி அனுப்புகிறாள்.

அவள் அவசரமாக அவனை விரட்டுவதற்குக் காரணம்— ரோமியோ அங்கே இருப்பதுதான். தன்னை முன்னிட்டு நண்பர்கள் இருவரும் வாதம் புரியத் தொடங்கினால் அது நர்மதாவுக்கு வருத்தத்தைத் தந்துவிடுமே என்ற பயத்தால் மணிவாசகனை அடுத்த அறைக்குள் தள்ளுகிறாள். அதே வேகத்தில் ரோமியோவை வெளியேற்றவும் திட்டம்.

''மிஸ்டர் ரோமியோ.... அத்தானும் நர்மதாவும் பேசும் போது நாம் இருவருமே இங்கே இருப்பது அவ்வளவு நாகரிகமாகப் படவில்லை. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்......! வக்கீல் சார்!''

''சொல்ல என்ன பாக்கி வைத்திருக்கிறீர்கள்? எல்லாவற்றையும் சுலபமாக முடித்து வைத்துவிட்டீர்கள், நூற்றுக் கிழவி மாதிரி. இனிமேல் எனக்கென்ன வேலை....!''

''கல்யாணத்துக்கு வரவேண்டியதுதான் உங்கள் வேலை!'' என்று கூறிக் கலகலப்பாகச் சிரிக்கிறாள் ராதை.

''கல்யாணமா! ரோமியோவுக்குக் கல்யாணமா?'' என்று கேட்டபடி அறையினுள் வந்து நிற்கிறான் அழகுடையணிந்த மணிவாசகன்.

''என் கல்யாணமில்லேடா முட்டாள்! உன் கல்யாணத்தை எப்படிக் கோலாகலமாகக் கொண்டாடலாம் என்றுதான் நாங்கள் ரொம்பவும் தீவிரமாக யோசனை பண்ணிக் கொண்டிருக்கிறோம்''

''இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது....ராதை எப்படித் தீர்மானம் பண்ணுகிறாளோ அப்படியெல்லாம்தான் நடக்கும். அவள் விருப்பத்திற்கு விரோதமாக எதுவுமே நடக்காது.... இல்லையா ராதா!''

''ஆமாம்....ஆமாம்....'' என்று சேர்ந்து சிரித்துச் சமாளிக்கிறாள் ராதை. இந்தவரைக்கும், மணிவாசகனும் ரோமியோவும் சிங்கமும் புலியுமாகச் சீறிப்பாயாமல், சிரித்தாவது பேசுகிறார்களே என்று ராதைக்கு நிம்மதி......

''கல்யாணம் ஆபட்ஸ்பரியில் தானே ராதா?'' என்கிறான் ரோமியோ. அவன் பேச்சிலே உள்ள குத்தலைக் காணாதவளைப் போல் சமாளித்து, ''ஆமாம்.. அதைவிடப் பெரிய இடம் கிடைக்கவில்லையே....'' என்று கூறிவைக்கிறாள்.

''கல்யாணத்திற்குக் கச்சேரி ஏதாவது உண்டா? சொல்லுங்கள் தெரிந்து கொள்கிறேன்!'' என்று மேலும் சீண்டுகிறான் மணிவாசகன். நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து கொள்ளாமல் விளையாட்டுப் பேச்சிலே பொழுதைக் கழிக்கிறார்களே என்ற தவிப்பு நர்மதாவுக்கு.

''கச்சேரி உண்டு........ ஆனால் சங்கீதக் கச்சேரி இல்லை ........காற்றாடிக் கச்சேரி.. பம்பரக் கச்சேரி......பட்டம் விடும் கச்சேரி......'

''பட்டம் விடும் கச்சேரியா?'' என்று கேட்டுக் கலகலவெனச் சிரிக்கிறான் மணிவாசகன்.

''ஆமாம். மாப்பிள்ளையும் பெண்ணும் பட்டதாரிகள் இல்லையா? மணிவாசகன், எம்.ஏ., பி.எல்., டாக்டர் நர்மதா எம்.பி.பி.எஸ்., இரண்டு பேரும் தொழில் முறையில், யாருடைய பட்டம் உயர உயரப் பறக்கப் போகிறது........யாரை விட யார் அதிகமாகப் புகழ்க் கொடி கட்டப் போகிறார்கள் என்பதை வெள்ளோட்டம் விட்டுப் பார்க்க விளையாட்டாகப் பட்டம் விட்டுப் பார்க்கலாம்.. யாருடைய வாழ்க்கைப் பம்பரத்தை யார் ஒரே வீச்சில் சாய்க்கிறார்கள் என்ற வலுவைச் சோதிக்கப் பம்பரம் விட்டுப் பார்க்கலாம்....'' என்று ஒரே மூச்சாகப் படபட வென்று ரோமியோ பொரிந்து தள்ள, ''ஏன் சடுகுடுப் போட்டிகூட வைக்கலாமே...... யார் காலை யார் அழகாக வாரி விடுகிறார்கள் என்ற பலப் பரீட்சையையும் பார்த்துவிடலாமே........'' என்று இடைமறிக்கிறான் மணிவாசகன்.

மதுரை மாவட்டத்தில்— மதுரை நகருக்கருகில் பர்மா அகதிகளுக்கு 400 இலவச வீடுகள் கட்டப்படும். ஒவ்வொரு வீட்டுக்கும் ரூ. 4,000 செலவிடப்படும். மொத்தம் இந்த வீடுகளுக்கு 16 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

(9-3-1973-ல் தமிழக சட்ட மன்றத்தில் வீட்டு வசதி வாரிய அமைச்சர் திரு கே. இராசாராம்)

''நல்ல சொல்லே வராதா உங்கள் நாக்கில்.... அத்தான்! நர்மதா முதன்முதலாக நம் வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்திருக்கிறார்கள்.... அதற்குள் பலப்பரீட்சையாம்...... பட்டம் அறுக்கும் போட்டியாம் ....இந்த ஆண்களுக்குக் கொஞ்சம்கூட நயத்தக்க நாகரிகப் பேச்சே வாயில் வருவது கிடையாது!'' என்று கண்டித்து விட்டு நர்மதாவை வீட்டினுள் அழைத்துப் போகிறாள் ராதை.

''அப்பா....!'' என்று அங்கு நின்றபடியே குரல் கொடுக்கிறாள் ராதை.

''என்னம்மா....'' என்றபடியே மாடியிலிருந்து இறங்கி வருகிறார் பாண்டித்துரை.

அவர் கண்களில் கலக்கம்.

கையில், அச்சிடப்பட்ட வெள்ளைத்தாள்.

''அப்பா! இவர்கள்தான்....''

''டாக்டர் நர்மதாவா?'' என்கிறார் பாண்டித்துரை.

''ஆமாம்.... உங்கள் மூத்த மகள்'' என்று ராதை, அறிமுகத்தை அழுத்தமாக்குகிறாள்.

''வணக்கம்'' என்று கரம் குவிக்கிறாள் நர்மதா.

''வணக்கம்....வா.... அம்மா......'' என்று மறுமொழி கூறிவிட்டு, பாண்டித்துரை தம் கையிலிருக்கும் தாளை ராதையிடம் கொடுக்கிறார்.

''என்னப்பா இது?''

''சட்டக் கல்லூரியில் சேருவதற்கான நுழைவுத் தாள்.''

''அப்பா....!'' என்று திகைக்கிறாள் ராதை.

''உனக்குத்தானம்மா...... பூர்த்தி செய்து கொடு........ இந்த ஆண்டு உன்னைச் சட்டக் கல்லூரியில் சேர்த்துவிட முடிவு செய்துவிட்டேன்'' என்று அமைதியாக— அழுத்தமாகக் கூறுகிறார் பாண்டித்துரை.

''என் படிப்புக்கு இப்போது என்னப்பா அவசரம்?''

''இப்போது என்னப்பா அவசியம் என்று வெளிப்படையாகவே கேட்டிருக்கலாம் ராதா.. உன் எதிர்காலம் பற்றி நான் எடுத்திருக்கும் முடிவு.....''

### நிலமற்ற உழவர்கட்குப் பட்டா

கடந்த ஆறு ஆண்டுக் காலத்தில் 2 இலட்சத்து 65 ஆயிரம் நிலமில்லா விவசாயிகளுக்கு 5 இலட்சத்து 30 ஆயிரம் ஏக்கர் நிலம் பட்டா செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

1972–73-ல் நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் வழங்குவதில் இத்துறையினர் போற்றத் தகுந்த முன்னேற்றம் கண்டுள்ளனர்.

ஒரு இலட்சத்து 52 ஆயிரத்து 745 ஏக்கர் நிலம் மிச்சமிருப்பதாகக் கணக்கிடப்பட்டதில் 1972–73-ஆம் ஆண்டில் 75 ஆயிரம் ஏக்கர் அளவுக்குப் பட்டா செய்யப்பட வேண்டும் என்று அரசு இலக்கு நிர்ணயித்தது. இதில் 1972 டிசம்பர் முடிய 63 ஆயிரத்து 700 ஏக்கர் நிலம் பட்டா செய்யப்பட்டு உள்ளது.

(10–3–1973-ல் தமிழகச் சட்டப்பேரவை முன் வைக்கப்பட்ட நிலவரி வருவாய்த் துறையின் பணிகள் பற்றிய குறிப்பிலிருந்து.)

''என் எதிர்காலம் பற்றி நீங்கள் கொண்டிருக்கும் அக்கறைக்கு என் நன்றி என்றென்றும் உண்டு அப்பா....ஆனால் அதைச் செயல்படுத்தும் நேரம், செயல்படுத்தும் வேகம் இருக்கிறதே அதுதான் அவ்வளவு நல்லதாக எனக்குப் படவில்லை. என்னை மன்னித்து விடுங்கள்'' என்று கூறியபடியே சட்டப் படிப்புக்கான விண்ணப்பத்தாளைக் கிழித்து எறிகிறாள் ராதை.

சட்டப் படிப்புக்கு வழி காட்டும் விண்ணப்பத்தைப் பழைய பேப்பர் போன்று கிழித்துவிட்டாள். மாஜி பேப்பர் வியாபாரி பாண்டித்துரையின் கண்கள் கலங்குகின்றன. அதைப் பார்த்த நர்மதாவின் இதயம் நடுங்குகிறது.

''ராதா'' இந்த வீட்டுக்குள் நான் வந்தபோது, 'யாரும் எதற்காகவும் அழக் கூடாது. ஒரு சொட்டுக் கண்ணீர் கூடச் சிந்தக் கூடாது. சிந்தவிட மாட்டேன்' என்றாயல்லவா?''

''உம்'' என்றாள் சிலைபோல அசையாமல்.

''இப்போது உன் அப்பாவைக் கண்கலங்க வைத்து விட்டாயே!

தந்தையைப் பார்க்கிறாள் மகள். மகள் மனம் மாறி பி.எல். படிக்க ஒப்புக்கொள்ளுவாள் என்ற ஆசையில் தந்தை மகிழ்கின்றார்.

''அக்கா நான் படிப்பிலே மக்கு.''

''ராதை மிகப் பெரிய மனிதர்களிடம் ஒரு குணம் உண்டென்று படித்திருக்கிறேன். அவர்கள் அறிவுக்கும், அன்புக்கும் அடியிலே பச்சைக் குழந்தையின் இதயம் அமைந்திருக்கும். அதனை உன்னிடம் பார்க்கிறேன்.''

''நீங்கள் டாக்டர்''.

''நீ வக்கீலுக்குப் படிக்க வேண்டும் ராதை......''

தந்தை கண்குளிர மகளைப் பார்த்தார்; காது குளிர மகள் சொல்லும் சம்மதத்தை எதிர்பார்க்கிறார்.

நர்மதா ''நீ வக்கீலுக்குப் படிக்க வேண்டும். இந்த முடிவைச் சொல்லத்தான் வீடு தேடி வந்தேன். பி.எல். படிக்க நீயும், உன் அப்பாவும் சம்மதம் தந்தால்தான்....'' என்று நிறுத்தினாள்.

''தந்தால்தான்?..'' என்று எதிரொலி செய்தாள் ராதை.

''உன் அத்தானுக்கும் எனக்கும் திருமணம் நடக்கும். உதகையில் எங்களுக்குள் ஏற்பட்ட ஒப்பந்தங்களில் இதுவும் ஒன்று.''

''இது பெரிய விதி. கடுமையான விதி.''

''கடமைதான் விதியை நிர்ணயம் செய்கிறது.; எங்கள் திருமணம் உன் சட்டக் கல்லூரிப் படிப்பைப் பொறுத்திருக்கிறது. நீ படிக்கச் சம்மதம் தெரிவிக்காத வரை........''

ராதை விரைந்து நர்மதாவின் வாயைப் பொத்தினாள். அபசகுனமாக எதையும் சொல்லிவிடக் கூடாதே!

''ஒவ்வொரு ரோஜாவுக்கும் ஒருமுள் நண்பனாக இருக்கும். உங்கள் திருமணத்திற்கு நான் முள்ளாக இருக்க மாட்டேன்.''

''படித்து வக்கீலாக வரப் போகிறாய்!''

ராதை பேச முடியாமல் நின்றாள்.

(வளரும்)

ஊராட்சி ஒன்றியங்கள் அடைந்துவரும் வளர்ச்சிக்கு நாள்தோறும் புதிய பணிகள் மூலம் வளர்ந்து வருவதற்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது மதுரை மாவட்டத்திலுள்ள ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றியம்.

வேளாண்மைத் துறையில் கடந்த ஐந்தாண்டுகளில் மகத்தான வளர்ச்சிஅடைந்திருக்கிறது ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றியம்.

பொறுக்கு விதைகள் விநியோகத்தின் கீழ் நெல் விதைகள் கடந்த ஐந்தாண்டுகளில் 50 டன்கள் வழங்கப்பட்டன. சுமார் 2,545 ஏக்கர் நிலம் பயிர்செய்யப்பட்டும் ஏறத்தாழ 7,440 டன் நெல் விளைவிக்கப்பட்டுள்ளது.

பருத்தி விதைகள் 41 டன் வழங்கியும் 5,000 ஏக்கர் பயிரிட்டும் சுமார் 6,500 டன் பருத்தி விளைவிக்கப்பட்டுள்ளது. மிகு விளைச்சல் தானிய வகைகள் வேளாண் பெருங்குடியினருக்கு 15 டன் வழங்கப்பட்டும், 2,000 ஏக்கர் நிலம் பயிரிட்டும் 3,550 டன் தானியங்கள் விளைவிக்கப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துக்கள் 26 டன் வழங்கி 2,600 ஏக்கர் பயிரிடப்பட்டு, சுமார் 1,00,000 டன் விளைவிக்கப் பட்டது. மேலும் தென்னங்கன்றுகள் விவசாயிகட்குச் சலுகை விலையில் 15,000 வழங்கப்பட்டு, 12,000 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிட்டுச் சுமார் ஒரு இலட்சம் டன் தேங்காய்கள் விளைவிக்கப்பட்டுள்ளன.

பயிர்ப் பாதுகாப்பின் கீழ் 18 விதைத் தெளிப்பான்களும், 87 மருந்துத் தெளிப்பான்களும், 42 மருந்து தூவும் கருவிகளும் விவசாயிகளின் நலன் கருதிக் கடந்த 5 ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இரசாயன உரங்கள் சுமார் 3,000 டன் வழங்கப்பட்டுள்ளன.

### வேளாண்மைக் கூடங்கள்

கடந்தஐந்தாண்டுகளில்இரண்டு வேளாண்மைக் கிடங்குகளும், ஒரு தொழில் கருவிக் கூடமும் கட்டப் பெற்றுள்ளன. மேலும் பல துணைக் கூடங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் ஒன்றிய விவசாயிகளின் நலன் கருதி உழுவடை இயந்திரம், எண்ணெய்யால் இயங்கும் நீரேற்றுப் பம்பு, ஓர் தானியக் கதிரடிக்கும் இயந்திரம் ஆகியவை இந்த ஐந்தாண்டுகளில் பெறப்பட்டு விவசாயிகட்குக் குறைந்த வாடகையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், சிறு விவசாயிகளின் மேம்பாடு குறித்து, இவ்வொன்றிப்பில் ஓர் நிலவள வங்கி நிறுவி, விவசாயிகளுக்குப் போதிய கடனுதவி செய்து வருகிறது.

### கூட்டுறவு வளர்ச்சி

ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்தில் கடந்த ஐந்தாண்டுகளில், 3 கிராம நாணயச் சங்கங்களையும், 7 பால் விநியோகச் சங்கங்களையும், இரண்டு கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களையும், ஓர் நிலவள வங்கியையும், இரண்டு கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கங்களையும், இரண்டு கூட்டுறவு வேளாண்மைப் பொறியியல் சங்கங்களையும் இரு கூட்டுறவுக் கிடங்குகளையும் நமது அரசு அமைத்துள்ளது.

இவ்வொன்றிப்பைச் சார்ந்த கிராம விவசாயிகளின் நலனுக்குப் பாடுபட்டுள்ளது. இதற்காகச் சுமார் 12 இலட்சம் மூலதனமாகச் செலவிட்டுள்ளது.

### கல்வி வளர்ச்சி

கடந்த ஐந்தாண்டுகளில் இவ்வொன்றியத்தில் ஓர் உயர்நிலைப்பள்ளி நிறுவப்பட்டுச் செயல்படுகிறது. தனியார் பள்ளிகள் இரண்டு, ஒன்றியத் தரப்பிற்குக்கொண்டுவரப்பட்டுள்ளன ஒன்றிய உயர் தொடக்கப் பள்ளிகளில் பட்டப்படிப்பு ஆசிரியர்கள் நியமனத்திற்கு மூன்று பள்ளிகட்குச் சுமார் ரூ. 4,03,000 செலவில் புதிய பள்ளிக்கட்டடங்கள் நிறுவப்பட்டுள்ளன.

கிராம வானொலி மன்றங்கள் கூடுதலாக 24 நிறுவப்பட்டது டன், ஊராட்சிக்குச் சுமார் 54 வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

### குடும்ப நலம்

நாட்டின் இன்றைய மிக முக்கியமான பிரச்சினையான, குடும்ப நலத் திட்டத்தின் கீழ், 1,907 ஆண்களுக்கும், 1,270 பெண்களுக்கும் அறுவைச் சிகிச்சையும், 453 பெண்களுக்குக் கருத்தடை வளையங்களும், பொருத்தப்பட்டுள்ளன. குடும்ப நல முனைப்பியக்கம் 1972 மற்றும் 1973-ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டுக் கிராம மக்கட்குக் குடும்ப நலத்தின் அவசியம் உணர்த்தப்பட்டுள்ளது.

## வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு



## ரெட்டியார் சத்திரம் ஒன்றியம்

மகளிரின் நலன்கருதிப் பல மகளிர் மன்றங்கள் நிறுவப்பட்டும். மகளிர்கட்குத் தையல் கலைப் பயிற்சி கற்றுக் கொடுக்கப்பட்டும் வருகிறது. குடும்பத் தலைவிகளான 10,000 பெண்களுக்குத் திட்டமிட்ட குடும்பம், சிக்கனமான வாழ்வு ஆகியன போதிக்கப்படுகிறது. இவர்கள் பிறருக்கு வழிகாட்டிகளாகவுமுள்ளனர்.

### மக்கள் நல்வாழ்வு

இவ்வொன்றிப்பிலுள்ள அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்குப் பல துணைக் கட்டடங்கள் கட்டப்பட்டுக் கிராம மக்களுக்கு மருத்துவ வசதி பெருகியுள்ளது. மருத்துவம் மற்றும் குழந்தை நல நிலையங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுத் தாய்மார்களின் மகப்பேறுகளையும், குழந்தைகளின் நல்வாழ்வுகளையும், செவ்வனே கவனித்து வரப்படுகிறது. அவற்றிற்கு

இந்த ஐந்தாண்டுகளில் சுமார் ரூபாய் 15,000-க்கு மருந்துகள் பெற்று விநியோகிக்கப்பட்டுள்ளன. மருத்துவ உதவியாளர்கள் மகப்பேறு, குழந்தைநலம் பேணல் போன்ற பணிகளுடன் தீவிரக் குடும்ப நலத் திட்ட உதவியாளர்களாகவும் பணியாற்றுகின்றனர்.

### கால்நடை வளர்ச்சி

கடந்த ஐந்தாண்டுகளில் ஓர் கால்நடை மைய நிலையக் கட்டடமும், 2 துணைநிலையக் கட்டடமும் கட்டப்பட்டுள்ளன. இதற்கெனச் சுமார் ஓர் இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. செம்மறி ஆடுகளின் வளர்ச்சிக்குச் சுமார் 572 கடாக்களும், கோழிகளின் அபிவிருத்திக்கு 470 சேவல்களும் வழங்கப்பட்டன. மேலும் மீன் குஞ்சுகள் 80,000 வழங்கப்பட்டுள்ளன. 24 மாட்டுத் தொழுவங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

## கிராம வளர்ச்சிப் பணிகள்

### குடிநீர் வசதி

67 புதிய குடிநீர்க் கிணறுகள் வெட்டுவதற்குச் சுமார் ரூபாய் 2,21,000 செலவிடப்பட்டு அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. தற்போது குடிநீர்க் கிணறுகள் இல்லாத கிராமங்கள் இவ்வொன்றியத்திலில்லை. அத்துடன் பழைய குடிநீர்க்கிணறுகளை ஆழப் படுத்த ரூபாய் 3,00,000 செலவிடப்பட்டுள்ளது. மேலும் முக்கியக் கிராமங்கட்கு மூன்று, தரை மட்டக் குடிநீர்த் தொட்டிகள் ரூபாய் 50,000 செலவிலும், 17 நீர்மட்டக்குடிநீர்த் தொட்டிகள் சுமார் ரூ. 2.5 இலட்சம் செலவிலும் அமைத்து இந்த ஐந்தாண்டுக் காலத்தில் இருபது கிராமங்கட்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வாண்டில் 5 குடிநீர்த் தொட்டிகள் அமைக்க வேலை செய்யப்பட்டு வருகிறது.




### போக்குவரத்து

இவ்வொன்றிப்பின் கண்ணுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது. போக்குவரத்துச் சாலைகளற்ற கிராமங்களில்லை எனலாம். கடந்த ஐந்தாண்டுகளில் 64 புதிய இணைப்புச் சாலைகள் ரூபாய் 6 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. 117 கி. மீ. நீளமுடைய 20 சாலைகள் ரூபாய் 4.80 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டன. மேலும் இவ்வொன்றியப் பகுதியின் முக்கிய கிராமங்களுக்குப் பேருந்து வசதிகளும் நகரப் பேருந்து வசதிகளும் செய்யப்பட்டு, மக்களின் போக்குவரத்து வசதியில் மிக அக்கறை காட்டப்பட்டது.

> **திண்டுக்கல்லிலிருந்து பழனிக்குச் செல்லும் சாலையில் உள்ளது ரெட்டியார் சத்திரம் என்ற ஊர். இந்த ஊருக்கு ரெட்டியார் சத்திரம் என்று பெயர் எப்படி வந்தது?**
>
> **அந்தக் காலத்தில் பழனி முருகன் கோவிலுக்குச் செல்பவர்கள் நடந்தே செல்வார்கள். அவர்கள் வழியில் இளைப்பாறுவதற்கு ரெட்டியார் ஒருவர் சத்திரம் ஒன்று கட்டி வைத்திருந்தார். அந்த இடம் ரெட்டியார் சத்திரம் என்று அழைக்கப்பட்டு, நாளடைவில் ஊரின் பெயரே ரெட்டியார் சத்திரம் என்று மாறிவிட்டது.**

### வறட்சி நிவாரணப் பணி மூலம் சாலை வசதிகள்

நமது தமிழ்நாடு அரசு இதற்கு முன்பைவிட, இந்த ஐந்தாண்டுகளில், இவ்வொன்றியத்திற்கு நான்கு இலட்சம் ரூபாய் தொகை வழங்கி அதன் மூலம் இவ்வொன்றியத்தில், சீர்கெட்ட நிலையிலிருந்த கிராமங்கட்குக் குடிநீர் வழங்குதல், கண்மாய் மராமத்துப் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் இது நாள் வரை போக்குவரத்து வசதியற்றிருந்த இவ்வொன்றியத்தைச் சார்ந்த ஆடலூர், பன்றிமலை ஆகிய மலைப் பகுதி ஊராட்சிகட்கு ரூபாய் 50,000 செலவில் வறட்சி நிவாரணத்தின் கீழ் மலைச்சாலை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.




தண்ணீர் பற்றுக்குறையாகவுள்ள பலக்கனூத்து, கம்பளிநாயக்கன்பட்டி, போத்திநாயக்கன்பட்டி, குரும்பப்பட்டி, கரட்டுப்பட்டி, சந்தம நாயக்கன் பட்டி ஆகிய கிராமங்கட்குக் குழாய் கிணறுகள் நிறுவப்பட்டு இப்பகுதி வாழ் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையில் தன்னிறைவு கண்டுள்ளது.

### புதிய பாசனத் திட்டங்கள்

கடந்த ஐந்தாண்டுகளில், இவ்வொன்றிப்பிற்குச் சுமார் ரூபாய் 4.14 இலட்சம் ஒதுக்கீடு செய்து, 71 கண்மாய்கள் மராமத்துச் செய்யப்பட்டுள்ளது. தற்போது பொதுப் பணித்துறை மூலமாக மிக முக்கியமான பெரிய கோம்பையாறு அணைத்திட்டம், சின்னக் கோம்பையாறு அணைத் திட்டம், நாயோடை அணைத் திட்டம், சங்கன்குளம் சீரமைப்பு, கதிரயன்குளம் சீரமைப்பு, புதுக்குளம் கோம்பையாறு போன்ற பல பெரிய அணைத்திட்டங்கட்கு அடிகோலி அத்திட்டங்களனைத்தும் அரசின் செயல் முறையிலுள்ளது. இவைகளனைத்தும் இவ்வாண்டில் விரைந்து செயல்படுத்தப்படும் என்று தெரிகிறது. இதன் மூலம் இவ்வொன்றிப்புக்குச் சுமார் ரூபாய் 25 இலட்சம், அரசுநிதி ஒதுக்கீடு செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### மின்சார இணைப்பு

கடந்த ஐந்தாண்டுகளில் இவ்வொன்றிப்பிலுள்ள 208 சின்னஞ்சிறிய கிராமங்கட்கும் மின் வசதி செய்யப்பட்டு, அனைத்துக் கிராமங்கட்கும், மின்சாரக்குழல் தெருவிளக்குகள் போடப்பட்டுள்ளன. இவ்வொன்றியம் மின்சார இணைப்புப் பணியிலும் தன்னிறைவு பெற்றுள்ளது என்பதனைச் சிறப்பாகக் கொள்ளலாம்.

# தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

19/20, லிங்கி செட்டித் தெரு, அஞ்சல் பெட்டி எண் 226,
சென்னை—600001.

தந்தி : "அர்பாங்க்" தொலை பேசி எண் : 20367, 28068.

எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும், விவசாயத் தொழில்களுக்கும் உதவி செய்யும்.

---

வட்டி விகிதங்கள். (வருடத்திற்கு %)

| | |
|---|---|
| நடப்புக் கணக்கு .. | வட்டி இல்லை |
| சேமிப்புக் கணக்கு .. .. | 4.00 |
| (குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது) | |
| காலாந்திரக் கணக்கு—ரூ. 1000-ம் அதற்கு மேலும். | |
| 15 நாட்களிலிருந்து 45 நாட்கள் வரை .. .. | 2·00 |
| 45 நாட்களிலிருந்து 90 நாட்கள் வரை .. .. | 3·00 |
| நிரந்தரக் கணக்கு— | |
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்குக் குறைவாக .. .. | 4·25 |
| 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்குக் குறைவாக .. .. | 4·75 |
| 9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்குக் குறைவாக .. .. | 5·25 |
| 1 வருடத்திலிருந்து 2 வருடங்களுக்குக் குறைவாக .. .. | 6·00 |
| 2 வருடங்களிலிருந்து 3 வருடங்கள் வரை .. .. | 6·50 |
| 3 வருடங்களுக்கு மேல் 5 வருடங்கள் வரை .. .. | 7·00 |
| 5 வருடங்களுக்கு மேல் .. .. | 7·25 |

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1000-க்கும் அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்தர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம மற்றும் கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு மேலே குறிப்பிட்டதை விட ½% கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

தொடர் கணக்கு — தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதத் தவணை ரூ. 5-ம் | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| அதன் மடங்குகளும் ரூ. | 62 | 128·50 | 201 | 278 | 362·50 | 452 | 548·50 |

---

| | | |
|---|---|---|
| ஆர். கனகசபை, | குடவாசல் சி. கிருட்டிணமூர்த்தி, | டி. வர்த்தமானன், |
| தலைவர். | துணைத்தலைவர். | செயலர். |



# சுருளி மின் திட்டம்

தென்கிழக்கு ஆசியாவிலேயே மிக
உயரமான இடத்திலிருந்து தண்ணீர்
கொண்டுவரப்பட்டு மின்விசை உற்பத்தி
யாவது, கோதையாறு நீர் மின் திட்டம்
ஆகும். அதைவிட உயரமான நீர் மின்
திட்டம் ஒன்று அமைக்கப்படும் பணிகள்
மதுரை மாவட்டத்தில் நடைபெற்று
வருகின்றன.

அந்தத் திட்டம்தான் சுருளியாறு மின்
திட்டம். சுருளியாறு நீர் மின் திட்டத்
திஞல் இன்ெஞரு நன்மையும் உண்டு.
சுருளித் தீர்த்தம் என்று அழைக்கப்படும்
சுருளி அருவியில் எப்பொழுதுமே
தண்ணீர் வந்து கொண்டிருக்கும். ஆஞல்
மழைக் காலத்தில் மிக அதிக
மாகவும், சில நேரங்களில் குறைவாகவும்
தண்ணீர் வரும். ஆஞல் சுருளி நீர் மின்
திட்டம் அமைவதால் சுருளி அருவியில்
எப்பொழுதும் ஒரே சீராகத் தண்ணீர்
வரும். இதஞல் சுற்றுலாப் பயணிகள்
மேலும் கவரப்படுவார்கள்.

சுருளியாறு நீர் மின் திட்டத்தின் கீழ்
35 மெகாவாட் நிறுவனத்திறன் கொண்ட
மின் உற்பத்தி நிலையம் ஒன்று அமைக்கப்
படும்.

இந்த மின் நிலையமானது, மதுரை
மாவட்டத்தில் கம்பம் அருகே, பெரியாறு
மின் உற்பத்தி நிலையத்திலிருந்து ஏறத்
தாழ 5 மைல் தொலைவில் அமையும்.

சுருளியாறு வைகை ஆற்றின் கிளை
ஆறுகும். சுருளியாறு, மற்றும் அந்த
ஆற்றின் முக்கிய கிளை ஆறுகளான
மணலாறு, வெண்ணீர் ஆறு, எரவங்க
லாறு ஆகிய ஆறுகளின் தண்ணீரைப்
பயன்படுத்தி, ஒரு மின் உற்பத்தி நிலையத்
தினை அமைக்கச் சுருளியாறு நீர் மின்
திட்டம் வகை செய்கிறது. சுருளியாறு,
பச்சைக் குமாச்சி என்ற மலைத் தொடரி
லிருந்து பிறக்கிறது. மதுரை குமுளி
சாலையின் மூலமாக இந்த மின் நிலையம்
அமையும் இடத்தை அடையலாம். மதுரை
மாவட்டம் கம்பம் நகரிலிருந்து மூன்று
அல்லது நான்கு மைல் தொலைவில்
உள்ளது மின் நிலையம் அமைக்கப்படும்
இடம்.

இந்த மின் நிலையத்தின் உயரம்
(Maximum Gross Head) 1030 மீட்டர்
களாகும். தென்கிழக்கு ஆசியாவில்
உள்ள எல்லா மின் நிலையங்களைக் காட்
டிலும் இதுவே மிக உயரமானதாக
இருக்கும். இந்த மின் நிலையத்தின் மூல
மாகச் சுமார் 114 மிலியன் யூனிட்டுகள்
மின்சாரம் உற்பத்தி செய்யப்படலாம்.

இந்த மின் நிலையத்தில் உற்பத்தி
யாகும் மின்சக்தி, தமிழ்நாடு மின் இணைப்
புடன் (Grid) பெரியாறு மின் நிலையத்
தில் தொடர்பு படுத்தப்படும்.

35 மெகாவாட் நிறுவனத்திறன்
கொண்ட சுருளியாறு நீர் மின் திட்டம்
குறித்த திட்ட அறிக்கை (Project Report)
தமிழக அரசிஞல் 1970 மே திங்களில்
மத்திய அரசின் திட்டக் குழுவுக்கு ஒப்பு
தலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது.
இத்திட்டத்திற்கான அனுமதி ஆகஸ்ட்
'72-ல் கிடைக்கப் பெற்றது. இலக்கு
களின் படி, கட்டடப் பணிகள் நடை
பெற்று வருகின்றன. மின் நிலையத்திற்
குத் தேவையான டர்பைன்கள், மற்றும்
இயந்திரப் பொறிகளை வெளிநாடுகளி
லிருந்து இறக்குமதி செய்வது குறித்து,
இன்னும் இந்திய அரசு முடிவு எடுக்க
வேண்டியுள்ளது.

இந்த மின் நிலையம் 1977-78ல் செயல்
படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# புது வாழ்வு தரும்

திருமங்கலம் வட்டம் பெரிய உலகாணி கிராமம் கல்லணை, மேலப்புலிக் குண்டு ஆகிய கண்மாய்களுக்கு முறையான பாசன வசதியைச் சீர்திருத்தும் திட்டம் ரூ. 1·33 இலட்சம் மதிப்பீட்டில் தலைமைப் பொறியாளரால் அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 272·67 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி உறுதியாகும். விட்டுப்போன ஆயக்கட்டு 31·55 ஏக்கர் நிலம் புதிதாகச் சாகுபடிக்கு வரும் வாய்ப்புள்ளது.

ரெட்டியார் சத்திரம் பகுதியில் ஏறத்தாழ 20 ஆண்டுக் காலமாகப் பொது மக்களின் வேண்டுகோளில் இருந்து வந்த சின்னக் கோம்பையாறுத் திட்டம் அரசினர் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நிலக்கோட்டை வட்டம் கச்சைக்கட்டி கிராமப் பகுதியைச் சார்ந்த அழகு நாச்சியம்மன் ஓடைப்பகுதியில் சிறிய நீர்த்தேக்கம் ஒன்று ஏற்படுத்த அரசு 7,08,000 ரூபாய் அனுமதித்துள்ளது. இத் தேக்கத்தின் பயனாக 191 ஏக்கருக்குப் பாசன வசதி கிடைப்பதோடு 128 டன்கள் அதிக உற்பத்தி கிடைக்கும்.

# புதிய திட்டங்கள்

நிலக்கோட்டை வட்டம்-தெத்தூர் கிராமத்தில் ச. எண். 78-ல் ஒரு குட்டை அமைக்கும் திட்டம் ரூ. 74,000 மதிப்பீட்டில் தலைமைப் பொறியாளரால் அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மூலம் 84·81 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைக்கவும் 16·55 ஏக்கர் விட்டுப்போன ஆயக்கட்டு சாகுபடிக்கு கொண்டுவரப்படவும் ஏதுவுண்டு.

நிலக்கோட்டை வட்டம் தாதக்கவுண்டன் பட்டியில் ஒரு சிறிய நீர்த்தேக்கம் நிர்மாணிக்க அரசு ரூ. 4,50,000 அனுமதித்துள்ளது. இந்தச் சிறிய நீர்த்தேக்கம் கட்டி முடிக்கப்பட்டதும், 75 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைப்பதால், உற்பத்தி 54·74 டன்கள் அதிகரிக்கும்.

திண்டுக்கல் வட்டம் தர்மத்துப்பட்டியில் புதுக்குளம் கோம்பையாற்றில் சிறிய அணை ஒன்று கட்ட அரசு ரூ. 9,40,000 அனுமதித்துள்ளது. இந்த அணையின் பயனாக 246 ஏக்கருக்குப் பாசன வசதி கிடைப்பதோடு, 182·23 டன்கள் உற்பத்தி அதிகரிக்கும்.

நிலக்கோட்டை வட்டம்-சுரந்தலங்கி கிராமத்தினருகில் சுரந்தாங்கி ஓடையின் குறுக்கே ஓர் அணைகட்டி, அதன் மூலம் சம்பக்குளம் கண்மாய்க்குத் தண்ணீர் வசதி செய்யும் திட்டம் ரூ. 85,000 மதிப்பீட்டில் தலைமைப் பொறியாளரால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 32·73 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி உறுதியாகும். விட்டுப்போன ஆயக்கட்டு 5·92 ஏக்கர் நிலம் புதிதாகச் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட வாய்ப்பு உள்ளது.



கிராமந்தொறும் விவசாயிகள் ஊராட்சி ஒன்றியங்களின் உதவியின் மூலம் வைத்துள்ள கோழிப் பண்ணைகளின் வெளித் தோற்றம்.





ஆத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள சின்னுளப்பட்டியில் கட்டப்பட்டிருக்கும் அறிஞர் அண்ணா நினைவு சலவைத் துறை, சலவைத் தொழிலாளர்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, நீர்த்தொட்டி முதலியன சலவைத் தொழிலாளர்களுக்கு நன்கு பயனுள்ளவைகளாக அமைந்துள்ளன.



வாய்மூடிக் கொண்டிருப்பேன் பகலில் ; அந்தி
வந்தால்நான் சிரித்திடுவேன் ; கணிகை அல்ல ;
பாய்மீதும் படுக்கைதலை யணைகள் மீதும்
பக்குவமாய் உதிர்வேன் ; பெண் முடியா ? அல்ல ;
தேய்வில்லாப் புகழ்பெற்ற பாரி வள்ளல்
தேர்பெற்றேன் ; கபிலனைப்போல் புலவன் அல்ல ;
ஓய்வின்றி அசைந்திடுவேன் ; யானை அல்ல ;
உயர்வெள்ளை நிறம்எனக்கு ; பாலா ? அல்ல ;

நான்முல்லை ; இருப்பிடம்பூக் கொல்லை ; என்றன்
நல்லிதழ்கள் முழுவெள்ளை ; பலர்மு கத்தில்
ஏன்இல்லை சிரிப்பென்போல் ? குடும்பத் தொல்லை ;
என்னைப்போல் நீர்சிரித்தால் கவலை இல்லை ;
தேன்முல்லை என்பீர்நீர் பெண்கள் பல்லை ;
தேய்க்காமல் நாலைந்து நாட்கள் விட்டால்
நான்அள்ளித் தரும்மணமா பல்கொ டுக்கும் ?
நாருதா ? எதற்குப்பொய் பேசு கின்றீர் ?

கிள்ளுகின்றீர் குறும்புசெயும் குழந்தை தன்னை ;
கிள்ளுங்கள் ; எனைஎதற்குக் கிள்ளு கின்றீர் ?
துள்ளுகின்ற பசுங்கன்றைக் கட்டிப் போட்டுத்
துடுக்கடக்கத் தான்வேண்டும் ; எனைப்ப றித்தே
அள்ளுகின்றீர் ; எதற்காகக் கட்டு கின்றீர் ?
அடிமடியில் நான்கிடந்து குதித்த துண்டே ?
தள்ளுகின்றீர் குப்பையில்நான் காய்ந்து போனால் ;
தள்ளாத வயதில்இதற் கனுப விப்பீர் ;

# என் பேர் முல்லை

புலவர் பொன்னிவளவன்

கடல்நெய்தல் மணல்பாலை மலைகுறிஞ்சி
கவின்வயல்கள் மருதமெனச் சொன்ன முன்னோர்
அடர்த்திமிகும் காடுதனை முல்லை என்றார் ;
ஆயிழையார் கற்புக்கோர் எடுத்துக் காட்டாய்ச்
சுடர்முல்லைப் பூஎன்னைச் சூடச் சொன்னார் ;
சூட்டிவந்தார் மன்னர்களும் முல்லை மாலை ;
குடலுக்கு நீர்அனுப்பும் வெள்ளைச் சோற்றைக்
கொஞ்சம்உற்றுப் பாருங்கள் ; எனைநினைப்பீர்

சாத்தனெனும் வேல்வேந்தன் செத்தான் ; அந்தி
சாய்கையிலே வழக்கம்போல் நானும் பூத்தேன் ;
பூத்தஎனை ஒருபுலவன் பார்த்து “ முல்லைப்
பூவே ; நீ ஏன்பூத்தாய்?” என்றே கேட்டான் ;
நீர்த்திவலை விழிப்புலவன் அன்றென் மீது
நிலைத்தபனிக் கண்ணீரைக் காண வில்லை ;
கீர்த்திமிகும் மணம்தருவேன் ; சிரிப்பேன் ; வண்டு
கிட்டவந்து கொஞ்சுகையில் தேன்கொ டுப்பேன் ;

பூத்தால்தான் நீர்கட்டிக் கொடுப்பீர் பெண்ணை ;
பூக்காமல் அரும்பாய்நான் இருக்கும் போதே
சேர்த்தென்னை ஏன்கட்டிக் கொடுக்கின்றீர்கள் ?
சிரிக்கிறதே ஒளிவிண்மீன் கார்மே கத்தில் ;
பார்த்திருப்பீர் ; அதைப்போல்நான் கறுப்புக் கூந்தல்
பாங்குபெற மிளிர்கின்றேன் ; கசக்கி மோந்து
பார்த்திடுதல் சரியல்ல ; என்பேர் முல்லை ;
பயன்படுத்திக் கொள்ளுங்கள் ; இல்லை தொல்லை ;



# இதோ மஞ்சள் புரட்சி! ஊரெங்கும் சூரியகாந்தி!

பூக்கள் பயிரிடுவதில் மதுரை மாவட்டத்துக்கு எப்பொழுதும் புகழ்மிக்க பெயர் உண்டு. மல்லிகைப் பூவானாலும், கனகாம்பரப் பூவானாலும், செவ்வந்திப் பூவானாலும் தோட்டங்களில் கண்ணுக்கு எட்டிய வரை பூவாகவே பயிரிடுவார்கள்.

இப்பொழுது நமது நாட்டில் மிக வேகமாகப் பரவிவரும் புதிய எண்ணெய் வித்தான சூரிய காந்தி விதைகளுக்காகச் சூரிய காந்தியை ஏராளமாக மதுரை மாவட்டத்தின் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்கள் பயிரிட்டிருக்கின்றன.

தே. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ரங்கபாளையம் கிராமத்தில் சூரியகாந்தி ஏராளமாகப் பயிரிடப்பட்டிருக்கிறது.

தே. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் கடந்த ஆண்டில் 321 ஏக்கர் சூரியகாந்தி பயிரிடப்பட்டது.

சூரியகாந்திச் செடி எல்லா நிலங்களுக்கும் ஏற்றது. நோய்கள் வருவதில்லை! பூச்சிகள் அணுகுவதில்லை. சாகுபடிச் செலவும் குறைவு.

ஒரு ஏக்கர் நிலத்தில் தனிப்பயிராகப் பயிரிட 4 கிலோ விதை போதுமானது; மானாவாரி நிலத்திற்கும் விதை அளவு இதே போன்று இருந்தால் போதுமானது.

ஆடி, புரட்டாசி, மாசி மாதங்களில் சூரியகாந்தியை விதைக்கலாம்.

சூரியகாந்தி பூத்து இலைகள் காய்த்துப் பூவின் பின்புறம் வெள்ளை நிறம் அடைந்ததும் சூரியகாந்தியை அறுவடை செய்யலாம்.

சூரிய காந்திப் பயிரின் வயது 90 நாட்கள்தான். சூரிய காந்திப் பூ மூலம் ஏக்கருக்கு 800 முதல் 1,000 கிலோ வரை எண்ணெய் வித்துக் கிடைக்கிறது.

ஓர் ஏக்கருக்கு எல்லாச் செலவும் போக நிகர இலாபம் ரூ. 1,200 கிடைக்கும்.

சந்தர்





ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அய்யம்பாளையத்திலிருந்து மருதாநதி அணைக் கட்டுத் திட்டத்துக்குப் புதிதாகச் சாலை போடப்படுகிறது.



ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் குடகனாற்றில் அனுமந்தராயன் கோட்டையில் மூன்று இலட்சம் ரூபாய் செலவில் கட்டப் பட்ட பாலம்





பசுமைப் புரட்சி எங்கும் பரவிட உறுதுணையாக அமைந்துள்ளது கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகம்.

மதுரை மாவட்டம் செங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள செங்குளம் கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகத்தின் சார்பில் பன்னிரண்டு கிணறுகள் வெட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. முதலில் ஐந்து புதிய கிணறுகள் வெட்டப்பட்டு வருகின்றன. ஐந்து கிணறுகள் வெட்டவும் பம்பு செட்டுகள் வைக்கவும் மொத்தம் ரூபாய் 1,56,000 செலவாகும். இதில் அரசு அளிக்கும் மானியத் தொகை ரூ. 60,506·60 ஆகும்.

வன்முறை !
ரயில் பெட்டிக்குத் தீ !
ரயிலைக் கவிழ்க்கச் சதி !
கல்லெறி !
கண்ணாடிகள் நொறுங்கின !
பயணிகள் பலருக்குப் படுகாயம் !

• இப்படிப் பரப்பரப்பான செய்திகளைப் பத்திரிகைகளில் படிக்கிறோம் ; நெஞ்சம் துடிக்கிறோம். அதே சமயத்தில் நெஞ்சம் இப்படியெல்லாம் எண்ணுகிறது;

'' ரயிலைச் சேதப்படுத்த நினைப்பவனும் ஒரு பயணி தானே ? இதனால் யாருக்கு நட்டம் ? நம்மை நாமே தாக்கிக் கொள்வதற்குச் சமமல்லவா இந்த வன்முறைகளெல்லாம் ?''

இத்தகைய வன்முறையாளர்களின் வறண்ட நெஞ்சம் மாறிட வழியே இல்லையா ?

வேர்வைத் துளிகள் நிலத்தில் சிந்திட ஒவ்வொரு மணித் துளியையும் வீணாக்காமல் அங்கே தொழிலாளர்கள் உழைக்கும் உழைப்பைப் பார்த்தால், '' இவ்வளவு பாடுபட்டுத் தயாரிக்கும் ரயில் பெட்டியையா நாம் ஒரு நொடிக்குள் நொறுக்கிவிடுகிறோம் ? இவ்வளவு பண மதிப்புள்ள ரயிலையா கவிழ்த்து. விலை மதிப்பற்ற உயிர்களைக் கொல்ல வழி கோலுகிறோம் ?'' என்ற நினைப்பு நிச்சயம் வரும். அந்த நினைப்பே அவர்களை நன்முறையாளர்களாக ஆக்கிவிடும் !

உலக நாடுகளில் பெருமதிப்பையும், நல்ல வரவேற்பையும் பெற்றுத் திகழ்ந்து வருகின்ற ஐ.சி.எஃப். என்னும் இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை (Integral Coach Factory) உழைப்பின் வெற்றியைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

அன்றாட வாழ்க்கையில் போக்குவரத்துக்கு மிக இன்றியமையாத சாதனங்களாகத் திகழ்பவை பல. அவற்றுள் ரயிலும் ஒன்று என்று நமக்குத் தெரியும். மாட்டு வண்டி, சைக்கிள், கார், பேருந்து போன்ற சாதனங்கள் போக்குவரத்துக்கு உதவுவன போன்று, விமானமும், கப்பலும் உதவுகின்றன. ஆனால், இவற்றில் நடுத்தர மற்றும் ஏழை மக்கள் போய்வர முடியுமா ? ஆகவே தான் ஏழை, எளியவர்களின் மிகச்சிறந்த போக்குவரத்துச் சாதனமாக ரயில் இன்று உலகமெங்கணும் ஓடிக் கொண்டிருக்கிறது.






ஓடும் ரயிலிலே ஒரு நாளென்ன, பல நாட்கள் கூடச் சென்றுவர இன்று பல வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. பயணிகள் சுகமாகப் பயணம் செய்வதற்கான எல்லா வசதிகளும் கொண்ட நவீன ரயில் பெட்டிகள் இன்று தயாரிக்கப்படுகின்றன.

சென்னைப் பெரம்பூரிலுள்ள ஐ.சி.எஃப். முதலில், அகலப் பாதைக்கான (பிராட் கேஜ்) கூண்டுப் பகுதிகளை மட்டுமே தயாரிப்பதென்ற முடிவுடன் ஆரம்பிக்கப்பட்டது. 1955-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இரண்டாம் நாளில் துவக்கப்பெற்ற இத்தொழிற்சாலை, இன்று ஆண்டிற்கு 650 முழுதும் முடிக்கப்பட்ட பெட்டிகளைத் தயார் செய்கிறது.

பெட்டிகளில்தான் எத்தனை வகை ! எத்தனை வண்ணம் இதுவரை நாற்பதுக்கு மேற்பட்ட ரகங்கள் தயாராகியுள்ளன! சென்னையில் உருவாகும் இந்தப் பெட்டிகள் இன்று இந்தியா முழுவதும், ஏன் உலக நாடுகளிலும் ஓடிக்கொண்டிருக்கின்றன என்றால் நமக்கெல்லாம் பெருமையாக இல்லையா ?

ரயில் வண்டிகளில் பயணிப் பெட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டுத் தொடங்கப்பெற்ற இத்தொழிற்சாலை, உலகிலேயே ரயில் பெட்டிகள் தயாரிக்கும் மிகப்பெரிய தொழிற்சாலையாக விளங்குகிறது.

1973 மார்ச் இறுதி வரை ரயில் பெட்டியின் உட்பகுதி முற்றிலும் கட்டி முடிக்கப்படாத 8,703 ரயில் பெட்டிகளையும், கட்டி முடிக்கப்பட்ட 6,688 ரயில் பெட்டிகளையும், ஐ.சி.எஃப். தயாரித்துள்ளது. 1974-ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் ஆண்டிற்கு 750 முற்றிலும் கட்டி முடிக்கப்பட்ட ரயில்பெட்டிகளை இது தயாரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கே, அகலப்பாதை, மீட்டர் கேஜ் போன்ற ரயில்பெட்டிகள்

...பல்வேறு வகையான முதல் வகுப்பு, மூன்றும் வகுப்புப் பெட்டிகளும், குளிர் சாதனப் பெட்டிகளும் தயாரிக்கப்படுகின்றன. நாட்டின் புறநகர் ரயில் போக்குவரத்துக்காக விடப்படும் மின்சார ரயில் வண்டிகளுக்குத் தேவையான மின்மோட்டார் ரயில் பெட்டிகளையும் இது தயாரிக்கிறது. எஃகுப் பாகத்தைத் தவிர இங்குத் தயாரிக்கப்படும் அகலப் பாதைக்கான ரயில் பெட்டிகளில் உபயோகப்படுத்தப்படும் கருவிகளில், உள்ளூரிலேயே செய்யப்பட்ட கருவிகள் 97·5 சதவிகிதம். மீட்டர் கேஜ் இருப்புப் பாதைக்காகத் தயாரிக்கப்படும் ரயில் பெட்டியில் உள்ளூரிலேயே செய்யப்பட்ட கருவிகள் 92·8 சதவிகிதம் ஆகும்.

12,500 தொழிலாளர்களைக் கொண்டுள்ள இந்த மிகப் பெரிய தொழிற்சாலை, உறுதியான, பாதுகாப்பான, நவீனமான, சுகமான, விலைமலிவான ரயில்பெட்டிகளைக் கண்ணைக் கவரும் வகையில் தயாரிப்பதால், இந்தப் பெட்டிகளுக்கு உலக நாடுகளில் நல்ல வரவேற்பு இருந்து வருகிறது. காரணம், தரமும், குறைந்த விலையுமேயாகும்!

இதற்கு முன் பர்மா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கும், தாய்வானுக்கும் ‘‘போகிகள்’’ எனப்படும் ரயில் பெட்டிகளின் சக்கர அமைப்புகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. 1968-ஐக்கிய பர்மா நிறுவனத்திற்கு 66 போகிகள் செய்து கொடுக்கப்பட்டன. இதுவே ஐ.சி.எஃப்.இன் முதல் ஏற்றுமதிக்கான வாய்ப்பாகும். பிறகு 100 போகிகள் தாய்வான் ரயில் நிறுவனத்திற்கும், 45 போகிகள் தாய்லாந்து நாட்டிற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

இரண்டடுக்கு மாடிப் பேருந்துகளைப் போல, இரண்டடுக்கு ரயில் பெட்டியும் இங்குத் தயாரிக்கப்பட இருக்கிறது. அகலப் பாதையில் செல்லக் கூடிய மூன்று, மூன்றும் வகுப்பு இரண்டடுக்கு ரயில் பெட்டிகள் இங்கு உருவாகும். குறைந்த தூரம் ஓடுபவையும், அதிகப் பயணிகளை ஏற்றிச் செல்பவையுமான ’டெக்கான் குயின்’, ‘தாஜ் எக்ஸ்பிரஸ்’ போன்ற ரயில் வண்டியுடன் இப்பெட்டிகள் இணைக்கப்படும். இப்பெட்டிகள் செயற்படும் விதம், இவைகள்பற்றிப் பயணிகளின் கருத்து ஆகியவற்றை ஆராய்ந்த பிறகு இரண்டடுக்குப் பெட்டிகளை மேலும் அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.



சரக்கு ரயில் பெட்டி அதிகப் பளுவை ஏற்றிச் செல்லும் சக்தி வாய்ந்தது.

இந்தப் பெட்டியை அரசுத் துறையிலும், தனியார் துறையிலுமுள்ள பல தொழிற்சாலைகள் இப்போது உற்பத்தி செய்யத் துவங்கியிருக்கின்றன. முதலாவதாகத் தயாரிக்கப்பட்ட சில ரயில்பெட்டிகள் இப்போது சரக்கேற்றிச் செல்ல ஆரம்பித்திருக்கின்றன.

பெரிய சரக்கு ரயில் பெட்டிகளைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள இயலாத சிறிய வியாபாரிகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக சி.ஆர்.டி. ரயில் பெட்டி உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புதிய ரயில் சரக்குப் பெட்டியில் பழைய நான்கு சக்கரச் சரக்கு ரயில் பெட்டிகளில் இல்லாத நன்மைகள் பல உள்ளன.



அண்மையில் ஏற்றுமதிக்காகத் தயாரிக்கப்பட்ட 113 பெட்டிகள் தாய்வான் நாட்டுக்காக ஆகும். சுமார் 4 கோடி ரூபாய் மதிப்புள்ள இந்த ரயில் பெட்டிகள் கடந்த ஆண்டு அக்டோபர்த் திங்களில் செய்து முடிக்கப்பட்டன. இந்தப் பெட்டிகள் முற்றிலும் புதிய அமைப்புகள் கொண்டவையாகும்.

தென்கிழக்கு ஆசியாவில் ஏற்றுமதிச் சந்தையை வெகுவாகக் கவர்ந்துள்ள நாடு ஜப்பான் என்று அனைவரும் அறிவர். தாய்வான் நாட்டிற்கும் இதுவரை ஜப்பானே ரயில் பெட்டிகள் செய்து கொடுத்து வந்தது. ஆனல், இப்பொழுது ஜப்பானுக்கும், இந்தியாவுக்கும் கடும் போட்டி! இதில் வெற்றி பெற்றது இந்தியாவே! இதற்குக்



ஐ.சி.எஃப்-இல் கம்ப்யூட்டர் ஒன்றும் அமைக்கப்படவிருக்கிறது. இதே போலச் சித்தரஞ்சன் ரயில் என்சின் தொழிற்சாலையிலும், வாரணுசி டீசல் என்சின் தொழிற்சாலையிலும் அமைக்கப்படும். சேமிப்பு நிலையம், கட்டுப்பாட்டுப் பட்டியல், ஊதியப் பட்டியல், செலவுக் கணக்கு விவரம் முதலியவற்றைத் தயாரிப்பதோடு, உற்பத்தி பற்றிய செயல்திட்டத்தை வரைவதற்கும் இந்தக் கம்ப்யூட்டர் பயன்படும்.

இரயில்வேத் துறை இன்னெரு புதிய சரக்கு ரயில் பெட்டியையும் அறிமுகப்படுத்துகிறது. சி.ஆர்.டி. என்று அழைக்கப்படும் இந்தப் புதிய

புதிய வண்டி 27·54 டன் எடையுள்ள சரக்குகளை ஏற்றிச் செல்லக்கூடியது. பழைய வண்டியில் 21·73 டன் எடை மட்டுமே ஏற்ற இயலும். ரயில் வண்டி ஓடும்போது தண்டவாளத்திலிருந்து தடம் புரளாமல் இருப்பதற்கும், ரயில் பெட்டியிலுள்ள சரக்குகளைச் சமூக விரோதிகள் எளிதில் களவாடாமல் இருப்பதற்கும் இந்தப் பெட்டியில் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மொத்தம் 14 ஆயிரம் சி.ஆர்.டி. சரக்கு ரயில் பெட்டிகளை உற்பத்தி செய்ய இரயில்வேத் துறை தீர்மானித்திருக்கிறது.

இவைமட்டுமா? பயணிகள் சுகமான பயணத்துக்காக ரயில் பெட்டிகளில் எத்தனையோ வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. இப்போது புதிதாக ஒரு விரைவு வண்டி வந்துள்ளது. அதன் பெயர் ஜெயந்தி. இதுவும் இங்கே தயாரிக்கப்

பெற்ற பெட்டிதான். இந்தப் பெட்டியில் இன்று எத்தனை எத்தனை வசதிகள் செய்திருக்கிறார்கள் தெரியுமா?

இந்த ரயில் வண்டியிலுள்ள பயணிகள் ரயில் ஓடிக்கொண்டிருக்கும் போதே ஒரு பெட்டியிலிருந்து மற்றொரு பெட்டிக்குச் செல்லலாம். இதில் ஒரு நூல்நிலையமும், புத்தகக் கடையும் இருக்கும். புத்தகங்கள் இங்கு விற்கப்படுவதுடன், இதழ்கள், புத்தகங்கள் ஆகியவற்றை இரவல் பெற்றும் செல்லலாம்.

புது தில்லியிலிருந்து மங்களூர் வரையிலான 3,020 கிலோ மீட்டர் தூரத்தைக் கடக்கும் இந்த ரயில்வண்டி இந்தியாவிலேயே அதிக தூரம், செல்லக்கூடிய ரயில் வண்டியாகத் திகழும். ஒரு ரயில் கண்காணிப்பாளரின்கீழ் இந்த ரயில் வண்டி ஒழுங்காக ஓடும்.




இந்த ரயில் வண்டியின் பெட்டிகள் சிவப்பு இளமஞ்சள் நிறத்தில் கண்ணுக்கினியதாகக் காட்சி அளிக்கும். இந்த ரயிலுடன் உணவு வழங்கப்படும் ரயில் பெட்டி ஒன்றும் இணைக்கப்பட்டிருக்கும். கோடைக் காலங்களில் குளிர்ந்த நீர் கிடைப்பதற்கான வசதியும் செய்யப்பட்டிருக்கும்.

இந்த ரயில் வண்டியில் நெடுந்தொலைவு பயணம் செய்வோருக்கு ஓர் இரவுக்கு 1·25 ரூபாய் செலவில் படுக்கை வசதி அளிக்கப்படும். அல்லது அவர்கள் பயணம் செய்யும் மொத்தத் தூரத்திற்கு 2 ரூபாய் செலவில் படுக்கை வசதி கிடைக்கும். படுக்கை வசதி வேண்டுவோர்க்கு ஒரு கம்பளம், இரண்டு போர்வைகள், ரப்பர் தலையணை ஆகியவை வழங்கப்படும். இந்த ரயில் வண்டியில் இரவில் 487 பேர் தூங்கவும், பகலில் 320



பயணிகள் உட்கார்ந்துகொள்ளவும் முடியும்.

இந்த ரயில் வண்டியில் ஆறு பெட்டிகளில், சோதித்துப் பார்ப்பதற்காகவே பொது அறிவிப்புச் சாதனங்கள் பொருத்தப்பட்டிருக்கும். டேப் ரெக்கார்டர் மூலம் மெல்லிசை, பயணிகளின் ஆர்வத்தை கவரக் கூடிய விஷயங்கள், செய்தி ஆகியவை இந்த அறிவிப்புச் சாதனங்கள் மூலம் ஒலிபரப்பப்படும். குளிர் சாதனவசதி அல்லாத ரயில் வண்டியில் பொது அறிவிப்புச் சாதனம் பொருத்தப்படுவது இதுவே முதன் முறையாகும்.

இந்த ரயில் வண்டியில் கண்காணிப்பாளர் மட்டுமல்லாது பயணச் சீட்டுப் பரிசோதகர்கள், துப்புரவாளர்கள், இயந்திரம் மற்றும் மின்சாரத்தைப் பழுது பார்ப்பவர்கள் ஆகியோரும் பயணம் செய்வார்கள்.

இத்தனை வசதியும் வாய்ப்புமுள்ள ரயில் வண்டிகளில்



யார்தான் பயணம் செய்ய முன்வரமாட்டார்கள்!

பொதுவாக, ரயில் வண்டிகளில் பயணிகள் போக்குவரத்து கடந்த ஆண்டு நவம்பர்த் திங்களில் அதிகரித்துள்ளது. இது முந்தைய ஆண்டின் இதே திங்களோடு ஒப்பிடுகையில் 7·8 சதவிகிதம் அதிகமாகும். கடந்த ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நவம்பர்த் திங்கள் வரையிலான எட்டுத் திங்களில் ரயில் வண்டிகளில் பயணம் செய்தவர்களின் எண்ணிக்கையை 1971-ஆம் ஆண்டின் மேற்கூறிய கால வரையறையோடு ஒப்பிடுகையில் 7·70 சதவிகிதம் அதிகமாக உள்ளது.

இவ்வாறு பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்க ரயில் பெட்டிகளின் தேவையும் அதிகரிக்கின்றன. ஐ.சி.எஃப். தொடர்ந்து ஏற்றுமதிக்கான ஏற்றமிகு பணியில் இறங்கியிருக்கிறது.

இப்போது ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள 'ஜாம்பியா' நாட்டிற்கும் நான்கு ஆய்வு ரயில் பெட்டிகள் இங்குத் தயாராகின்றன.

மற்றும் இந்திய இரயில்வேத் துறைக்குப் போலந்து, சூடான் ஈரான், கிழக்கு ஆப்பிரிக்கா, யூகோஸ்லாவியா நாடுகட்கும் ரயில் பெட்டிகள் தயாரித்து அளிப்பதற்கான 'ஆர்டர்கள்' வந்துள்ளதையும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

பயணிகளின் வசதிக்காக மூன்றும் வகுப்பு ரயில் பெட்டிகளில் இன்னும் பல வசதிகள் செய்யப்படவிருக்கின்றன. ட்யூப் விளக்குகள், அதிகத் திறமையுடன் இயங்கும் மின் விசிறிகள், தூசி உட்புகாத சன்னல் அமைப்புகள் குளிர்

சாதன வசதி, பெட்டிக் குள்ளேயே குளிர்நீர் வசதி, நன்கு வசதியாக உட்காரப்



படுக்க வசதிகள், ஆகியவை செய்வதற்கான ஏற்பாடுகளை இத்தொழிற்சாலை பரிசீலித்து வருகிறது.

ரயில் வண்டிகள் மேலும் விரைந்து செல்வதற்கான புது வகை 'போகிகள்' பலவும் இங்குத் தயாரிக்கப்படவிருக்கின்றன. ஏற்கெனவே தயாராகியுள்ள இத்தகைய 'போகி' ஒன்று இப்பொழுது சோதனை ஓட்டத்தில் உள்ளது. மணிக்கு 160 கிலோ மீட்டருக்கு அதிகமான வேகத்தில் செல்லக் கூடிய ரயில் பெட்டிகளையும் இந்தத் தொழிற்சாலை தயாரித்திருக்கிறது.

இப்படி உழைப்பிலே உருவாகின்ற ரயில் வண்டிகள், 'மக்கள் சொத்து' என்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் வர வேண்டாமா? ரயில் பெட்டிகளிலுள்ள மின் விளக்குகள், மின் விசிறி போன்ற பொருள்களைக் களவாடுதலும், இருக்கைகளைக் கிழித்தலும், சேதப்படுத்தலும் ஒவ்வாத செயல்கள் அல்லவா?

'இந்தியச் சாரண-சாரணியர் சங்கம்' இந்த இழிசெயல்களை எடுத்துக் காட்டி, ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிகாட்டுகிறது. இவர்கள் ரயில் நிலையங்களில் பயணிகளை ஒழுங்குபடுத்தி டிக்கெட்டுகள் பெற்றுக் கொள்ளச் செய்கின்றனர். ரயில் நிலைய நடை



பாதையிலும், அங்கே உள்ள சிற்றுண்டிச் சாலைகளிலும் துப்புரவின் அவசியத்தை எடுத்துக் கூறுகின்றனர். காரணமின்றி அபாயச் சங்கிலியை இழுப்பது, டிக்கெட்டின்றிப் பயணம் செய்வதைத் தவிர்ப்பது, ரயில் பெட்டிகளைச் சுத்தமாக வைத்

திருப்பது போன்ற துண்டு வெளியீடுகளையும் இவர்கள் அவ்வப் போது பயணிகளுக்கு வழங்கி அவர்கள் திருந்திட வழி கோலுகின்றனர்.

எனவே, உலக அரங்கில் ஓர் உன்னத இடத்தை வகித்து, தரத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழுகின்ற ஐ.சி.எஃப். இந்திய நாட்டின் பெருமையை மேலும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

நமது வீட்டுச் சொத்தைப் போல, நாட்டுச் சொத்தாம் ரயில் வண்டிகளையும் இரு கண்களைப் போலக் காப்போம். ஒழுங்காக, ஒரே சீராகத் தொடர்ந்து போகும் தொடர் வண்டியிடம் நாமும் ஒழுங்கைக் கற்றுக் கொள்வோம்.

—பி.வி.ஜி.


# சிமெண்ட் உபயோகிப்போர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் தற்போது அமுலில் இருக்கும் மின்வெட்டு, சிமெண்ட் உற்பத்தியையும், விநியோகத்தையும் பாதித்துள்ளது. இதனால் அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகள் உங்கள் சிமெண்ட் தேவையை உடனடியாகவும், முழுமையாகவும் நிறைவேற்ற இயலாத நிலையில் இருக்கிறார்கள். இதன் விளைவாக உங்கள் அவசரத் தேவையை முன்னிட்டு, அங்கீகாரம் பெறாத விற்பனையாளர்களிடமிருந்து நீங்கள் சிமெண்ட் வாங்க முற்படலாம். இதனால் நீங்கள் நிர்ணயித்த விலைக்குமேல் கொடுப்பதுடன், கலப்பட சிமெண்ட் வாங்கவும் நேரிடலாம்.

உங்கள் நலனை முன்னிட்டு, எப்போதும் அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடமிருந்தே சிமெண்ட் வாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடம், தயாரிப்பாளர்களால் அளிக்கப்பட்டுள்ள ஸ்டாக்கிஸ்டு சர்டிபிகேட்டும் விலைப்பட்டியலும் உள்ளன. அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகள் சிமெண்ட் வாங்குபவர் ஒவ்வொருவருக்கும் அவரவர் வாங்கிய சிமெண்ட் அளவு, விலை இவை குறித்துள்ள காஷ் மெமோ அல்லது பில் கொடுப்பார்கள்.

உங்கள் தேவையை ஸ்டாக்கிஸ்டுகள் உடனுக்குடன் பூர்த்தி செய்ய முடியாவிட்டால் உங்கள் தேவைக்கு அவர்களிடம் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள். அவர்களும் அதே வரிசைக்கிரமமாக உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வார்கள்.

அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடமிருந்து அசல் சிமெண்டை நிர்ணயித்த விலைக்கே பெறுங்கள்.

பொதுமக்களின் நலனை உத்தேசித்து வெளியிட்டோர்:

**இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்,**

175/1, மவுண்ட் ரோடு, சென்னை-2.

SANKAR I C CEMENT

சங்கர் சிமெண்ட்




கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம் மதுரை மாவட்டம் திருமங்கலம்வட்டத்தில் திருமங்கலத்திலிருந்து தெற்கே 14 கிலோ மீட்டர் தூரத்தில் திருமங்கலம்-விருதுநகர்ச் சாலையில் அமைந்துள்ளது. இவ்வொன்றியத்தின் பரப்பளவு 98·55சதுர மைல்கள். மக்கள் தொகை 58,700. ஆண்கள் 28,345, பெண்கள் 29,725. இவ்வொன்றியம் கள்ளிக்குடி வட்டாரம் முழுவதும், கல்லுப்பட்டி, திருமங்கலம் வட்டாரங்களில் சிறிய பகுதிகளைக் கொண்டது.

இவ்வொன்றியத்தில் 36 ஊராட்சிகள் உள்ளன. 42 ரெவின்யூ கிராமங்களும், 34 உட்கடைக் கிராமங்களும் இவ்வொன்றியத்தில் உள்ளன. பெரும்பாலும் கரிசல் மண் பிரதேசமாகும். மானவாரி விவசாயமே அதிகம். மக்கள் தொகையில் படித்த ஆண்கள் 15,058, பெண்கள் 6,444 ஆவார்கள்.

### கல்வி வளர்ச்சி

இவ்வொன்றியத்தில் 13 ஒன்றிய உயர் துவக்கப் பள்ளிகளும், 42 ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளும் உள்ளன. தனியார் துறையில் ஓர் உயர் தொடக்கப்பள்ளியும், 8 தொடக்கப்பள்ளிகளும் உள்ளன. ஒன்றியத்தில் ஓர் ஆசிரியரைக் கொண்ட பள்ளிகள் 5 உள்ளன. ஒன்றியத்தில் மொத்தம் 217 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.

இவர்களில் 95 ஆசிரியர்கள் உயர் துவக்கப்பள்ளியிலும், 122 ஆசிரியர்கள் துவக்கப்பள்ளியிலும் பணிபுரிகின்றனர். 6,486 பிள்ளைகள் பள்ளியில் பயில்கின்றனர். 96 சதவிகிதப் பிள்ளைகள் இவ்வட்டாரத்தில் கல்வி பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. பள்ளிக்கு 46 கட்டடங்கள் உள்ளன. மீதப் பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 5 ஆசிரிய மையங்கள் செயல்படுகின்றன. 10 பள்ளிகளில் பகுதிநேர ஆசிரியர்களும், 7 கடைநிலை ஊழியர்களும் பணிபுரிகின்றனர். தேவையான தளவாடங்கள் ரூ.6,000க்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

இவ்வட்டாரத்தில் 65 மதிய உணவு மையங்கள் உள்ளன. மொத்தம் 3,769 மாணவர்கள் மதிய உணவு உட்கொள்கின்றனர். மதிய உணவு உட்கொள்ளும் மாணவர்கட்கு நமது அரசு இலவசமாக பாடப் புத்தகங்கள், சிலேட்டுகள் வழங்கியுள்ளது.

### சீரணித் திட்டம்

இத்திட்டத்தில் மைட்டாம்பட்டி, மருதங்குடி, குராறூர், கிராமங்களில் ஊராட்சி மன்றக் கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் வடக்கன்பட்டி, கள்ளிக்குடி கிராம ஊரணிகள் தூர் எடுக்கப்பட்டுக் கரைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. மருதங்குடி என்னும் கிராமத்தில் சீரணி அறிவகம் செயல்படுகிறது. 30 உறுப்பினர்கள் உள்ளனர். குளத்துள்வாய்ப்பட்டி கிராமத்திற்குச் சாலை அமைக்கும் வேலை 1972—73-ல் செயல்பட்டுள்ளது. இத்திட்டத்தில் எல்லாப் பள்ளிகளிலும் சீரணிப் படையினர் வெள்ளை அடித்துத் திருக்குறள்களை எழுதியுள்ளனர்.

### சிறு சேமிப்புத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், வளரும் மாதாந்திரச் சேமிப்புத் திட்டத்தில் 259 நபர்கள்சேர்க்கப்பட்டுள்ளனர். சென்ற 5 ஆண்டுக்காலமாக ரூ. 7,00,000 வசூல் மேற்கொள்ளப்பட்டது. 30 மகளிர் மன்ற கன்வீனர்கள், இத்திட்டத்தில் பங்கேற்றுள்ளனர். ஒன்றிய ஊழியர்கள்அனைவரும் ஓராண்டுக் காலச் சேமிப்புத் திட்டத்தில் உறுப்பினர்களாக உள்ளனர்.

### வேளாண்மைப் பணிகள்

கள்ளிக்குடி ஒன்றியத்தில் பொது மராமத்துத் துறைக் கண்மாய்கள் 67. கண்மாய்கள் சிறிய நீர்ப்பாசன வசதி படைத்தனவாக உள்ளன.

இந்தக் கண்மாய்கள் மூலம் மொத்தம் 6,000 ஏக்கர் முதல் 7,000 ஏக்கர் வரை நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இதரப் பகுதிகளில், புளி, பருத்தி, தோட்டங்களில் மிளகாய், கம்பு முதலிய பயிர்கள் சாகுபடி செய்யபடுகிறது.

இந்த ஒன்றியத்தில் பொறுக்கு விதை நெல் 15 டன், இதர சிறு தானியங்கள் 20 டன் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. மற்றும் அமோக விளைச்சல் தரும், ஐ.ஆர். 8, ஐ.ஆர் 22, ஐ.ஆர். 20 கருணா, அன்னபூர்ணா, கே. 29, போன்ற நெல் வகைகளும் ஒட்டுக் கம்பு எச். பி. 1, எச்.பி. 3, எச். பி. 4, சி. எச். எஸ். 3, செரணா சோளம் போன்ற சிறு தானிய விதைகளும் விநியோகம் செய்து 4,000 ஏக்கர் பரப்புக்கு மேல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

பசுந்தாள் உர விநியோகத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் மான்ய விலையில் 4 டன் விதைகள் விநியோகிக்கப்பட்டு, உரமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

ரசாயன உர விநியோகத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு அவ்வப்பொழுது தேவையான உரங்கள் 8 கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் விவசாய சங்கங்கள் மூலமாகவும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

காய் கறி விதை விநியோகத் திட்டத்தின்கீழ் 50 சதவீதம் மான்ய விலையில் 75 கிலோ விதைகள்ஒவ்வொரு ஆண்டும்விநியோகிக்கப்பட்டு வருகிறது.

பருப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எச். ஏ. 1 இதுவரை பைசாகி பாசிப் பயிறு, ஜி.டி.என் துவரை போன்ற உயர்ரக விதைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.



கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நவீன கருவிகள் விநியோகத்தின் கீழ் இது வரை சுமார் 150 நவீன இரும்புக் கலப்பைகளும், 40 தழை மிதிக்கும் கருவிகள், 200 திருந்திய கமலேச் சக்கரங்கள், 40 மருந்து தூவும் கருவிகள், 150 மருந்து தெளிப்பான்கள் 10 விசைத் தெளிப்பான்களும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. மேலும் தலைமை இடத்தில் 10 விசை தெளிப்பான்களும் கையினால் இயக்கும் 22 தெளிப்பான்களும், 5 தூவான்களும் குறைந்த வாடகையில் விவசாயிகளுக்குப் பயிர்ப் பாதுகாப்பு நிமித்தம் வழங்கப்படுகின்றன. மேலும் ஓர் இயந்திரக் கலப்பையும், ஆயில் எஞ்சினும் விவசாய வேலைகளுக்கு குறைந்த வாடகையில் கொடுக்கப்பட்டு வருகின்றன.




தென்னை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 1,500 கன்றுகள் மான்ய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

செயல் விளக்கப் பாத்திகள் ஆண்டுதோறும் பலதரப்பட்ட பல பயிர் செயல் விளக்கமும் செய்து காட்டப்பட அதற்குண்டான விதை உரம் இலவசமாகவே வழங்கப்பட்டு வருகிறது.

இவ் வட்டாரத்தில் உள்ள களர் நிலச் சீர்திருத்தத்தின் கீழ் 100 ஏக்கரில் ( குறித்த பகுதியில் ) இலவசமாக சிப்சம் வழங்கிச் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டுள்ளது.

இவ் வட்டாரத்தின் சிறு விவசாயிகளின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சிறு விவசாயிகளுக்குக் குறுகிய கால, நீண்ட காலக் கடன் வசதிகள் ஏராளமாகச் செய்து தரப்பட்டுள்ளன.

## கால்நடை

கள்ளிக்குடி ஒன்றியப் பகுதியில் மொத்தம் 51,375 கால்நடைகள் இருக்கின்றன. இவற்றில் பால் உற்பத்திக்காக 3,972 கால்நடைகளும் வேலைகளுக்குப் பயன்படுத்துவதற்காக 6,805 கால் நடைகளும், 11,970 செம்மறியாடுகளும் ஒன்றியம் முழுவதிலும் பரவலாக உள்ளன. 4,685 பசுக்கள், எருமைகளுக்குச் செயற்கை முறை இன விருத்தி செய்து முறையே 521 உயர் இனக்கன்றுகள் பிறந்துள்ளன. இவ்வொன்றியத்தின் தலைமை இடத்தில் ஒரு கால்நடை மருத்துவ மனையும், உள் கிராமங்களில் 5 கால்நடை இன விருத்தி கிளை நிலையங்களும் அமைந்துள்ளன. இக் கிளை நிலையங்கள் கால்நடை மருத்துவ மனையின் மூலமாக 2,639 கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கி 6,391 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. கால்நடைகளுக்குப் பருவ காலங்களில் வரும் தொற்று நோய்கள் வராமல் தடுக்கும் முகத்தான் 3,831 கால்நடைகளுக்குச் சப்பை நோய் தடுப்பூசியும், 4,159 கால்நடைகளுக்குத் தொண்டையடைப்பான் நோய்த் தடுப்பூசியும் 10,166 கால்நடைகளுக்கு வெக்கை நோய்த் தடுப்பூசியும் 11,762 கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் நோய்த் தடுப்பூசியும் போட்டுக் கால்நடைகளுக்கு அவ்வப்போது நோய்கள் பீடிக்காத வண்ணம் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒன்றியத்தில் உயர் இனக் கோழிகள் உற்பத்தி செய்வதற்காக 406 உயர் இனக்கோழி முட்டைகளும் 702 உயர் இனக்கோழிகளும் வாங்கி விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இது தவிர 1970–71 ஆம் ஆண்டில் ஒன்றியத்தின் மூலம் 3 கோழி பண்ணைகளுக்கு மொத்தம் 600 ரூபாய் செலவிடப்பட்டது. தனி நபர்கள் மூன்று பேர் அமைத்த ஆழ்கூழ் கோழிப் பண்ணைகளை ஊக்குவிக்கும் முகத்தான் அவர்களுக்குத் தலா ரூபாய் 100 வீதம் ரூ. 800 மானியமாக வழங்கப்பட்டுள்ளது. தீவனப் புல் சாகுபடி திட்டத்தின் கீழ் ரூ. 278 மானியமாக வழங்கப்பட்டுள்ளது. கிளை நிலையங்களுக்கு வேண்டிய பொருள்கள் வாங்கி விநியோகித்த வகையில் ரூ.332 செலவிடப்பட்டுள்ளது. 1971–72 ஆம் ஆண்டில் 82 நபர்களுக்கு வீட்டுப்புறக் கோழிப் பண்ணைகளுக்கான உயர் இனக் கோழிகளும், சேவல்களும் வாங்கி ஒன்றியம் முழுவதிலும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. ரூ. 125 தீவனப்புல் சாகுபடித் திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டுள்ளது. மீன் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நிதி ஆண்டில் ரூ. 400 பெறுமானமுள்ள விரலளவு மீன் குஞ்சுகள் வாங்கிக் கிராமப்புறங்களில் உள்ள குளங்களில் மீன் வளர்த்து விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் அரசினரால் இலாகா சம்பந்தப்பட்ட செலவினங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 2,200-ல் ரூ. 2000 இருபது நபர்களைக் கொண்டு தனியார் வங்கியின் மூலம் கடன் பெற்று வீரிய இனக்கோழிகளைக் கொண்டு அமைக்கவிருக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ஊக்குவிக்கப்பட்ட கோழிப்பண்ணை அமைப்பாளர்களுக்குத் தலா ரூ. 100 வீதம் ரூ. 2,000 மானியமாக வழங்கப்படுகிறது.

ஒன்றியப் பகுதியில் கால்நடைகள் காட்சிகளும், தீவிரக் கால் நடைப் பராமரிப்பு நாள் இயக்கங்களும், பால் கறவைப் போட்டிகளும் நடத்தி மக்களை உயர் இனக் கால்நடைகளைக் கொண்டு உற்பத்தியைப் பெருக்குவதற்காக அவ்வப்பொழுது இலாகா சம்பந்தப்பட்ட திரைப் படக் காட்சிகளும், கிராமங்கள் தோறும் ஏற்பாடுசெய்து மக்களை ஊக்குவித்துக் கால் நடை இலாகாவின் வளர்ச்சி, விவசாயப் பெருங்குடி மக்களின் வளர்ச்சி என்ற அடிப்படைப் பணிகள் ஆற்றப்பட்டு வருகின்றன.

## செய்யப்பட்ட பணிகள்

மேல்நிலைத் தொட்டிகள் 4 கட்டப்பட்டுள்ளன. இதில் தரை நீர்மட்டத் தொட்டி 1, குடி நீர்க் கிணறுகள் 24 ஆகும்.

புதிதாகக் கட்டப்பட்ட பள்ளி கட்டடங்கள் 12 ஆகும்.

புதிதாகப் போடப்பட்ட சாலையின் தொலைவு 15 கிலோமீட்டர் ஆகும்.

புதிதாக 3 குடியிருப்புகள் ஆசிரியர்களுக்காகக் கட்டப்பட்டுள்ளன.

40 கிலோ மீட்டர் முக்கியச் சாலைகள் இவ் வொன்றியத்தினால் பராமரிக்கப்படுகிறது.

25 கண்மாய்கள் கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்படுகிறது.




# கதை கேட்ட மன்னன்

பூங்கொடி

ரஷ்ய நாட்டில் ஒரு மன்னர் இருந்தார். அவருக்குக் கதைகள் கேட்பது என்றால் கொள்ளை ஆசை. ஒவ்வொரு நாளும் அவருக்குக் கதைகள் கேட்காமல் பொழுது போகாது.

நாள்தோறும் புதிய புதிய கதைகள் கேட்டு மகிழ்வதில் அவர் மிக்க ஆவலாக இருந்தார். புதிய கதைகளுக்கு எங்கே போவது?

அதற்காகத் தமது வேலையாட்களை நாட்டின் நாலா பக்கங்களுக்கும் அனுப்பினார். புதிய கதைகள் சொல்வதற்கு ஆட்கள் யாராவது இருக்கிறார்களா என்று கண்டுபிடித்து, அவர்களை அழைத்து வரச் சொன்னார்.

வேலையாட்களும் தேடித்தேடி அலைந்து கதை சொல்பவர்களை அரண்மனைக்கு அழைத்து வருவார்கள். அவர்கள் நல்ல சுவையான கதைகள் சொல்வார்கள். கதைப் பிரியரான அந்த மன்னர் அவற்றைக் கேட்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைவார்.

ஒரு சமயம் ஒருவர் கதை சொல்வதற்கு மிக்க ஆவலாக வந்தார். ஒரு நாட்டு மன்னருக்கே கதை சொல்லப்போகிறோம் என்ற பெரும் மகிழ்ச்சியில் அந்த மனிதர் அரண்மனைக்கு வந்திருந்தார். மன்னர் கதை கேட்கத் தயாரானார். வந்தவர் கதைசொல்ல ஆரம்பித்தார்.

கதையைக் கேட்டுக் கொண்டே வந்த மன்னருக்குக் கோபம் கோபமாக வந்தது. உடனே அவர் கதை சொல்பவரைப் பார்த்து, 'வேண்டாம் உம்முடைய பழைய கதை. இந்தக் கதையை நான் ஏற்கெனவே கேட்டிருக்கிறேன்'' என்று உரக்கக் கத்தினார். அத்துடன் சும்மா இருந்தாலும் பரவாயில்லையே. உடனே தமது வீரர்களை அழைத்தார். வீரர்கள் ஓடோடி வந்தனர்.

''இவன் தலையை வெட்டி விடுங்கள்!'' என்று கட்டளையிட்டார். சொல்ல வந்தவர் திடுக்கிட்டார். வீரர்கள் கூட இதைக் கேட்டு வியந்தனர். ஆனால், மன்னர் இட்ட கட்டளையாயிற்றே ! உடனே கதை சொல்ல வந்தவரைக் கொல்வதற்காக இழுத்துச் சென்றனர். பாவம்! ஏற்கெனவே சொன்ன கதையைச் சொன்னதற்காக அவர் தலையைத் துண்டித்து விட்டனர்!

இந்தச் சம்பவத்திலிருந்து கதை சொல்ல வந்தவர்கள் கதி கலங்கினார்கள். தம்முடைய தலையும் துண்டிக்கப்படுமோ என்று அஞ்சினார்கள். மன்னர் முன்னே கதை சொல்ல ஒருவருக்கும் துணிவு இல்லை. சிலர் கதை சொல்லவே நா எழாமல் ஏதேதோ உளறினார்கள்!

மன்னருக்குப் புதிய கதை எது, பழைய கதை எது என்று தெரியும். ஆனால், அது மற்றவர்களுக்குத் தெரியுமா? முதலிலேயே இது பற்றி மன்னர் அறிவித்திருந்தால், கதை சொல்பவர்களுக்குப் புதிதாகக் கதை சொல்ல முடிந்திருக்கும். ஆனால், அவ்வாறு அறிவிக்காததால் அப்பாவிகளின் தலைகள் பல உருண்டன!

இப்படி இருந்தால் யார்தான் கதை சொல்ல முன் வருவார்கள்? ஆகவே, கதை சொல்பவர்கள் எங்குமே கிடைக்கவில்லை. வீரர்கள் தேடித் தேடி அலுத்துப்போய் வந்தனர். மன்னர் அவர்களைப் பார்த்து, ''கதை சொல்பவரை ஏன் அழைத்து வரவில்லை? மறுபடியும் போய்த் தேடிப் பார்த்து அழைத்து வாருங்கள். இல்லையென்றால் உங்கள் தலைக்கும் ஆபத்து!'' என்று மிரட்டினார்.

அந்தச் சமயம் ஒரு இளைஞன், ''கதை சொல்ல வந்திருக்கிறேன்!'' என்று துணிச்சலுடன் வீரர்கள் முன்னே வந்து நின்றான். வீரர்களோ தம் தலை தப்பியது என்று மகிழ்ந்து அந்த இளைஞனை மிகுந்த வரவேற்போடு மன்னரிடம் அழைத்துச் சென்றனர்.

மன்னர் மகிழ்ச்சியுடன் கதை சொல்லவந்திருக்கும் இளைஞனை வரவேற்று உட்கார இடம் தந்தார். ''தம்பி! கதையை ஆரம்பிக்கலாமே!'' என்றார் ஆர்வமாக. இளைஞனோ எதற்கும் பயப்படாமல் கதைசொல்ல ஆரம்பித்தான்.



''நெடுங்காலத்திற்கு முன் உங்கள் தாத்தாவும், என்னுடைய தாத்தாவும், ஒன்று சேர்ந்து ஒரு நெற்களஞ்சியத்தை கட்டினார்கள். அது எவ்வளவு பெரியது தெரியுமா? அந்தக் களஞ்சியத்தின் ஓர் மூலையிலிருந்து ஓர் அணில் மற்றொரு மூலைக்கு ஓட ஒரு நாள் பிடிக்கும். அவ்வளவு பெரியது அந்தக் களஞ்சியம்! அதைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா, அரசே?'' என்று இளைஞன் கேட்டான். அதற்கு மன்னர் ''இல்லை, நான் கேள்விப்பட்டதில்லை'' என்றார்.

''அப்படியானால் இன்றைக்கு இவ்வளவு போதும். மீதிக் கதையை நாளை வந்து சொல்கிறேன்!'' என்று சொல்லிவிட்டுச் சென்றான் அந்த இளைஞன்.

மறுநாள், மன்னர் மீதிக் கதையைக் கேட்க இளைஞனை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். இளைஞனும் வந்தான். மேற்கொண்டு கதையைச் சொல்ல ஆரம்பித்தான்.

''நேற்று எதுவரை கதை சொன்னேன்?'' என்று மன்னனைப் பார்த்துக் கேட்டான் இளைஞன்.

''உங்கள் தாத்தாவும், என் தாத்தாவும் நெற்களஞ்சியம் கட்டியது வரை சொன்னாய்....'' என்றார் மன்னர்.

உடனே இளைஞன், ''மேற்கொண்டு கேளுங்கள். அந்த நெற்களஞ்சியத்தில் அவர்கள் இருவரும் சேர்ந்து ஒரு பெரிய காளையை வளர்த்தார்கள். அதன் கொம்புகள் மிக அகலமாக இருந்தன. எவ்வளவு அகலம் தெரியுமா? ஒரு குருவி ஒரு கொம்பிலிருந்து மற்றொரு கொம்பிற்குப் பறந்து செல்ல ஒரு நாள் ஆகும்! அவ்வளவு அகலம் அந்தக் கொம்புகள். அதைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா அரசே'' என்று கேட்டான்.

அதற்கு மன்னர் ''இல்லை! என்று தலையாட்டினார். அப்படியானால் இன்றைக்கு இது போதும்! நான் நாளைக்கு வருகிறேன்!'' என்று சொல்லிக்கொண்டே சென்றான் இளைஞன்.

இதைக் கேட்ட மன்னருக்குக் கோபம் பொத்துக் காண்டு வந்தது. ''டேய் பயலே! நீ என்னையா ஏமாற்றப்பார்க்கிறாய்? உன்னைஎன்ன செய்கிறேன்பார்!'' என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டார்.

மறுநாள் காலை!

மன்னர் அவசரம் அவசரமாகத் தம் அவையைக் கூட்டினார். அவையிலிருந்த அனைவரிடமும், ''இன்று அந்த இளைஞன் கதை சொல்ல வருவான். அவன் கதை சொல்லும்போது, நான் அதை ஏற்கெனவே கேட்டிருப்பதாகக் கூறுவேன். அப்போது நீங்களும், 'நாங்களும் அதை மன்னருடன் சேர்ந்து கேட்டிருக்கிறோம்' என்று சொல்ல வேண்டும்!'' என்று உத்தரவிட்டார்.

மூன்றாவது நாளாக இளைஞன் கதை சொல்ல அரண்மனைக்கு வந்தான். மன்னர் கேலிச் சிரிப்புடன் அவனை வரவேற்றார். இளைஞனோ அதைப் பொருட்படுத்தாமல் கதை சொல்ல ஆரம்பித்தான்.

''பிறகு என்ன நடந்தது தெரியுமா? உங்கள் தந்தையும் என் தந்தையும் அண்டை நாட்டு மன்னர்களாக இருந்த போது, உங்கள் தந்தையார், என் தந்தையாரிடமிருந்து 40 மூட்டைத் தங்கத்தைக் கடனாக வாங்கி, அதை நாற்பது குதிரைகளில் ஏற்றிச் சென்றார். அதை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா?'' என்று மன்னரைப் பார்த்துக் கேட்டான் இளைஞன்.

அவையில் இருந்தவர்களுக்கு மன்னன் ஏற்கெனவே உத்தரவிட்டது நினைவில் இருந்தது. உடனே அவர்கள் அனைவரும், 'ஆமாம், ஆமாம். நாங்கள் அதைக் கேட்டிருக்கிறோம்!'' என்றார்கள்.

''அப்படியானால், நீங்கள் அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், அரசே'' என்றான் இளைஞன்.

மன்னர் திடுக்கிட்டு ஒன்றும் புரியாமல் விழித்தார். அவையில் இருந்தவர்களோ மன்னர் கடனாளிதான் என்று உறுதிப்படுத்தினர். வேறு வழி இல்லாமல் மன்னர், தம் கருவூலத்திலிருந்து தங்கம் முழுவதையும் சுரண்டி எடுத்தார். அப்படி எடுத்தும் ஒரு மூட்டை தங்கமே கிடைத்தது!

இளைஞனே அந்த ஒரு மூட்டைத் தங்கத்தை எடுத்துக் கொண்டு, மீதியைப் பிறகு வந்து வாங்கிக் கொள்வதாகச் சொல்லி ஓட்டமும் நடையுமாக விரைந்தான்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு மன்னருக்குக் கதை கேட்கும் ஆசையே போய்விட்டது.

(ஒரு ரஷ்யக் கதையைத் தழுவி எழுதியது.)

பின்தங்கிய வட்டங்களுக்கு

அரசு தரும் உதவி

புதிதாகத் தொழில்கள் துவங்குவதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் மதுரை மாவட்டத்தில் பின்வரும் வட்டங்களை தொழில்களில் பின்தங்கிய வட்டங்களாகத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது:—

| | |
|---|---|
| மேலூர் | திருமங்கலம் |
| உசிலம்பட்டி | நிலக்கோட்டை |
| திண்டுக்கல் | வேடசந்தூர் |

இந்த வட்டங்களில் தொழில் துவங்குபவர்களுக்கு அவர்களது முதலீட்டில் 10ல் 1 பாகம், அரசு நிதி உதவியாக அல்லது மானியமாக வழங்கப்படும். இந் நிதி உதவி, உயர்ந்த அளவு ரூ. 50,000 வரை வழங்கப் படும்.

உசிலம்பட்டிக் கோட்டம் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தின் பரப்பளவு சுமார் 339.32 சதுர கிலோ மீட்டர். இந்த ஒன்றியப் பகுதியில் சுமார் 1 இலட்சம் மக்கள் வசிக்கின்றனர். மொத்தம் 39 ஊராட்சிகளைக் கொண்டது இந்த ஒன்றியம். இதில் திருமங்கலம் பேரூராட்சி உள்ளது.

• கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாடு அரசு இவ் வட்டாரப் பகுதியில் பல்வேறு துறைகளில் ஏராளமான பொருட் செலவில், பல சாதனைகளைச் செய்துள்ளது.

### இணைப்புச் சாலைகள்

இவ்வட்டாரப் பகுதியில் உள்ள சாலைகளில் கடந்த ஐந்து ஆண்டுகளில் புதிதாகப் போடப்பட்ட இணைப்புச்சாலைகளின் விவரமும் அதற்கெனத் தமிழக அரசு செலவிட்ட தொகையும், வருமாறு :—

| ஆண்டு | புதிய சாலைகளின் அளவு (கி. மீ.) | அரசு மானியம் மட்டும். (ரூபாய்) | இணைக்கப்படும் கிராமங்கள் |
|---|---|---|---|
| 1967—68 | 3·4 | 26,210 | 3 |
| 1968—69 | 2·0 | 20,841 | 2 |
| 1969—70 | 11·6 | 21,500 | 3 |
| 1970—71 | 11·6 | 29,333 | 4 |
| 1971—72 | 3·80 | 30,086 | 4 |

### சாலைப் பராமரிப்பு

திருமங்கலம் ஒன்றியப் பகுதியில் ஒன்றியப் பராமரிப்பின் கீழ் உள்ள சாலையின் நீளம் 16·60 கி.மீ. அதைப் பராமரிக்கத் தமிழக அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் வழங்கிய மானியம் வருமாறு :—

| ஆண்டு | தொகை (ரூபாய்) |
|---|---|
| 1967—68 | 30,129 |
| 1968—69 | 31,291 |
| 1969—70 | 38,714 |
| 1970—71 | 19,708 |
| 1971—72 | 29,568 |

### குடிநீர் விநியோகம்

குடிநீர் வசதிக்காகக் கிணற்று நீர்த்திட்டம், குழாய்த் தண்ணீர்த் திட்டம் ஆகிய இரு வகையாகப் பிரித்து வேலையை மேற்கொண்டு முடிக்கப்பட்டுள்ளன. இதில் 5 ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு வழங்கிய நிதி மட்டும் வருமாறு.

| ஆண்டு | தொகை (ரூபாய்) |
|---|---|
| 1967—68 | 23,363 |
| 1968—69 | 19,159 |
| 1969—70 | 31,035 |
| 1970—71 | 34,586 |
| 1971—72 | 38,624 |

### கல்வி

கல்வி வளர்ச்சி சம்பந்தமாக இவ்வொன்றியப் பள்ளிகளில் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் மதிய உணவிற்காக அரசு வழங்கிய மானியம் வருமாறு :—

| ஆண்டு | மதிய உணவு வழங்கிய பள்ளிகளின் எண்ணிக்கை | அரசு மானியம் (ரூபாய்) |
|---|---|---|
| 1967—68 | 72 | 50,567·52 |
| 1968—69 | 72 | 49,200·00 |
| 1969—70 | 72 | 12,300·00 |
| 1970—71 | 74 | 51,512·00 |
| 1971—72 | 74 | 51,068·47 |

ஒவ்வொரு ஆண்டும் புதிதாகப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்காகத் தமிழ்நாடு அரசு மானியம்



# திருமங்கலத்தில் அரிய வளர்ச்சி



**செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் மிகு விளைச்சல் தர நெல் பயிரிடப்பெற்று அறுவடை நடை பெறுகிறது.**

கொடுத்து வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் மேற்கண்ட வேலைகளுக்காக வழங்கப்பட்ட தொகை ரூபாய் 72,000 ஆகும்.

இது தவிரப் பள்ளிகளில் சுகாதாரப்பராமரிப்புக் காகவும் ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு வழங்கப் பட்டு வருகின்றது. இவ்வொன்றியத்தில் உள்ள பள்ளிகளில் வேலை பார்த்து வரும் ஆசிரியைகளுக் குக் குடியிருக்க வால்நாயக்கன்பட்டி கிராமத்தில் வீடு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

திருமங்கலம் ஒன்றியப் பள்ளிகளில் (1 முதல் 8 வகுப்பு வரை)மாணவ மாணவிகளுக்கு விஞ்ஞான விளக்க மாதிரிப் பொருள்கள் ஒவ்வொரு ஆண்டும் வாங்கி விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதற்கான நிதியைத் தமிழக அரசே வழங்கி வருகிறது.

### விவசாயம்

விவசாயத் துறையில் தமிழ்நாடு அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் கீழ்க் கண்ட பல்வேறு இனங்களுக்கு நிதி வழங்கிச் சாதனைகள் புரிந் துள்ளது.

| | 67—68 | 68—69 | 69—70 | 70—71 | 71—72 |
|---|---|---|---|---|---|
| | | (ரூபாய்) | | | |
| 1. பசுந்தாள் உர விதைகள் விநியோகம் செய்தல். | 150 | 150 | 179 | .. | 600 |
| 2. தனியாருக்கு விவசாயக் கருவிகள் வழங்கியது | 1,500 | 1,000 | 1,498 | 1,500 | 990·75 |
| 3. பழக்கன்றுகள் விநியோகம். | 900 | 9,000 | 899 | .. | 487 |
| 4. செயல் விளக்கப் பாத்திகள் அமைக்க | 3,000 | 3,000 | 3,000 | 1,500 | 2,400 |
| 5. ஒன்றியங்களுக்கு விவசாய விசைக் கருவிகள் | 6,000 | .. | 500 | 2,500 | 298·70 |
| 6. விவசாயக் கால்நடைக் கண்காட்சிக்கு | 250 | 250 | 250 | 260 | 750 |
| 7. சிறுதானிய வீரிய வித்துக்கள் விநியோகம். | .. | .. | .. | 1,500 | 1,500 |

இவ்வொன்றியத்தில் கூடுதல் விவசாயக் கிடங்கு ஒன்று கட்டி முக்கப்பட்டுள்ளது. அதன் மதிப்பீடு ரூபாய் 25,000. மேற்கண்ட தொகை 1969-70-லிருந்து தமிழக அரசால் வழங்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

இவ்வொன்றியத்திலுள்ள பாசனக் கண்மாய் களைப் பராமரிக்கக் கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழக அரசு ரூபாய் 1,30,000 வரை வழங்கி உள்ளது.

1969-70 வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூபாய் 2½ இலட்சம் நிதி வழங்கப்பட்டு 13 சமுதாயக் கிணறுகள் வெட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேற்படித் திட்டத்தின் கீழ் 27 கால்வாய் மராமத்து வேலையும், 7 கண்மாய் மராமத்து வேலையும் மேற்கொள்ளப்பட்டன. மேற்படித் திட்டத்தில் 280 குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்திக் குடிநீர்ப் பற்றுக்குறையைப் போக்கத் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. அதோடு திருசங்குளம் என்னும் கிராமத்திற்கு ஒரு புதிய சாலை அமைத்துக் கொடுக்கப்பட்டது.

### கால்நடைப் பராமரிப்பு

கால் நடைப் பராமரிப்புத் திட்டத்தில் திருமங்கலத்தில் உள்ள கால் நடை மருத்துவ மனையைச் சுற்றி வேலி அமைத்தும், புதிதாகக் கிணறு ஒன்று வெட்டியும், வேலைகள் மேற்கொள்ளப் பட்டன.

**கிராமந்தோறும் பள்ளிக் கட்டடம்.**



மீன் வளர்ப்புத் திட்டத்தின்கீழ், கடந்த ஐந்தாண்டுகளில் மீன் குஞ்சுகளை வாங்கிக் குளங்களில் விடப்பட்டது. மேலும் எஸ். வலைய பட்டி, டி. புதுப்பட்டி, மேலக்கோட்டை, கரடிக்கல் ஆகிய கிராமங்களில் மீன் பண்ணைகளைப் புதுப்பிக்கும் வேலைகள் மேற்கொண்டு முடிக்கப்பட்டன.

| ஆண்டு | | வழங்கப்பட்ட மீன் குஞ்சுகள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1967–68 | .. | 8,000 |
| 1968–69 | .. .. | 15,500 |
| 1969–70 | .. .. | 10,000 |
| 1970–71 | .. .. | 18,000 |
| 1971–72 | .. .. | 33,500 |

வேலை வாய்ப்புத் திட்டம்

தீவிர வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 2,50,000 கடந்த இரு ஆண்டுகளில் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

புதிய சாலை போடுதல், சாலைகளை அகலப்படுத்தும் வேலைகள், கால்வாய் மராமத்து வேலைகள், குளம் மராமத்து வேலைகள் முதலியன மேற்கொள்ளப்பட்டு, அதன் மூலம் 850 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

சிரணி வேலைகள்

தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டுத் திட்டத்தின் கீழ் 1971–72-ஆம் ஆண்டில் ரூ. 8,000 அரசு மானியம் வழங்கப்பட்டு, அதைக் கொண்டு புதுமங்கலம் என்னும் கிராமத்தில் ஒரு புதிய பள்ளிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

சிரணித்திட்டத்தின் கீழ் சுமார் ரூ. 12,000 நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, அச்சம்பட்டி, அழகுசிறை ஆகிய இரு கிராமங்களில் பள்ளிக் கட்டடம் கட்டும் வேலைகளும் செங்குளம் கிராமத்தில் ஒரு கலையரங்கம் கட்டும் வேலையும், மேற்கொள்ளப்பட்டன.

வாடிப்பட்டியில் ஊராட்சி ஒன்றியம்.



### முருங்கைக்கு ஓர் ஊர்.

முருங்கை மரங்களைத் தோப்பாகப் பார்ப்பதே அரிது. ஆனால், கண்ணுக்கு எட்டிய தொலைவு வரை ஊர் முழுவதும் எந்தப் பக்கம் பார்த்தாலும் - எல்லா நிலங்களிலும் முருங்கை மரமாக உள்ள ஓர் ஊர் தமிழ் நாட்டிலுள்ளது.

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பரலமேடு என்ற ஊர் தான் அந்தப் பெருமைக்குரியது.

முருங்கைக்குப் பெயர் பெற்ற இந்த ஊரிலிருந்து குடுமியாமலை அண்ணா பண்ணைக்கு ஆயிரம் முருங்கைப் பதிகங்கள் அனுப்பவிருக்கிறார்கள்.

மகளிர் நலம்

மாதர் நலம், குழந்தைகள் நலம் என்ற திட்டத்தின்கீழ், தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் பல்வேறு இனங்களுக்கு நிதி அளித்து வருகிறது.

இவ்வொன்றியப் பகுதியில் 30 மகளிர் மன்றங்கள் நடத்தி வரப்படுகின்றன. கிராமப் புறப் பெண்களுக்கு, குழந்தைகள் வளர்ப்பு, குடும்பக் கட்டுப்பாடு, சமையல் செய்முறை விளக்கங்கள், காய்கறித் தோட்டங்கள் போடுதல், தையல் பயிற்சி அளித்தல், சிறு சேமிப்பு அறிவுரைகள், கோழி ஆடு மாடுகளை நல்ல முறையில் வளர்த்தல், சமூகக் கல்வி கற்பித்தல் போன்ற வேலைகளுக்கு மகளிர் மன்றங்களுக்கான மானியம் செலவிடப்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் செலவிட்ட தொகைகளின் விவரம் வருமாறு:—

| ஆண்டு | | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1967–68 | ... .. | 3,020·00 |
| 1968–69 | .. .... | 1,649·85 |
| 1969–70 | .. .. | 4,200·00 |
| 1970–71 | .. .. | 4,000·00 |
| 1971–72 | .. | 4,055·00 |

இவைபோக 1969–70 முதல் 1971–72 ஆம் ஆண்டு முடிய இவ்வொன்றியப் பகுதியில் 6 பாலர் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகின்றன. இவற்றில் 2½ வயது முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குக் கல்வி வழங்கப்பட்டு வருகின்றது. மேற்கண்ட பள்ளிகளுக்கு விளையாட்டுப் பொருள்கள், பாலர் சேவிகாக்களுக்கு ஊதியம் ஆகியவைகளுக்கு அரசு நிதி தந்துள்ளது. அவை பின் வருமாறு:—

| ஆண்டு | | | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1969–70 | .. | .. | 400 |
| 1970–71 | .. | .. | 384 |
| 1971–72 | .. | .. | 1,119 |

இவ்வாறு இவ்வொன்றியப் பகுதிகளில் பல்வேறு இனங்களுக்கென்று தனித்தனியே நிதி வழங்கியதன் மூலம் பற்பல பணிகள் நிறைவேறியுள்ளன.

# கிராம வேலை வாய்ப்பு முன்னோடித் திட்டம்

தேர்ந்தெடுக்கப் பட்ட மாவட்டங்களில், ஒருங்கிணைந்த பகுதிகளில் சில முன்னோடித் திட்டங்களை மேற்கொள்ள இந்திய அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி அப் பகுதியிலுள்ள பொருளாதார வாழ்க்கை அனைத்தையும் தழுவிய திட்டங்களை மேற்கொண்டால், அங்குள்ள 15 முதல் 59 வயது வரையிலான மக்கள், வேலை செய்ய முன்வரின், அவர்களுக்கு வேலையளிக்க வசதி ஏற்படுமென்பது இதன் உள்நோக்கமாகும். அதற்கேற்ப, இம் மாநிலத்திற்கென, ஒரு திட்டத்தை இந்திய அரசு அளித்துள்ளது. அத்திட்டம் தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள மங்களூர் வட்டாரத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்திற்கு, இந்திய அரசு மூன்றாண்டுக் காலத்திற்கு ஒதுக்கியுள்ள நிதி விவரம் வருமாறு :—

**1972–73**—ரூ. 10 இலட்சம்.

**1973–74**—ரூ. 15·79 இலட்சம்.

**1974–75**—ரூ. 20·57 இலட்சம்.

இத்திட்டத்திற்காகும் முழுச் செலவும் இந்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்படும். அலுவலர்களின் செலவிற்கென 5 சதவிகிதம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராம வேலைவாய்ப்பு முன்னோடித் தீவிரத் திட்டத்தின் வாயிலாகக் கிடைக்கும் நிதியினைப் பயன்படுத்தி, இதர துறைகளின் திட்டங்களையும், சமுதாய வளர்ச்சித் திட்டங்களையும் ஒன்றிணைத்து, மங்களூர் வட்டாரப் பகுதிக்குரிய வளர்ச்சித் திட்டத்தை உருவாக்கி, இவ்வட்டாரத்தை ஒரு முன்மாதிரி வட்டாரமாக உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சமுதாய வளர்ச்சித் திட்டத்திலும் பல்வேறு துறைகளின் திட்டத்திலும் கிடைக்கக் கூடிய நிதிகளை இணைத்து, 'ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா', வீட்டு வசதி வாரியம், ஆகியவற்றிடமிருந்து பெறவேண்டிய கடன்களையும் கூட்டி இந்திய அரசிடமிருந்து இத்திட்டத்திற்குக் கிடைக்கும் நிதியையும் உள்ளடக்கி, ஒரு திட்ட அறிக்கையைத் தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் உருவாக்கியுள்ளார். இவற்றையெல்லாம் கொண்டு மங்களூர் வட்டாரத்தை, ஒரு முன்மாதிரி வட்டாரமாகச் செய்து காட்ட இயலும். மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையின்படி, இத்திட்டத்திற்கு, மூன்றாண்டுக் காலத்தில் ரூ. 175·54 இலட்சம் முதலீடு செய்யப்படும். இத்தொகை கீழ்க்கண்டவை மூலம் திரட்டப்படும்.

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| (அ) கிராம வேலை வாய்ப்பு முன்னோடித் தீவிரத் திட்ட நிதி. | 44·21 |
| (ஆ) மங்களூர் ஊராட்சிஒன்றியத்திற்கு அரசு அளிக்கும்மானியமும், பொது நிதிகளிலிருந்து ஊராட்சி ஒன்றியம் அளிக்கும் நன்கொடையும். | 30·84 |
| (இ) கடன்களையும் சேர்த்து அரசின் இதரத் துறைகளில் நிதிகள். | 24·60 |
| (ஈ) 'ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா' போன்ற வெளியாரிடமிருந்து கிடைக்கும் கடன் | 75·89 |
| | 175·54 |

1972–73-ஆம் ஆண்டுத் தொடக்கம் மூன்றாண்டுகளுக்கு ரூ. 175·54 இலட்ச மொத்தச் செலவில் இத்திட்டத்தை நிறைவேற்ற, திட்ட அறிக்கைக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இவ்வட்டாரத்தில், இத்திட்டங்களை வெற்றியுடன் நிறைவேற்றுவதற்கு தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்புள்ளவராக்கப்பட்டுள்ளார். இத்திட்டத்தின் வெற்றியில் ஊர்ப்புறங்களின் புதிய தோற்றமே உருவாக இருக்கிறது. வருங்காலத்தில் ஊர்ப்புறங்களை வளர்ச்சியடையச் செய்தற்கு இஃதொரு முன்மாதிரியாகவும் விளங்கும். இங்கு நடைபெறும் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, இத்திட்டம் இதர பகுதிகளுக்கும் விரிவாக்கப்படும். இப்பகுதியின் தேவைகளை முதன் முதலாக நிறைவேற்றுவதில் இவ்வரசு பேரவாக் கொண்டுள்ளதென்பதையும், அதே தருணத்தில் ஊர்ப்புறங்களில் மலிந்துள்ள வேலையில்லா நிலைமைக்குத் தீர்வு காண மண்டல வளர்ச்சியின் வாயிலாக நிலையானதொரு திட்டத்தை உருவாக்கவும் முனைந்துள்ளது தெரியவரும்.

**அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் இறைவைப் பாசனக் கிணற்றுக்காகத் துளை போடுகிறார்கள்.**






## 53. வாய்மை வழுவாமை மாண்பு

ஈன்றாள் பசித்தாள் ; இனியமகன் பித்தனானான் ;
ஊன்கொடுத்த உன்மனைவி ஓய்ந்துவிட்டாள்—வான்குறளின்
வாய்ப்பொருளாய் வந்தவனே ! வாழ்வே முடிந்தாலும்,
வாய்மை வழுவாமை மாண்பு.

—ஐ. திருவருட்பாவை, பி. கே. புரம்.

மண்அடுப்பில் பூனை வசித்தாலும், கைப்பிடித்த
பெண்மணியே நெஞ்சைப் பிழிந்தாலும் ;—கண்கண்ட
தாய்வெறுத்துத் தூற்றினும் ; தன்நெஞ்சின் பொன்முடியாம்
வாய்மை வழுவாமை மாண்பு.

—ந. செனார்த்தனன், அரக்கோணம்.

பொய்யே முதலாப் புறங்கூறும் புல்லர்கள்
உய்யும் பொழுதோ ஒருசிறிதாம்—தையலே !
தேயத்தே எஞ்ஞான்றும் தீதில்லா வாழ்வளிக்கும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—சி. மு. அரசு, களக்காடு.

எள்ளாமை, நன்மைகளைத் தள்ளாமை, இன்பத்தில்
துள்ளாமை, என்றுந் துவளாமை—கள்ளாமை
தூய்மை தவறாமை, துன்பில் நெகிழாமை,
வாய்மை வழுவாமை மாண்பு.

—வேலன், திருவெண்ணெய்நல்லூர்.

நிலவுக் கழகு நெகிழ்ந்திடும் தன்மை
மலருக் கழகு மணமே—நிலவுலகில்
வாய்மலர் செப்பும் மனிதர் அனைவருக்கும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—ச. அருணன், புதுவை–3.

தாயார் இரந்துண்ணத் தாரம் சினந்துரைக்கக்
காய்பசியால் பிள்ளை கதறியழ—ஆயினுமென் ?
தூய்மை தவறாமல் தொண்டுசெயும் நல்லார்க்கு
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் க. முனிசாமி, விழுப்புரம்.

மக்கள் அரசாட்சி மாண்பாய் இயங்கிவரத்
தக்கதுணை செய்யும் தனிக்கடமை—மிக்கதனால்
சேய்மை நிலைகூறும் செய்தித்தாள் நல்குவோர்
வாய்மை வழுவாமை மாண்பு.

—இளங்கோ, ஆலங்குளம்.

சொன்னதை யெந்நாளும் சோர்வின்றிச் செய்திடும்
தன்னலம் பாராத் தமிழரசை—என்னெஞ்சே !
தாய்போன்று காப்போம் தருணத்தில் என்கின்ற
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் வெ. குமாரசாமி, கோரிக்காவு.

தெள்ளிய நீர்கொண்டு தேக மதைக்கழுவின்
கொள்ளரிய இன்பநலம் கூடுதல்போல்—உள்ளமதும்
தூய்மை பெறவேண்டின் தொல்லுலகீர் என்றென்றும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் செந்தமிழ்க்கிழார், குமாரபாளையம்.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :—

செல்வி. ஐ. திருவருட்பாவை,
மே/பா ஐசக் (ஆசிரியர்)
பி. கே. புரம், கீ. வ. குப்பம் (அஞ்சல்)
குடியேற்றம் (வ. ஆ. மாவட்டம்).

# வெண்பாப் போட்டி

சோதனைகள் வாழ்வில் தொடர்ச்சியாய் வந்திடினும்
வேதனையால் உள்ளம் மெலிந்தாலும்—மேதினியில்
தூய்மையாய் வாழுதற்குத் தொல்லைகள் ஏற்படினும்
வாய்மை வழுவாமை பாண்பு.

—விமலாசெல்வன், தஞ்சை.

எம்மாப் பணியேனும் எந்தமிழர் நாட்டிற்கு
நம்மால் இயன்றவரை நன்றாற்றிச்—செம்மைசேர்
தாய்மொழியைப் பேணித் தலைமகனும் வள்ளுவர்சொல்
வாய்மை வழுவாமை மாண்பு.

—மெய். அருண்மொழியன், கலையனூர்.

இரந்துண்டு வாழும் இழிநிலையால், யாக்கை
உரங்காணா நாற்றாய் உருவில்—நரம்பாகிக்
காய்ந்தே உயிர்பிரியும் காலத்தும், நெஞ்சேநீ
வாய்மை வழுவாமை மாண்பு.

—எழில்வேந்தன், சென்னை 2-8.

கொய்யும் மலரனைத்தும் கூந்தல் மணப்பதில்லை,
செய்யும் செயலனைத்தும் சீர்மல்கி—உய்வதில்லை
தூய்மை நலங்காத்துத் துன்பம் மிகவரினும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—ஆர். கலைச்செல்வி, அம்மனூர்.

மொட்டைப் பனைமரமாய் மொய்க்கின்ற துன்பமெனும்
குட்டையிலே வீழ்ந்து குலைந்தாலும்—எட்டியாம்
காய்போல என்றும் கசப்பாகும் பொய்மறந்து
வாய்மை வழுவாமை மாண்பு.

—கா. வாலிதாசன், பச்சையப்பன் கல்லூரி.

வாட்டும் துயர்பலவும் வந்தாலும் வாழ்நாளில்
ஈட்டும் பொருளை இழந்தாலும்—ஊட்டுகின்ற
தாய்பசிக்கக் கண்டாலும் தன்னுடலைத் தீய்த்தாலும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—சீ. புனிதவதி, கீழ்நாயகன்பாளையம்.

அன்பே விளக்காய் அறமே திரியாக
இன்பமெனும் நெய்யால் எரியவிட்டு—மன்பதையில்
தூய்மை நெறிநின்று தொண்டாற்றி இல்லறத்தில்
வாய்மை வழுவாமை மாண்பு.

—அரங்க. முத்துமணி, கீழப்பழுவூர்.

நாளும் நலம்பெருக, நல்லார் இசைபெருக,
கேளும் பெருகக் கிளிமொழியே !—நீளுலகில்
தாய்மை நிறையுடனே தாளாற்றி எக்காலும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—எஸ். பானுமதி, வேப்பூர்.

மின்னலது மின்னுவது மேதினியில் சின்னேரம்
இன்னலுறு பொய்மை இனிதாகும்—புன்னகையாய் !
நோய்மையில் லாமலே நூறாண்டு வாழ்வளிக்கும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் ந. புவியரசு, களக்காடு.

உள்ளம் தளராமை ஊக்கம் ; உலைவிடத்தும்
கள்ளம் கலவாமை கற்பொழுக்கம் ;—எள்ளளவும்
தூய்மை குறையாமை துப்புரவு ; தொல்லுலகில்
வாய்மை வழுவாமை மாண்பு.

—செ. ஜெய்லானி, நாகர்கோவில.

நன்றியைக் கொல்லாமை நல்லோரை நீங்காமை
கொண்டநற் கொள்கையிலே கோடாமை—என்றென்றும்
ஆய்வளையாய் ! இந்த அவனியே தான்பெறினும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் வள்ளிவேலன், நாயக்கனூர.

பட்டா ! பசுமைப் புரட்சி ! தொழுநோயர்
கட்டடங் கள்! கடன் ! கண்ணொளி !—விட்டவை
ஆயிரம் இந்த அரசுமேல் பொய்கோடி !
வாய்மை வழுவாமை மாண்பு.

—மலைமா. ஆறுமுகம், மணிமங்கலம்.

கற்றோர், அறிவதனைக் கற்பிப்போர், நல்வழியில்
நிற்போர், குடிநாடி நின்றாள்வோர் ;—நற்பெண்ணை
வாய்மணக்கக் காதலித்து வாக்களித்தோர், என்றென்றும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—இலக்கியன், ஆலங்காயம்.

பாதைமாற வேண்டாம் பசிவறுமை வாட்டிடினும் !
தீதைத் துணிந்தெதிர் ! தூளாக்கு—வேதனையை !
ஏய்த்துப் பிழைக்காதே ! ஏற்றம் பெறுதற்கு
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

கொஞ்சி மகிழ்ந்த குடும்பம் நிலைகுலைந்தே
எஞ்சும் வறுமை எக்களிக்க—மஞ்சுசூழ்
தேய்பிறையும் ஓர்நாள் திரண்டநிலா ஆகுமென
வாய்மை வழுவாமை மாண்பு.

—து. ம. இராமசாமி, துடியலூர்.

சாதிக் கொடுமையால் சாகும் புழுவான
நாதியற்ற ஏழைமக்கள் நன்மைபெற—மேதினியில்
தூய்மை வழிநின்ற தூமணியாம் அண்ணலவர்
வாய்மை வழுவாமை மாண்பு.

—பாரதி சங்குப்பிள்ளை, அமராவதி நகர்.

# வெண்பாப் போட்டி

ஏற்ற மழிந்தாலும் இல்லாமை சூழ்ந்தாலும்
தூற்று மிழிச்சொல் தொடர்ந்தாலும்—கூற்றென
மாய்க்கின்ற துன்பம் மழையாய்ப் பொழிந்தாலும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

இன்றோ ? பிறகோ ? இனிச்சிறிது நாள்கழித்தோ ?
என்றோ ? ஒருநாள் இறப்பதுயிர்—நன்றாக
ஆய்மின் புகழோ அழியா துயிரறினும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—அரு. கிருட்டிணன், கணியூர்.

ஊரார் மறந்தாலும் உற்றார் துறந்தாலும்
சீரான வாழ்வு சிதைந்தாலும்—சேராது
தூய்மை குலையாமல் தொல்லுலகில் வாழ்வோர்க்கு
வாய்மை வழுவாமை மாண்பு.

—பெ. தியாகராசன், குன்னம்.

உண்மையே தெய்வமென்ற ஒப்பில்லா வாழ்க்கையில்
நன்மையே நாளும்செய் திட்டநல்—அண்ணலின்
தூய்மை நெறிநின்று தொண்டாற் றிடும்போது ;
வாய்மை வழுவாமை மாண்பு.

—கவிதைப்பித்தன், உளுந்தூர்ப்பேட்டை.

ஆய்மயிலும் தோற்குமெழில் ஆரணங்கே யுன்னழகு
போய்மறையும் ஓர்காலம் ! போற்றிடுக—வாய்மொழியில்
தாய்மை வளர்ப்பில் தன்னலமில் நல்லறத்தில்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் வி. துரைசாமி, தேவத்தூர்.

எச்செயலைச் செய்திடினும் எத்துணை மேம்படினும்
பச்சைக் கிளியே ! பதறாமல் — அச்செயலில்
தூய்மைக் குணம்நாடித் தொல்லுலகில் எஞ்ஞான்றும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—முத்தமிழ்த்தாசன், சிறுகூடல்பட்டி.

தாயை வணங்கவேண்டும் தண்டமிழைப் போற்றவேண்டும்
நோயை ஒடுக்கவேண்டும் நொந்தோரைச்—சேயைப்போல்
தாய்மை உணர்வுடனே தாம்காத்துச் செல்லுகின்ற
வாய்மை வழுவாமை மாண்பு.

—குமாரி கோ. தேன்மொழி, இராயபுரம்.

பதவிஉயர் காலத்தில் பட்டமுறு நாளில்
உதவிபிறர்க் காற்றும் பொழுதில்—மதியொளியே !
காய்தல் உவத்தல் அகற்றிக் கணிப்பதில்
வாய்மை வழுவாமை மாண்பு.

—வை. வைரவன், சிறுகூடல்பட்டி.

நெஞ்சிற் பிழையின்றி நேர்மையுடன் வாழுங்கால்
அஞ்சி இருத்தல் அழகாமோ ?—கொஞ்சமும்
தூய்மை அறியாமல் தூற்றுவரே யானாலும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—அ. காந்தி, தேவத்தூர்.

ஏழ்மை அடைந்தாலும் ஏற்றத்தைப் பெற்றாலும்
வாழ்விலே என்றும் வழுவாது—தாழ்வில்லா
தூய்நெறி பின்பற்றித் தொல்லுலகில் வாழுங்கால்
வாய்மை வழுவாமை மாண்பு.

—ப. குப்புசாமி, பொன்மலை.

பெற்றெடுத்துத் தான்வளர்த்துப் பேராற்றல் ஈந்துநிதம்
உற்றதுணை யாகி உயர்ந்திருக்கும்—நற்கருணைத்
தாய்மைக்கே இன்னல் தருமென்ற போதிலும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—கண்ணாகாந்தி, தாராபுரம்.

கோடிப்பொன் அள்ளிக் கொடுத்தாலும், தம்நண்பர்
ஊடிக் கொடுநஞ்சை யூட்டிடினும்—ஈடில்லாத்
தாய்தந்தை நல்லுயிரைத் தாம்காக்க நேர்ந்தாலும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் ந. கருணாநிதி, வங்கனூர்.

காட்டிப் பிழையாமை கண்ணியத்தைக் கொல்லாமை
ஏட்டைப் புரட்டாமை ஏசாமை—கூட்டுறவு
தேய்வடையச் செய்யாமை தீவைக்கத் தூண்டாமை
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் மு. சிக்கந்தர், பழனி.

நெஞ்சே உடைந்து நிலைதளர்ந்து போனாலும்
வஞ்சகரே வாழ்விழக்கச் செய்தாலும்—வஞ்சியே !
தாய்நாடு போற்றும் தலையாய நற்பண்பாம்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் இரெ. சுப்பையன், கள்ளிமந்தயம்.

பேசநா வாராத பித்தமனங் கொண்டோரின்
நாசத்தால் அல்லலுறும் நல்லோரின்—மாசற்ற
தூய்மை நிறைவாழ்வில் துன்பமே வந்திடினும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—கே. முருகாண்டி, அனுப்பானடி.

மாற்றானைக் கண்டால் மதிக்கின்ற நெஞ்சோடு
தூற்றாத கொள்கைத் துணிவோடும்—போற்றுகின்ற
தூய்மை அறம்மூன்றும் சொல்லிவைத்த வள்ளுவரின்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் க. கோபண்ணன், வரகனேரி.

# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!



## எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

## • சேமிப்புப் பழக்கமே எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.




- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு



# சிற்றூரிலும் சிறந்து வரும் வீட்டு வசதித் திட்டம்

அன்றாட வாழ்க்கையில் வீட்டுப் பிரச்சினை மிக இன்றியமையாத ஒன்று என்பதை நாமறிவோம். இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அரும்பாடுபட்டு வருவதைத் தமிழகம் நன்கறியும்.

• வீட்டு வசதி என்றதும், அது நகரத்தில் உள்ளவர்களுக்கு மட்டுந்தான் என்ற எண்ணத்தை அறவே போக்கி, இன்று கிராமங்களிலும், கிராமப்புறங்களிலும்கூட வீட்டு வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கான 'கிராம வீட்டு வசதித் திட்டம்' 'கிராமப்புற வீட்டு வசதித் திட்டம்' ஆகியவை செயற்கரிய செயல்களைச் செய்து வருகின்றன.

### கிராம வீட்டு வசதித் திட்டம்

தமிழ்நாட்டில் சமுதாய வளர்ச்சிப் பகுதியிலும், தேசிய வளர்ச்சிப் பணிப் பகுதியிலும் உள்ள தெரிந்தெடுத்த கிராமங்களின் வளர்ச்சிக்கான இத் திட்டம் மாநில அரசின் வேலைத் திட்டமாகும் ''தன்னுதவி'' அடிப்படையில், தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளக் கிராமவாசிகளை ஊக்குவிப்பதற்கு ரூ. 3,000-க்கு மிகாமல் தற்போது ரூ. 4,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது, மூன்று தவணைகளில் கடன் வழங்கப்படுகிறது.

அவ்வாறு கடன் வழங்கப்படும் நபர்கள் சொந்த நிலம் வைத்திருப்பதோடு, கடன் தொகையை வட்டியுடன் இருபது சம ஆண்டுத் தவணைகளில் திருப்பித்தரும் திறனுடையவராகவும் இருக்க வேண்டும். வீட்டிற்கு ரூ. 4,000 கடன் தொகையானது கட்டடத்திற்காகும் மதிப்பீட்டுச் செலவில், 80 சத வீதமாகும். எஞ்சிய 20 சதவீதம் பயன் துய்ப்பவர்களால் உழைப்பு, உள்ளூரில் கிடைக்கும் பொருள்கள், பணியின்போது ஏற்படும் சேமிப்பு ஆகியவற்றின் மூலம் கொடுக்கப்பட வேண்டும். ''தன்னுதவி'' அடிப்படையில் உதவி பெற்றுக் கட்டப்பட்ட வீடு, இருபது ஆண்டுகளில் அவருக்குத் தங்குமிடமாகவும், சொத்தாகவும் ஆகின்றது.

• தமிழ்நாட்டில் 15,000 கிராமங்களுக்கு மேல் உள்ளன. 223 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1,640 கிராமங்களுக்குத் தனிச்சிறப்பு வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்னள. இத் திட்டம் மக்களால் பெரிதும் விரும்பி வரவேற்கப்படுகிறது. இத்திட்டத்தை மேலும் பல கிராமங்களில் நிறைவேற்ற வேண்டும் எனக் கிராம மக்களிடமிருந்து ஏராளமான விண்ணப்பங்கள் வந்த வண்ணம் உள்ளன.

கிராம வீட்டு வசதித் திட்டத்திற்காக, அரசு, தமிழ் நாடு சிறப்பு நல நிதியிலிருந்து ரூ. 50 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இத்தொகை, 1972–73-லும், 1973–74-லும் செலவிடப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த இரண்டு ஆண்டுகளிலும் எதிர்பார்க்கப்படும் செலவினம் முறையே ரூ. 2 இலட்சமும் ரூ. 48 இலட்சமும் ஆகும். இந்த நிதி ஒதுக்கீட்டைக் கொண்டு 1,100 வீடுகள் கட்டப்படும்.

வீடு கட்டப்படும் கிராமங்களில் கிராம வாசிகளுக்குத் தெருக்கள், சாக்கடை முதலிய வசதிகளுக்கும் இத் திட்டம் வகை செய்கின்றது. இதற்கான கிராமம் ஒன்றுக்கு ரூ. 10,000க்கு மிகாமல் நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது. தெருக்கள், சாக்கடைகள், இவற்றையமைக்க 1973–74-க்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 0·50 இலட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

### விடுதலைப்போர் வீரர்கள் ஓய்வூதியம்

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் 1966-ல் கொண்டுவரப்பட்டது; 1966-ஆம் ஆண்டு 5 பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது. அதன்பிறகு, 1–1–1 67 முதல் 21–3–1973 வரையில் உள்ள காலத்தில் ஓய்வூதியம் பெறும் விடுதலை வீரர்களின் எண்ணிக்கை 7,673 ஆக உயர்ந்திருக்கிறது.

### கிராம வீட்டு வசதித் திட்டச் சாதனைகள்

இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகள் 2,053. இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களில் பயன்படுத்தப்பட்ட தொகை ரூ. 34·91 இலட்சம். 1966–67-லிருந்து 1968–69 வரை ஆண்டுத் திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகள் 472. 1966–67-லிருந்து 1968–69 வரை செலவிடப்பட்ட தொகை ரூ.29·73 இலட்சம். நான்காவது திட்டத்துக்கான நிதி ஒதுக்கம் ரூ. 50 இலட்சம். நான்காவது திட்ட இலக்கு (வீடுகள்) 1,500. 1969–70-ல் கட்டப்பட்ட வீடுகள் 218. 1969–70-ல் செலவிடப்பட்ட தொகை ரூ.7·75 இலட்சம். 1970–71-ல் கட்டப்பட்ட வீடுகள் 240. 1970–71-ல் செலவிடப் பட்ட தொகை ரூ. 10·93 இலட்சம். 1971–72-ல் செலவிடப்பட்ட தொகை ரூ. 15·38 இலட்சம். 1971–72-ல் கட்டப்பட்டவீடுகள் 309. 1972–73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 16·50 இலட்சம். 1972–73-ல் (1972 டிசம்பர் வரை) செலவிடப்பட்ட தொகை ரூ. 10·05 இலட்சம். 1972–73-ஆம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு வீடுகள் 350. 1972–73-ல் (1972 டிசம்பர் வரை) கட்டப்பட்ட வீடுகள் 257. 1973–74 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 28·99 இலட்சம். 1973–74-ஆம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு (வீடுகள்) 600.

### கிராமப்புற வீட்டு வசதித் திட்டம்

இத்திட்டம் 1950-ஆம் ஆண்டிலிருந்தே நிறைவேற்றப்படுகிறது. கிராமப்புறச் சூழல் நிலவுகிற பெரிய, சிறிய ஊராட்சிகளில் வீடுகள் கட்டுவதற்குக் கடன் வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கூட்டுறவுப் பிரிவின் மூலம் இந்தத் திட்டம் நிறை

வேற்றப்படுகிறது. திட்டத்தின் கீழ் வராத மாநில நிதிகளிலிருந்து இத் திட்டத்திற்கான நிதி வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ், கட்டுமானச் செலவில் 80 சதவிகிதம் வரையில் (செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தைப் போல் நான்கு மடங்குத் தொகைக்கு இது மேற்படக் கூடாது) ரூ. 10,000 கடன் மேல் வரம்பிற்குட்பட்டு, கடன்கள் வழங்கப்படுகின்றன. வீட்டிற்கான செலவு மதிப்பீடு ரூ. 15,000-க்கு மேற்படக் கூடாது. ரூ. 10,000 கடன் மேல் வரம்பிற்குட்பட்டு கடனைப் போல் இரு மடங்கு மதிப்புடைய வில்லங்கமற்ற நிலங்களைச் சொந்தமாகக் கொடுக்கும் நேர்வுகளில், பங்கு மூலதனத்தைப் போல் ஏழு மடங்குத் தொகை கடனுதவியாக அளிக்கப்பட்டுள்ளது. அதற்காகத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 10 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### கிராமப்புற வீட்டு வசதித் திட்டச் சாதனைகள்

முதல் மூன்று திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகள் 906. முதல் மூன்று திட்டக் காலங்களில் பயன்படுத்தப்பட்ட தொகை ரூ. 56·87 இலட்சம். 1966–67-லிருந்து 1968–69 வரை கட்டப்பட்ட வீடுகள் 324. 1966–67-லிருந்து 1968–69 வரை செலவிடப்பட்ட தொகை ரூ. 26·16 இலட்சம். 1969–70-இல் கட்டப்பட்ட வீடுகள் 153. 1969–70-ல் செலவிடப்பட்ட தொகை ரூ. 10·41 இலட்சம். 1970–71-ல் கட்டப்பட்ட வீடுகள் 140. 1970–71-ல் செலவிடப்பட்ட தொகை ரூ. 10·27 இலட்சம். 1971–72-இல் செலவிடப்பட்ட தொகை ரூ. 10 இலட்சம். 1971-72-ல் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 150. 1972–73-ஆம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு ரூ. 10 இலட்சம். 1972–73-ல் செலவிடப்பட்ட தொகை (1972 டிசம்பர் முடிய) ரூபாய் 4·05 இலட்சம். 1972–73-ஆம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு 120 வீடுகள். 1972–73-ல் கட்டப்பட்ட வீடுகள் (1972 டிசம்பர் வரை) 80. 1973–74-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 10 இலட்சம். 1973–74-க்கான குறிக்கோள் அளவு 120 வீடுகள்.

---

## வெள்ளிவிழாச் சீரூர் தமிழ்நாட்டில் திட்டம்

இந்தியா முழுவதிலும் 15—3—1972 முதல் 14—3—1973 வரையிலான ஓராண்டுக் காலத்திற்கு, இந்திய நாட்டின் விடுதலை வெள்ளி விழா கொண்டாடப்படுகிறது. இவ்வெள்ளி விழாவிற்கு ஏற்றவாறு நிலையான சாதனைகளை உருவாக்குவதற்கு, ஒவ்வொரு வட்டத்திலும் ஓர் ஊர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று மாநில அரசுகளை, இந்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. 'வெள்ளி விழாச் சீரூர்' எனத் தேர்ந்தெடுக்கப்படும் ஊர்களில் நிறைவேற்றப்படுவதற்குரிய திட்டங்களுக்குத் தேவையான நிதிகளை, மாநிலத் துறைகளைச் சார்ந்த திட்ட, திட்டத்திலடங்காத வேலைத் திட்டங்கள், மைய அரசுத் திட்டங்கள், மைய அரசால் ஊக்குவிக்கப்படும் திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் நிதிகளைத் திரட்டிப் பயன்படுத்த வேண்டுமென இந்திய அரசு கூறியுள்ளது. மேற்கண்ட முறையில் திரட்டப்படும் நிதிகளைக் குடிநீர் வழங்கல் திட்டங்கள், நலிவுற்ற மக்களுக்குச் சிறந்த வீட்டு வசதி, பள்ளிக் கூடங்கள், கிணறுகள் போன்றவற்றிற்கு ஒதுக்கலாமென்றும் மைய அரசு கூறியுள்ளது. அதற்கேற்ப, ஒவ்வொரு வட்டாரத்திலும், ஓர் ஊரைத் தேர்ந்தெடுத்து, அவ்வூர்களில் நிலையான நன்மைகளை உருவாக்க வேண்டுமென்றும், அவற்றிற்கென மாநில, மைய அரசுத் திட்டங்கள் மூலம் கிடைக்கும் நிதிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாமென்றும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திலும் ஓர் ஊர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவேயுள்ள திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதிகள் அத்திட்டங்களுக்கென்றே செலவழிக்கப்பட்டுவிட்டதென்றும் தற்போது தெரிந்தெடுக்கப்பட்டுள்ள ஊர்களில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களுக்கு மேலும் நிதிகள் தேவைப்படுமென்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அரசின் கவனத்திற்குக் கொணர்ந்துள்ளனர். இதற்கெனத் தேவைப்படும் நிதியளவைப் பற்றியும் அவர்கள் கூறியுள்ளனர். எனவே, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஊர்களில் திட்டங்களை நிறைவேற்றுவதற்குரிய நிதிகளை அளிக்கும்படி, இந்திய அரசை, இவ்வரசு கேட்டுக் கொண்டுள்ளது.

திட்டம் முன்னேற்றமடையாத காரணத்தால், இந்திய அரசிடமிருந்து கிடைக்கக்கூடிய நிதி ஒதுக்கீட்டை, எதிர்நோக்கி நடப்பாண்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதிகளில் எஞ்சியுள்ள நிதிகளையும், 1973–74-ஆம் ஆண்டிற்கு நிதிநிலை மதிப்பீட்டில் கிடைக்கக்கூடிய ஒதுக்கீட்டையும் பயன்படுத்தி, வெள்ளிவிழாச் சீரூர்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளை முடிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கூறப்பட்டுள்ளது.

ரூபாய் 3 இலட்சத்திற்கு மேலும், மிகுதியான நிதிகளைப் பெற்றுள்ள ஊராட்சி ஒன்றியங்கள், அந்நிதிகளைப் பயன்படுத்தி, வெள்ளிவிழா சீரூர்களில் பள்ளிக் கட்டடங்கள், சாலைகள் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இச்செலவு ஒரு வட்டாரத்திற்கு ரூ. 50,000-க்கு மேற்படக் கூடாது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள முன்னுரையை ஒரு நினைவுக் கல்லில் செதுக்கி ஒவ்வொரு வட்டாரத்திலுள்ள ஒரு பள்ளியில் அமைக்க வேண்டுமென்றும் இந்திய அரசு கூறியுள்ளது. ஒவ்வொரு நினைவுக் கல்லிற்கும் ரூபாய் 15,000க்கு மேற்படாது ஏற்படும் செலவை ஏற்றுக் கொள்ளவும் இந்திய அரசு ஒத்துக் கொண்டுள்ளது. ஊரக வளர்ச்சி இயக்குநரிடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பள்ளிகளில் இந்நினைவுக் கற்கள் பொருத்தப்படும்.

14—8—1973 அன்று 374 நினைவுக்கற்கள் நிறுவப்பட்டுவிடும்.

# மதுரை மாவட்டத்தில் மறுவாழ்வு இல்லம்




மதுரை மாவட்டத்தில் புதுப்பட்டியில் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம் கட்டப்பட்டு வருகிறது. இந்த இல்லம் கட்டுவதற்காக அரசு அளித்துள்ள மொத்தத் தொகை ரூ. 10.20 இலட்சம்.

இத்திட்டத்தின் கீழ் 4 தனிக் கட்டடங்கள் கட்டப்படும். ஓர் மாடியோடு இந்த நான்கு கட்டடங்களும் கட்டப்படும். இதில் கீழ்த்தளத்தில், ஒரு அறைக்கு இரண்டுபேர் வீதம் 32 அறைகளில் 64 பேர்களாக, நான்கு கட்டடங்களிலும் 256 பேர் தங்கலாம். மாடியில் ஒரு கட்டடத்தில் 62 பேர் விதம் 4 மாடிகளிலும் 248 பேர் தங்கலாம். ஆக, இந்த இல்லத்தில் 504 தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வு அளிக்கப்படும். இந்த நான்கு கட்டடங்களில் உள்ளவர்களுக்கும் பொதுவாகக் குளியல் அறைகளையும், கழிப்பறைகளையும் கொண்ட தனிக் கட்டடம் ஒன்றும் கட்டப்படவிருக்கிறது.

இதைத் தவிர, நிருவாகத்திற்கும், மருத்துவத்திற்கும் சேர்த்து ஒரு தனிக் கட்டடம் கட்டப்படும். சமையலுக்குத் தனி இடமும், வேலை செய்வதற்கு இரண்டு தொழிற்கூடங்களும் கட்டப்படும். மேலும், இல்லக் கண்காணிப்பாளருக்கும், இல்ல மருத்துவ அதிகாரிகளுக்கும், மருத்துவ உதவியாளர்கள் இருவருக்கும், கடைநிலை ஊழியர்களுக்கும் தங்கும் இல்லங்களும் கட்டப்படும். கட்டட வேலைகள் துவக்கப்பட்டுத் தொடர்ந்து நடந்து வருகின்றன.

## இந்தியாவில் சுற்றுலா

1972-ஆம் ஆண்டில் இந்தியாவைச் சுற்றிப்பார்க்கப் பல்வேறு நாடுகளிலிருந்து மொத்தம் 3 இலட்சத்து 42 ஆயிரத்து 950 சுற்றுலாப் பயணிகள் இந்தியாவுக்கு வந்தனர். இதற்கு முந்தைய ஆண்டைவிட இந்த எண்ணிக்கை 14 சதவிகிதம் அதிகம் ஆகும்.

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, இதேபோன்று அதிகரித்து வந்தால், 1978-ஆம் ஆண்டில் இந்தியாவைச் சுற்றிப் பார்க்க வரும் வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை 8 இலட்சமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுற்றுலாப் பயணிகளின் ஆர்வத்தைத் தூண்டவல்ல இந்தியாவிலுள்ள பல முக்கியமான இடங்களைப் பற்றி எடுத்துக் கூறும் விளக்கப்படம் ஒன்று தற்போது வெளிநாடுகளில் திரையிடப்படுகிறது. இதனால் இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

நடுத்தர வருவாய் குறைவான வருவாய் உடைய சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்க இடவசதி அளிக்கும் பொருட்டு, வனவிலங்குப் புகலிடங்களில் ஓய்வு விடுதிகளும், சுற்றுலா மாளிகைகளும், இளைஞர் விடுதிகளும் பல்வேறு மாநிலங்களில் இருக்கின்றன.

# நல்லது கேட்கின் நலமுறச் சொல்வோம்!

இந்தியாவில் பசுமைப் புரட்சியில் தமிழகத்திற்கு முதலிடம்

எல்லா
மாநிலங்களுக்கும்
வழிகாட்டியாக அமைந்துள்ள
**மாநிலத் திட்டக் குழுவின் பணிகள்**

எல்லாச்
சிற்றூர்களுக்கும்
**சாலை**
இணைப்புகள்!

இவைகளை உருவாக்கும் நன்மையினும் பெரிது நாம் அமைத்திடும் அளவான குடும்பமே!

திட்டமிட்ட குடும்பமே நாட்டின் நலம் வளர்க்கும்!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
**இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!**

குடும்ப நலத்துறை, தமிழ் நாடு அரசு

தமிழரசு

# முன்னோடி நல்வாழ்வு நிலைய அறிமுகமும் முனைப்பு இயக்க நிறைவும்

எஸ்.முத்துராமலிங்கம்

தமிழ் வளர்த்த முச்சங்கங்களின் நினைவு—இளங்கோவடிகள் தந்த சிலப்பதிகாரம் பற்றிய எண்ணம் — பாண்டியன் நெடுஞ்செழியனின் கோல்கோணா ஆட்சிமுறை — அன்னை அங்கயற்கண்ணி ஆலயத்தின் தோற்றம்-தமிழ் வளர்த்த வெளிநாட்டுப் பெரியார்களான இராபர்ட் நொபிலி, வீரமா முனிவர் என்று அழைக்கப்பட்ட ஆன்ரேர் பெஸ்கி ஆகியோரின் நினைவு, என்ற இன்னோரன்ன காட்சிகள் மதுரை பற்றிய எண்ணம் ஏற்பட்டவுடன் உள்ளத்தில் நிழலாடுகின்ற காட்சிகளாகும். இவற்றுடன் இன்னும் எத்தனையோ சிறப்புக்களுக் குரிய மதுரை, மாநகராட்சியாய் இருப்பதோடு, மாவட்டத்தின் தலை நகராய் விளங்குகிறது. இராமநாதபுர மாவட்டத்தின் தலை நகரும் மதுரைதான் என்று சொல்லத்தக்க அளவுக்கு அம் மாவட்டத்தின் தலைமை அலுவலகங்கள் பல, மதுரையிலே இயங்கி வருகின்றன. அண்மைக்காலத்தில் தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டப்பணிகளால் மதுரை மாவட்டம் முன்னேறியுள்ளது.

வீரிய விதைகள் வழங்குதல், உரவினியோகம் ஆகியவற்றின் மூலம் விவசாயத்தில் புரட்சி உண்டாகியிருக்கிறது. மதுரையிலே உள்ள அரசு பால் பண்ணை, மக்களுக்குத் தட்டுப்பாடு ஏதுமின்றிப் பால் கிடைக்க வழிவகை செய்து வருகிறது. குடிசை மாற்று வாரியப் பணிகள், குடிநீர் வடிகால் திட்டப் பணிகள், இலவசக் கண்சிகிச்சை முகாம், பிச்சைக் காரர் மறுவாழ்வு இல்லம் தோற்றுவித்தல் போன்ற தமிழக அரசின் சமுதாய மேம்பாட்டுப் பணிகளால் மதுரை மாவட்டம் நற்பலன் அடைந்து வருகிறது. தொழில் துறையிலும் உரிய வளர்ச்சியடைந்து வருகிறது இந்த மாவட்டம் என்பதற்குக் கப்பலூருக்கும் திருமங்கலத்திற்கும் இடையில், வெட்டவெளியாய்க் கிடந்த இடங்களில் ஏற்பட்டுள்ள தொழிற்பேட்டைகளும், நூற்பாலைகளுமே சான்றுகளாகும். அதேபோல மதுரை மாநகரை, மாநகராட்சியாக்கியது காரணமாக நகராட்சியாக இருந்த மதுரை மாநகராட்சியாகிற அளவுக்கு மக்கள் தொகைப் பெருக்கம் அங்கு ஏற்பட்டிருக்கிறது என்ற குறிப்புக் கிடைத்த போதிலும், மதுரை மாநகரில் வாழும் மக்கள் நல்ல பல வசதிகளைப் பெற்று வருகின்றனர். அரசின் திட்டப்பணிகளால் மேம்பாடு அடைந்துள்ள — அடைந்துவருகிற மதுரை மாவட்டம் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுக்குள் நிலைநிறுத்தி, அரசுக்குக் 'கை கொடுக்க', சென்ற பல ஆண்டுகளில் உதவியது போல் 1972–73-ஆம் ஆண்டில் குடும்ப நல முனைப்பு இயக்கத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளது. எதிர் காலத்தில் தொடர்ந்து இப்படிப் பட்ட வெற்றிகளை நல்கி, அரசுப் பணிக்குக் 'கை கொடுக்கும்' துரை மாவட்டம் என்பதில் ஐயப்பாடு இல்லை.

## இலக்கு

மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடிப் பார்வையில், மாவட்டக் குடும்ப நலத் துறையின் துணையோடு, 1972–73-ஆம் ஆண்டு இறுதியில் குடும்ப நலத் திட்ட முனைப்பு இயக்கம் செயல் படுத்தப்பட்டது. தமிழ் நாட்டில் சென்ற ஆண்டு முனைப்பு இயக்கத்தை இறுதியாகச் செயல் படுத்திய மாவட்டம் மதுரை மாவட்டமாகும். வருவாய்த் துறையினரும், உள்ளாட்சித் துறையினரும், குடும்ப நலத் துறையினரோடு இணைந்து செயல்பட்டு முனைப்பு இயக்க வெற்றியை உருவாக்கியுள்ளனர். உள்ளாட்சித் துறையின் கீழ் ஊராட்சி ஒன்றியங்கள் மக்களிடையே நெருங்கிய தொடர்பும் பிடிப்பும் கொண்டு செயல்படுவதால், குடும்ப நலத்துறை ஊழியர்கள் ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் முனைப்பு இயக்கம் காலம் முழுவதும் இயங்கி இயக்க வெற்றிக்கு உழைத்தனர். குடும்ப நலத்திட்ட முனைப்பு இயக்கத்தை யொட்டிய சேவை இயக்கம் 16-1-1973 முதல் 28-2-1973 வரை இம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டது. அதற்கு முன் ஒரு மாத காலம்வரை குடும்ப நலத் திட்ட விளம்பர இயக்கம் முனைப்போடு செயல் படுத்தப்பட்டது. முனைப்பு இயக்கக் காலத்தில் மதுரை மாவட்டம் 20 ஆயிரம் தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து முடிக்க வேண்டுமென இந்திய அரசு இலக்கு நிர்ணயித்தது.

## பரிசுத் திட்டம்

குடும்ப நல முனைப்பு இயக்கத்தை ஒட்டி மக்களிடையே ஆர்வத்தை உண்டாக்க வேண்டுமெனக் கருதிய மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்ட அளவில் பரிசுத்திட்டம் ஒன்றைச் செயல்படுத்தினார். அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட தந்தைமார்களுக்கான இப்பரிசுத் திட்டத்தில் முதற் பரிசுபெறும் ஒரு தந்தைக்கு ரூ. 1,000 ரொக்கப் பரிசாகவும், இரண்டாவது பரிசு பெறும் இரு தந்தைகளுக்கு ரூ. 500 வீதம், ரூ. 1,000 ரொக்கப் பரிசாகவும், மூன்றாவது பரிசு பெறும் நான்கு தந்தைமார்களுக்கு ரூ. 250 வீதம் ரூ. 1,000 ரொக்கப் பரிசும், நான்காவது பரிசு பெறும் பத்துத் தந்தைமார்களுக்கு ரூ. 100 வீதம் ரூ. 1,000 ரொக்கப் பரிசும் ஆக மொத்தம் ஒரு கோட்டத்தில் ரூ. 4,000 அளவிலான ரொக்கப் பரிசுகள் தந்தைமார்களுக்கு வழங்கப்படும் என அறிவித்திருந்தார். மதுரை

மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கோட்டத்திலும் இப்பரிசுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. நல்வாழ்வு நிலையங்கள் அமைத்து, ஈட்டுத் தொகை வழங்கி, முனைப்பு இயக்கம் செயல்படுத்தப் பட்டதோடு ஏறத்தாழ அனைத்து ஊராட்சி ஒன்றியங்களும் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஒவ்வொரு தந்தைக்கும் வேட்டி துண்டு வழங்கின. கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியம், மலைவாழ் மக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு கம்பளி வழங்கியது.

### பரிசுத் திட்டம்

மாவட்டம் முழுமைக்குமான இப்பொதுப் பரிசுத் திட்டம் தவிர, ஊராட்சி ஒன்றியங்களும் பரிசுத் திட்டங்களை அறிவித்து, தம் வட்டாரத்துத் தந்தைமார்களிடையே ஊக்க மூட்டி அறுவைச் சிகிச்சை ஏற்கச் செய்துள்ளன. சிறப்பாகச் செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம் தந்தைமார்களிடையே பரிசுக் குலுக்கல் நடத்திப் பரிசு பெறும் ஒரு தந்தைக்கு ரூ. 1,500 மதிப்புடைய கட்டை வண்டியும், இரு மாடுகளும் பரிசாக வழங்கப்படும் என அறிவித்திருந்தது. மேலும் இந்த ஊராட்சி ஒன்றியம், சிறு குடும்ப நெறிக்கு ஏற்பத் தன் குடும்பத்தை அளவானதாக அமைத்து ஆனந்தமான குடும்பமாக விளங்கும் —முப்புரம் எரித்த விரிசடைக் கடவுள்— முழு முதற்கடவுள் எனச் சொல்லப்படும், சிவபெருமானின் குடும்பத்தை விளக்கும் சித்திரத்தோடு, 1973-ஆம் ஆண்டுக்கான நாட்காட்டியை அச்சிட்டு அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஒவ்வொரு தந்தைக்கும் வழங்கியுள்ளது. திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் ரூ. 1,500 பெறுமானமுள்ள கறவை மாடு, பரிசுக் குலுக்கலின் மூலம் பரிசு பெறும் ஒரு தந்தைக்கு வழங்கப்படும் என அறிவித்திருந்தது. அதேபோல் சேடப்பட்டியில் ஆடுகள் பரிசாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. பரிசு பெறும் தந்தைமார்களுக்குக் கோழிப் பண்ணை வைத்துக் கொடுப்பதாகவும் சில ஒன்றியங்கள் அறிவித்திருந்தன.

### முன்னோடி நல்வாழ்வு நிலையம்

திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்துக்கான நல்வாழ்வு நிலையம் செக்கானூரணி ஆரம்பச் சுகாதார நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்தது. தஞ்சை மாவட்டப் பாணியில் நல்வாழ்வு நிலையம் ஒன்று செயல்பட்டதோடு, 'முன்னோடி நல்வாழ்வு நிலையம்' (Pre-Health Centre) ஒன்றும் இங்குச் செயல்படுத்தப்பட்டது. செய்தியாளர்கள் உட்பட அனைவரின் கவனத்தையும் ஈர்த்துவிட்ட 'முன்னோடி நல்வாழ்வு நிலைய' முறை சென்ற ஆண்டு பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் பிறந்த ஒன்றாகும். 1971–72-ஆம் ஆண்டு நடந்த முனைப்பு இயக்கத்தின் போது மிகுந்த பிற்பட்ட சமுதாயமான 'பிரமலைக் கள்ளர்' இனத்தைச் சார்ந்த மக்கள் வாழும் இப்பகுதியில் 94 தந்தைமார்களுக்குக் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. மிகுதியான முயற்சிக்குப் பின் அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதற்கென ஒப்புதல் அளித்து வந்திருந்த 14 தந்தைமார்கள், கடைசி நேர மனமாற்றத்தால் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளாமலே திரும்பி விட்டனர். இதைத் தடுத்திட வழி என்ன என்ற சிந்தனையிலேயிருந்து உதித்ததுதான் 'முன்னோடி நல்வாழ்வு நிலை முறை'யாகும்.

### சாதனை ஏற்படுத்திய ஒன்றியங்கள்

மதுரை மாவட்ட முனைப்பு இயக்கத்தில் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் 1,209 தந்தைமார்களுக்கும், கண்ணந்திரி ஊராட்சி ஒன்றியம் 1,209 தந்தைமார்களுக்கும் அறுவைச் சிகிச்சை செய்து மாவட்டத்திலேயே முதலிடத்தைப் பெற்றுள்ளன. பெரிய குளம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 'அம்மாவரம்' என்ற கிராமம் 25—2—1973-ஆம் நாள் வரையிலான புள்ளி விவரப்படி, தகுதி வாய்ந்த தம்பதியர்களில் 95 சதவீதம் பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து முடித்துள்ளது. அதையொட்டிக் கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வில்பட்டி என்ற கிராமமும், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தங்களாச்சேரி என்ற கிராமமும், தங்கள் தங்கள் ஊரில் உள்ள தகுதி வாய்ந்த தம்பதிகள் அனைவருக்கும்—நூறு சதவிகிதத்தினருக்கும் அறுவைச் சிகிச்சை செய்து முடிக்கப் பாராட்டத்தக்க வகையில் முனைந்து முயற்சித்துக் கொண்டிருந்தன.

### பரிசளிப்பும் பாராட்டும்

மதுரை மாவட்டத்தில் குடும்பநல முனைப்பு இயக்கம் நடந்து கொண்டிருந்த அதே சமயத்தில் இலவசக் கண் சிகிச்சை முகாமும் நடந்தது. திண்டுக்கல் 'அங்கு நகரில்' நடைபெற்ற கண் சிகிச்சை முகாமின் நிறைவு விழா 16—2—1973-ஆம் நாள் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு, சிகிச்சை பெற்றவர்களுக்குக் கண்ணாடி வழங்கினார்கள். மேலும் குடும்ப நலத் திட்ட முனைப்பு இயக்கத்தை யொட்டி ஊராட்சி ஒன்றியங்கள் அறிவித்திருந்த பரிசுப் பொருள்களை வெற்றி பெற்ற தந்தைமார்களுக்கு வழங்கினார். செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம் அறிவித்திருந்த ரூ. 1,500 பெறுமான கட்டை வண்டி, இரு மாடுகள் ஆகியவற்றை வழங்கியதன் அடையாளமாகச் சதங்கையும், சாட்டையும் கொண்ட 'பிளாஸ்டிக்' பையைப் பரிசு பெற்ற தந்தைக்கு வழங்கினார். திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் அறிவித்திருந்த ரூ. 1,500 பெறுமான கறவை மாட்டை வழங்கியதன் அடையாளமாகப் 'பால்கறக்கும் பாத்திரம்' கொண்ட பிளாஸ்டிக் பையைப் பரிசு பெற்ற தந்தைக்கு வழங்கினார். திண்டுக்கல் கோட்டத்திலேயே முனைப்பு இயக்கத்தில் முதலிடம் பெற்றுள்ள பழனி ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. வேலப்ப நாயுடு அவர்களுக்கும், ஆயிரத்துக்கும் அதிகமான தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து முடித்த மதுரை மாநகராட்சி மேயர் திரு. முத்து அவர்களுக்கும் பொன்னாடை போர்த்திப் பாராட்டிப் பேசினார்கள்.

### மாவட்டத்தின் சாதனை

மதுரை மாவட்டம் 16—1—1973-ஆம் நாள் முதல் 28—2—1973-ஆம் நாள்வரை நடத்தி முடித்த குடும்ப நலத் திட்ட முனைப்பு இயக்கத்தில் 22,504 தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து முடித்து, 20 ஆயிரம் தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து முடித்திட வேண்டுமென்ற இந்திய அரசு கொடுத்த இலக்கையும் மீறிப் பெருஞ் சாதனையை ஏற்படுத்தியுள்ளது. 'முன்னோடி நல்வாழ்வு நிலைய' முறையை அறிமுகப்படுத்தியுள்ள மதுரை மாவட்டம், 1972—73-ஆம் ஆண்டு தமிழ் நாட்டிலேயே முனைப்பு இயக்கத்தை இறுதியாக நடத்தி இலக்குமீறிய வெற்றியை ஈட்டி நிறைவு செய்து வைத்துள்ளது!

# கண் சிகிச்சை முகாம் நிதி



முந்திய இதழின்படி ரூ. 43,48,084·00

30–12–1972

தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் .. 688·00

தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் .. 2,400·00

2–1–1973

பத்திரப் பதிவுத்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல், சென்னை. 250·00

திரு. கே. நடேசன், கூட்டுறவு வட்டார வளர்ச்சி அலுவலர், மாயூரம். 25·00

5–1–1973

திரு. கே. பி. பாண்டியன், செயலாளர். 5·00

8–1–1973

டாக்டர் எப். டி. வில்சன், ஜி.எம்.விஸி. பி. வி. எஸ்சி. மண்டலக் கால்நடை வளர்ப்புத் துணை இயக்குநர். 8·00

9–1–1973

ஆணையர், ஊராட்சி ஒன்றியம், காஞ்சிபுரம். 3,525·00

தமிழ்நாடு மின்வாரியக் கணக்காளர்கள் சங்கம் 8–1–73 அன்று மாநில முதல் மாநாட்டின் போது முதலமைச்சரிடம் வழங்கியது. 2,501·00

திரு. எஸ். பாண்டுரங்கம், தலைவர், அனைத்துலக சைக்கிள் ரிக்ஷா முன்னேற்றக் கழகமும், ரிக்ஷா தொழிலாளர் சங்கத் தலைவர், திரு. எஸ். கணேசன் அவர்களும், சென்னை. 5·00

10–1–1973

மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலகம், சேலம்-1. 100·00

தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் .. 310·00

வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சியாளர், வேலூர். 353·00

11–1–1973

மெஸர்ஸ் முத்துஒயின்ஸ், அரக்கோணம். 101·00

17–1–1973

இராமநாதபுர மாவட்ட ஆட்சியாளர், மதுரை. 522·00

மீன்வளத் துறை இயக்குநரின் நேர்முக உதவியாளர், சென்னை-6. 120·00

பத்திரப் பதிவுத்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல், சென்னை-1. 355·00

அசோக் நகர் சேரிவாழ்வோர் சங்கம், சென்னை-29. 51·00

திரு. கே. கல்யாணசுந்தரம், 38, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1. 65·00

திரு. துரைவேல், முதல்டிவிஷன் .. 1·00

19–1–1973

மண்டலக் கால்நடை வளர்ப்புத் துணை இயக்குநர், சென்னை 10·00

ஷை 25·00

சேலம் மாவட்ட திருச்செங்கோடு கூட்டப் பள்ளி, கால்நடைப் பராமரிப்பு உதவி இயக்குநர். 60·00

உதகை அரசினர் கலைக் கல்லூரி முதல்வர். 1,000·00

20–1–1973

மாவட்ட ஆட்சியாளர், தஞ்சை. 1,000·00

22–1–1973

உதவி வேளாண்மைப் பொறியாளர் (பிரைவேட் டியூப் வெல்ஸ் திட்டம்), விழுப்புரம். 27·25

தென்னார்க்காடு மாவட்ட ஆட்சியாளர், கடலூர். 4,204·00

23–1–1973

திரு. மாரியப்பன், தி.மு.க. வட்டச் செயலாளர், கள்ளக்குறிச்சி, தென்னார்க்காடு. 100·00

திரு. சுப்பிரமணியம், மே/பா· நாச்சியப்பன், எம். எல். ஏ., சங்கராபுரம், தென்னார்க்காடு. 5·00

24—1—1973

பத்திரப்பதிவுத்துறைத் தலைமை ஆய்வாளர், சென்னை-1. 155 00

27—1—1973

திரு. ஓடியன் மணி, சென்னை-2. 1,001 00

இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவர் .. .. .. 32 30

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் .. .. 75,601 00

மண்டலக் கால்நடைப் பராமரிப்புத் துணை இயக்குநர், கோயம்புத்தூர் .. .. 266 00

ஷை 52 00

29—1—1973

திரு. கே. வி. கே. சாமி படிப்பகம், சென்னை, (நல்வாழ்வு அமைச்சர் மூலமாக) .. 27 00

வேளச்சேரிப் பொது மக்கள், (நல்வாழ்வு அமைச்சர் மூலமாக) .. .. .. 5 00

தமிழ்நாடு அரசு மருந்தாளுநர் கழகம், சென்னை .. .. 303 00

சென்னை நகரசபைச் சுகாதார அலுவலர்கள் .. .. 555 00

வேலூர், மண்டலக் கால்நடைப் பராமரிப்புத் துணை இயக்குநர். 45 00

## வழங்கியோர் பட்டியல்

| | | |
|---|---|---|
| மண்டலக் கால்நடைப் பராமரிப்புத் துணை இயக்குநர், தஞ்சாவூர் .. .. .. | 115 | 00 |
| தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் .. .. .. | 1,650 | 00 |
| துணைப் பதிவாளர், மேட்டூர், இருப்பு, சேலம் .. .. | 30 | 00 |
| அரிசன நல இயக்குநர், சென்னை-5 .. .. .. | 71 | 00 |
| **30—1—1973** | | |
| வடஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் .. .. .. | 10,222 | 00 |
| **2—2—1973** | | |
| நகரசபை நிருவாக இயக்குநர், சென்னை-1 .. .. .. | 69 | 00 |
| கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர், நாகர்கோவில் .. | 2,856 | 74 |
| **5—2—1973** | | |
| 4—2—1973 அன்று புதுவையில் நிகழ்ந்த பொதுக்கூட்டத்தில் உண்டி மூலமாக | | |
| புலவர் பிச்சை குழந்தைசாமி. | 10 | 00 |
| கவிஞர் புதுவை மறவன் .. | 2 | 00 |
| புலவர் அரிமதி தென்னகன் .. | 2 | 00 |
| மார்டின் இராயன், பி.ஏ., பி.டி. | 2 | 00 |
| **6—2—1973** | | |
| மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் .. .. .. | 515 | 00 |
| சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் .. .. .. | 4,146 | 00 |
| முதல்வர், இராசேசுவரி வேதாசலம் அரசினர் கலைக் கல்லூரி, செங்கற்பட்டு .. | 189 | 00 |
| தென்காசித் துணைப்பதிவாளர். | 850 | 00 |
| **6—2—1973** | | |
| மண்டலக் கால்நடைப் பராமரிப்புத் துணை இயக்குநர், தஞ்சை .. .. .. | 260 | 00 |
| **7—2—1973** | | |
| திருமதி இராசேசுவரிநடராஜன், சென்னை-20 .. .. | 101 | 00 |
| **9—2—1973** | | |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், சேதுபாவாச்சத்திரம், தஞ்சை | 475 | 00 |
| **10—2—1973** | | |
| திரு. டி. கிருஷ்ணமூர்த்தி, விசுவநாத் டிரேடிங் கம்பெனி, புதுப்பேட்டை, சென்னை .. | 2 | 01 |
| **12—2—1973** | | |
| இயக்குநர், கருவூலக் கணக்குத் துறை, சென்னை .. .. | 13 | 00 |
| திரு. கெ. அப்துல் ரகிம், சென்னை-3 .. .. | 250 | 00 |
| கிருஷ்ணபுரம் கூட்டுறவு வேளாண்மை வங்கி லிட்., கிருஷ்ணபுரம் .. .. | 50 | 00 |
| **13—2—1973** | | |
| மண்டலக் கால்நடைப் பராமரிப்புத் துணைஇயக்குநர், தஞ்சை .. .. | 242 | 00 |
| **15—2—1973** | | |
| மாவட்டக் கல்வி அலுவலர், தக்கலை .. .. .. | 1,199 | 80 |
| தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் .. .. .. | 380 | 15 |
| மண்டலக் கால்நடைப் பராமரிப்புத் துணை இயக்குநர், திருநெல்வேலி .. .. | 101 | 00 |
| திரு. கிட்டப்பா, எம்.எல்.ஏ. .. | 42 | 00 |
| **16—2—1973** | | |
| சென்னை கால்நடைப் பராமரிப்புத் துணை இயக்குநர் .. | 10 | 00 |
| உதவிப் பதிவாளர், மயிலம் .. | 60 | 75 |
| **17—2—1973** | | |
| திரு. எஸ். சி. கிருஷ்ணன், செயலர், தமிழ்நாடு சென்னை, அண்ணாசாலை மின்தொழிலாளர் சம்மேளனத் தொழிலாளர் சார்பில் .. | 1,001 | 00 |
| **19—2—1973** | | |
| திரு. சோ, துக்ளக் ஆசிரியர், சென்னை-2. .. .. | 5 | 00 |
| செயலாளர், தமிழ்நாடு பதிவு பெரு அலுவலர் சங்கம், செங்கற்பட்டு .. .. | 101 | 00 |
| துணைப் பதிவாளர், மேட்டூர் இருப்பு, சேலம் .. .. | 290 | 00 |
| **20—2—1973** | | |
| கோட்டப் பொறியாளர், புதுக்கோட்டை .. .. | 11 | 00 |
| இயக்குநர், நகர அமைப்புத் திட்டம், சென்னை .. .. | 37 | 00 |
| செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாளர் .. .. .. | 23,436 | 00 |
| **21—2—1973** | | |
| தமிழ்நாடு மின்வாரியம் கிடங்குப் பணியாளர் .. .. | 20 | 00 |
| இராயபுரம் பொதுக்கூட்டத்தில் தியாகராயக்கல்லூரி தி.மு.க. மாணவர்கள் முதல்வரிடம் கொடுத்தது. | | |
| சின்னமணி .. | 2 | 00 |
| 64 ரிக்ஷாத் தொழிலாளர்கள் | 15 | 00 |
| இராஜேந்திரன். | 1 | 00 |
| கேசவன் .. | 2 | 20 |
| இராமகிருஷ்ணப் பள்ளி மாணவன். | 2 | 00 |
| திரு. இராகுச் செட்டியார் | 10 | 00 |
| 4-ஆம் வட்ட அவைத் தலைவர் .. | 30 | 00 |
| திரு. இராசு .. | 1 | 00 |
| திரு. சுந்தரம் .. | 1 | 00 |
| கிருஷ்ணன் .. | 1 | 00 |
| **21—2—1973** | | |
| பொறிப்படகுத் தொழிலாளர் சங்கம் | 10 | 00 |
| செல்வி குமாரி .. | 1 | 05 |
| திரு. இராசு .. | 1 | 00 |
| திரு. கே. பாலு—8-வது வட்டம் | 5 | 00 |
| பட்டுக்கோட்டைப் பொதுக் கூட்டத்தில் முதல்வரிடம் கொடுத்தது. | | |
| திரு. கோவிந்தராஜு, பட்டுக்கோட்டை .. .. | 101 | 00 |
| பட்டுக்கோட்டைப் பொதுக் கூட்டத்தில் உண்டியல் வாயிலாக .. .. | 7 | 00 |
| தமிழ்நாடு மின்வாரியப் பணியாளர், கும்பகோணம் .. | 101 | 00 |
| மின்வாரிய அலுவலர் மாநாட்டில் வழங்கியது .. | 29 | 00 |
| தமிழ்நாடு மின்வாரியத் தலைமைச் செயலக அலுவலர் சங்கம் .. | 1,001 | 00 |
| தமிழ்நாடு மின்வாரியப் பொறியாளர்கள் சங்கம் .. .. | 101 | 00 |
| மொத்தம் .. | 44,94,183 | 34 |

# உசிலம்பட்டியில் ஒப்பற்ற பணிகள்

சந்தர்...

உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 17 ஊராட்சி மன்றங்களும், ஒரு பேரூராட்சி மன்றமும் இயங்கி வருகின்றன. 1971-ஆம் ஆண்டு மக்கள் கணிப்பின்படி மக்கள் தொகை 79,337 ஆகும். 18 உறுப்பினர்களும் அறுவர் நியமன உறுப்பினர்களாகவும் உள்ளனர். அறுவரில் மூவர் பெண்கள். மற்ற மூவரும் அரிசன உறுப்பினராவர். இந்த ஊராட்சி ஒன்றியக் குழுவில் எவ்வித இடர்ப்பாடுமின்றிச் சிறப்பாக இயங்கி வருகின்றது.

ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த உசிலம்பட்டி (திம்மநத்தம்) உத்தப்பநாயக்கனூர்—பேரணைச் சாலையும் சீரிய முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டுப் பேருந்துப் போக்குவரத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. 18 பள்ளிக்கட்டடங்களும், 30 இணைப்புச்சாலைகளும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. இணைப்புச்சாலை இல்லாததாய்க் கிராமம் எதுவுமில்லை. சொந்தமாகப் பள்ளிக் கட்டடம் இல்லாத ஊராட்சி ஒன்றியப் பள்ளியும் எதுவுமில்லை.

உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம் மிகவும் பின்தங்கிய வறட்சியான பகுதியாகும். பாசனக் கிணறுகள் மூலம் பெரும்பாலும் வேளாண்மைப் பணி மேற்கொள்ளப்படுகிறது. மானாவாரி—பயிர்கள்தான் பெருமளவு பயிரிடப்படுகின்றன. 1967 முதல் 1971 முடிய 2,66,500 செலவு செய்யப்பட்டுள்ளது. 1967 முதல் 1971 முடிய விவசாயிகளுக்கு ரூ. 1,53,000 மதிப்புள்ள விதைகள் வழங்கப்பட்டுள்ளன. எழுபது விவசாயிகளுக்கு ரூ. 22,500 மதிப்புள்ள நவீன மருந்து தெளிக்கும் கருவிகள் வழங்கப்பட்டன. ரூ. 51,000 மதிப்புள்ள நவீன விவசாயக் கருவிகள் 350 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு புதிய உழவு இயந்திரம் வாங்கப்பட்டு ஆயிரக் கணக்கான ஏக்கரில் உழவுப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தழை உரக் குச்சிகள் பெருமளவு பயிரிடப்பட்டு வருகின்றன. உரப் பெருக்குத் திட்டம் சிறப்பாக மேற்கொள்ளப் பட்டுள்ளது. ஊர்நல உதவியாளர்களுக்கு நவீன வேளாண்மைக் கருவிகள் பல வழங்கப்பட்டுள்ளன.

உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் பள்ளி வயதடைந்த பள்ளிப் பிள்ளைகள் அனைவரும் கடந்த ஐந்தாண்டுகளில் பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர். 35 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் 128 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். 13 ஆசிரியைகளுக்கான குடியிருப்புகள் புதிதாகக் கட்டப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இரண்டு சீரணி அறிவகங்கள் திறம்படச் செயல்பட்டு வருகின்றன. சீரணிப் படையில் 100 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் 3 புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டவும், 4 சாலைகளைச் செப்பனிடவும், 4 புதிய சாலைகள் அமைக்கவும் உதவி செய்துள்ளனர்.

மகளிர் குழந்தை நலத் திட்டத்தின்கீழ் உசிலம்பட்டியில் குழந்தைகள் காப்பகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நல்லமுறையில் இயங்கி வருகிறது. இந்த ஒன்றியத்தில் 30 மகளிர் மன்றங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

1967 முதல் 1971-ஆம் ஆண்டுவரை கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் நீண்ட காலக் கடன் வழங்கியது ரூ. 5,82,435. குறுகியக் காலக் கடன் வழங்கியது ரூ. 22,77,740.

**கூட்டுறவு இயக்கச் சாதனைகள்:**

உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் செயல்பட்டு வந்த கள்ளர் கூட்டுறவுச் சங்கங்களின் 32 சங்கங்கள் இணைக்கப்பட்டு 12 பெரிய விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களாக இயங்கி வருவதைச் சேர்த்து இவ்வட்டாரத்தில் 18 தனித்து இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. ஒரு கூட்டுறவு விவசாய வங்கி செயல் புரிந்து வருகிறது. ஒரு வீடு கட்டும் சங்கம் உசிலம்பட்டியில் பணியாற்றி வருகிறது. 4 சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு உர விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் ஆகியோருக்கு முறையே ஒரு கூட்டுறவு நாணயச் சங்கம் செயலாற்றி வருகிறது. அரசுப் பணியாளர்களுக்கு என்றே ஒரு கூட்டுறவுப் பண்டகசாலை உசிலம்பட்டியில் இயங்கி வருகிறது.

மானாவாரி நிலங்களில் புதிய கிணறுகள் வெட்டித் தோட்ட நிலங்களாக மாற்றி, விவசாய விளைபொருள்களைப் பெருக்கவும், கிராம மக்களின் வருமானத்தை அதிகரிக்கவும் நீண்ட காலக்கடன் வழங்குவதற்கு இங்கு ஒரு நிலவள வங்கி 5—7—1968 முதல் செயலாற்றி வருகிறது. இதுவரை உசிலம்பட்டி நிலவள வங்கி மூலம் உசிலம்பட்டி வட்ட விவசாய மக்களுக்கு நீண்ட காலக்கடன் 57,88,000 வழங்கப்பட்டுள்ளது.

மக்களிடையே சமுதாய ஒத்துழைப்புப் பெருகிடவும், கூட்டுப் பொறுப்பு வளர்ந்திடவும், முக்கியமாகச் சிறு விவசாயிகள் பெரிதும் பயனடையவும், தரிசு நிலங்களைத் தோட்ட நிலங்களாக மாற்றுவதென்ற அடிப்படையில் இங்கு 6 கூட்டுறவு இறைவைப்பாசனச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எம். பாரைப்பட்டி கிராமத்தில் 9 புதிய கிணறுகள் வெட்டி, கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்க அங்கத்தினர்கள் பயனடைய நீண்ட காலக்கடன் வழங்கிட,

பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

### கிராமத் தொழில்கள்

கிராமக்கலை கைவினைத் தொழில் திட்டத்தின் கீழ் உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் உசிலம்பட்டியில் 1—4—1965 முதல் 23—10—1965 முடிய தச்சுத் தொழில் பயிற்சி நிலையமாகவும், 24—10—1965 முதல் தொடர்ந்து இவ்வூராட்சி ஒன்றிய நிர்வாகத்தின் கீழ்த் தச்சுத் தொழில் உற்பத்தி நிலையமாகவும் செயல்பட்டு வருகிறது.

அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளுக்குத் தேவையான மேசைகள், நாற்காலிகள், பெஞ்சுகள் மற்றும் அலமாரிகள் போன்ற மரத்தளவாடச் சாமான்கள் தச்சு உற்பத்தி நிலையத்தில் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. கடந்த 1968 முதல் 1972 முடிய ரூ. 1,15,000 மதிப்புள்ள மரத் தளவாடச் சாமான்கள் தயாரிக்கப்பட்டுப் பல்வேறு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மற்றும் இவ்வூராட்சி ஒன்றியத்தின் சார்பில் விவசாய அடிப்படையில் ரூ. 1,00,000 மதிப்பீட்டில் ஒரு சேம்பர்-செங்கல் சூளைத் தொழில் தொடங்கும் திட்டமும் உள்ளது.



உசிலம்பட்டியிலுள்ள பிரமலைக் கள்ளர் சீரமைப்பு பெண்கள் தையற்பள்ளி.

ரூ. 3,25,100க்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இது போன்று திட்டங்கள் வெற்றிகரமாகச் செயல்படுவதற்கு இங்கு ஒரு வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவு மையம் துவக்கப்பட்டுள்ளது.

சிறு விவசாயிகள் வருமானத்தைப் பெருக்கிட ஆடு வாங்குவதற்கு 40 கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்களுக்கு ரூ. 80,000 1971–72-ஆம் ஆண்டில் மத்திய காலக்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர வேளாண்மைக் காலத்தில் பயிருக்குத் தக்கவாறு குறுகிய காலக்கடன் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. 1971–72-ஆம் ஆண்டில் ரூ. 2 இலட்சம் குறுகிய காலக்கடன்

## மேதையின் பெருமை



ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சு நாட்டுச் சர்வாதிகாரி நெப்போலியனுக்கும் தீவிரமான முறையில் போர் நடந்து கொண்டிருந்தது. இரு திறத்திலும் கணக்கற்ற வீரர்கள் மடிந்தார்கள். எப்படியோ, சில நாட்களுக்குள் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டுப் போர் நிறுத்தப்பட்டுவிட்டது. ஆனாலும் பிரான்சில் சிறை வைக்கப்பட்டிருந்த கைதிகளை நெப்போலியன் விடுதலை செய்யவில்லை. '' எங்களைத் தாயகத்துக்குத் திருப்பி அனுப்புங்கள்'', என்று அந்தக் கைதிகள் நாள்தோறும் எழுப்பிய வேண்டுகோள்களை எல்லாம் நெப்போலியன் மறுத்து வந்தான்.

ஒரு நாள்..........

'' ஆங்கிலக் கைதிகளை எல்லாம் அருள் கூர்ந்து விடுதலை செய்யுங்கள் '' என்று ஒரு தனி நபர் வேண்டி எழுதியிருந்த கடிதத்தை, நெப்போலியனிடம் வாசித்தாள் அவனது மனைவி ஜோஸப்பைன். எழுதியவரின் பெயரை அவள் வாசித்தவுடன் நெப்போலியனின் மனம் நெகிழத் தொடங்கிவிட்டது.

'' இந்தப் பெயருடைய மனிதரின் வேண்டுகோளை நாம் எந்த வகையிலும் புறக்கணிக்க முடியாது''...........என்று வாய் விட்டுக் கூறினன் நெப்போலியன்,

பயங்கர சர்வாதிகாரியென்று கூறப்பட்ட நெப்போலியனே, மனப்பூர்வமாய் மதித்துப் போற்றும் அளவுக்குப் புகழ் பெற்றிருந்த அந்த மனிதர் யார் தெரியுமா !

அவர்தான்....

அம்மை நோய்க்கு மருந்துவம் கண்டு பிடித்த டாக்டர் எட்வர்டு ஜென்னர் !



# வால்பாறை நகரியமே

## ஊராட்சி ஒன்றியம்!

கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்திலுள்ள வால்பாறை நகரியம் மலைப்பகுதியில் அமைந்துள்ளது. இங்குக் காஃபி, தேயிலைத் தோட்டங்களும், தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான கொயினாத் தோட்டமும் உள்ளன. தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான விளைநிலங்கள் இங்குக்கிடையாது. இந்த நகரியத்தின் பரப்பளவு 152 சதுர மைல் ஆகும். இதன் மக்கள் தொகை 92,609. வால்பாறை ஒரு துணை வட்டமாகவும் ( Sub-Taluk ) இயங்கி வருகிறது. அரசு அலுவலர்களையும், வியாபாரிகளையும் தவிர ஏனையவர் அனைவரும் தோட்டத் தொழிலாளர்களே. இவர்களில் பெரும்பாலோர் கோவை, திருச்சி, மதுரை, இராமநாதபுர மாவட்டங்களைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களாவர்.

வால்பாறை நகரியமாகவும், ஊராட்சி ஒன்றியமாகவும், இயங்கி வருகிறது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் ஒரே ஒரு ஊர் மட்டுமே உள்ளது. அது வால்பாறையே! அதுவும் நகரியமாக உள்ளது. வால்பாறை ஊராட்சி ஒன்றியத்தின் தலைவராக, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே பொறுப்பு ஏற்று நடத்தி வருகிறார். இதனால் தோட்டத் தொழிலாளர்கள் நிறைந்த வால்பாறை பகுதி விரைந்து வளர்ந்து வருகிறது.

வால்பாறை மலைப்பகுதியில் வால்பாறை நகரமே வியாபாரச் சிறப்பு மிக்கதோர் நகரமாகும். தொழிலாளர்கள் தங்கள் விடுமுறை நாட்களாகிய ஞாயிறு தோறும் வால்பாறைக்கு வந்து தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிச் செல்கின்றனர். வால்பாறையில் ஒரு நாளங்காடியை (Market) ரூபாய் 17·5 இலட்சம் செலவில் புதிதாகக் கட்டும் வேலைக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 30—4—1972 அன்று அடிக்கல் நாட்டியுள்ளார்கள். வெள்ளிவிழாச் சுதந்தர நாள் வேலையாக இந்த வேலை மேற்கொள்ளப்பட்டு வெகுவிரைவாக நடைபெற்று வருகின்றது. பழைய நாளங்காடியில் வியாபாரம் செய்து வந்தவர்களுக்கு மாற்று இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் அவர்கள் தம் சொந்தச் செலவில் கடைகளைக் கட்டி வியாபாரம் தொடங்கிவிட்டனர். நாளங்காடியிலேயே குடியிருந்து வந்த சுமார் 70 வியாபாரிகளுக்குப் புதிய வீடுகள் கட்ட வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன.

வால்பாறையில் ஏராளமான அரசு அலுவலகங்கள் உள்ளன. இங்குள்ள அரசு அலுவலர்களுக்கும், அரசு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கட்கும் வசிக்க வீடில்லாத காரணத்தால், அவர்கள் மனைவி மக்களைப் பிரிந்து தனித்து வாழும் நிலையைப் போக்குவதற்காக வாடகை வீடுகள் கட்டுவதற்கு அண்மையில் 3 ஏக்கர் நிலம் வீட்டு வசதி வாரியத்திடம் கொடுக்கப்பட்டுள்ளது. வாடகை வீடுகள் கட்டித்தரும் பணியை வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டு வருகிறது.

வால்பாறை மலைப்பகுதியில் 6 மாதம் மழை பெய்யும். கொட்டும் மழையில் சின்னஞ்சிறு குழந்தைகள் அன்றாடம் நெடுந்தூரம் நடந்து சென்று படித்துவிட்டு, மீண்டும் வீடு திரும்பும் பரிதாப நிலை இருந்து வந்தது! இந்நிலையைப் போக்கச் சென்ற ஆண்டில் நகரியப் பொது நிதியிலிருந்து 20,000- ரூபாயைக் கல்வித் துறையினருக்குச் செலுத்திச் சோலையார் நகர், சின்கோனா ஆகிய இடங்களில் இரு புதிய உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டன. இட நெருக்கடி காரணமாக வால்பாறை உயர்நிலைப் பள்ளியில் மாணவர்கள் 'ஷிப்டு' முறையில் அரைநேரப் படிப்புப் படித்து வந்தனர். சென்ற ஆண்டில் இரு புதிய உயர்நிலைப் பள்ளிகள் திறந்த காரணத்தாலும், நடப்பு ஆண்டில் இரு நடுநிலைப் பள்ளிகள் திறக்கப்பட்ட காரணத்தாலும், 'ஷிப்டு' முறை மாறி, முழு நேரம் படிக்க வசதி ஏற்பட்டுள்ளது.

பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் தவறிய மாணவர்கள் இதுவரை 64 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பொள்ளாச்சிக்குச் சென்று தேர்வு எழுதி வந்தனர். அடுத்த ஆண்டு முதல் இவர்கள் வால்பாறையிலேயே தேர்வு எழுத வகை செய்யப்பட்டுள்ளது.

வால்பாறையில் ஒரு கலைக் கல்லூரி துவக்குவதற்குத் தேவையான 5 இலட்சம் ரூபாயை நன்கொடையாக வசூல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் பெரும்பாலும் பன்னெடுங் காலமாக இத்தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றிய தொழிலாளர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பதால், இவர்கள் வால்பாறையைத்

தங்கள் சொந்த ஊராகவே கருதி வருகின்றனர். இவர்கள் இங்கேயே நிரந்தரமாகத் தங்கிடவும், வீடுகள் கட்டிக் கொள்ளவும், வால்பாறை ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. வருவாய்த் துறையினரிடமிருந்து வீட்டு மனைகளைப் பெற்றுச் சங்கத்தைப் பதிவு செய்து வீடு கட்டும் வேலையைத் துவக்கத் தீவிரமாக முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

வால்பாறை ஊராட்சி ஒன்றியப் பகுதியில் வீட்டுக் காய்கறி மற்றும் பழத்தோட்டங்கள் அமைத்திட மானிய விலையில் காய்கறி விதைகளும், பழச்செடிகளும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. கோழி வளர்ப்பதற்காக மானிய விலையில் கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப்படுகின்றன. இங்கு

> **தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 4,11,03,125. ஆகும் ஆண்கள் 2,07,72,549; பெண்கள் 2,01,30,576 பேர். படித்தவர் தொகை 1,61,89,712 பேர். இவர்களில் ஆண்கள் 1,07,34,758 பேர்; பெண்கள் 54,44,954 பேர். மொத்தம் படித்தவர்கள் தொகை 39.39 சதவீதம். இவற்றில் ஆண்கள் 51.68 சதவீதம்; பெண்கள் 26.83 சதவீதம்.**

'சிந்தி' இன மாடுகள் வளர்க்கப்படுகின்றன. சென்ற ஆண்டில் 13 'சிந்தி' பொலி காளைகள் மானிய விலையில் விநியோகம் செய்யப் பட்டுள்ளன. சென்ற ஆண்டில் வால்பாறை நகரிலுள்ள சாலைகளுக்குத் தார் போடப்பட்டது. ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்கு நடப்பு ஆண்டிலும் தார் போடப்பட்டு வருகிறது.

வால்பாறையில் ஒரு விளையாட்டு அரங்கம் கட்டவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வால்பாறை நகரிய நிதியிலிருந்து ஒரு திரையரங்கம் கட்டும் திட்டமும் பரிசிலனையில் உள்ளது.

நகரியத்தாலும், ஊராட்சி ஒன்றியத்தாலும் இம்மலைப் பகுதியின் வளர்ச்சிக்கு இன்னும் பல வழிகளில் ஆவன செய்யப்பட்டு வருகின்றன.

# கிராமங்களில் டெலிவிஷன்



டில்லியிலுள்ள தொலைக் காட்சி வசதிகளை வலுப்படுத்தவும், ஐந்து புதிய இடங்களில்—குறிப்பாக, பம்பாய், கல்கத்தா, சென்னை போன்ற இடங்களில்—தொலைக் காட்சி வசதிகளை விரிவாக்கவும் மைய அரசு திட்டமிட்டுள்ளது. 1973—74-ஆம் ஆண்டில், இந்தியா முழுவதும் துணைக் கோள் மூலம் தொலைக்காட்சி ஆய்வு (Satellite Instructional Television Experiment) மேற்கொள்ள அணுசக்தி ஆணைக் குழு ஏற்பாடு செய்துள்ளது. இதனால், அமெரிக்க நாட்டிலுள்ள 'நாசா' (NASA) விலிருந்து வான துணைக்கோள் (Sky Satellite) ஒன்று வாடகைக்குப் பெறப்பட்டு நாகபுரியில் நிறுவப்படும். இதனால் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இந்தியாவிலுள்ள பல்வேறு பகுதிகளும் நன்றாகக் கண்டு களிக்க முடியும்.

நாட்டின் பல்வேறு ஒருங்கிணைந்த பகுதிகளில், குறிப்பாக, ஊர்ப்புறங்களில் சுமார் 5,000 தொலைக்காட்சிக் கருவிகளை அணுசக்தி ஆணைக்குழு நிறுவும். தொலைக்காட்சி மூலம் விளைந்துள்ள நன்மைகளை வருங்காலத்தில் கண்டறிவது ஒரு புறமிருக்க, மக்களின் அன்றாட நிலையையும் மக்களின் வாழ்க்கையையும் உயர்த்தத் தொலைக்காட்சி பெரிதும் பயன்படும்.

தொடக்கமாகச் சென்னை மாநகரிலும், அதனைச் சார்ந்துள்ள அண்மை மாவட்டங்களிலும், வருங்காலத்தில் மாநில முழுவதிலும் தொலைக் காட்சிக் கருவிகளை நிறுவுவதற்கான திட்டப்பணிகள் பலவற்றைச் சேர்த்து, ஒருங்கிணைக்கும் வழி முறைகளைக் கூறுதற்கென ''ஊரக தொலைக் காட்சிக் குழு'' ஒன்றை அரசு அமைத்துள்ளது. அக்குழுவில் கீழ்க்காணும் எண்மர் உறுப்பினராவர்.

தலைவர் :—

1. அரசுத் தலைமைச் செயலாளர்.

உறுப்பினர்கள் :—

2. அரசுச் செயலாளர், ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித் துறை.

3. அரசுச் செயலாளர், கல்வித் துறை.

4. அரசுச் செயலாளர், நிதித் துறை.

5. செய்தி, மக்கள் தொடர்பு இயக்குநர், பொதுத் (செய்தி—மக்கள் தொடர்பு) துறை.

6. ஊரக வளர்ச்சி இயக்குநர்.

7. வானொலி தலைமை அலுவலர்-ஊராட்சி வானொலிப் பராமரிப்பு நிறுவனம்.

8 மக்கள் தொடர்பு அலுவலர், ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித்துறை—அமைப்பாளர்.

''ஊரகத் தொலைக் காட்சிக் குழு'' தேவையெழும் போதெல்லாம் கூட்டப்படும். துவக்கக் கட்டமாகச் சென்னை மாநகரிலும் அதனைச் சார்ந்துள்ள அண்மை மாவட்டங்களான வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களிலும், வருங்காலத்தில் மாநில முழுவதிலும் தொலைக் காட்சிக் கருவிகளை நிறுவுவதற்குத் தேவையான வழிமுறைகளை இக்குழு ஆய்ந்து கருத்துக்களை வழங்கும்.

ஆசிரியர், வெளியிடுபவர் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை, அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.




Criterion CO 2883



# குழந்தையும் அறியுமே!
# தமிழ்நாடு பரிசுச் சீட்டு
# தன்மையில் சிறந்தது!

இன்றே வாங்குங்கள்

## தமிழ்நாடு அரசு
## பரிசுச் சீட்டு

முதல் பரிசு:

# ரூ. 1,00,000

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

54-வது குலுக்கல் நாள்

# 10-4-1973

பரிசு சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.
2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

பதிவு எண். M. 8676

# நமது காவலர்



மிழக முதல்வர் டாக்டர் **மு. கருணாநிதி**

# நமது காவலர்

தமிழக முதல்வர்

டாக்டர். மு. கருணாநிதி




காவல் துறை மானியக் கோரிக்கை
விவாதங்களுக்குப் பதிலுரை.

# பதிப்புரை

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்குப் பதிலளித்து 23—3—1973 அன்று மாலை தமிழ்நாடு சட்டப் பேரவையில் உரையாற்றினார்கள்.

காவல்துறை ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் மீது காவலர்களுக்குத் தமிழ்நாடு அரசு அளித்து வரும் அளவற்ற நன்மைகளை எடுத்துக் காட்டியும், எதிர்க்கட்சியினரின் கடுமையான விமரிசனங்களுக்கு ஆட்பட்டுத் தீரவேண்டிய அவசியத்தில் உள்ள காவலர்கள் கடமையாற்றிடும் நேர்மை குறித்து விளக்கியும், அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

அதனைத் தொகுத்து 'நமது காவலர்' என்ற தலைப்பிட்டுச் சிறு நூலாக்கி 1—4—1973 தமிழரசு இதழுடன் இலவச இணைப்பாக தமிழக மக்கட்குப் பயன்படும் வண்ணம் வழங்குகின்றோம்.

சென்னை, செய்தி—மக்கள் தொடர்புத் துறை,
1—4—1973. தமிழ்நாடு அரசு.

# சட்டப் பேரவை

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே! தமிழ்நாடு காவல்துறை மானியம் குறித்துக் காலையிலே யிருந்து அனைத்துக் கட்சிகளுடைய தலைவர்களும் இந்த மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களும் பல கருத்துக் களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இன்று ஒருவரைவிட ஒருவர் வேகமாகப் பேச வேண்டும் என்பதிலே நல்ல போட்டி இருந்தது என்பதை நான் காலையிலிருந்து கூர்ந்து கவனித்து வருகின்றேன். அந்தப் போட்டியிலே யார் வென்றார்கள் என்பதை என்னால் சொல்ல முடியாவிட்டாலும்: அவர்கள் போட்டுக்கொண்ட போட்டியிலே யாருடைய போர்க் கருவி கூர்மையானது என்பதைச் சோதித்துப் பார்க்க என்னைத் தான் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதை மாத்திரம் நான் மறந்துவிடவில்லை.

## உதய சூரியன்

இறுதியிலே எனக்குப் பெருமகிழ்ச்சி என்னவென்றால்— நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள், நான் எழுதி, காங்கிரஸ் அமைச்சர்



களால் தடைசெய்யப்பட்ட உதய சூரியன் என்ற நாடகத்திலே வருகின்ற தாலாட்டுப் பாட்டை அவரே பாட வேண்டிய ஒரு நிலைமைக்குக் கொண்டுவந்து வைத்துவிட்டேனே என்பதிலே எனக்கு ஒரு பெரிய மகிழ்ச்சி. அந்த நாடகத்தை ஏன் தடை செய்தீர்கள் என்று முன்னாள் முதலமைச்சர் பெரியவர் திரு. பக்தவத்சலம் அவர்களை இந்த மன்றத்திலே கேட்டு, இந்தப் பாடல் தடை செய்யப்பட வேண்டுமா என்பதற்காக அதை இந்த மன்றத்திலே நான் படித்துக் காட்டினேன். பாடிக் காட்டவில்லை. பாடியிருந்தால் இந்த மன்றம் உடனடியாகக் கலைந்துவிடும். எனவே நான் பாடிக் காட்டவில்லை, படித்துக் காட்டினேன். ஆனால் அவர்கள் என்னுடைய பேச்சுக்கு ஒரு நல்ல தொடக்கத்தை எடுத்துக் கொடுத்தார்கள் என்பதிலே நான் பெருமையடைகிறேன். ஏனெனில் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த நேரத்திலேயும் போலீசாருடைய துன்ப துயரங்களில் எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நிறைந்த அக்கறை இருந்தது என்பதை எடுத்துக்காட்டுகிற வகையிலே அவர்கள் இங்கு படித்துக் காட்டிய இந்தப் பாடல் இருப்பதை அனைவரும் அறிவீர்கள்.

## நிலவிலே களங்கம்

இன்று இங்கு பேசிய பலருடைய பேச்சில் ஒருவர் இருவர் தவிர; பரிதாபத்திற்குரிய காவல் துறையிலே இருக்கின்ற காவலர்களைப்பற்றி, அவர்களுடைய கஷ்டங்களைப் பற்றி. அவர்களுக்கு இன்னும் மேலும் என்ன என்ன வசதிகளைச் செய்து தரவேண்டும் என்பதைப்பற்றி அதிகமாகப் பேசவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. ஓரிருவர் பேசிய பேச்சிலேயும் மிகப் பெரிய இடத்தை அதற்காக அவர்கள் யாரும் தரவில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தபோது நான் என்ன சொன்னேன். நிலவிலே களங்கம் இருப்பதைப்போல் இந்தத் துறையிலேயும் சில பேர் இருக்கிறார்கள் என்று நான் அன்றைக்குச் சொன்னதையும் இன்று சுட்டிக்காட்டினார்கள். முதலமைச்சர் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டதற்குப் பிறகும் அதே விதமான கருத்தைச் சொல்லியிருக்கிறேன். இந்தத் துறையிலே இருக்கின்ற அத்தனை பேர்களும்

தூய்மையானவர்கள் இந்தத் துறையைக் கட்டிக்காக்கின்றவர்கள். இந்தத் துறையிலே பரந்து கிடக்கின்ற பல்லாயிரக்கணக்கான காவலர்கள், அவர்களுடைய துணை அதிகாரிகள் அனைவருமே தூய்மையானவர்கள் என்று நான் எடுத்துக் கொண்டு இங்கு எழுப்பப்பட்ட விவாதங்களுக்குப் பதில் சொல்ல விரும்பவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சிலரிடத்தில் நாம் வெறுப்பு அடைகிற அளவிற்குச் சில தவறான எண்ணங்கள் தவறான செயல்கள் நிச்சயமாக இருந்திடக் கூடும். அவைகளையெல்லாம் இது போன்ற மாமன்றங்களில் விவாதிக்கப்படுகிற நேரத்திலே, எடுத்து விளக்கப்படுகிற கருத்துக்களின் மூலமாக அவர்களே திருத்திக் கொள்வதற்கும் வழி ஏற்படும் என்ற வகையில் தான் மாண்புமிகு உறுப்பினர்கள் சூடாகத் தங்களுடைய உரைகளை ஆற்றியிருந்தாலும் கூட, சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை, அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு உரியவர்கள் நிச்சயமாக சிந்தித்துப் பார்ப்பார்கள் என்ற நம்பிக்கையையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்வேன். தாலாட்டுப் பாடலிலே போலீசாருடைய வீட்டிலேயிருக்கின்ற கஷ்டங்களை ஆராரோ பாடுகின்ற அம்மையின் வாயிலாக நான் விளக்கி இருந்தேன். அந்தப் பாட்டோடு நின்றுவிடாமல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு, அதிலும் குறிப்பாக 1969-ஆம் ஆண்டு நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றபிறகு, அந்தப் பாட்டை நினைவில் வைத்துக்கொண்டு போலீசாருக்கு உடனடியாகச் சில வசதிகளை-வாய்ப்புகளை உருவாக்கித் தரவேண்டுமென்பதற்காகப் போலீஸ் குழு ஒன்றை, காவல் துறை ஆணைக் குழு ஒன்றை அமைத்தேன்.

## ஆணைக்குழு

திரு. ஆர். ஏ. கோபாலசுவாமி ஐ. சி. எஸ். அவர்களுடைய தலைமையில், திரு. சிலம்புச்செல்வர் ம. பொ.சி. அவர்களும், திரு. கோவிந்தசாமிநாதன் அவர்களும், திரு. சந்திரசேகரன் அவர்களும், திரு என். கிருஷ்ணசாமி அவர்களும் உறுப்பினர்களாகக் கொண்டு, குழு அமைக்கப்பட்டது. அந்த குழுவினுடைய அறிக்கை 2—1—1971-ல் அரசுக்கு அளிக்கப்பட்டது. அந்த அறிக்கையிலே 133 பரிந்துரைகள் சொல்லப்பட்டன.




அந்தப் பரிந்துரையிலே 122 பரிந்துரைகளை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அப்படி ஏற்றுக் கொண்ட 122 பரிந்துரைகளில் மிக முக்கியமான 15 பரிந்துரைகள் அமல் நடத்தப்பட்டுவிட்டன என்பதையும், 27 பரிந்துரைகள் இப்போது அமல் நடத்தப்படுகிற கட்டத்திலே ஒன்றன்பின் ஒன்றாகச் செய்யப்பட்டுவருகின்றன என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வேன். அமல் நடத்தப்பட்ட அந்த 15 பரிந்துரைகளில் ஊதிய விகிதம், பஞ்சப்படியை மாற்றியமைத்தல். அவர்கள் பாடிக் காட்டினார்கள். துப்பாக்கி எடுத்துக்கிட்டுப் போகின்ற உங்க அப்பனிடம் பழம் பாக்கி கேட்டு வருகிறார் கடன்காரர் என்று சொன்னார்கள். ஏன் அப்படிக் கேட்டு வந்தார்கள் தெரியுமா? அவர்களுக்கு அடிப்படைச் சம்பளம்1970-ஆம் ஆண்டு வரையிலே 70 ரூபாயாக இருந்தது. ஆகவே துப்பாக்கிக்கு முன் பழம் பாக்கிக்காரன் வந்து நின்றுகொண்டிருந்தான். இந்த 70 ரூபாய், போலீஸ் கமிஷன் பரிந்துரைகளுக்குப் பிறகு 150 ரூபாயாக அவர்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. முதல் நிலைக் காவலர்களுக்கு 200 ரூபாயாக மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, 70 ரூபாய் சம்பளத்திலிருந்த காவல் துறை நண்பன் இன்றைக்கு 150 ரூபாய் சம்பளம் பெறுகின்ற அளவிற்கு உயர்த்தி அளித்திருப்பது, பாட்டு எழுதியதோடு மாத்திரமல்ல, அந்தப் பாட்டின்

கருத்தைச் செயல்படுத்த வேண்டுமென்ற எண்ணம் உள்ளத்தில் இருந்த காரணத்தினுல்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்வேன். தலைமைக் காவலர்கள் 90 ரூபாய் ஊதியம் பெற்று வந்தார்கள். இப்போது 210 ரூபாய் ஊதியம் பெறுகிருர்கள். காவலர்களும், தலைமைக் காவலர்களும் குறைந்த பட்சம் 25 ரூபாய் இப்போது ஊதிய உயர்வு பெற்று வருகின்ருர்கள். அடுத்தபடியாக, காவல் துறையிலே உள்ள பதவிகளை மற்ற இலாகாவிலே உள்ள இது போன்ற பதவிகளோடு ஒப்பிட்டு ஊதிய நிர்ணயம் செய்ய வகை செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் காவல்துறை ஆணைக்குழுவின் சிபாரிசின்படி சிறப்பு ஊதியங்கள் அதிகமாக்கப்பட்டுள்ளன. வீட்டு வாடகைப்படி அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானுல் பெருநகர்ப் பகுதிகளில் பணியாற்றுகிற இரண்டாந்தரக் காவலர்களுக்கு 1—10—1970-க்கு முன்னுல் 7 ரூபாய் வாடகைப்படியாகத் தரப்பட்டது. 1972-73-ல் இந்த வாடகைப்படி 25 ரூபாயாகவும், 1973–74-ல் 30 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. மற்ற அதிகாரிகளுக்கும் இது போன்ற வாடகைப் படி உயர்த்தப்பட்டிருக்கிறது. பெரு நகர் அல்லாத மற்ற ஊர்களில் உள்ள காவலர்களுக்கு வாடகைப் படி 7 ரூபாயிலிருந்து 1972–73-ல் 20 ரூபாயாகவும் 1973–74-இல் 25 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

அடுத்து, வண்டி வாகனப் படி சிரமைப்புச் செய்யப்பட்டு இருக்கிறது. உதாரணத்திற்கு 1—10—1970-க்கு முன் 4 ரூபாய் பெற்று வந்த காவலர்கள் இப்போது இந்த வண்டி வாகனச் சீரமைப்புப் படி 5 ரூபாய் பெறுகிருர்கள். 31 ரூபாய் பெற்று வந்த சப்இன்ஸ்பெக்டர்கள் வண்டி வாகனப் படியாக இப்போது 40 ரூபாய் பெறுகின்ற நிலைமையைப் பெற்று உள்ளார்கள். 1—6—1966-ல் குறைந்த பட்ச ஊதியம் 70 ரூபாயாக இருந்த போது நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் பயிற்சிக்குச்சேரும் போது அவருக்குத் தரப்பட்ட ஊதியம் 60 ரூபாயாக இருந்தது. 1—6—1966-ல் நேரடியாகப்பயிற்சிக்கு ஒருவர் வந்து இணைவாரானுல் அவருக்கு 60 ரூபாய் ஊதியம் தரப்பட்டது. இப்போது காவலர்களுடைய சம்பளம் குறைந்தபட்சம் 150 ரூபாயாக ஆக்கப்பட்டு விட்ட காரணத்தினுல் பயிற்சிக்காலத்தில் அவர்களுக்குத் தரப்படுகிற ஊதியம்

146 ரூபாயாக ஆக்கப்பட்டிருக்கிறது. காவல் படை சேம நல நிதி என்பது ஈட்டுத் தொகையாக அரசு சார்பில் வழங்கப்பட்டதை மாற்றி 1971-ல் சேம நல நிதிக்கு அரசின் சார்பில் 1 லட்ச ரூபாயும், 1972-ஆம் ஆண்டு 1½ லட்ச ரூபாயும் வழங்கப்பட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்வேன். இதனல் 1967-ஆம் ஆண்டு இந்த சேம நல நிதியின் சார்பாக நிதியுதவி பெற்ற மாணவர்களுடைய எண்ணிக்கை 182 ஆக இருந்ததற்கு மாருக 1972-ல் 512 ஆக உயர்ந்திருக்கிறது என்பதையும் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள முடியும். காவலர்களுக்கும், படைக்கலன் தாங்கிய காவலர்களுக்கும் (S.A.P.) இடையே இருந்த ஈட்டு விடுப்பு ஊதியத்திலிருந்த மாறுபாடுகள் களையப்பட்டுவிட்டன.

## பரிந்துரை விளைவுகள்

இந்தப் பரிந்துரையின் அடிப்படையில் (D. I. G. Services and co-ordination) டி.ஐ.ஜி. பணிகள் என்ற பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது. குற்றங்கள், குற்றவாளிகள் பற்றிய விவரங்கள், இவைகளை இயந்திரங்களின் மூலம், கம்ப்யூட்டர் மூலம், கணக்கு எடுக்கும் முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது இந்தப்பரிந்துரை அடிப்படையில். இதன் மூலம் பழைய குற்றவாளிகள் கைரேகை, அங்க அடையாளங்கள், குற்ற விவரங்கள் அனைத்தும் சேகரிக்கப்பட்டு, பிறிதோர் குற்றம் நடக்கிற நேரத்தில் பழைய விவரங்களையெல்லாம் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு இந்த இயந்திரம் பெரிதும் பயன்படுகிறது. இதன்படி 1963 முதல் 1973-ஆம் ஆண்டு வரை நடைபெற்றுள்ள 5 லட்சம் குற்றங்களையும், 3 லட்சம் குற்றவாளிகள் பற்றிய விவரங்களையும் 73 ஜூலைக்குள் கணக்கீடு செய்து வைக்கப்படும். இந்தியாவிலேயே தமிழ்நாடு காவல் துறையில் தான் இந்த முறையை முதன்முதலாக மேற்கொண்டிருக்கிறோம் என்பதைப் பெருமையோடு நான் சொல்லிக் கொள்ளமுடியும். இந்தப் பரிந்துரைகளும், இதன் தொடர்பான ஏனைய பரிந்துரைகளும் நிறைவேற்றப்பட ஒரு கோடியே அறுபத்தெட்டு லட்சம் ரூபாய் செலவாகிறது.

## விவரங்கள்

மேலும் இப்போது அமல் நடத்தப்படுகிற 27 பரிந்துரைகளுக்கான விவரங்களை நான் சொல்லியாகவேண்டும். அவர்கள்

தாலாட்டுப் பாட்டுப் பாடியதற்காக இவைகளை நான் விவரமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. சப் இன்ஸ்பெக்டர்கள், காவலர் முதல் நிலை, இரண்டாம் நிலை, ஆகியோருக்குப் பயிற்சிக் காலத்தை மாற்றிப் புதிய திட்டப்படி பயிற்சியளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. காவல் துறையினரில் 80 சதவீதம் பேருக்கு வீட்டு வசதி அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தஞ்சை, கோவை காவல் மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. காவல் வட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றன. புலனாய்வு, நீதிமன்றப் பணி, ரோந்து வருதல் போன்ற முக்கியப்பணிகளுக்கு முதல் நிலைக் காவலர்கள் என்ற ( First Grade Constables ) புதிய பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளதில் 3 ஆயிரம் பேர் முதல் நிலைக் காவலர்களாகப் பயன்பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் கண்ட்ரோல் ரூம் ஏற்படுத்துவதற்கான முயற்சி. ஒவ்வொரு மாவட்டத்திலும் கை விரல் ரேகைப்பிரிவு, நிழல் படப் பிரிவு ஏற்படுத்துதல், காவல் வானொலிப் பிரிவில் அதிகப்படியான டணியாளர்களை நியமித்தல். கணக்கீடு நிலையத்தல் அதிகப்படியான பணியாளர்களை நியமித்தல், சம்பளப் பட்டியல் தயாரிக்க பிராட்மா ( Bradma ) முறையைக் கொண்டு வருதல். வாகன வண்டிகளை ஏழாண்டுகளில் அதிகரித்தல், காவல் நிலையங்களை மாவட்டத் தலைமை நகரங்களோடும் மாநிலத் தலைமையிடத்தோடும் இணைப்பதற்கு ரேடியோ சாதனங்கள், டெலிபிரிண்டர்கள், உருவ நிழல் ஊடனுப்பி ஆகியவைகளை அமைத்தல். இவையும் இவை போன்ற மொத்தம் 27 பரிந்துரைகளும் நிறைவேற்ற 3 கோடியே 24 லட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ள 122 பரிந்துரைகளைஅமல் நடத்தினால் தொடராச் செலவு 6 கோடியே 10 லட்சமும், ஆண்டுதோறும் ஆகிற செலவு 2 கோடியே 81 லட்சமும் அதிகமாகும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்வேன்.

1967-ல் 34,964 பேர் காவல் துறை ஆட்படையின் எண்ணிக்கையாக இருந்தது. 1972-73-ல் 43,364 ஆக அது உயர்ந்துள்ளது. இன்னும் ஐந்தாண்டுகளில் இந்த விகிதாசாரத்தில் 46,000 மாக அதிகரிக்கக்கூடும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்வேன்.

குற்றப் புலனாய்வுகளைக் கவனிக்க, சப் இன்ஸ்பெக்டர்களுக்கும் இன்ஸ்பெக்டர்களுக்கும் இடையே துணை இன்ஸ்பெக்டர் (டெபுடி இன்ஸ்பெக்டர்) என்ற புதிய பதவியும் விரைவில் ஏற்படுத்தப்பட இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்வேன்.

இன்று காலையில் பேசிய உறுப்பினர்கள் எல்லாம் அவர்களுக்கு சைக்கிள், மோட்டார் சைக்கிள் இவைகள் எல்லாம் வழங்க வேண்டுமென்பதை வலியுறுத்திச் சிலபேர் பேசினார்கள். 1970-ல் சட்டப் பேரவையிலே கிராமப்புறக் காவல் நிலையங்களுக்குப் படிப்படியாக மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படும் என்று நான் அறிவித்ததற்கு ஏற்ப 1971-ல் 100 மோட்டார் சைக்கிளும், 1972–73-ல் 43 மோட்டார் சைக்கிளும், 1973–74-ல் 100 மோட்டார் சைக்கிளும் வழங்கப்படும் என்ற நிலைமையும் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்வேன். 143 மோட்டார் சைக்கிள்கள் ஏற்கெனவே வழங்கப்பட்டாகிவிட்டது.

அதே போல் கிராமப்புறக் காவல் நிலையங்களுக்கு சைக்கிள் வாங்கக் கடன் தொகை-உதவித் தொகை (Loan-Cum-Subsidy Scheme) என்ற அடிப்படையில் 5,000 சைக்கிள் வாங்க அனுமதிக்கப்பட்டு இதுவரை 2,390 சைக்கிள் வாங்கிக் காவலர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்வேன்.

மாநிலத்திலுள்ள 251 காவல் வட்டங்களில் 200 வட்டங்களுக்கு வாகன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, 1970-ல் 88 வாகனங்கள் இருந்தன. 1971-ல் 44 வாகனங்களும், 1972-ல் 68 வாகனங்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

மாநிலத்திலுள்ள 820 காவல் நிலையங்களில் இதுவரை 450 காவல் நிலையங்களுக்குத் தொலைபேசி வசதிசெய்து தரப்பட்டிருக்கிறது. 1972–73-ல் 166 காவல் நிலையங்களுக்குத் தொலைபேசி வைக்க 10—1—1973 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 120 காவல் நிலையங்களுக்குக் கம்பியில்லாத்தந்தி இணைப்புக் கொடுக்க 24—12—1971-ல் உத்தரவு தரப்பட்டு இணைப்பு வேலைகள் முடிவடைந்துள்ளன. 1972–73-ல் 270 காவல் நிலையங்களுக்குக் கம்பியில்லாத் தந்தி மூலம் இணைக்கப்பட்டுச் செயல்பட விரைவில் உத்தரவு வழங்கப்படும்.

## அண்ணா பிறந்த நாளில்

காவல்துறை அதிகாரிகளை எல்லாம், அதிலே திறமையாகப் பணியாற்றியவர்களை எல்லாம், நாம் பாராட்ட வேண்டும்; கவுரவிக்க வேண்டும் என்ற கருத்தைக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதற்காகத்தான் தமிழக அரசில் புதிய திட்டமாக முதலமைச்சர் பதக்கம் என்ற பெயரால் வீரச் செயல் புரிந்தவர்களுக்குத் தகுதியின் அடிப்படையில் பல ஆண்டுக் காலமாக நற்பணியாற்றியவர்களுக்குப் பொற்கிழி அளித்தல், பொற்பதக்கம் வழங்குதல் என்ற புதிய ஏற்பாட்டைச் செய்து, ஒவ்வொரு ஆண்டும் அறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் திங்கள் 15-ஆம்நாள் முதலமைச்சர் பதக்கம், அந்த விருது பெறுகிறவர்களுக்கு விழா நடத்தி வழங்கப்படும் என்று அறிவித்ததற்கு ஏற்ப, வழங்கப்பட்டு வருகிறது.

வீரச் செயலுக்கான தங்கப் பதக்கமும் ரூபாய் மூவாயிரமும் தரப்படுகிறது.

கடமையுணர்வோடு பணியாற்றியமைக்காக காவலர்களுக்கும், தலைமைக் காவலர்களுக்கும் ரூபாய் ஆயிரமும் பதக்கமும் தரப்படுகிறது.

சப்-இன்ஸ்பெக்டர் நிலையில் உள்ளவர்களுக்குப் பதக்கமும் ரூபாய் இரண்டாயிரமும் வழங்கப்படுகிறது.

டி. எஸ். பி. நிலையில் உள்ளவர்களுக்குப் பதக்கமும் ரூபாய் மூவாயிரமும் வழங்கப்படுகிறது. இவர்களில் தீயணைப்புப் படையினரும் சேருகிறார்கள்.

1969-ல் வீரச் செயலுக்கான பதக்கம் இரண்டும், தலைசிறந்த பணிக்கான பதக்கம் 20-ம் வழங்கப்பட்டிருக்கின்றன.

1970-ல் வீரச் செயலுக்கான பதக்கம் நான்கும், தலைசிறந்த பணிக்கான பதக்கம 20-ம் வழங்கப்பட்டிருக்கின்றன. 1971-ல் வீரச் செயலுக்கான பதக்கம் ஐந்தும் தலைசிறந்த பணிக்கான 23-ம் வழங்கப்பட்டிருக்கின்றன.

1972-ல் வீரச் செயலுக்கான பதக்கம் மூன்றும், தலைசிறந்த பணிக்கான பதக்கம் 22-ம் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பதக்கம் அளிக்கும் விழா சென்னையிலேயே தொடர்ந்து நடைபெறுவது என்று இல்லாமல் ஒவ்வொரு மாவட்டத்தினுடைய தலைநகரிலும் ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

## கட்டாய விடுப்பு

இங்கு அவர்களுடைய கட்டாய விடுப்பு ஊதியம் அதிகப்படுத்தப்பட வேண்டுமென்று சிலர் பேசினார்கள். ஏற்கெனவே காவல் துறையினருக்கும் தலைமைக் காவலருக்கும் வாரத்தில் ஒரு நாள் கட்டாய விடுப்பு அளிக்க வேண்டுமென்றும், ஆனால் அந்த நாளில் ஏதோ பொதுப் பணியின் காரணமாக, அவசரத் தேவையின் காரணமாக, அவர்கள் அந்த விடுப்பினை எடுத்துக் கொள்ள முடியாமல்—அவர்களுக்கு விடுப்பு வழங்கப்படாமல்—பணியாற்ற அழைக்கப்படுவார்களானால், அந்த ஒரு நாளைக்கு அவர்களுக்கு ஒரு ரூபாய் ஊதியம் தரப்பட்டது. இப்போது அந்த ஊதியம் இரண்டு ரூபாயாக உயர்த்தப்பட்டு, இரண்டு நாளைக்கு முன்பு அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுவேன். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ஆகும் அதிகச் செலவு ரூ. $2\frac{1}{2}$ லட்சமாகும். இதனால் ஏறத்தாழ 10,000 காவலர்கள் பயனடைவார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பணிபுரியும் நேரத்தில்

பணிபுரிகிற நேரத்தில், நண்பர் வகாப் அவர்கள் காலையிலே பேசும்போது எடுத்துக்காட்டியது போல், பல காவலர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். அங்க ஈனர்களாக ஆகிறார்கள்; உயிரிழப்புக்கு ஆளாகிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய குடும்பங்களை நிர்க்கதியாக விட்டு விடாமல் அந்தக் காவலர்களுடைய குடும்பங்களை ஓரளவுக்கு மனிதாபமான உணர்ச்சியோடு நோக்குகின்ற பொறுப்பினையும் இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் 1969-ம் ஆண்டு சனவரி 21-ம் நாள் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பரமத்தி என்ற ஊரில் காவலர் மாரிமுத்து என்பவர் ஒரு முரடனைப் பிடிக்கப் போகும்போது குத்திக் கொல்லப்பட்டார். அவ

ருடைய மனைவிக்கு முதலமைச்சர் பதக்கமும், 3,000 ரூபாயும் அண்ணா பிறந்த நாள் அன்று வழங்கப்பட்டது. அது தவிர சேமநல நிதியிலிருந்து 2,000 ரூபாயும் வழங்கப் பட்டது.



4–1–69 அன்று ஒரு குற்றவாளியைப் பிடிக்கும் போது ஏற்பட்ட மோதலில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த காவலர் ராமசாமி கத்தியால் குத்தப்பட்டு இறந்தார். அவருடைய மனைவிக்கு 1970-ல் குடியரசுத் தலைவருடைய வீரப் பதக்கம் வழங்கப்பட்டது. நம்முடைய சேம நல நிதியிலிருந்து 2,000 ரூபாய் வழங்கப்பட்டது.

5–10–70-ல் குற்றவாளியைப் பிடிக்கச் சென்றபோது குத்துண்டு இறந்த, வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த

பழனிசாமி என்பவரின் மனைவிக்குக் குடியரசுத் தலைவருடைய வீரப் பதக்கம் வழங்கப்பட்டது. நமது சேம நல நிதியிலிருந்து 2,000 ரூபாய் தரப்பட்டது.

சிறப்பு ஆயுதப் படையைச் சேர்ந்த துளசிமணி என்பவர் அஸ்ஸாம் மாநிலத்தில் எல்லை காக்கச் சென்றபோது அங்கு பணியாற்றிக் கொண்டிருக்கும் போது மாரடைப்பால் இறந்தார். அவருடைய குடும்பத்திற்கு நமது சேமநல நிதியிலிருந்து 2,000 ரூபாய் வழங்கப்பட்டது.

5–2–1972-ல் விவசாயப் போராட்டத்தில் ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைக் காவலர் ராமசாமி எதிர்பாராத விதமாக மரணம் அடைந்ததால் அவருடைய குடும்பத்திற்கு சேமநல நிதியிலிருந்து 4,000 ரூபாய் வழங்கப்பட்டது. முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்தும் 5,000 ரூபாய் வழங்கப்பபட்டது.

22–11–1972-ல் திருநெல்வேலியில் தலைமைக் காவலர் சங்கரபாண்டியன் என்பவர் வன்முறைக் கூட்டத்தால் தாக்கப்பட்டு எதிர்பாராத விதமாக துப்பாக்கிக் குண்டிற்குப் பலியாகி மரணமடைந்தார். அவருடைய குடும்பத்திற்கு சேமநல நிதியிலிருந்து 4,000 ரூபாய் வழங்கப்பட்டது.

ஒரு சோகச் சம்பவம். 26–1–1970 அன்று குடியரசு தின அணிவகுப்பில் கலந்து கொண்ட ஹவில்தார் சங்கரபாண்டியன் கொஞ்ச தூரம் நடந்து சென்ற போது நெஞ்சுவலி ஏற்பட்டது. ஆனாலும் கடமையிலிருந்து தவறக் கூடாது என்பதற்காக அவருடைய நெஞ்சு வலியைத் தாங்கிக் கொண்டு,அணிவகுப்பு முழுவதையும் முடித்துக்கொண்டுதான் நோயைப் பற்றிச் சொல்லவேண்டும் என்று மிகுந்த சிரமத்திற்கிடையே நடந்து சென்று, அணிவகுப்பு முடிந்த இடத்திலேயே சுருண்டு விழுந்து மாரடைப்பால் இறந்துபோனார். அவருடைய குடும்பத்திற்குச் சேமநல நிதியிலிருந்து 1,500 ரூபாயும் முதலமைச்சர் நிதியிலிருந்து 3,000 ரூபாயும் வழங்கப்பட்டது.

## மனிதர்கள்தான்!

நான் இவற்றை எல்லாம் சொல்லக் காரணம்—காவலர்களும் காவல் துறை அதிகாரிகளும் நம்மவர்கள்தான். வேறு ஒரு மாற்று உடையை, ஒரு காக்கி உடையை, நம்மிலே

இருந்து வேறுபட்ட உடையை அணிந்து கொண்டிருக்கும் காரணத்தாலேயே நம்முடைய வெறுப்புக்கு ஆளாகின்ற சில உருவங்கள் என்ற அளவில் அவர்களை நாம் எண்ணிவிடக் கூடாது; அவர்களும் இந்தச் சமுதாயத்தில் ஓர் அங்கம். இந்த சமுதாயம் வளர, இந்தச் சமுதாயம் நல்ல ஒளி பெற, இந்தச் சமுதாயத்தில் குற்றங்கள் குறைந்து நல்ல தூய்மை ஏற்பட அனைவரும் சேர்ந்து ஆற்றுகின்ற பணியில் காவலர்களுடைய பணியும் இணைந்திருக்கிறது என்ற காரணத்தால்தான் மனிதாபிமான உணர்ச்சியோடு இந்த அரசு அவர்களுடைய நல்வாழ்வில் நிறைந்த அக்கறை காட்டி வருகிறது என்பதற்கு இவைகளையெல்லாம் நான் எடுத்துச்சொன்னேன்.



ஆராரோ பாடியதோடு நிற்கவில்லை; யார் யாரோ செய்யாததை எல்லாம் இன்றைக்கு நாங்கள் செய்து காட்டிக் கொண்டிருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத் தான் இந்தக் குறிப்புக்களை எல்லாம் நான் தந்தேன்.

அவர்கள் எவ்வளவு அளப்பரிய பணிகளை எல்லாம், தீரச் செயல்களை எல்லாம் ஆற்றி வருகிறார்கள் என்று எதிர்க் கட்சித் தலைவர்களே கூட, எதிர்க்கட்சி உறுப்பினர்களே கூடச் சொன்னார்கள். எந்த எதிர்க் கட்சியின் தலைவராவது இந்தத் துறை, அல்லது இந்தத் துறையினுடைய நிர்வாகம் மோசமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்களா என்று உற்றுக் கவனித்தேன். யாரும் சொல்லவில்லை. திரு ஹண்டே பேசினாலும் சரி, அம்மையார் அனந்தநாயகி பேசினாலும் சரி, நண்பர் மதி பேசினாலும் சரி, திரு. பொன்னப்பநாடார் பேசினாலும் சரி, திரு கே.டி.கே. தங்கமணி பேசினாலும் சரி, கட்சியில் உள்ளவர்கள் யார் பேசினாலும் சரி, இந்தத் துறையைச் சிலாகித்தே பேசினார்கள். காரணம் அவரவர்களுக்கு ஆசை.

நாம் விரைவிலே ஆட்சிபீடத்திற்கு வந்துவிடக் கூடும். ஆகவே இப்போதே அவர்களைப் பாராட்டி வைத்துக்கொள்ள வேண்டுமென்ற அந்த ஆசை அவர்கள் உள்ளத்தில் இழையோடுவதை அது காட்டியது. இதையெல்லாம் நீங்கள் சீரியஸாக எடுத்துக் கொள்ள வேண்டாம். சீரியஸாக என்றால் ஆட்சிக்கு வந்துவிடுவோமோ என்று சீரியஸாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்பதற்காகச் சொன்னேன்.

## தந்திரத் திருட்டுகள்!

நான் இந்த ஆய்வுரையில் சிலவற்றைக் குறிப்பிட்டிருக்கிறேன். தர்மபுரி மாவட்டத்தில் ஒருவர் அரசாங்க அதிகாரிபோல் நடித்து பயங்கரமான மோசடியில் ஈடுபட்டதைக் காவல்துறையினர் கண்டுபிடித்து இருப்பது சாதாரண விவகாரம் அல்ல.

அதேபோல் மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த சந்திரசேகரன் என்பவர் இரவு நேரங்களில் சென்னை நகரத்தில் ஜன்னல் வழியாகக் கைகளை நுழைத்தும், யாருமில்லாத நேரங்களில் உள்ளே நுழைந்தும் அவர் கிட்டத்தட்ட 203 குற்றங்களில் ஈடுபட்டவர். அவர் பிடிபட்டார். அவரிடமிருந்து ரூ. 85,000 மதிப்புமிக்க விலை உயர்ந்த தங்க நகைகள், வைர நகைகள், கடிகாரங்கள், டிரான்சிஸ்டர்கள், சைக்கிள்கள் முதலியன கைப்பற்றப்பட்டு அவருக்கு நான்கு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் வழங்கப்பட்டிருக்கின்றது.

ராகவேந்திர ராவ் என்பவர் திருமணக் கூட்டத்தில் தானும் ஒருவர் போல், ஒரு விருந்தினர் போல் வருவார். இப்போதுகூட நாம் ஒருவருக்குக் கல்யாண அழைப்பிதழ் அனுப்பினால் அது அவருக்குப் போய்ச் சேருவதில்லை, வேறு யாரோ வாங்கிக் கொள்கிறார்கள். அப்படி வாங்கிக் கொண்டு அவர் விருந்துக்கு வருவார். நாம் அவருக்கு அழைப்பிதழ் அனுப்பி யிருப்போம் என்று எண்ணிக்கொண்டுஅவரை வரவேற்போம். மணமகன்வீட்டில் உள்ளவர்கள் அவர் மணப்பெண் வீட்டைச் சேர்ந்தவர் என்று கருதிக்கொள்வார்கள், மணப்பெண் வீட்டைச்சேர்ந்தவர்கள் அவர் மணமகன் வீட்டைச் சேர்ந்தவர் என்று கருதிக் கொண்டு வரவேற்பார்கள். அப்படி விருந்தாளி போல் இந்த ராகவேந்திர ராவ் திருமண வீடுகளில் நுழைந்து நடத்திய பல்வேறு திருட்டுகளில் ரூ. 20,000 மதிப்புள்ள நகைகள் அவரிடமிருந்து மீட்கப் பட்டிருக்கின்றன. அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

1971 டிசம்பரில் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள் 8 பேர்கள் வில்லிவாக்கத்தில் வந்து தங்கினார்கள். அவர்கள் ஆனந்தராவ் என்பவர் தலைமையில் புகை வண்டிகளில் கொள்ளையடித்தார்கள், வழிப்பறிக்கொள்ளைகள் நடத்தினார்கள். இவர்களும் காவல் துறையினருடைய திறமையினால் பிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

செங்கல்பட்டிலும், சென்னையிலும் கன்னக்களவுகளில் ஈடுபட்ட டெல்லிப் பட்டணத்தைச் சேர்ந்த பவேரியா, ஜான்சி ஆகிய குற்றவாளிகள் கைது செய்யப்பட்டதும் ஓர் சாதாரண விவகாரம் அல்ல. ஆந்திராவைச் சேர்ந்த கள்ள நோட்டு அச்சடிக்கும் கூட்டம் ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. 1970 ம் ஆண்டு நவம்பர் முதல் 1972 நவம்பர் வரையில்—எதிர்க்கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டினார்களே அந்த பயங்கரப்படுகொலைகள், 7 படு கொலைகள், 4 திருட்டுக்கள் நடத்திய எட்டுக் கொடியவர்களை நம் போலீஸ் இலாக்கா கைது செய்தது பாராட்டுக்குரிய அம்சமாகும். அவர்களை நான் தனிப்பட்ட முறையில் பாராட்டியிருக்கிறேன் என்றாலும் இந்த மாமன்றத்தின் சார்பில் அந்தக் காவல் துறை அதிகாரிகள் அனைவரையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் கூட்டத்தினர் நடத்தியது கொலை மாத்திரமல்ல

களவும் ; ரூ, 5½ லட்சம் வரையில் கொள்ளையடித்திருக்கிறார்கள். இதுவரையில் ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள நகைகளும் ரொக்கப் பணம் கொஞ்சமும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. புலனாய்வுத் துறை தொடர்ந்து தீவிரமாகத் தன்னுடைய விசாரணையை மேற்கொண்டிருக்கிறது.

## குறையவில்லையா?

குற்றங்கள் கடந்த காலத்தில் முதல் அமைச்சர் அவர்கள் முன்பெல்லாம் எடுத்துக் காட்டியதைப்போல் குறைந்து விடவில்லை என்று, இது முதலமைச்சர் அவர்களுடைய திறமைக்கு ஒரு சான்று என்று நம் நண்பர் ஹண்டே அவர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள். அவர்கள் 71, 72 இந்த இரண்டு ஆண்டுகளுக்கும் இந்த ஆய்வுரையில் இருப்பதைப் பார்த்து 71-ல் 25,830 குற்றங்கள், 72-ல் 26,080 குற்றங்கள் என்பதைச் சொல்லி, உயர்ந்திருக்கிறது என்றும் சொன்னார்கள். நான் இந்த ஆயிரம் உயர்வு அல்ல என்று சொல்லமாட்டேன். ஆனால் 66-ல் 28,477-ஆக இருந்து 67-ல் 28,787-ஆக இருந்து இப்போது 26,080-ஆகக் குறைந்திருக்கிறது. அது மேலும் குறைய வேண்டும். அதேநேரத்தில் இதிலே இருசார்புடைய கருத்துக்கள் இருக்கின்றன. குற்றங்கள் குறைந்திருப்பது பற்றி ஆய்வுரையில் சொல்லும் போது நிறையக் குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. நீங்கள் கண்டு பிடிக்காமல் விட்டு விட்டீர்களா? என்ற கேள்வியும் எழலாம். அல்லது நிறையக் குற்றங்கள் நடக்கும் அளவிற்கு காவல் துறை சரியாக பணியாற்றவில்லையா என்கின்ற கேள்வியும் எழலாம். ஆனால் இன்னும் குற்றங்கள் குறைவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்காகத்தான் இன்னும் நவீன வசதிகளையெல்லாம் காவல் துறைக்குச் செய்து கொடுக்க இந்த அரசு தக்க முயற்சிகளை எல்லாம் எடுத்து வருகிறது என்பதை நான் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

## கள்ளநோட்டு வழக்குகள்

கள்ளநோட்டு வழக்கு சம்பந்தமாகக்கூட மாண்புமிகு டாக்டர் ஹண்டே அவர்கள் இங்கு குறிப்பிட்டார்கள். நாம் 71–72 ஆம் ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டிருந்த அந்த வழக்குகள் எதுவும் அப்படியே நின்றுவிடவில்லை. மேலும் முயற்சிகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திருப்பூரில் நடந்த ஒன்றைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். திருப்பூரில் கள்ள நோட்டு வழக்கு விசாரிப்பதற்காகத் தனிக் கோர்ட் நியமிக்கும்படி உயர் நீதி மன்றத்தைப் போலீஸ் துறையினர் கேட்டார்கள். தனிக் கோர்ட் ஒரு மாதத்திற்குமுன்பு அமைக்கப்பட்டுள்ளது. ஆகவேதான் இது வரையில் அந்த விசாரணை எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கிறது. சேலம் 1970-ம் ஆண்டு கள்ள நோட்டு வழக்கு கோர்ட்டில் விசாரணையில் உள்ளது. திருப்பூர் வழக்கோடு இந்த வழக்கு தொடர்புடையது. அதுவும் விசாரணை நடைபெற்று வருகிறது. தர்மபுரி மாவட்டத்தில் இப்படிப்பட்ட கள்ளநோட்டு வழக்கு பற்றி நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு விட்டது. 26—3—1973-ல் இந்த வழக்கு விசாரணைக்கு வர இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ராயப்பேட்டை கள்ள நோட்டு



வழக்கு. இதில் நாற்பது குற்றவாளிகள் மொத்தம்ஈடுபட்டிருக்கிறார்கள். இதில் கேரளாவைச் சேர்ந்தவர்கள் 19 பேர்கள் இருக்கிறார்கள். தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 21 பேர்கள் இருக்கிறார்கள் இதில் முக்கியகுற்றமாகிய அச்சடிக்கும்குற்றம் கேரளாவில் நடந்தது. ஆகவே நமது போலீசார் இங்கேயே வழக்கு நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டார்கள். ஆனால் கேரளாவைச் சேர்ந்தவர்கள் இங்கு நடத்தக் கூடாது. கேரளாவில் வழக்கை நடத்த வேண்டுமென்று கேரளா கோர்ட்டில் ஸ்டே ஆர்டர் வாங்கிவிட்டார்கள். இப்போதெல்லாம் ஒரு பழக்கம்; நம் மாநிலத்தில் வழக்கு நடத்தக்கூடாது. வேறு மாநிலத்தில் நடத்தவேண்டும் அல்லது வேறு எங்கேயாவது நடத்த வேண்டும் என்பது வழக்கம். இதை இந்தக் கள்ள நோட்டுக்காரரர்கள் எல்லாம் பின்பற்றி கேரளா கோர்ட்டில் ஸ்டே ஆர்டர் வாங்கியிருக்கிறார்கள். பின்னர் நம் போலீஸ் வாதாடி அந்தத் தடையை ரத்துச் செய்தார்கள். கோர்ட்டிலிருந்து அதிகார பூர்வமான நடவடிக்கைக் குறிப்புகள் வந்ததும் வழக்கை இங்கு தொடர்ந்து நடத்துவதற்கு இருக்கிறது என்று ஹண்டே அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன். கோவை 'பி' ஸீரீஸ் டாலர் வழக்கு. இது கோவை கீழ்க் கோர்ட்டில் விசாரணை முடிந்த பின், செஷன்ஸ் கோர்ட்டிற்கு அனுப்பி இரண்டு வாரங்கள் ஆகின்றன. கோவை 'எல்' ஸீரீஸ் டாலர் வழக்கு கோவை நீதிமன்றத்தின் கீழ்க் கோர்ட்டில் விசாரணையில் இருக்கிறது.

திருவண்ணாமலை வழக்கு. இதில் நோட்டு அச்சடித்தவர்கள் கேரளாவைச் சேர்ந்தவர்கள். எல்லாம் அங்கிருந்துதான்! மொத்தம் 11 குற்றவாளிகள். இதில் 3 பேர்கள் கேரளாவைச் சேர்ந்தவர்கள். ராயப்பேட்டை வழக்கைப் போலவே இதிலும் கேரளாவைச் சேர்ந்தவர்கள் வழக்கைத் தமிழ் நாட்டில் நடத்தக்கூடாது என்று ஸ்டே வாங்கினார்கள். தடையை விலக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் கிடப்பில் போட்டுவிடப்படவில்லை. அதற்கான முயற்சிகள் எல்லாம் அந்தஅந்த நீதிமன்றங்களில் எடுக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகின்றன என்பதை நண்பர் ஹண்டே அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன்.

## தனிப் பிரிவு

அது மாத்திரமல்ல. இந்த வழக்குகளைப் புலனாய்வு செய்து வழக்குத் தொடர நாம் மிக்க சிரத்தை எடுத்துக்கொண்டு ஒரு டி.எஸ்.பி. தலைமையில் 3இன்ஸ்பெக்டர்கள் 6 சப்-இன்ஸ் பெக்டர்கள் 4 தலைமைக் காவலர்கள், 6 காவலர்கள் அடங்கிய தனிப் பிரிவு ஒன்றைக் குற்றப் புலனாய்வுத் துறையில் இயங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக் கிறோம். அதிலுள்ள பெரிய அதிகாரிகள் எல்லாம் இந்த நோட்டுகளை எப்படி அச்சடிக்கிறார்கள், எப்படி எப்படி ஏமாற்றுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக நாசிக்குக்கு அனுப்பப்பட்டு அங்குள்ள அரசாங்க நாணய அச்சகத்திற்குச் சென்று இது பற்றிய நுணுக்கங் களை எல்லாம் தெரிந்து அந்தப் பயிற்சிகளைப் பெற்று வந்திருக்கிறார்கள். அதாவது கண்டுபிடிக்கிற பயிற்சிகளைப் பெற்று வந்திருக்கிறார்கள், இந்தப் பிரிவு நல்ல முறையில் பணியாற்றுவதனால் கள்ள நோட்டு அச்சிடுபவர்கள் தொகை வரவர நிச்சயமாகக் குறையும் என்ற நம்பிக்கையை நாமெல்லாம் பெறலாம்.

## சிலை திருட்டு

அதே போல் சிலை திருட்டுக்கூட—மாண்புமிகு உறுப்பி னர்கள் சில பேர் சொன்னார்கள்—பெரிய சிலை திருட்டு ஒன்று 1956-ம் ஆண்டு வாக்கில் என்று கருதுகிறேன், சிவபுரம், தஞ்சைமாவட்டத்தில், நடை பெற்று, கிட்டத் தட்ட 75 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சிலையை, திலகர் என்பவர், அவர் உறவினர்கள்,அவர் தகப்பனார்; அங்குள்ள ஸ்தபதியார் எல்லாரும் சேர்ந்து 75 லட்சம் பெறுமானமுள்ள அந்தச் சிலை அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்டு—நம் ஐ. ஜி. அவர்கள் அகில உலக இன்டர்போலீல் அதைப்பற்றி விவா தித்து, அமெரிக்காவில் உள்ள அந்தச் சிலையைக் கொண்டு வருவதற்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அவர்களும் அதற்கான உதவிகளைச் செய்வதாகச் சொல்லி; டி. ஐ. ஜி. அவர்கள் அமெரிக்காவிற்க்குச் சென்று எந்த வகையில் வழக்குப் போடலாம் என்பதைப் பற்றி அதற்கான முயற்சிகளை எல்லாம் செய்து கொண்டிரு கிறார்கள். சிவில் வழக்காக இருந்தால் உடனடியாகக் கேஸ் போட்டு விட முடியும். கிரிமினல் வழக்குப் போடுவதற்கு

அங்குக் குற்றஞ்சாட்டி நிரூபிக்கும் அளவிற்கு அமெரிக்க அரசாங்கத்தின் ஒத்துழைப்பு நமக்குத் தேவையாக இருக்கிறது.

## துப்பாக்கிப் பிரயோகம்

மிக முக்கியமாக, இந்த மானியத்திலே பேசிய எதிர்க் கட்சியினுடைய உறுப்பினர்கள், தலைவர்கள் பலர் துப்பாக்கிப் பிரயோகங்களைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். துப்பாக்கிப் பிரயோகங்களில்-உள்ளபடியே நான், அப்போது எவ்வளவு நடந்தது, இப்போது எவ்வளவுநடக்கிறது,நேற்று எவ்வளவு, இன்றைக்கு எவ்வளவு என்ற கணக்குகளைக் காட்டி, அன்று நடக்க வில்லையா என்று கேட்டு, நான் பிரச்சினையைத் திசை திருப்ப விரும்பவில்லை. ஆனாலும், அந்தக் கணக்கு விவரங்களையெல்லாம் நாம் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்பதை யாரும் மறந்து விடக் கூடாது. ஏனென்றால் இதுவரையில் தமிழ்நாடு ஆட்சி பீடத்தில் உட்காராத திரு. ஹண்டே அவர்கள் கேட்பதில் ஒரு நியாயம் இருக்கலாம், திரு. தங்கமணி கேட்பதில் நியாயம் இருக்கலாம். ஆளும் காங்கிரசில் இருக்கும் சிலபேர்— கேட்பதில்கூட ஒரு நியாயம் இருக்கலாம். ஆனால் காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள்—இவ்வளவு துப்பாக்கிப் பிரயோகங்கள் நடக்கலாமா என்று கேட்கிற நேரத்தில் நாம் சிலவற்றை ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது. 1962-லிருந்து 66 வரை 5 ஆண்டுகளில் 60 துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றன. இறந்தவர்கள் 64 பேர் 1967-லிருந்து 72 வரை ஆறாண்டுகளில் 46 துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்று இருக்கின்றன. இறந்தவர்கள் 45 பேர். நான் அதை விட இது குறைவு என்று வாதிட விரும்ப வில்லை. ஆனால் இந்த அரசின் மனோநிலை இந்தத் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றிருக்கிற நேரத்திலெல்லாம் வேதனைக் கண்ணீர் வடித்து இருக்கிறது. ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். எதற்கெடுத்தாலும் துப்பாக்கிதானா என்று நண்பர் மதி அவர்கள் கூடக் கேட்டார்கள். அவர்கள் மிக வேகமாகப் பேசினார்கள். எரிமலையின் மீது நின்றுகொண்டு நீரோ மன்னன் வீணை வாசிப்பதுபோல நான் வாசிக்கிறேன் என்றெல்லாம் சொன்னார்கள். நான் சரித்திரத்தை மறந்துவிட்டேன். நீரோ

மன்னன் எரிமலையின்மீது நின்று பிடில் வாசித்தானா? அல்லது ஏழடுக்கு மாளிகையின்மீது நின்று கொண்டு பிடில் வாசித்தானா? அந்த விவரமெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால் போராட்டங்கள் எந்த அடிப்படையில் தொடங்கப்படுகின்றன? திரு.ஹண்டே அவர்கள் சொன்னார்கள். துப்பாக்கிப்பிரயோகத்தில் 10 பேர் செத்து இருக்கிறார்கள், 12 பேர் செத்து இருக்கிறார்கள் என்றால்; சுட்டவர்கள்போலீஸ்காரர்களாக இருந்தாலும் அதற்கு மறைமுகமாக இந்தக் கருணாநிதிதான் முதலமைச்சர் கருணாநிதி தான் காரணம் என்று குற்றம் சாட்டுவேன் என்று ஹண்டே அவர்கள் சொன்னார்கள். அவ்வளவு அழுத்தம் திருத்தமான வார்த்தைகள் போடாவிட்டால், இன்றைக்கு அவர் பேச்சுக்கு ஒரு நல்ல 'கிளைமாக்ஸ்' கிடைத்து இருக்காது. ஆகவே அவ்வளவு அழுத்தம் திருத்தமாக வார்த்தை போட்டுச் சொன்னார். நான்கேட்கிறேன் அதை அப்படியே மாற்றலாம். இந்தப் போராட்டத்திற்கு எல்லாம் காரணமாக இருந்தவர்கள் தூண்டிவிட்டவர்கள்தான். அந்த 10 பேர் செத்ததற்கும் இவர்கள்தான் மறைமுகமாகக் காரணமாக இருந்தார்கள் என்று நான் கூறமுடியாதா? ஏனென்றால் போராட்டத்திற்கான கோரிக்கைகளை நாம் ஆராய வேண்டும்.

## கோரிக்கை வேண்டாமா?

விவசாயப் போராட்டத்தை எடுத்துக் கொள்ளுங்கள். 1968-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் வைக்கப்பட்ட கோரிக்கை என்ன? எங்களுடைய நாட்டிற்கு இந்தி ஆதிக்கம் கூடாது. எங்கள் மொழிக்கு ஆபத்து வரக்கூடாது. தமிழைத் தாழ்த்திட இன்னொரு மொழிக்கு நாங்கள் இடம் தரமாட்டோம் என்று சூளுரைத்து இந்த நாட்டு இளைஞர் சமுதாயம், மாணவர் சமுதாயம் கிளர்ந்தெழுந்தது. அவர்களுக்கு அனுசரணையாகத் தமிழ்ச் சமுதாயமே கிளர்ந்து எழுந்து நின்றது. 1965-ம் ஆண்டில் இந்தி எதிர்ப்புப் புரட்சியே நடைபெற்றது. அப்போது ஒரு வார்த்தை, மத்திய அரசு 'இந்தியை நாங்கள் கட்டாயமாகப் புகுத்த மாட்டோம். உங்களுடைய எண்ணத்தை மதிக்கிறோம்' என்று சொல்லி யிருந்தால் 53 பேர் அந்தப் போராட்டத்திலே பிணமாகத் தேவையில்லை.

ஆனல் விவசாயப் போராட்டத்தின் நிலைமை என்ன? நாம் நிறைவேற்ற முடியாத கோரிக்கைகளைச் சொன்னார்கள். இன்னும் சொல்லப்போனல் விவசாய வருமான வரியை அதிகப்படுத்தியதற்கு ஆதரவு தெரிவித்து, அதை எங்களுடைய கட்சி ஆதரிக்கிறது என்று கூறி, இங்கே அதற்கு வாக்களித்து அதை நிறைவேற்றுவதற்குக் காரணமாக இருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் விவசாயப் போராட்டத்தின் பின்னல் நின்றது. ஆளும் காங்கிரஸ் கட்சியிலிருந்து, பிரதமராக இருக்கின்ற மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அவர்கள், என்ன சொன்னார்கள்? இந்தப் போராட்டத்திற்கு வைக்கப்பட்ட கோரிக்கைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றுதான் அவர்கள் சொன்னார்கள். ஏனென்றல், இந்தியாவில் இருக்கும் எல்லா மாநிலங்களிலும் இருக்கும் மின்சார டாரிப் ரேட் என்ன? நம்முடைய மாநிலத்திலுள்ள டாரிப் ரேட் (Tariff Rate) என்ன? அதையும் நாம் குறைப்பதாக ஒப்புக்கொண்ட பிறகும், கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக ஏற்றுக்கொண்ட பிறகும் இங்கே போராட்டம் நடத்தினர்கள். பேச்சு வார்த்தைகளிலே தீர்த்துக் கொள்ளலாம். 12 கோரிக்கைகளா, அதில் 10 கோரிக்கைகளைப் பற்றி இப்போது பேசலாம் என்கிற அளவுக்கு இறங்கி வந்த பிறகும் இங்கே போராட்டம் நடைபெற்றது. ஆனல் ஒரு வரியில் மொழிப் போராட்டத்தை நிறுத்தியிருக்க முடியும், ஒரு வார்த்தையில் அந்த மொழிப் போராட்டத்தை நிறுத்தியிருக்க முடியும்.

இது அப்படி அல்ல. இந்தப் போராட்டம் நடைபெற்ற நேரத்தில்-விவசாயிகள் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ஆளான நேரத்தில்-மதுரை மாநாட்டில் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். பேசினர். அதைத்தான் திண்டிவனம் உறுப்பினர் ராஜாராம் கூட ஞாபகப்படுத்தினர்கள். எம்.ஜி.ஆர். சொன்னர் :—

''சில இடங்களில் அராஜகங்கள் நடைபெறுகிறது என்றல் அதை அடக்கும் பொறுப்பு போலீஸாருடையது. போலீஸ் ஏன் சுட்டது? சுட்டது சரியா? என்று கேட்கிறர்கள். போலீஸார் மக்களை வன்முறையாளர்களிடமிருந்து காப்பாற்றவும், தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் சுடவேண்டிய கட்டாய நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறர்கள்'' என்று ஆகஸ்ட் 6-ம் தேதிதான் நம்முடைய நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் மதுரை மாநாட்டில் பேசினர்கள்.

## யார் அப்பாவி ?

அது மாத்திரமல்ல, இன்று நம்முடைய கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேச்சிலே கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றி இரண்டு முறை சொன்னுல் அ. தி. மு. க. வைப் பற்றி 20 முறை சொல்கிருர். அந்த அளவுக்கு அவர்கள் அந்தக் கட்சியின் மீது பற்றும் பாசமும் கொண்டிருக்கிருர்கள், நான் அதிலே குறுக்கிடுவதற்கு எந்த உரிமையும் பெற்றவன் அல்ல. ஆனுல் எம். ஜி. ஆர். அவர்கள் அந்த மாநாட்டிலே மேலும் பேசினுர். நான் இந்தப் பேச்சைப் பார்க்கிற போது அந்தப் பேச்சையும் பார்க்க வேண்டியவனுனேன். மதுரை மாநாட்டில் எம். ஜி. ஆர். அவர்கள் சொன்னுர்கள், ''கம்யூனிஸ்ட்கள் இருக்கிருர்களே; அவர்கள் நாட்டில் கலவரம் நடந்தால் முன்னுக்கு வருவதில்லே. ஏனென்ருல் பின்னுல் இருந்து கலவரங்களேத் தூண்டி விட்டு விஷமங்களேச் செய்வார்கள். அவர்களது விஷமத்தனங்களுக்கு அப்பாவிகள் இரையாவார்கள்.'' ஆகஸ்ட் 6-ம் தேதி என்னுடைய அருமை நண்பர் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதே மதுரை மாநாட்டில் எடுத்துக் கூறினுர்கள். இந்தப் பேச்சில் தான் விவசாயப் போராட்டத்தைப் பற்றியும் அவர் இங்கே குறிப்பிட்டார். குறிப்பிடும் பொழுது இவைகளே அங்கே எடுத்துச் சொன்னுர்.

கொலேகளேப் பற்றியெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லப் பட்டது. அரசியல் கொலேகள் கிட்டத்தட்ட 1970-லிருந்து 72 வரையில் ஒரு கணக்கு எடுத்தால் நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகும் கூட 70-ல் நடந்த அரசியல் கொலேகள் மொத்தம் 7. அதிலே கொல்லப் பட்டவர்கள் தி.மு.க. 21, காங்கிரஸ் 2, மற்றவர்கள் 3, அரசியல் காரணங்களுக்காகக் கொல்லப் பட்டவர்கள்—71-ல் அரசியல் கொலேகள் 9. கொல்லப்பட்டவர்களில் தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள் 5, காங்கிரஸ் 4, 72-ல் அரசியல் கொலேகள் 5. கொல்லப்பட்டவர்களில் தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள் 3, பி.எஸ்.பி. 1, காங்கிரஸ் 1. வேறு ஏதோ மணி; மற்றவர்களேப் பற்றி யெல்லாம் சொன்னுர்கள். காலேயில் அம்மையார் அவர்கள் கருப்பையா, ஆறுமுகம் பற்றிச் சொன்னுர்கள். அவர்கள் போலீஸ்(custody) கஸ்டடியில் இறந்து விடவில்லே. 14-ம் தேதி கைது செய்யப்

பட்ட கருப்பையா உடல்நோய் காரணமாக ஸ்டான்லி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, 17-ம் தேதி மரணம் அடைந்தார். அதே போல், ஆறுமுகம் கைது செய்யப்பட்டு, மார்வலியின் காரணமாகப் பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, அந்த நோயின் காரணமாக இறந்தார் என்றுதான் எனக்குத் தகவல் கிடைத்து இருக்கிறது.

## கேரளத்தில் !

நான் தமிழகத்தில் இந்த 3 ஆண்டுகளில் 1970—72 வரை நடைபெற்றுள்ள அரசியல் கொலைகளைப் பற்றிச்சொன்னேன். அதே நேரத்தில் கேரளப் போலீஸ் அமைச்சர் அங்கே சட்ட சபையில் கொடுத்த தகவல்படி, 70 முதல் 72 வரை கேரளாவில் 53 அரசியல் கொலைகள் நடைபெற்று இருக்கின்றன. அதிலே கொல்லப்பட்டவர்களில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் 17 பேர், காங்கிரஸ் 12 பேர், கேரள காங்கிரஸ் 5, சி.பி.ஐ. 4, முஸ்லீம் லீக் 3, ஆர்.எஸ்.பி. 2, ஆர்.எஸ்.எஸ். 1, இதரர்கள் 7. இது 'இந்து' பத்திரிக்கையில் 21—10—1972 அன்று வந்திருக்கிறது. கேரளப் போலீஸ் அமைச்சர் சட்டசபையில் கொடுத்த தகவல் என்று செய்தியும் வந்திருக்கிறது. ஏதோ பொய்வழக்குப் போடுகிறோம். முன்னேற்றக் கழகத்துக்காரர்களுக்கு ஏதாவது இடைஞ்சல் என்றால்....

## பொய் வழக்கா ?

டாக்டர் எச். வி. **ஹண்டே** : அந்த அளவுக்கு வரக்கூடாது என்பதற்காகத்தான் முன் கூட்டியே எச்சரிக்கை கொடுக்கிறோம். அந்த மாதிரி வரக்கூடாது. வன்முறைக்குச் செல்லக்கூடாது என்றும் சொல்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதைத்தான் நாம் அனைவரும் சேர்ந்து கோரஸ்ஸாகப் பாடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒருவர் சொன்னால் பிரயோசனம் இல்லை. எல்லோரும் சேர்ந்து வன்முறை தலை தூக்காது பார்த்துக்கொள்ளும் பெரும் பொறுப்பை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் தாக்கப்பட்டால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கொடுக்கப்படு கிற புகார் மீது எல்லாம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என் றெல்லாம் குற்றஞ்சாட்டுகிறார்கள். ஒரு உதாரணம் சொல்லு வேன். 11—1—1973 அன்று மதுரையில் சின்னுளப்பட்டியில் தி.மு.க. உறுப்பினர் ரமணி என்பவர் கொலை செய்யப்பட் டிருப்பதாக ஒரு புகார் கொடுக்கப்பட்டது. அந்தப் புகாரில் என்ன குறிப்பிடப்பட்டு இருந்தது என்றால் அ.தி.மு.க. வைச் சார்ந்தவர்கள் ஏதோ விஷம் கொடுத்து அவரைக் கொன்று விட்டார்கள் என்பது போல் புகார் கொடுக்கப்பட்டு இருந் தது. ஆனால் அதை விசாரித்த போலீஸார் அந்தப் புகார் சரியானது அல்ல என்று சொல்லி இருக்கிறார்கள். ரமணி செத்தது உண்மை. கொல்லப்பட்டது உண்மை, கொலையுண்டது உண்மை. ஆனால் அ.தி.மு.க. வினரால் கொல்லப்பட்டார் என்று புகார் கொடுக்கப்பட்டிருந்த போதி லும் அந்தப் புகார் உண்மை அல்ல...............

**திரு கே. ஏ. மதியழகன் :** தலைவரவர்களே, அ.தி.மு.க. என்கிறார்களே, க.தி.மு.க. தலைவர் பேசுகிறார்களா? சட்ட மன்றத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றிருக் கிறதே தவிர, அ.தி.மு.க. என்றில்லை. இவர் என்ன க.தி.மு.க. தலைவரா என்று கேட்கிறேன். வெளியில் வேண் டுமானால் பேசட்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் எங்களுடைய கட்சியை தி.மு.க. என்று சொல்லுகிறேன். திராவிட முன் னேற்றக் கழகம் என்பதற்கு தி.மு.க. என்று சொல்லுகிறேன். அவர்களைச் சொல்லும்போது அ.தி.மு.க. என்கிறேன். எங் களுடைய கட்சியின் முழுப்பெயரை திராவிட முன்னேற்றக் கழகம் என்று குறிப்பிடும்போது, அவர்களை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று முழுப்பெயரைச் சொல்லுகி றேன். அண்ணா என்ற பெயரைச் சொல்ல எனக்கு என்ன வெட்கம்? அண்ணா அவர்களின் கொள்கையை அப்படியே ஏற்றுக்கொண்டு செயல்படுகின்ற இயக்கம் திராவிட முன் னேற்றக் கழகம்.

## அண்ணா பெயரால்

**திரு. கே. ஏ. மதியழகன்:** அண்ணாவின் பெயரைச் சாப் பிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, அண்ணாவின் பெயரைச் சாப்பிட்டால் பரவாயில்லை. அண்ணா பெயரால் சாப்பிடக் கூடாது.

நண்பர் ஹண்டே அவர்கள் சொன்னதுபோல், இது போன்ற வன்முறைச் செயல்கள் மூன்று ஆண்டுக் காலத்தில் இங்கே 21 அரசியல் கொலைகள் தான். கேரளாவில் 53 அரசியல் கொலைகள் என்று நான் எடுத்துக் காட்டியதற்குக் காரணம், இந்த வன்முறைகள் எல்லா இடத்திலும்..

**டாக்டர் எச். வி. ஹண்டே :** நீங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிக் குறிப்பிட்டுக் கொண்டிருந்த நிகழ்ச்சியின் விவரத்தைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** விஷம் கொடுத்துக் கொன்று விட்டார்கள் என்று செய்தி வந்தது. புகார் கொடுக்கப்பட்டது. ஆனால் போலீசார் புலன் விசாரித்து, புகார் சரியானதல்ல என்று கூறி, யார் யார் மீது புகார் கொடுக்கப்பட்டதோ, அ.தி.மு.க. கட்சியினர் மீது, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிட்டார்கள். ரமணி செத்தது செத்ததுதான். அவர் தி.மு.க. உறுப்பினர். ஆனாலும் தி.மு.க.உறுப்பினர் கொல்லப்பட்டிருக்கிறார் என்பதாகப் புகார் கொடுத்திருக்கிறார்கள் என்பதற்காக, அந்தப் புகாரை அப்படியே எடுத்துக் கொண்டு யாரையும் கைது செய்யவும் இல்லை, வழக்குப் போடவும் இல்லை என்பதற்கு எடுத்துக் காட்டாகக் கூறமுற்பட்டேனே அல்லாமல் வேறு எதுவுமல்ல.

## இரு கடிதங்கள்

பொதுவாக இந்த மான்யத்தைப் பொறுத்த வரையில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிற பல்வேறு கருத்துக்கள், நமது திரு. பொன்னப்ப நாடார் சொன்னாலும் சரி, மற்றவர்கள் சொன்னாலும் சரி, அனைத்தும் இன்றைக்கு இந்த அரசால் போலீசார் ஆட்டி வைக்கப்படுகிறார்கள். போலீசார் இந்த அரசால் தூண்டிவிடப்படுகிறார்கள் என்கின்ற இந்தக் கருத்தையே அவர்கள் எதிரொலித்தார்கள். காலையில் பேசிய என்னுடைய நண்பர் திரு. காளிமுத்து அவர்கள்கூட, எனக்கு, குருவிற்குச் செலுத்த வேண்டிய வணக்கத்தை மரியாதையை எல்லாம் செலுத்திவிட்டு, நான் குருவை எதிர்க்க வேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டேனே என்றெல்லாம் இங்கே பேசி,

எதிர்ப்பதற்கான காரணம்—ஜனநாயகத்திற்குப் புறம்பாக இந்த அரசு போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே தான் என்றெல்லாம் சொன்னார். பத்து நாளைக்குள் அந்த மாற்றம் அவருக்கு ஏற்பட்டது. பத்து நாளைக்கு முன்னால் கூட ஒரு கடிதம் எனக்கு எழுதியிருந்தார். அதிலே கூட அவர் குறிப்பிட்டிருந்தார். அவர் சொன்னார் :—

''இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காத என் தலைவர் கலைஞர் அவர்களுக்கு,

வணக்கம். என் வழிபாட்டுக்குரிய தங்களைப் பற்றி ஒலிக்கின்ற—எழுதி வைக்கப்படுகின்ற தகாத வார்த்தைகளை எல்லாம் கேட்டு மனம் தாளாமல்தான் நேற்றைய தினம் என் உள்ளம் உணர்ந்ததைத் தங்களிடம் கூறினேன். என் தலைவர் இடுகின்ற ஆணையை, ஐயத்துக்கோ, கேள்விக்கோ இடமின்றி ஏற்று வழிநடக்கக் கூடிய நான்—இருக்கின்ற நிலையைக் கூற வேண்டும் என்பதனாலேயே கூறினேன். அன்றாடம் ஆயிரம் வேதனைகளைத் தாங்கிக் கொண்டிருக்கும் தங்களுக்கு நானும் துயரத்தைத் தந்துவிட்டேனோ என்று வருந்துகிறேன். இந்த உலகில் எந்த அரசியல் கட்சியின் தொண்டனும் தனது தலைவரை இதுவரை நேசித்திருக்க முடியாத அளவுக்கு உயிரினும் மேலாகத் தங்களை நான் நேசிப்பவன் என்பதையும், எதிரியின் தலையில் கிரீடமாக ஜொலிப்பதைவிடத் தங்கள் காலடியின்கீழ் புல்லாக மிதி படுவதையே நான் விரும்புகிறேன்.

தங்கள் திருவுள்ளம் இதை அறியுமாதலால் என்னைத் தவறாக நினைக்க மாட்டீர்கள் என்று ஆறுதல் அடைகிறேன். எதிர்ப்புகளுக்கு இடையிலேயே அரசியல் நடத்தி வெற்றி கண்ட தாங்கள் எடுத்த முடிவை ஏற்று, எதிர்ப்புக்கு இடையே இயக்கத்திற்கு வெற்றி உருவாக்க வேண்டும் என்ற உள்ள உறுதியோடு தங்கள் தாள் பணிந்து வணங்கி ஊருக்குத் திரும்புகிறேன் வருகிறேன். என்றும் தங்கள்,
கா. காளிமுத்து''

என்று கடிதம் எழுதினார்.

டாக்டர் எச். வி. ஹண்டே : உங்களுக்குக் கடிதம் எழுதுவதே தவறு போல் தோன்றுகிறது.

திரு ஆர். பொன்னப்ப நாடார் : Is it not confidential ?

திரு கா. காளிமுத்து : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படித்த கடிதம், அ.தி.மு.க உரு வாக்கப்பட்டதற்கு முன்பு நான் எழுதிய கடிதம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தி.மு.க. விலிருந்து விலக்கப் பட்ட எம்.ஜி.ஆர். அவர்கள், வேறு எந்த இயக்கத்திற்காவது சென்று விடுவாரோ? அண்ணாவின் கொள்கைக்குப் புறம் பாகப் போய்விடுவாரோ? என்று நான் கருதிய காரணத்தால் தான் அப்படிப்பட்ட கடிதம் எழுத நேரிட்டது. ஆனால் அண்ணாவின் கொள்கையினை ஏற்று அவ்வழி நடக்கப் புதிதாக ஒரு இயக்கம் உருவாக்கப்பட்ட பிறகு அந்தப் புனிதமான இயக்கத்தில் என்னுடைய குரு எனக்குத் கற்றுத்தந்த அரசி யல் பயிற்சிப்படி நான் அதில் இணைந்தேன் என்பதைத் தெரி வித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதோடு மாத்திர மல்ல, பிறகு 10 நாட்கள் கழித்துப் பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை ; அதன் நகல் கைப்படவே எனக்கு வந்தது.

'' என் உயிரினும் மேலாக நான் ஏற்றுக்கொண்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து நான் விலகி புதிய கட்சியில் இணையப் போவதாக வதந்திகள் உலவுவதை அறி கிறேன். தி.மு.கழகம் என் இதயத் துடிப்போடும், இரத்தச் சுழற்சியோடும் இணைந்துவிட்ட ஒன்றாகும். கலைஞர் கருணாநிதி அவர்கள் என் வழிபாட்டிற்குரிய தானைத் தலை வராவார். இதனை விட்டுப் பிரிவது என்பது என்னால் நினைத்துப் பார்க்கவே முடியாததாகும். முன்னேற்றக் கழகத்தைக் காட்டிலும் இளைஞர் உலகம் ஏற்றுக்கொள்ளத் தக்க முற்போக்குக் கொள்கைகளைக் கொண்ட ஒரு இயக்கம் தமிழகத்தில் கிடையாது. டாக்டர் கலைஞரைக் காட்டிலும் தமிழகத்தின் வழிகாட்டி வேறு எவரும் கிடையாது. எனவே, தவறான வதந்திகளை நம்ப வேண்டாம் என்று இயக்கத் தோழர்களை வேண்டுகிறேன். இவண், கா. காளி முத்து ''.

இது அண்ணா தி.மு.க. ஆரம்பித்த பிறகு அவர் எழுதிய கடிதம்.

திரு கா. காளிமுத்து : துணைத் தலைவரவர்களே, எந்தச் சூழ்நிலையில் கடிதம் எழுதப்பட்டது என்பது தங்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே! எந்தெந்தச் சூழ்நிலையில் என்னென்ன நடந்தது என்று எனக்கும் தெரியும். நாட்டுக்கும் தெரியும் ஏனென்றால் காலையில்போலீஸ் மான்யத்தின்மீது பேசும்போது அதைப் பேசினார் என்பதற்காகச்சொல்கிறேனே அல்லாமல் வேறல்ல. இந்த மான்யத்தைப் பொறுத்த வரையில் நான் எடுத்துச் சொன்னேன். காவல் துறையில் உள்ளவர்களை எந்தெந்த அளவுக்கு....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு காளிமுத்து எந்தச் சூழ்நிலையில் அவர் எழுதினார் என்பது எனக்குத் தெரியும் என்று என்னைச் சுட்டிக் காட்டினார். எனக்கு எதுவும் தெரியாது.

## உயிரைப் பணயமாக

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே. காவல் துறையிலே இருக்கின்ற நண்பர்களுக்கும் அதிகாரிகளுக்கும் உதவியினைச் செய்வதன் மூலமும், மேலும் அந்தத் துறை நல்ல முறையிலே இந்தநாட்டுக்கும், சமுதாயத்துக்கும் பணியாற்றவேண்டும் என்பதற்காகவும் பல வசதிகளை இந்த அரசின் சார்பில் செய்து கொடுத்திருக்கிறோம். அவைகள் போதுமானவைகளல்ல. ஏனென்றால் அரசு அலுவலாளர்களில் மற்றவர்களைக்காட்டிலும் காவல் துறையில் இருக்கின்ற அதிகாரிகளானாலும், காவலர்களானாலும், அவர்கள் தங்களுடைய உயிரைப் பணயம் வைத்து, இந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கின்றார்கள். அவர்களிலே தவறானவர்கள் இருக்கலாம். அவர்கள் இந்த மா மன்றத்தால் அல்லது மற்றவர்களால் அரசுக்கு சுட்டிக் காட்டப்பட்டால், அரசால் கண்டிக்கப்பட வேண்டியவர்கள், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவர்கள் என்பதை நான் நிச்சயமாக மறுக்கமாட்டேன். அதே நேரத்திலே இந்தத் துறையை நல்ல அளவுக்கு விரிவுபடுத்தி, வலிவுள்ளதாக ஆக்கவேண்டும் என்பதும் நம்முடைய பொறுப்பாகும்.

இன்றைக்கு நாட்டில் போராட்டங்கள், கிளர்ச்சிகள் அமைதியாக நடைபெற்றால் அதை ஆட்சேபிப்பதற்கு யாருமில்லை. நமது திரு பொன்னப்ப நாடார் கூடச் சொன்னார். எங்களுடைய 15-ம் தேதிப் போராட்டம் அமைதியான முறையில் நறைபெற்றது என்று சொன்னார். எந்த ஊரிலும் அமைதிக்குப் பங்கம் ஏற்படவில்லை. அதைப் போலவே, அப்படி அமைதியாக நடைபெற்ற ஊர்வலங்களைக் கட்டிக்

காக்க வேண்டிய பொறுப்பையும், அவைகளை ஒழுங்காக வழி நடத்திச் சென்றவர்களுக்குத் துணையிருக்கக்கூடிய பொறுப்பையும் காலல் துறையினர் ஏற்றுக்கொண்டனர் என்பதை



அவர்களும் மறுக்கமாட்டார்கள். அந்த அளவுக்குக் காவல்துறை நல்ல பணியை ஆற்றியிருக்கிறது. சென்னையிலாகட்டும், மற்ற நகரங்களிலாகட்டும், அமைதியான ஊர்வலங்கள் பலவற்றை நாம் கண்டிருக்கிறோம். ஏதோ ஒன்றிரண்டு ஊர்வலங்களில் சச்சரவுகள், கலவரங்கள் இந்தச் சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. அப்படி ஏற்படாமல் அந்தந்தக் கட்சியின் தலைவர்கள் அதைப் பாதுகாத்திட வேண்டும். அந்தந்தக் கட்சியின் தலைவர்கள், கட்சியின் தொண்டர்களுக்கு அறிவுரை கூறிடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வேன். நமது திரு. பொன்னப்ப நாடார் அவர்களுடைய கட்சி, மதிப்பிற்குரிய 'காமராசர் கட்சி நடத்திய ஊர்வலம் அமைதியாக நடந்தது என்று சொன்னால், அதுகூட பயமாக இருக்கிறது. ஒரு வேளை காமராசர் அவர்களுடைய கட்சியும், கழகமும் இன்றைக்கு ஒன்றாகச் சேர்ந்துகொண்டிருக்கிறதோ என்றெல்லாம் பிரசாரம் செய்கிறார்கள். திரு. பொன்னனப்ப நாடார் இங்கே வேகமாகப் பேசியதற்கே கூட ஒரு காரணம் எங்கே இப்படிச் சந்தேகப்பட்டு விடுவார்களோ என்பதுதான்.

திரு ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, அந்த மாதிரி ஒன்றுமில்லை. நான் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி வன்மையாகக் கண்டித்தேனே ஒழிய அந்த மாதிரியல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் ஊர்வலம் அமைதியாகச் சென்றால் எந்தவிதமான தொல்லையும் கொடுப்பதில்லை என்று சொன்னார்கள். ஆனால், 9-ம் தேதி நடந்த விவசாயிகள் ஊர்வலத்தில் மதிப்பிற்குரிய காமராசர் தலைமையில் நடத்திய ஊர்வலத்தில் நாங்கள் கூட இருந்தோம். ஊர்வலம் போகிற நேரத்தில் வழியில் பல இடங்களில் வழிமறித்து, பிளாசா தியேட்டருக்கு அப்புறம் சைக்கிள் டயரில் பெட்ரோல் ஊற்றி நெருப்பு வைத்துக் கொளுத்தி மெத்தை மேலிருந்து ஊர்வலத்தின் மேல் போட்டு சிதற வைத்தார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆகஸ்ட் 15 சுதந்திரத் தினத்தன்று ஓர் ஊர்வலம் நடத்தினார்கள். அப்போது அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். அண்ணா அவர்களும், நானும், நாவலரும், மதி உட்பட மற்ற அமைச்சர்களும் கவர்னர் வீட்டில் இருந்தோம். கவர்னர் ஒரு விருந்திற்கு ஏற்பாடு செய்தார் : அதில் கலந்து கொள்வதற்காக அங்கே சென்றிருந்தோம். அன்றைய தினம் இங்கே ஊர்வலம் நடைபெற்றது. அந்த ஊர்வலம் ' தென்னகம் ' 'முரசொலி' அலுவலகங்களிலே புகுந்து இரண்டு அலுவலகங்களையும் சூறையாடியது. அதற்கு யார் பொறுப்பு ? ஊர்வலத்திலே போகிற யாரோ சில பேர் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்கிறார்கள் ஆகவே நாம் இப்பொழுது எந்த அளவுக்கு அமைதியாக இருக்கவேண்டுமென்று எடுத்துச் சொல்கிறோமோ அதே அளவுக்குத் தொண்டர்களைத்தனித்தனியாக நாம் பயிற்றுவிக்க வேண்டிய கடமைப்பட்டிருக்கிறோம்.

எல்லாக் கட்சியிலும் சிலர் இருப்பார்கள். தி.மு. கழகத்தில் உள்ள அத்தனை பேருமே அமைதியானவர்கள், யாரிடத்திலும் முரட்டுத்தனம் கிடையாது என்று நான் சொல்ல மாட்டேன். ஆத்திரத்திற்குச் சில நேரங்களிலே அவசரமாக ஆட்பட்டுவிடுகிறவர்கள் கொஞ்சநஞ்சம் எல்லாக் கட்சியிலும் இருப்பார்கள்.

பொதுக் கூட்டங்களிலே பேசப்படுகிறன்ற பேச்சைப்பற்றி யெல்லாம் இங்கே சொன்னூர்கள். காலையிலேயே என்னைப் பற்றி அ. தி. மு. க. உறுப்பினர் ஒருவர் இங்கே என்ன பேசினூர்? திருப்பி நான் அந்த வார்த்தையைச் சொல்லக் கூடாது. இங்கேயே ஒரு சட்டமன்ற உறுப் பினர் இவ்வளவு பேருக்கு நேராக இப்படிப் பேசுகிறூர் என் றுல், மேடையிலே என்ன பேசுவார்கள்? எந்தெந்த அளவுக்கு அமைச்சர்கள் அல்லது கட்சித் தலைவர்கள் தாக்கப்பட்டா லும் அந்தந்தக்கட்சித் தலைவர்கள் தரம்குறையாத அளவுக்கு மேடை அரசியலை நடத்த நாம் பழகிக்கொண்டால் ஆத் திரம் நிச்சயம் தணியும்.

## கறுப்புக்கொடி

கறுப்புக்கொடி பற்றிச் சொன்னூர்கள். குறிப்பாகப் பட்டுக்கோட்டை நிகழ்ச்சி பற்றிச் சொன்னூர்கள். பட்டுக் கோட்டை நிகழ்ச்சிக்காக 2 மணிக்கெல்லாம் ஒரத்தநாடு நிகழ்ச்சியை முடித்து விட்டு, உடனே பட்டுக் கோட்டைக்கு போய்விடலாம் என்று நான் சொன்னேன். மாவட்ட ஆட்சித் தலைவர் என்னிடம் வந்து 'கறுப்புக்கொடி காட்டுபவர்களைச் சந்தித்துப் பேசினேன்; 3 மணியிலிருந்து 4 மணி வரை அங்கே காத்திருப்போம்; நீங்கள் அந்த இடை நேரத்தில் வரவேண்டும்' என்று சொன்னூர்கள். அதற் காகவே நான் ஒரு மணிநேரம் ஒரத்தநாட்டிலே உட்கார்ந்து, அவர்களுக்காக நான் நேரம் கொடுத்து 3 மணியிலிருந்து 4 மணிக்குள் செல்வதற்காகத் தயார் படுத்திக்கொண்டு 3 மணிக்குக் காரில் ஏறி உட்காருகிறேன்.

'கறுப்புக் கொடி பிடித்தவர்கள் அங்கிருந்து வந்து குறுக்கே நிற்கிறூர்கள், ஆகவே அசம்பாவிதம் ஏற்படும்' என்று சொன்னூர்கள். அப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் தடுக்கப்பட வேண்டும். கறுப்புக் கொடி காட்டட்டும். அது ஜனநாயக ரீதியில் அனுமதிக்கப்பட்ட ஒன்று. ஆனூல் அதிலே பலாத்காரம். கல் எறிதல், கலாம் விளைவித்தல் என்றிருக்கக்கூடாது. மதி அவர்கள் கூடச் சொன்னூர்கள்: மன்னையின் நெற்றியில் காயம் ஏற்பட்டிருக்கிறது என்று, வருத்தத்தோடு சொன்னூர்கள். இதெல்லாம் விளையாட்டுச் செய்திகளா?

அமைச்சர்கள் கலந்துகொண்ட பல கூட்டங்கள் கல்லெறிக்கு ஆளாகின்றன. நண்பர் வேழவேந்தன் அவர்களின் கார் தீ வைத்து அடியோடு கொளுத்தப்பட்டது. அந்தக்




கார் எதற்கும் பயனில்லை என்ற அளவுக்கு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. எந்தத் தரப்பிலும் இப்பேர்ப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெருமல் தடுக்கப்பாடுபடுவது ஒவ்வோர் அரசியல் வாதியினுடைய கடமை. ஆகவே, போலீசார் கடுமையாக நடவடிக்கை எடுக்கிருர்கள் என்ருல் நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்வேன். வன்முறையிலே யார் ஈடுபட்டாலும் அவர்கள் மீது போலீசார் தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுப்பார்கள்; எடுக்கவேண்டும் என்ற எண்ணத்தைத்தான் இந்த மாமன்றத்தின் மூலம் பிரதிபலிக்கிறேன். இன்னெரு கருத்தும் சொல்லப்பட்டது.

## ஒலிபெருக்கி

இரவெல்லாம் கூட்டங்கள் நடைபெறுகின்றன என்று திரு. நாடார் அவர்கள் சொன்ஞர்கள். அது பற்றி ஏற்கெனவே ஐ.ஜி. அவர்கள் மூலம் அறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. சென்னை நகரில் இரவு 10 மணியோடு கூட்டம்

முடிவுற வேண்டும் என்றும், திருச்சி, கோவை, மதுரை, சேலம் போன்ற பெரிய நகரங்களிலும் 10 மணியோடு கூட்டம் முடிவுற வேண்டுமென்றும், மற்ற வெளியூர்களில் இரவு 11 மணியோடு கூட்டம் முடிவுற வேண்டும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆணையை யார் மீறினாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இதை ஒழுங்குபடுத்த நம்முடைய அமைச்சர் பெருமக்களும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன்; சட்ட மன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன்; அதைப் போன்றே கூட்டங்களை நடத்துகின்ற எல்லாக் கட்சித் தொண்டர்களும், ஒலி பெருக்கி அமைப்பாளர்களும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன். 11 மணி முதல் 12 மணி வரை கூட்டங்கள் நடந்தால், முடியும் வரை எந்தக் கூட்டமானாலும் காவலர் நின்று தங்கள் பணியாற்ற வேண்டியிருக்கிறது.



திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்போது லைசென்ஸ் கொடுப்பதிலே ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா ? யார் லைசென்ஸ் வழங்க வேண்டுமென்று புதிய ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா? என்று அறிய விரும்புகிறேன்.

டாக்டர் எச். வி. ஹண்டே : எல்லாத் தரப்பிலும் இருக்கக்கூடியவர்கள் இந்த விதிமுறைகளைக் கடைப்பிடித்தால், எல்லா அரசியல்வாதிகளின் உடம்புக்கும் நல்லது ; எல்லாவற்றுக்கும் நல்லது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : டாக்டர் என்ற முறையில் திரு ஹண்டே அவர்களின் அறிவுரைக்கு நன்றி.

சேலம்—வேலூரில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றிச் சொன்னார்கள். அதில் வலது கம்யூனிஸ்ட்கள் அதிகம் கலந்திருக்கிறார்கள்; அதனால் இந்தத்தகராறு ஏற்பட்டது, என்று நான் சொன்னேன். அப்பொழுது கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் கல்யாணசுந்தரம் அவர்கள் பத்திரிகையிலே அறிக்கைவிட்டார்கள். அந்த அறிக்கையில் சேலம்-வேலூரில் கம்யூனிஸ்டு கட்சியே கிடையாது என்று குறிப்பிட்டிருக்கிறார். '' சேலம் வேலூரில் நேற்று நடந்த சம்பவங்களுக்கு வலது கம்யூனிஸ்டுகள் காரணமென்று முதலமைச்சர் கூறியிருப்பது கற்பனையே என்றும், வேலூரில் கடந்த 15 ஆண்டுகளாக தங்கள் கட்சிக் கிளை இல்லை என்றும் தமிழ்நாடு வலது கம்யூனிஸ்டு கட்சிக்காரியதரிசி தலைவர் கல்யாணசுந்தரம் இன்று இங்குக் கூறினார் '' என்று செய்தி 1972 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ம் நாள் தினமலர் பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது. உண்மையிலேயே அங்கு அப்படியிருக்குமோ என்று நான் விசாரித்தேன்.

அவர் சொல்கிறார், 15 ஆண்டுகளாகக் கம்யூனிஸ்டு கட்சியின் கிளையே அங்குக் கிடையாது என்று, உண்மையில் அப்படி இருக்குமா என்று விசாரித்தோம். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வேலூர் கிளை 1970-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ஆம் நாளில் ஒரு துண்டு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அதில் 'வேலூர் பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேலூர் கிளை' என்று தலைப்பிட்டு, 'வேலூர் பெரியோர்களே ! தாய்மார்களே!' என்று அழைத்து வெளியிடப்பட்ட துண்டறிக்கை. அது மாத்திர

மல்ல. சுதந்திர தின வெள்ளி விழாவை யொட்டி ஒரு சர்வக் கட்சிக் கூட்டமும் விவசாயப் போராட்டத்தில் கலந்து கொண்டு, சிறை சென்று மீண்ட வீரர்களுக்குப் பாராட்டு விழாவும். இதிலே எல்லாக் கட்சிக்காரர்களும் கலந்துகொள் கிறார்கள். . . . இப்படிக்கு ஸ்தாபன காங்கிரஸ், இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி—வேலூர்' என்று நோட்டீஸ் அச்சடித்திருக்கிறார்கள்.

ஆனால், கல்யாணசுந்தரம் சொல்கிறார், 15 ஆண்டு களாக அந்தப் பகுதியில் கம்யூனிஸ்டு கட்சியே கிடையாது. கருணாநிதி தவறாகச் சொல்கிறார் என்று. இப்படித்தான் பல விஷயங்கள் அறிக்கை விடுகின்ற காரணத்தால் அவைகளைப் பத்திரிகையிலே பெரிதுபடுத்திப் போட்டு, தி. மு. கழக அரசுக்கு ஏதாவது குந்தகம் வராதா என்று எதிர்பார்க்கின்ற காரணத்தால்தான் உண்மைக்கு மாறான செய்திகள் நாட்டில் நடமாடுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மதி அவர்கள் தன் பேச்சை முடிக்கிற நேரத்திலே சொன்னர். ''மக்கள் கிளர்ந்தெழுவார்கள், கவர்னரை வாபஸ் பெற வேண்டும்; மத்திய அரசு உடனடியாகத் தலையிட வேண்டும்'' என்று சொன்னர்கள். மதி அவர்களின் வாயிலிருந்து எக்காள முழக்கங்களையெல்லாம் கேட்டிருக்கிறேன். எங்களை விட அதிகமாக மத்திய அரசை எதிர்த்து எக்காளமிடுபவர் மதி அவர்கள். இன்றைக்கும் மத்திய சர்க்காரை எதிர்க்கின்ற பாவனையிலேயே—மாநில அரசைக் கவிழ்த்துவிடு, மாநில அரசுக்கு புத்தி சொல் என்கின்ற எக்காள முழக்கத்தைக் கேட்டேன். அவர் எங்களை விட மத்திய அரசை வேகமாக எதிர்த்துப் பழக்கப்பட்டவர். இன்றைக்கு 'மத்திய அரசே உடனடியாக வா, கவர்னரை வாபஸ் வாங்கு, இல்லாவிட்டால் மக்கள் இந்த அரசைத்தூக்கி எறிந்துவிடுவார்கள்' என்றெல்லாம் சொன்னர்.

தூக்கி எறிந்திட திராவிட முன்னேற்றக் கழக அரசு பூப்பந்து அல்ல: என்பதை நான் தெரிவித்துக் கொள்வேன். திராவிட முன்னேற்றக் கழக அரசு இமாலயம்; இதை யாரும் அசைத்திட முடியாது என்று கூறி இந்த அளவிலே விடை பெறுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு, இந்த அளவிலே அமைகிறேன்.

தமிழரசு

1—4—1973 இதழின்

# இலவச இணைப்பு

தமிழ்நாடு அரசு அச்சகம், சென்னை-1.

# தமிழரசு




## இலவச இணைப்பு